பாண்டியன் தமிழ்க் கட்டுரை

இரண்டாம் பாகம்

(4, 5, 6-ஆம் பாரங்கட்கு)

ஆசிரியர் :
வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.
தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
தியாகராயநகர் :: சென்னை
1941
பதிப்புரிமை] [விலை அணு 12

First Edition—1941

The Jupiter Press, Madras.

அறிவிப்பு

'பாண்டியன் தமிழ்க் கட்டுரை' என்னும் பெயர்கொண்டு வெளிவரும் இந் நூல் வரிசை, தமிழகத்திற்கே புதியதாகும். இன்று பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களால் கால-தேச-வர்த்தமானங்கட்கு ஏற்றபடி கொடுக்கப்படும் கட்டுரைகளே இந் நூல் வரிசையில் இடம் பெற்றுள்ளன. அந்தந்த வகுப்புகளில் கட்டுரைப் பாடங்களைப் பல ஆண்டுகளாக நடத்திவரும் பண்பட்ட ஆசிரியர்களைக் கலந்தே இக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பெற்றன. 'முதல் பாரம் முதல் ஆறும் பாரம் முடிய இரு நூல்கள் இருத்தல் வேண்டும்' என்று அன்னார் கூறியபடியே இந் நூல் வரிசை எழுதப்பட்டது. இவ்வரிசையினால் மாணவர் 136 கட்டுரைச் செய்திகளை அறிந்து உலக அறிவு நிறம்பப் பெறுவர்; கட்டுரை எழுதும் முறையும் நன்கு அமையப்பெறுவர். முதல் பாரம் முதல் ஆறும் பாரம் வரை கட்டுரைகளை எழுதச் செய்துவரும் எனது அனுபவத்தைக் கொண்டும், பண்பட்ட பல ஆசிரியர்களின் சிறந்த கருத்துகளைக் கொண்டும் வெளிவரும் இந் நூல்கள் - பல சிறப்பியல்புகளைத் தம் அகத்தே கொண்டவை என்பதைத் துணிந்து கூறலாம். எல்லாப் பாடங்களும் தாய்மொழியிற் போதிக்கப்படும் இக்காலத்தில், தமிழ் உரைநடை சிறிதளவு பண்பட்டதாகவும் மிடுக்குடையதாகவும் இருத்தல் நலம் ஆதலின், இந் நூல் வரிசையில் தமிழ்நடை சிறிது உயர்ந்து காணப்படும். மாணவர் இதயத்திருந்து எழுதப்பெற்ற இச் சிறு நூல்கள், மாணவர் அறிவு உலகிற்கு நல்விருந்தாகும் என்னுந் துணிபுடையேன்.

இளங்கோ இல்லம்,
சென்னை.

மா. இராசமாணிக்கம்.

உள்ளுறை

கற்பவர்க்கு :

கட்டுரையைத் தொடங்கு முன் அதன் தலைப்பு, அப் பொருள் பற்றிய குறிப்புகள் இவற்றை எழுதுதல் வேண்டும்; குறிப்புகட்கு அடியில் கட்டுரை என்பதை எழுதி, ஒவ்வொரு குறிப்பும் பற்றி ஒரு 'பாரா' எழுதுதல் வேண்டும்; அங்ஙனம் எழுதும் பொழுது சொல்லுக்குச் சொல் இடம் விட்டு, அச்சடித்தாற் போல எழுத்துக்களை எழுதுதல் வேண்டும். கட்டுரை எழுதும் பொழுது நோட்டுப் புத்தகத்தின் எதிர் எதிர்ப்பக்கங்களில் இடது கைப் பக்கத்தில் பாதி அளவிட்டுக் கோடு போடுக; அப்படியே வலது கைப் பக்கத்தில் பாதி அளவிட்டுக் கோடு போடுக. இவ் விரண்டு கோடுகட்கும் இடைப்பட்ட இடத்தில் 'கட்டுரை' எழுதுதல் வேண்டும். இடக் கைப் பக்கத்துப் பாதித் தாளில் பயிற்சி எண்ணும் கட்டுரை எழுதும் தேதியும் குறித்திடுக. வலது கைப் பக்கத்துப் பாதியில் கட்டுரையில் உள்ள பிழைகளை ஆசிரியர் குறிப்பர். அப் பிழைகளைத் திருத்த அப் பாதிப் பக்கத்தைப் பயன்படுத்துக. ஒவ்வொரு கட்டுரை எழுதும் பொழுதும் இம் முறைப்படியே செய்க. வலக்கைப் பக்கத்துக் கோட்டண்டை ஒரு வார்த்தை பிரிய நேரின், சிறு கோடு போட்டு அடுத்த வரிமுதல் எழுதிச் செல்க. கட்டுரை எழுதி முடித்ததும், நான்கு முறையேனும் அதனைப் படித்துப் பார்த்தல் வேண்டும். முதல்முறை கட்டுரைப் பொருளையும், இரண்டாம் முறை வாக்கிய முடிபுகளையும், மூன்றும் முறை எழுத்துப் பிழை - இலக்கணப் பிழைகளையும், நான்காம் முறை கட்டுரை ஒழுங்கையும் கவனித்துத் திருத்துதல் வேண்டும். இம் முறை பின்பற்றி எழுதப்படும் கட்டுரை சிறப்புறும்; பிழைகள் மலிந்திரா.

கட்டுரை எழுதுகையில் இடத்திற்கு ஏற்ப இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், உவமையணி, உருவக அணி, உபமான-உபமேயங்கள், வருணனைப் பகுதிகள், பழமொழி கள், பெரியோர் பொன் மொழிகள், புலவர் பாடல்கள் முதலியவற்றை உட்புகுத்திக் கட்டுரையை அழகு செய்தல் வேண்டும். இவ் வழகுகள் இல்லாக் கட்டுரை ஆடையற்ற மனிதன் போலக் காட்சி அளிக்கும்.

தமிழ் மொழி தனித்து இயங்கும் மொழி ஆதலின், தமிழில் எழுதப்பெறுவன அனைத்தும் இயன்றவரை நல்ல தமிழில் எழுதப் பெறுதல் வேண்டும். இன்றியமையாத இடங் களிற்றும் வட சொற்களையும் பிற சொற்களையும் அருகிப் பயன்படுத்துதல் வேண்டும். கீழே சில வட சொற்களும் அவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்களும் தரப்பெற்றுள் ளன. அவற்றைப் படித்துப் பயன் பெறுக.

கீழ்வரும் சந்தி விதிகளை மனப் பாடம் செய்துகொள்க. இவற்றைப் பின்பற்றின், கட்டுரையில் உண்டாகும் பெரும்பாலான் பிழைகளை நீக்கலாம்:

I. சந்தி விதிகள்

1. இரண்டாம் வேற்றுமை உருபுக்கு (ஐ) முன் வரும் க, ச, த, ப மிகும்.

அவனை + கண்டேன் = அவனைக் கண்டேன்
அவனை + சந்தித்தேன் = அவனைச் சந்தித்தேன்
அவனை + தாங்கினேன் = அவனைத் தாங்கினேன்
அவனை + பார் = அவனைப் பார்

2. இங்ஙனமே 4-ஆம் வேற்றுமை உருபுக்கு முன் வரும் க, ச, த, ப மிகும்.

அவனுக்கு + கொடு = அவனுக்குக் கொடு
அவனுக்கு + செலவு = அவனுக்குச் செலவு
அவனுக்கு + தா = அவனுக்குத் தா
அவனுக்கு + புத்தகம் = அவனுக்குப் புத்தகம்

3. அந்த, இந்த, எந்த } இவற்றின் முன் க, ச, த, ப
அங்கு, இங்கு, எங்கு } மிகும்.

அந்த + பையன் = அந்தப் பையன்
அங்கு + பார் = அங்குப் பார்

4. ஆக, ஆகி, ஆய், வித, } இவற்றின் முன்வரும் க, ச,
எல்லா, வகை, பற்றி, } த, ப மிகும்.

நல்லவனாக	+ பேசினான்	= நல்லவனாகப் பேசினான்
பலவித	+ பொருள்கள்	= பலவிதப் பொருள்கள்
எல்லா	+ பைகள்	= எல்லாப் பைகள்
பலவகை	+ பறவைகள்	= பலவகைப் பறவைகள்
அதைப்பற்றி	+ பேசு	= அதைப்பற்றிப் பேசு

5. வன்றொடர்க் குற்றியல் உகரத்தின்முன் வரும் க, ச, த, ப மிகும்.

பட்டு	+ பை	= பட்டுப்பை
பத்து	+ பைகள்	= பத்துப்பைகள்

II. வட சொல்—தமிழ்ச் சொல்

வட சொல்		தமிழ்ச் சொல்
அகங்காரம்	...	செருக்கு
அக்கிரமம்	...	ஒழுங்கின்மை
அசல்	...	முதல்
அஜாக்ரதை	...	விழிப்பின்மை
அசாத்யம்	...	அருமை
அஜீரணம்	...	செரியாமை
அதிகம்	...	மிகுதி
அதிகாரி	...	தலைவன்
அஸ்திபாரம்	...	அடிப்படை
அத்யாயம்	...	நூற் பிரிவு
அநியாயம்	...	முறையின்மை
அநீதி	...	முறை கேடு

அநுஷ்டானம்	...	நடைமுறை
அநுபவித்தல்	...	துய்த்தல்
அநுபோகம்	...	பழக்கம், நுகர்ச்சி
அந்தஸ்து	...	நிலைமை
அபிமானம்	...	பற்று
அப்பியாசம்	...	பயிற்சி
அபிவிர்த்தி	...	பெருக்கம்
அபூர்வம்	...	அருமை
அவகாசம்	...	ஓய்வு
அவஸ்யம்	...	கட்டாயம்
அவயவம்	...	உறுப்பு
அற்பம்	...	சிறுமை
ஆகாசம்	...	விண், வானம்.
ஆசாரம்	...	ஒழுக்கம்
ஆசீர்வாதம்	...	வாழ்த்துரை
ஆசை	...	அவா, விருப்பம்
ஆஸ்தி	...	செல்வம்
ஆதரவு	...	உதவி, பற்றுக்கோடு
ஆதிக்கம்	...	உரிமை, முதன்மை
ரத்தம்	...	குருதி
ராகம்	...	இசை, பண்
ராஜஸ்ரீ	...	திரு
ராத்திரி	...	இரவு
இருதயம்	...	உள்ளம்
லக்ஷ்மி	...	திருமகள்
லஞ்சம்	...	கைக்கூலி
லாபம்	...	ஊதியம், கூடுதல்
லாப நஷ்டம்	...	கூடுதல், குறைதல்
உக்ரம்	...	கொடுமை
உதாரணம்	...	சான்று
உத்தரவு	...	கட்டளை
உத்யோகம்	...	அலுவல்
உபகாரம்	...	உதவி
உபயோகம்	...	பயன்
உபாயம்	...	சூழ்ச்சி
உற்சவம்	...	திருவிழா
ஐக்கியம்	...	ஒற்றுமை

கருணை	...	அருள், இரக்கம்
கருமம்	...	வினை, தொழில்
கர்ச்சனை	...	முழக்கம்
விவாஹம்	...	திருமணம்
காரியஸ்தன்	...	செயலாளன்
கிரஹணம்	...	பற்றுதல்
கிருமி	...	பூச்சி, புழு
கீர்த்தி	...	புகழ்
சகுனம்	...	குறி
குரோதம்	...	உட்பகை
சக்கரம்	...	உருளை
சந்ததி	...	கால்வழி

III. பிழையும் திருத்தமும்

எண்	பிழை		திருத்தம்
1.	ஆத்துக்கு	...	அகத்துக்கு
2.	ஆம்படையாள்	...	அகமுடையாள்
3.	இமையமலை	...	இமயமலை
4.	உத்திரவு	...	உத்தரவு
5.	எண்ணை	...	எண்ணெய்
6.	எலிமிச்சம்பழம்	...	எலுமிச்சம்பழம்
7.	எழவு	...	இழவு
8.	என்னமோ	...	என்னவோ
9.	எழுரைநாட்டுச்சனி	...	எழரையாட்டைச்சனி
10.	ஒண்டியாய்	...	ஒன்றியாய்
11.	ஒத்தடம்	...	ஒற்றடம்
12.	கடப்பாறை	...	கடப்பாரை
13.	கிடாரங்காய்	...	கடாரங்காய்
14.	கத்திரிக்கோல்	...	கத்தரிக்கோல்
15.	கத்திரிக்காய்	...	கத்தரிக்காய்
16.	கம்பிளி	...	கம்பளி
17.	கருவப்பிலை	...	கருவேப்பிலை
18.	கவுளி	...	கவளி
19.	கறடுமுறடு	...	காடுமுரடு
20.	காக்கா	...	காக்கை

21.	காக்ஷி	...	காட்சி
22.	குடக்கூலி	...	குடிக்கூலி
23.	கெடிகாரம்	...	கடிகாரம்
24.	சிக்காய்	...	சிகைக்காய்
25.	சுந்திரம்	...	சுந்தரம்
26.	சுவற்றில்	...	சுவரில்
27.	தலகாணி	...	தலையணை
28.	தாப்பாள்	...	தாழ்ப்பாள்
29.	தாவாரம்	...	தாழ்வாரம்
30.	திராசு	...	தராசு
31.	திருவாணி	...	திருகாணி
32.	தீவாளி	...	தீபாவலி
33.	துடப்பம்	...	துடைப்பம்
34.	தொந்தரவு	...	தொந்திரவு
35.	தொவக்கம்	...	துவக்கம்
36.	நஞ்சை	...	நன்செய்
37.	நாத்தம்	...	நாற்றம்
38.	நேத்து	...	நேற்று
39.	நொங்கு	...	நுங்கு
40.	நோம்பு	...	நோன்பு
41.	பசும்பால்	...	பசுப்பால்
42.	பசுங்கன்று	...	பசுக்கன்று
43.	பயிறு	...	பயறு
44.	பாவக்காய்	...	பாகற்காய்
45.	புஞ்சை	...	புன்செய்
46.	புடவை	...	புடைவை
47.	புட்டு	...	பிட்டு
48.	புண்ணாக்கு	...	பிண்ணாக்கு
49.	புழக்கடை	...	புழைக்கடை
50.	போறும்	...	போதும்
51.	மாத்தினான்	...	மாற்றினான்
52.	முழிக்கிறது	...	விழிக்கிறது
53.	மொழுவடி	...	மகிழடி
54.	ரொம்ப	...	நிரம்ப
55.	வடவம்	...	வடகம்
56.	வாக்கப்பட்டு	...	வாழ்க்கைப்பட்டு
57.	விசிரி	...	விசிறி

58.	விரால்	...	வரால்
59.	விரை	...	விதை
60.	வெக்கம்	...	வெட்கம்
61-	வெங்கலம்	...	வெண்கலம்
62.	வெண்ணே	...	வெண்ணெய்
63.	வெய்யல்	...	வெயில்
64.	வென்னீர்	...	வெந்நீர்
65.	வேணும்	...	வேண்டும்
66.	வேண்டாம்	...	வேண்டா

IV. சொற்களின் வேறுபாடுகள்

(1) ரகர, றகரச் சொற்களின் வேறுபாடுகள்

எ.

1. அரம் - ஒரு கருவி.
   அறம் - தருமம், ஈகை.
2. அரு - அரிய, அருமையான.
   அறு - துண்டி, வெட்டு.
3. அரை - பாதி, இடை.
   அறை - (வீட்டின்) அறை, கன்னத்தில் (அறை), சொல்.
4. அலரி - ஒருவகைப் பூ.
   அலறி - கதறி.
5. இர (இரப்பு) - வேண்டு, பிச்சை யெடு.
   இற (இறப்பு) - கட, சா.
6. இரங்கு - மனமிரங்கு, அருள் கூர்.
   இறங்கு - கீழிறங்கு.
7. இரு - உட்கார்.
   இறு - அறு, வடி(நீர்).
8. இரை - விலங்குணவு, தீனி, ஒலி.
   இறை - சிதறு, வரி, அரசன், கடவுள், (தண்ணீர்) இறை.
9. உரி - கழற்று, தோலுரி, மரப்பட்டை, அரைப்படி.
   உறி - தூக்கு.

10. உரு - வடிவம்.
உறு - பொருந்து, மிகுதி.

11. உரை - சொல், தேய்.
உறை - இறகு, மூடி, இடம், (தலையணை உறை).

12. எரி - தீ, நெருப்பு, எரிதல்.
எறி - வீசு, வீசியெறி.

13. ஏரி - பெரிய குளம், நீர் நிலை.
ஏறி - மேலே ஏறி.

14. கர - ஒளிந்துகொள்.
கற - பால் கற.

15. கரி - யானை, அடுப்புக்கரி.
கறி - கடி, (காய்) கறி, மிளகு.

16. கருப்பு - பஞ்சம்.
கறுப்பு - கருமை நிறம்.

17. கரை - ஓரம், குளக்கரை.
கறை - களங்கம், மாசு, குற்றம்.

18. கீரி - ஒருவகைப் பிராணி.
கீறி - கிழித்து, எழுதி.

19. குரவன் - பெரியோன், ஆசான்.
குறவன் - ஒரு குலத்தான்.

20. கூரிய - கூர்மையான.
கூறிய - சொல்லிய.

21. கூரை - முகடு, வீட்டின் மேற்புறம்.
கூறை - துணி, புடவை.

22. செரித்தல் - சீரணமாகுதல்.
செறித்தல் - திணித்தல், அடக்குதல்.

23. சொரி - பொழி, கொடு.
சொறி - தினவு நோய் (சொறி சிரங்கு).

24. திரை - அலை, திரைச்சீலை.
திறை - கப்பம், அரசிறை.

25. திரவு - பெரிய கிணறு.
திறவு - துறத்தல், ஆசையை ஒழித்தல்.

26. நிரை - வரிசை, மந்தை, ஓர் ஆசை.
நிறை - நிறைவு, மனவடக்கம், கற்பு.

27. பரவை - கடல்.
பறவை - பட்சி, புள்.

28. பரி - குதிரை, இரங்கு, விரும்பு.
பறி - பிடுங்கு, தோண்டு, அபகரி.

29. புரம் - பட்டணம், நகர், காப்பு.
புறம் - பக்கம், முதுகு, பின்பு, வெளி.

30. மர - கடினமாகு, உணர்ச்சியறு.
மற - மறந்துபோதல்.

31. மரம் - விருட்சம்.
மறம் - வீரம், பாவம், கொலை.

32. மரு - வாசனை.
மறு - குற்றம், களங்கம், மற்ற.

33. மாரி - மழை.
மாறி - வேறுபட்டு.

34. விரகு - தந்திரம்.
விறகு - எரிக்குங் கட்டை.

35. விரல் - கை விரல்.
விறல் - வெற்றி, வலிமை.

36. வெரு - பயம், அச்சம்.
வெறு - பகை மிகுதல், வெறுப்புக்கொள்.

(2) ளகர, ழகரச் சொற்களின் வேறுபாடுகள்

1. அளி - வண்டு, அருள்.
அழி - கெடு.

2. ஒளி - மறை, வெளிச்சம்.
ஒழி - அழி, நீக்கு.

3. களி - மகிழ்ச்சி.
கழி - நீக்கு, கோல், மிகுந்த

4. இளவி - சொல்.
கிழவி - உரியவள், முதியாள்.

5. குளவி - தேனீ, வண்டு.
குழவி - குழந்தை.

6. சுளி - முகங்கோணு, கோபி.
சுழி - வளை, வட்டமிடு, நீர்ச்சுழி.

7. சூள் - ஆணை.
சூழ் - ஆராய், முற்றுகை இடு.

8. தளை - கட்டு, விலக்கு.
தழை - இலை, தழைத்தோங்கு.

9. தாள் - கால், முயற்சி, செடி முதலியவற்றின் அடித்தண்டு.
தாழ் - கீழாகு, கதவடைகோல், பணி.

10. தோளன் - தோளையுடையவன்.
தோழன் - நண்பன்.

11. பளு - கனம்.
பழு - முதிர், கனி.

12. முளை - தோன்று, விதை முளை.
முழை - குகை.

13. வளி - காற்று.
வழி - பாதை, நிரம்பி விழு.

14. வாளை - ஒரு மீன்.
வாழை - ஒரு மரம்.

15. வாள் - ஒளி, ஒரு கருவி.
வாழ் - உயிரோடிரு.

16. விளி - கூப்பிடு.
விழி - கண் திற, பார்.

V. மரபுத் தொடர்கள்

(Idioms & Phrases)

1 அடங்காப்பிடாரி
2 அரைகுறை
3 அல்லும் பகலும்
4 அளவளாவுதல்
5 ஆடைக்கும் கோடைக்கும்
6 ஆணித்தரம்
7 இரண்டுங் கெட்டான்
8 இருதலைக்கொள்ளி
9 இலைமறை காய்
10 எற இறங்கப்பார்த்தல்
11 எற்றத் தாழ்வு
12 ஒருவழிப் படுதல்
13 கங்குகரை யில்லாமை
14 கடைவிரித்தல்
15 கட்டுரைத்தல்
16 கண்கொள்ளாக் காட்சி
17 கல்லில் நாருரித்தல்
18 கிள்ளுக்கீரை
19 குரங்குப்பிடி
20 குருட்டுப் பாடம்
21 குறை குடம்
22 கைச்சரக்கு
23 கையுங் களவும்
24 கையைக் கடித்தல்
25 கொழுகொம்பு
26 கோமாளிக் கூத்து
27 சரமாரியாய்
28 சிறப்புச் செய்தல்
29 சின்ன பின்னம்
30 தலைகீழாய் நிற்றல்
31 தலைதெறிக்க (ஓடுதல்)
32 தலையெடுத்தல்
33 தாறுமாறாய்ப் பேசுதல்
34 தொடை தட்டுதல்
35 தோள் கொடுத்தல்
36 நெல்லிக்காய் மூட்டை
37 நோட்டம் பார்த்தல்
38 பஞ்சாய்ப் பறத்தல்
39 பம்பரமாட்டுதல்
40 பாட்டு வாங்குதல்
41 பிஞ்சிற் பழுத்தல்
42 பிரியா விடை
43 புலம் விசாரித்தல்
44 பையப்பைய
45 பொடி வைத்தல்
46 மட்டந் தட்டுதல்
47 மனப்பால் குடித்தல்
48 மனம்போன போக்கு
49 வகை செய்தல்
50 வயிற்றிலடித்தல்
51 வரலாற்று முறைமை
52 வல்லாள கண்டன்
53 வாய்ப்பூட்டு
54 வாலாட்டுதல்
55 வாழையடி வாழை
56 விருப்பு வெறுப்பு
57 விழலுக் கிறைத்தல்
58 விளக்கேற்றி வைத்தல்
59 வீடும் விளக்குமாய் வைத்தல்
60 எற இறங்க

VI. உவமைகள்

1. அடியற்ற மரம் போல.
2. அணை கடந்த வெள்ளம் போல.
3. அத்தி பூத்தாற் போல.
4. அம்பு பட்ட மயில் போல.
5. அழுகுக் கழகு செய்வது போல.
6. ஆண்டிகள் கூடி மடங்கட்டினது போல.
7. ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட பேய்க்குரங்கு போல.
8. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல.
9. ஆற்றங் கரையின் மரம் போல.
10. ஆற்றில் கரைத்த புளி போல.
11. இடியோசை கேட்ட பாம்பு போல.
12. இலவு காத்த கிளி போல.
13. இலை மறை காய் போல.
14. இழந்த பொருள் எதிர்வரப் பெற்றவர் போல.
15. உடுக்கை இழந்தவன் கை போல.
16. உயிரும் உடலும் போல.
17. உயிரைப் பிரிந்த உடலைப் போல.
18. உலைப்படு மெழுகு போல.
19. உள்ளங் கை நெல்லிக் கனி போல.
20. எமன் கையில் அகப்பட்ட உயிர் போல.
21. எலியும் பூனையும் போல.
22. எள்ளுக்குள் எண்ணெய் போல.
23. ஏறவிட்டு ஏணியை வாங்கினது போல.
24. ஓராவிற்கு இரு கோடு தோன்றினாற் போல.
25. கடன் பட்டார் நெஞ்சம் போல.
26. கட்டுக் கடங்காக் காளை போல.
27. கண்ணினைக் காக்கும் இமை போல.
28. கருடனைக் கண்ட பாம்பு போல.
29. கரை காணாத கப்பலைப் போல.
30. கலங்கரை விளக்கம் போல.
31. கனி இருக்கக் காயை விரும்புவது போல.
32. கல்மேற் செதுக்கிய எழுத்துப் போல.

33. கன்றினைக் கண்ட பசுப் போல.
34. காற்றுடன் நெருப்புக் கூடினாற் போல.
35. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பது போல.
36. குடத்துள் விளக்குப் போல.
37. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
38. குன்று முட்டிய குருவி போல.
39. சித்திரப் பதுமை போல.
40. சீதேவியுடன் மூதேவி பிறந்தாற் போல.
41. சேற்றிலே முளைத்த செந்தாமரை போல.
42. நீர் மேல் எழுத்துப் போல.
43. நெய்யில்லா உண்டி போல.
44. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல.
45. பாம்பின் வாய்த் தேரை போல.
46. புண்ணிலே கோல் இட்டது போல.
47. பூவும் மணமும் போல.
48. மதின்மேல் நிற்கும் பூனை போல.
49. யானைக்கு முன் பூனை போல.
50. வலையிற் சிக்கிக்கொண்ட மான் போல.
51. விழலுக் கிறைத்த நீரே போல.
52. வெள்ளிடை மலை போல.
53. அழிந்த புண்ணில் அம்பு பட்டாற் போல.
54. ஆடி ஓய்ந்த பம்பரம் போல.
55. எட்டி பழுத்தாற் போல.
56. எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியது போல.
57. எறும்புப் புற்றில் பாம்பு குடிகொள்வது போல.
58. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல.
59. ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற் போல.
60. கல்லிலே நார் உரிப்பது போல.
61. காதோடு காது வைத்தாற் போல.
62. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தாற் போல.
63. நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்ப்பதுபோல.
64. விளக்கின் முன் இருள் போல.

VII. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
3. அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
4. அடாது செய்தவன் படாது படுவான்.
5. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
6. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
7. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.
8. அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை.
9. அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?
10. அவசரக்காரனுக்கு (ஆத்திரக்காரனுக்கு)ப் புத்தி மட்டு.
11. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
12. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
13. அற்ப சகவாசம் பிராண சங்கடம்.
14. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
15. ஆசை வெட்கம் அறியாது.
16. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
17. ஆபத்துக்குப் பாவமில்லை.
18. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
19. ஆரால் கேடு, வாயால் கேடு.
20. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு.
21. ஆழமறியாமல் காலை இடாதே.
22. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
23. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
24. ஆனைக்கும் அடி சறுக்கும்.
25. ஆனை படுத்தால் ஆள் மட்டம்.
26. ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
27. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
28. இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது.

29. இளங்கன்று பயமறியாது.
30. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்.
31. உட்கார்ந்தல்லவோ படுக்க வேண்டும்.
32. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
33. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா?
34. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
35. உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
36. கையிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
37. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே.
38. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
39. ஊர் வாயை மூட உலைமூடி இல்லை.
40. எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
41. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
42. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
43. எலி அழுதால் பூனை விடுமா?
44. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
45. எல்லாருக்கும் ஒவ்வொன்றெளிது.
46. ஏழைப் பேச்சு அம்பலம் ஏறுது.
47. ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா!
48. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
49. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
50. கரும்பு தின்னக் கூலியா?
51. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா?
52. கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று.
53. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.
54. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
55. காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?
56. குரங்கின் கைப் பூமாலை.
57. குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
58. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.

59. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
60. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
61. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்.
62. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
63. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து.
64. சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற் பணம்.
65. செய்வன திருந்தச் செய்.
66. தனக்கு என்று இருந்தால் சமயத்துக்கு உதவும்.
67. தன் வினை தன்னைச் சுடும்.
68. தன் வீட்டு விளக்கென்று முத்தம் இடலாமா?
69. தான் ஆடாது போனாலும் தன் சதை ஆடும்.
70. திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு.
71. துஷ்டனைக் கண்டால் தூர விலகு.
72. துணை போனாலும் பிணை போகாதே.
73. துறவிக்கு வேந்தன் துரும்பு.
74. தென்றல் முற்றிப் பெருங் காற்றாகும்.
75. நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரி கொண்டு வெட்டுகிறான்.
76. நண்டு கொழுத்தால் வளையில் இராது.
77. நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும்.
78. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
79. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
80. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
81. பாடில்லாமற் பயனில்லை.
82. பேராசை பெரு நட்டம்.
83. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
84. முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.
85. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
86. வருந்தினால் வாராதது இல்லை.
87. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

பாண்டியன் தமிழ்க் கட்டுரை

இரண்டாம் பாகம்

---

1. கோடை விடுமுறையைக் கழித்த விதம்

கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு மேற்சொன்ன தலைப்புக்குரிய கட்டுரையை வரைக:—

ஒவ்வோர் எண்ணுக்கும் ஒரு 'பாரா' எழுதுக.

1. கோடைக் காலம்: அதன் கால அளவு—அதன் கொடுமை.

2. எனது இரயில் பிரயாணம்: வயல்கள்—பயிர்கள்—யாறுகள்—ஏரிகள்—மலைகள்—கிராமங்கள் —நகரங்கள்—கோவில்கள்—பெரிய கட்டிடங்கள்—எனது உள்ளக்கிளர்ச்சி—யான் உணர்ந்தவை.

3. தஞ்சையில் எனது இருக்கை: தஞ்சை நகரச் சிறப்பு—அதன் வரலாறு—அதில் உள்ள சிறப்புடை இடங்கள்—அதன் இன்றைய நிலைமை—அவ்வூரைப் பார்த்ததால் நான் உணர்ந்தவை.

4. திருவாரூரில் எனது இருக்கை: அவ்வூரின் பழமை வரலாறு—மனுச்சோழன் ஆட்சி—கோவிற் சிறப்பு—குளத்துச் சிறப்பு—பிற இடங்களின் சிறப்பு—யான் அறிந்தவை.

5. எனது சென்னைப் பிரயாணம்: விடுமுறையில் யான் கண்டவை—யான் அறிந்தவை—எனது கருத்து.

---

2. எனது பள்ளிக்கூடம்

கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு மேற்சொன்ன தலைப்புக்குரிய கட்டுரையை வரைக :—

ஒவ்வோர் எண்ணுக்கும் ஒரு 'பாரா' எழுதுக.

1. எனது பள்ளிக்கூடத்தின் பரப்பு—அறைகள்—இடவசதி—விளையாடும் இடங்கள்—பிற வசதிக்கு உரிய இடங்கள்.

2. வகுப்புகளும் வகுப்பறைகளும்—ஆசிரியர்கள்—பாடபோதனை.

3. பள்ளிக்கூடத் தோட்டமும் எங்கள் வேலைகளும்.

4. பள்ளிக்கூட விளையாட்டு வகைகளும் நாங்களும்.

5. மாணவர் கழகங்களும் மாணவர் ஊக்கமும்.

6. எங்கள் பள்ளிக்கூடச் சிறப்பு.

3. நான் பார்த்த திருவிழா

கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு மேற்கண்ட தலைப்புக்குரிய கட்டுரையை வரைக:—

ஒவ்வோர் எண்ணுக்கும் ஒரு 'பாரா' எழுதுக.

1. திருவிழா—யாது? காஞ்சிபுரத்துப் பெருமாள் கோவில் விழா.

2. காஞ்சிபுரச் சிறப்பு—அதன் பழமையும் பெருமையும்—நகர அமைப்பு.

3. பெருமாள் கோவில்—சிற்பம்—ஓவியம்—பிற சிறப்புகள்.

4. திருவிழாக் கடைகள்—ஜனக் கூட்டம்.

5. திருவிழா நிகழ்ச்சிகள்—கொடியேற்றம் முதல் தேர் விழா முடிய.

6. நான் கண்ட காட்சிகள்—நான் அறிந்துகொண்டவை.

4. எனது கிராமம்

கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு மேற்கண்ட தலைப்புக்குரிய கட்டுரையை வரைக:—

ஒவ்வோர் எண்ணுக்கும் ஒரு 'பாரா' எழுதுக.

1. எனது கிராமம் உள்ள இடம்—அதன் எல்லைகள்—அதன் அமைப்பு.

2. கிராமத்தில் உள்ள தெருக்கள்—ஜனத் தொகை—பிரிவுகள்.

3. கிராமத்தார் தொழில்கள்—செய் பொருள்கள்—வாழ்க்கை.

4. கிராமக் குளம்—தெருக்கள்—சுகாதாரம்—பள்ளிக்கூடம்.

5. கிராமத்துக் கோவில்—திருவிழா நிகழ்ச்சிகள்.

6. கிராமத்தார் ஒழுக்கம்—பழக்க வழக்கங்கள்.

7. கிராமத்தில் செய்யவேண்டும் சீர்திருத்தங்கள்.

5. நாட்டுப் பற்று

குறிப்புகள் :—1. நாட்டுப் பற்று—யாது ?
2. நாட்டில் உள்ள கேடுகளும் அவற்றைப் போக்கும் முறைகளும்
3. முடிவு

கட்டுரை

நாட்டுப் பற்று—யாது ?

1. ஒருவன் தான் பிறந்த நாட்டின்மீது இயல்பாகக் கொள்ளும் பற்றே நாட்டுப் பற்று என்பது. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' அன்றோ? ஆதலால், ஒரு வளமும் இல்லாத சஹாரா பாலைவனத்திற் பிறந்த ஒருவனும் தன் நாட்டைப் பொன்னாடு என்று நினைத்தலும் அதனிடம் பற்றுக் கொள்ளலும் இயல்பே. உலகத்து நாட்டினர் அனைவரிடமும் இப் பற்று இருந்தே வருகின்றது. இஃது இல்லாதவர் விலங்கினத்தைச் சேர்ந்தவராவர்.

நாட்டில் உள்ள கேடுகளும் அவற்றைப் போக்கும் முறைகளும்

2. நமது தாய்நாடு இந்தியா; தமிழராகிய நமக்குத் தாய்நாடு தமிழ்நாடு; எனினும் அதனைத் தன் அகத்தே கொண்ட இந்தியநாடு நமது தாய்நாடு எனல் பொருந்தும். இந்நாடு முன்னேற்றம் அடையவேண்டும் என்பதில் இந்தியர் அனைவரும் ஒத்த கருத்தே கொண்டுள்ளனர். ஆயின், எங்ஙனம் முன்னேற முடியும்? என்னும் வினாவுக்கேற்ற விடை கண்டு, அதன்படி நடந்தாற்றான் இந்தியநாடு மெய்யாகவே முன்னேற்றம் பெறமுடியும். ஐம்பது ஆண்டுகட்கு முன் கேவல நிலையில் இருந்த ஜப்பான் தேசம், அம்மக்களது நாட்டுப்பற்றாலும் இடைவிடா உழைப்பாலும் இன்று

உலக வல்லரசுகளுள் ஒன்றாக விளங்குகின்றது. அதைப் போல நமது நாடும் உயரவேண்டுமாயின், இங்குள்ள குறைகளை நாம் போக்க முனைதல் வேண்டும். அக் குறைகள்—போதிய அளவு நாட்டுப் பற்று இன்மை, பற்பல சாதி வேறுபாடுகள், மதக் கொடுமைகள், வறுமை, கல்வி இன்மை, விவசாயம்—கைத்தொழில் இவற்றில் கவனமும் தேர்ச்சியும் இன்மை, செல்வர்க்குள் ஒற்றுமை இன்மை என்பன.

இந் நாட்டு மக்களிடம் நாட்டுப்பற்று இல்லாமை வருந்தத்தக்கது. நாட்டுப்பற்று இல்லாத எந்த நாட்டினரும் செல்வமும் நாகரிகமுஞ் செறிந்து வாழ இயலாது. தத்தம் நாட்டின் பொருட்டு உயிர்விடவும் துணிந்துள்ள மக்களைப்பெற்ற நாடுகள் ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து முதலியன. அதனாற்றான் அந் நாடுகள் சுயேச்சை நாடுகளாகச் செழிப்புற்று விளங்குகின்றன. அப் பற்று நம்மிடத்தே கருக்கொள்ளுமாயின், இந்தியா விரைவில் முன்னணியில் வருதல் கூடும்.

இந்துக்கள் எனப்படும் சமூகத்தாருள் உள்ள பாழான சாதிகள் பற்பல கேடுகட்குக் காரணமாகின்றன. இச் சாதிகளால் மக்கள் சமூகம் சின்னபின்னப்பட்டுச் சிதறிக் கிடக்கிறது. 'உயர்ந்தவர்-தாழ்ந்தவர்' என்னும் மனநிலை, மக்களை ஒருவரை ஒருவர் பகைமை பாராட்டச் செய்கின்றது. மதக் கொடுமைகள் — பூசல்கள், சைவ — வைணவர் சண்டை, வைணவருள் வடகலை-தென்கலைச் சண்டை, ஹிந்து-முஸ்லிம் சண்டை, வேதாந்த—சித்தாந்தச் சண்டை என்னும் பலவகைப்பட்ட மதப்பூசல்கள் வளர்ந்து வருகின்றன. இவை யாவும் ஒழிதல் வேண்டும். எட்டுக்கோடி மக்களைத் 'தாழ்த்தப் பட்டவர்' என்று ஊர்கட்குப் புறம்பே தள்ளிவைத்துள்ள-2000 ஆண்டுகளாகக் கொடுமை செய்து வரும்-இச் சமூகம் முன்னுக்கு வருவது என்று? அம் மக்கள் மற்றவரைப் போல உலக இன்பங்களில் பங்கு கொள்வது

என்று ? அன்றே இச் சமூகம் உயர்நிலையைப் பெறுதல் கூடும்.

வறுமை இந் நாட்டை அலைக்கழிக்கின்றது. விவசாயம், அறிவும் ஆராய்ச்சியும் கொண்டு செய்யப்படவில்லை. மேனாட்டு விவசாய முறைகளை நாம் கைக்கொண்டு உழு தொழிலைச் சிறப்புறச் செய்யின், வறுமை நீங்க வழியுண்டு. பயிரிடப்படாமல் தரிசாய்க் கிடக்கும் நிலங்கள் இலக்ஷக் கணக்கான ஏக்கர் பரப்பு உள்ளவை. அவற்றை ஏழைகட்கு உதவிப் பயிர்த்தொழிலை வளம்பெறச் செய்யலாம். கைத் தொழில்கள் பல ஏற்படுதல் வேண்டும். பணக்காரர் பலர் கூடி ஜில்லாவுக்கொரு தொழிற்சாலைவீதம் ஏற்படுத்துவ ராயின், ஆ! எத்தனை ஆயிரக்கணக்கான ஏழைகள் பிழைக்க வழியுண்டாகும்! நெசவுத்தொழில், சர்க்கரைத் தொழில், தச்சுத் தொழில், தீக்குச்சித் தொழில், கண்ணாடித் தொழில் முதலிய பலதிறப்பட்ட தொழில்களை இந் நாட்டில் போதிய அளவு செய்யக் கூடுமல்லவா? குடிசைக் கைத்தொழில்கள் ஆகிய பால்பண்ணை, கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல் முதலியன கிராம வாசிகட்கு உரிய தொழில்களாகும்.

முடிவு

3. விவசாயம், கைத்தொழில், நிறைகல்வி, ஒழுக்கம், போர்முறை, அஞ்சாமை, வீரம் இன்ன பிற இயல்புகளை நாம் நாளும் வளர்த்து வருவோமாயின், இந்திய சமூகம் வளர்பிறைபோல முன்னேற்றத்தில் வளர்ச்சியுறும். ‘ நாம் நம் நாட்டுப் பொருள்களையே வாங்குதல் வேண்டும் ’ என்னும் மனவுறுதி கொள்ளுதல் வேண்டும். நாட்டு மக்களை நேசித்தல், நாட்டுப்பொருள்களை வாங்குதல், நாட்டுக் கலைகளை வளர்த்தல் முதலியனவே நமது நாட்டுப்பற்றை நனி விளக்குவனவாம்.

6. உரைநடைப் பயிற்சி

குறிப்புகள் :—1. மொழியின் பயன்
2. பேசலும் எழுதலும்
3. நீக்க வேண்டுபவை
4. முடிவு

கட்டுரை

மொழியின் பயன்

1. ஒருவன் தன் கருத்தை மற்றவர்க்கு எடுத்துக் கூறும் சாதனமே 'பாஷை' அல்லது 'மொழி' என்பது. மொழி இல்லாத காலத்தில் மனிதன் தன் எண்ணங்களைச் சைகைகள்மூலம் அறிவித்து வந்தான்; பின்னர்ச் சித்திரங்கள் மூலம் அறிவித்து வந்தான்; ஓசைகள் மூலம், ஊமையரைப் போலப் பயிற்சி பெற்றான்; பிறகே பேச்சு வல்லமை பெற்றான். ஒரு மொழி மனிதன் கருத்தை எடுத்து விளக்க வல்லதாயின், அஃது 'உயர்மொழி' எனப்படும். அவ்வுயர்மொழிகளுள் நமது தாய் மொழியாகிய தமிழ் ஒன்றாகும். தமிழின் வளர்ச்சியைக் கொண்டு தமிழர் நாகரிகம் உயர்ந்ததென்று மொழி ஆராய்ச்சி நிபுணர் கூறுகின்றனர்.

பேசலும் எழுதலும்

2. மொழி செவ்விதாய்ப் பண்பட்டு இருப்பினும், மக்களுட் பலர் தம் கருத்துகளை அம் மொழியில் எடுத்துக் கூற இயலாதவராய் இருக்கின்றனர். இதற்குக் காரணம், அவர்கள் தங்கள் கருத்தைத் தெளிவாக மனத்திற் கொள்ளாமையே ஆகும். தெளிவான கருத்து இருக்குமாயின்,

அதனைத் தெரிவிக்கச் சொற்களும் செவ்வையாக அமையும். சிலர் தாம் நினைப்பதை வாய்விட்டுச் செவ்வனே உரைக்கக் கூடவில்லை என்பர். அது தவறு. கருத்து, மனத்தில் நன்கு விளக்கமாக இருக்குமாயின், அது தயங்காமல் வெளிவரும். விஷயம் விளக்கமாக உணர்ந்தவன் வெளியில் அதனைத் தெளிவாகப் பேசுவான். இதில் ஐயமில்லை. இங்ஙனம் விளக்கமாகப் பேச வல்லவன் எழுதும்போதும் அவனது உரைநடை தெளிவாக அமையும். இஃது உண்மை. அவனது தெளிந்த உள்ளத்திலிருந்து எழும் கருத்துகளுக் கேற்ற சொற்கள் பருந்தும் அதன் நிழலும்போலப் பிணைந்து செல்லலைக் காணலாம். ஆதலின், ஒருவன் விஷயத்தை எவ் வளவு தெளிவாகவும் நுட்பமாகவும் அறிந்திருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனது நடையும் நுட்பமாகவும் தெளிவாகவும் அமையும். அவன் வருத்தத்தோடு ஒன்றைப் பற்றிப் பேசுவானாயின், அவனது நடையிலும், வருத்தம் அமைந்திருக்கும்; ஆர்வத்தோடு தான் கண்டதைப் பிறர்க்கு உரைப்பவன் நடையில் ஆர்வத்துக்குரிய சொற்கள் அமை தலைக் காணலாம். எனவே, ஒருவன் விஷயங்களை எவ்வளவு தெளிவாகவோ—சிக்கலாகவோ அறிந்துள்ளானோ அவை போன்றே அவனது மொழிநடையும் அமையும்.

'மொழி நடை' என்பது ஒன்று தனியே இல்லை. நம் உள்ளத்தினின்று எழும் உணர்ச்சியே மொழி நடை. ஒருவன் அறிஞனாயின், அவனது நடை உயர் நிலையில் அமையும். ஒருவன் இழிந்தவனாயின், அவனது நடை இழி நிலையில் அமையும். ஆகவே, நடை என்பது ஒருவன் தன்னை உயர்த்துவதிலும் தாழ்த்துவதிலுமே அமைந்துள் ளது. நல்லவன் பேச்சிலும் எழுத்திலும் நற்சொற்கள் அமைதலையும், தீயவன் பேச்சிலும் எழுத்திலும் தீய சொற்கள் அமைதலையும் காணலாம். இஃது இயற்கை.

நீக்க வேண்டுபவை

3. சிலர், தம்மைப் பிறர் போற்ற வேண்டும் என்னும் எண்ணம் உடையராய்க் கடின சொற்களைப் புகுத்திக் கடின நடை எழுதுகின்றனர். அது செயற்கை நடையே அன்றி இயற்கை நடை அன்று. அந் நடையைப் படிப்பவர் எழுத்தாளரைத் தாழ்த்துவரே அன்றி வாழ்த்தார். மாணவர் அத்தகைய செயற்கை நடையை அறவே விடுதல் வேண்டும். எளிய—இனிய தமிழில் யாவர்க்கும் புரியும்படி உரைநடை எழுதப் பழகுதல் வேண்டும். வீண் பெருமைக்கு ஆசைப்படாமல் கருத்துகளைத் தெளிவாக உணர்ந்து, அவற்றைத் தெளிவாக எல்லாரும் உணரத்தக்க முறையில்-எளிய நடையில் பேசுதல் வேண்டும்; எழுதுதல் வேண்டும். நல்ல மொழி நடைப்பயிற்சி பெற ஓர் அளவு இலக்கணப் பயிற்சியும் இன்றியமையாதது. இலக்கணம் அறியாமல், 'சுவற்றில், கேழ்க்கிறான்' என்று பிழைபட எழுதலாகாது; 'சுவரில், கேட்கிறான்' என்று இருத்தலே இலக்கண அமைதியுடையது. சந்திப் பிழைகளைக் கவனித்து எழுதும் பழக்கம் மிகவும் நல்லது.

முடிவு

4. நல்ல உரைநடை அமைவதற்குப் பிழையற்ற இலக்கிய நூல்கள் பலவற்றை வாசித்தல் வேண்டும்; அதனால் படிக்கப் படிக்கச் சுவை பயக்கும் நடை தானாகவே அமையும். நல்ல செந்தமிழில் சிறு சிறு வாக்கியங்களைக் கொண்ட உரைநடை நூல்களை விடாது படித்தல் வேண்டும்; பல பொருள் பற்றிய நூல்களைப் படிப்பதால் பல திறப்பட்ட கருத்துகள் உள்ளத்தில் உருக்கொள்ளும்; நடையும் நலம் பெறும். இப்பயிற்சி உடையவர் எந்த விஷயத்தையும் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றவர் ஆவர்.

7. கைத்தொழிற் சிறப்பு

குறிப்புகள் :—1. கைத்தொழில்கள் எவை ?
2. அவற்ருல் உண்டாகும் நன்மை
3. மேற்கோள்
4. முடிவு

கட்டுரை

கைத்தொழில்கள் எவை ?

1. கையால் செய்யப்படும் தொழில்கள் கைத்தொழில்கள் எனப்படும். கூடை முடைதல், பாய் பின்னுதல், ஜிகினு வேலை செய்தல், நூல் நூற்றல், ஆடை நெய்தல், பாத்திரங்கள் செய்தல் முதலியன குடிசைக் கைத்தொழில்களாம். இக் கைத்தொழில்களால் ஏழை மக்கள், தம் அன்ருட வாழ்க்கையைக் குறைவறச் செய்து இன்பமாகக் காலங் கழிக்கலாம். நம்மவர் வாழ்க்கைக்கு உரிய இத்தொழில்களால் உண்டாக்கப்படும் பொருள்களை நம்மவர் வாங்கியே தீருவர். கூடை, பாய், பாத்திரம், ஆடை, நூல் முதலியன இல்லாமல் எந்தக் குடும்பமும் இருத்தல் இயலாது அல்லவா?

அவற்ருல் உண்டாகும் நன்மை

2. இக் கைத்தொழில்கள் என்றும் உணவு அளிப்பவை ஆகும். இவற்றைச் செய்பவர் நம் நாட்டவர். நாம் இப்பொருள்களை வாங்குவதால் செல்வம் நம் நாட்டிலேயே சுற்றிக் கொண்டு இருக்கும். தொழிலாளர்களுக்கு நாம் தரும் பணம், அரிசி முதலிய தானிய வியாபாரிகட்கும் பிறர்க்குமே போய்ச் சேரும். இப்பணம் கடல் கடந்து போகாது. ஆதலின், நாட்டுச் செல்வ நிலையை உயர்த்தும் இக்குடிசைக் கைத்தொழில்களை நாம் பெரிதும் ஆதரிக்கக் கடமைப்பட்

டுள்ளோம். கைத்தொழிற் கல்வி அற்றவர் பெருஞ் செல்வரே ஆயினும், பணம் வறண்ட காலத்தில் அவர்கள் இடர்ப்படல் திண்ணம். கைத்தொழில் செய்பவன் என்றும் ஏழையாகவே இருப்பினும், அவன் இறக்குமளவும் வயிறார உண்டு இன்பமாக வாழ்வான். 'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்றாற்போலக் கைத்தொழிலாளி சென்ற இடம் எல்லாம் சிறப்படைவான். அரசற்குத் தன் தேசமல்லாமல் சிறப்பில்லை. அதுபோலப் பணக்காரற்குத் தன்னூர் அல்லால் சிறப்பில்லை. எனவே, கல்விக்கும் கைத்தொழிலுக்கும் உள்ள சிறப்பு மிகுதியே ஆகும்.

மேற்கோள்

3. ஒரு நகரத்தில் செல்வன் ஒருவன் இருந்தான். அவன் உண்டுண்டு உறங்குவதைக் கண்டதே அல்லாது ஒரு பயனும் அடைந்திலாதவன். அவன் உடல் போதிய வேலை இன்றிக் குன்றத் தொடங்கியது. அந்நகரில் ஏழைத் தொழிலாளி ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் கூடைகளை முடைந்து விற்று வரும் பணத்தைக் கொண்டு இன்பமாகக் காலங் கழித்து வந்தான். வேலையைச் செய்யும்போது அவன் களிப்போடு பாடுதல் வழக்கம். இழிந்த கூடை முடைபவன் இன்பத்தோடு விளங்குவதைக்கண்ட செல்வன்; அவன்மீது பொறாமை கொண்டான்; அதனால் ஓர் இரவு தானே சென்று அவன் வீட்டிற்குத் தீ வைத்து விட்டான். அந்தோ! கூடை முடைபவன் குடிசை பொறாமையால் கொளுத்திவிடப்பட்டது. பாவம்! அவ்வேழை பிழைத்ததே பெரிய காரியமாய் விட்டது. மறுநாள் தொழிலாளி அந்நகர நீதிபதியிடம் சென்று முறையிட்டான். அவர் செல்வனையும் தொழிலாளியையும் ஒரு தீவுக்கு அனுப்பி விட்டார்.

அவர்கள் சென்ற தீவினர் அனைவரும் கஷ்ட ஜீவனம் செய்பவர்; உடல் வருந்த உழைத்துப் பிழைப்பவர். அவர்கள் கட்டமைந்த உடல் உரங்கொண்ட தொழிலாளியைக் கண்டதும் களி கூர்ந்தனர்; அவனை ஒவ்வொருவரும் உபசரிக்கலாயினர். ஆனால் செல்வனை ஒருவருமே திரும்பிப் பார்க்கவில்லை. அவனது சோம்பல் உடலை அவர்கள் விரும்பவில்லை. எனவே, தொழிலாளி தன் உணவிற்காக உழைத்து வேலை செய்தான்; சோம்பேறி வேலை செய்யும் பழக்கம் இன்மையாலும் கைத்தொழிற் பழக்கம் அறவே இல்லாமையாலும் பட்டினி கிடந்தான். கூடை முடைபவன் அத்தீவிலும் பாட்டுப் பாடிக் கொண்டு சலிப்பின்றி வேலை செய்து வந்தான். அவன், தனது வருவாயைக் கொண்டே, தன் குடிசைக்குத் தீ மூட்டிய செல்வனைக் காப்பாற்றி வந்தான். ஆ! கூடை முடைபவனிடம் இருந்த மேதக்க குணம் என்னே! இன்னா செய்தார்க்கும் இனிது செய்யத் துணிந்த அவன் பெருமகன் அல்லனோ?

தண்டனைக் காலம் முடிந்ததும், இருவரும் தம் ஊரை அடைந்தனர். செல்வன் கைத் தொழிற் சிறப்பையும் அக் கூடை முடைபவன் பெருங் குணத்தையும் உணர்ந்து, நல் வழிப்பட்டான்.

முடிவு

4. இம் மேற்கோளால், கைத்தொழிலின் சிறப்பு நன்கு விளங்கும். மேல் நாடுகள் கைத்தொழிலாற்றான் பிழைக்கின்றன. கைத் தொழில் வளர்ச்சி பெறாத நாடு கையற்ற மனிதன்போல் ஆகும். ஆதலின், நாம் கைத் தொழில்களைப் பெருக்கலும் வளர்த்தலும் நமது தலையாய கடமையாகும்.

8. கம்பர்

[நீவிர் அறிந்த தமிழ்ப் புலவர் ஒருவரது வரலாற்றையும் கவிப் புலமையையும் ஒரு கட்டுரையாக வரைக.]

குறிப்புகள் :—1. கம்பரது இளமை
2. வெண்ணெய் அண்ணல்
3. இராமாயணம் பாடியது
4. கவித்திறன்
5. முடிவு

கட்டுரை

கம்பரது இளமை

1. கம்பர் சோழ நாட்டில் மாயூரத்திற்கு அடுத்த திருவழுந்தூரில் பிறந்தவர். இவர் பெற்றோர் இன்னவர் எனத் திட்டமாகக் கூறக்கூடவில்லை. இவர் திருவழுந்தூரில் உள்ள காளி கோயிற் பூசாரியால் வளர்க்கப்பட்டார் என்று பிற்காலத்தார் எழுதிவைத்துள்ளனர். இவர் காளிவரம் பெற்று இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றனர் என்றும் கூறப்படுகிறது. "இவர் காளிங்கராயனது குதிரையைச் சாவவும் பிழைக்கவும் பாடினார்—கம்பங் கொல்லையைக் காவல் செய்தமையால் 'கம்பன்' எனப் பெயர் பெற்றார்—அரசனைக் கண்டு அஞ்சி நின்றபோது அரசன், 'இக் கம்பனோ (கம்பம் போல நிற்பவன்) குதிரை சாவப் பாடியவன்?' என்றதிலிருந்து 'கம்பன்' எனப்பட்டார்—'கம்ப நாடு' என்பது சோழ நாட்டில் ஒரு பகுதி; அங்குப் பிறந்ததால் இவர் 'கம்ப நாடர்' எனப் பெயர் பெற்றார்"—என்று கூறப்படும் செய்திகள் யாவும் பிற்காலத்தார் கூற்றுகளாம். இவை எவ்வளவு உண்மையானவை என்பது கூறல் இயலாது. நிற்க.

வெண்ணெய் அண்ணல்

2. கம்பர் வாழ்ந்த காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்; அஃதாவது இரண்டாம் குலோத்துங்க சோழனது காலமாகும். அக்காலத்தில் தொண்டை மண்டலம் சோழரது ஆட்சியில் இருந்தது. எனவே, தென்னுற்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருவெண்ணெய் நல்லூர் என்பது சோணாட்டைச் சேர்ந்து இருந்தது. அப்பதியில் பெருநிலக் கிழவராக விளங்கியவர் சடையப்ப முதலியார் என்பவர். அவர் சோழனது அமைச்சராக இருந்தனர். அரசர்கள் தம் நாட்டில் உள்ள பெருநிலக் கிழவருள் தக்காரை அமைச்சராகக் கோடல் பண்டை மரபு. சடையப்பர் வரையாத வள்ளன்மை உடையவர்; உயர் குணங்கட்கு இருப்பிடம் ஆனவர். அப்பெரியார் கம்பரை ஆதரித்து வளர்த்து இருத்தல் வேண்டும் என்பது கம்பர் பாடியுள்ள இராமாயணத்தில் உள்ள குறிப்புகளால் உணரப்படுகிறது. கம்பர் பல இடங்களில் இவ்வெண்ணெய்வள்ளலது அறச்செயலை உவமை வாயிலாகக் கூறியுள்ளார். தமக்கு வள்ளல் செய்த பேருபகாரத்திற்குப் பதிலாகவே கம்பர் அவர் பெயரைப் பல இடங்களில் குறிப்பிட்டு அழியாத புகழுக்கு அவரைப் பாத்திரராக்கினுர் என்பது நாம் ஊகிக்கத் தக்கதாகும். சடையப்ப வள்ளலிடம் இருந்தபோதோ அவரை அடைவதற்கு முன்போ கம்பர் இலக்கண இலக்கியங்களைக் குறைவறக் கற்றவராதல் வேண்டும்.

இராமாயணம் பாடியது

3. கம்பரது கவித் திறனைக் கண்டு அனுபவித்த சடையப்ப வள்ளல், அவரைக் குலோத்துங்க சோழனுக்கு அறிமுகப்படுத்தி, சமஸ்தானப் புலவராக்கி இருத்தல் வேண்டும். சடையப்பர் தூண்டுகோலாலும் அரசன் ஊக்கத்தா

லும் கம்பர் இராமாயணத்தை மிகப் பெரியதொரு காவியமாகப் பாடினாராதல் வேண்டும். கம்பர் வடநூலாகிய வான்மீகி இராமாயணத்தை உளங்கொண்டு, தாம் பாடும் காலத்தையும் தமிழ்நாட்டு நிலைமையையும் தமிழர் பழக்க வழக்கங்களையும் கருத்திற் பதித்தவராய் வான்மீகி இராமாயணத்தைப் பல இடங்களில் தழுவியும், சில இடங்களில் மாற்றியும் தமிழர் மனப் போக்குக்கு இயையப் பாடியுள்ளார். கம்பர் பாடிய இராமாயணம் 'கம்ப ராமாயணம்' எனப் பெயர் பெற்றது. அவர் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை 10,500 செய்யுட்களில் வளம்பெறப் பாடியுள்ளார். அவரது பெரு நூல் அக்காலத்துப் பெரும் புலவரால் பாராட்டப்பட்டிராவிடின், அஃது, இன்று நாட்டில் இடம் பெற்றிராது என்பதில் ஐயமே இல்லை. ஆதலின், கம்பராமாயணம் அக்காலப் புலவரால் போற்றப்பட்டதாகும். அஃது இக்காலப் புலவராலும்—என்? எக்காலப் புலவராலும் போற்றப்படும் என்பதில் ஐயமுண்டோ?

கவித்திறன்

4. ஆங்கிலத்தில் பெயர் பெற்றவர் ஷேக்ஸ்பியர்; வடமொழியிற் பெயர் பெற்றவர் காளிதாசர்; அதுபோலத் தமிழிற் புகழ்பெற்றவர் கம்பர். 'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்', 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று நம் நாட்டில் வழங்கிவரும் கூற்றுகள் கம்பருடைய கல்விப் பெருக்கையும் கவித்திறனையும் வெள்ளிடை மலைபோல விளக்குவனவாகும். கம்பர் உலகியல் அறிவையும் நூலறிவையும் நன்கு பெற்றவர்

ஆதலின், அவர் பாடல்கள் எக்காலத்தும் பொருத்த முடையனவாக அறிஞரால் பாராட்டப் படுவனவாகும்.

முடிவு

5. இத்தகைய பெருங் காவியத்தைச் செய்து உதவிய புலவர் பெருமானைத் தமிழராய நாம் மறத்தல் இயலுமோ? அவரது விழாவை ஆண்டுதோறும் கொண்டாட நாம் கடமைப்பட்டுள்ளோம். அவரது அரிய நூலைப் படித்துத் தமிழ் அருமையையும் பா நலத்தையும் காவியச் சிறப்பையும் நுகரல் நமது பெருங் கடனாகும்.

—

9. எனது உல்லாசப் பிரயாணம்

(மேட்டூர் அணைக்கட்டு)

குறிப்புகள் :—1. அணைக்கட்டின் அவசியம்
2. காவிரி அணைக்கட்டுகள்
3. மேட்டூர் அணைக்கட்டு
4. பயன்
5. முடிவு

கட்டுரை

அணைக்கட்டின் அவசியம்

1. மலையிற் பெய்யும் மழை நீரின் பெருக்கமே, ஆறுகத் தோற்றம் எடுக்கிறது என்பதை அனைவரும் அறிவர். அம் மழை நீர் ஓடுமளவும் ஓடி இறுதியிற் கடலில் கலக்கின்றது. அது கடலிற் கலப்பதால் பயன் என்னை? ஒன்றும் இல்லை. மேலும் ஆண்டு முழுவதும் ஆற்றில் தண்ணீர் வருவதும் இல்லை. அங்ஙனம் ஆண்டு முழுவதும் தண்ணீர் வருமாயின், வயல்கட்குத் தண்ணீர்க் குறை இராது. பல மாதங்கள் வரை ஆறு வறண்டு இருப்பதால் பல இடங்களில் வயல் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆதலின், ஆற்றில் வெள்ளம் வரும்போது தக்க இடத்தில் அணைகட்டி அந்நீரைத் தேக்கி வைத்தால், நீர் இல்லாதபோது, அத் தேக்கத்து நீரை வயல்கட்குப் பயன்படுத்தலாம். இந் நோக்கங்கொண்டே அணைக்கட்டுகள் கட்டப்பட்டு உள்ளன.

காவிரி அணைக்கட்டுகள்

2. காவிரியாறு குடகு மலைப் பிரதேசத்தில் தோற்றமாகிச் சுமார் 500 மைல் தூரம் ஓடி, வங்கக் கடலில் கலக்கிறது. ஆனி முதல் புரட்டாசிவரை விடாமழை பெய்வதால்,

காவிரி நீர் பெருக்கெடுத்து ஓடும். வழியில் பல சிற்றாறுகளும் இதனுடன் கலக்கின்றன. ஆயினும், பிற மாதங்களில் நீர் வற்றிவிடுகிறது. இந்த யாறு திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே இரண்டாகப் பிரிந்து 'கொள்ளிடம்' என்றும் 'காவிரி' என்றும் பெயர்கொண்டு ஓடுகின்றது. கொள்ளிடத்தில் 'மேல் அணைக்கட்டு' (Upper Anicut) என்னும் பெயரால் ஓர் அணைக்கட்டு 1836-ல் கட்டப்பட்டது. வெள்ளப் பெருக்கால் கரைகள் உடைந்து நாசமாதலைப் போக்கவும் மழையில்லாக் காலங்களில் ஆற்று நீரைத் தேக்கி வயல்கட்கு விடவுமே இவ்வணைக்கட்டுக் கட்டப்பட்டது. ஆயினும், இஃது எதிர்பார்த்த அளவு பயன் தராததால், 1845-ல் காவிரியின் குறுக்கே ஓர் அணைக்கட்டுக் கட்டப்பட்டது. இக்காவிரி யாற்றுக்கே மைசூரில் 'கண்ணம்பாடி' என்னும் இடத்தில் பெரியதோர் அணைக்கட்டும் உண்டு. இறுதியிற் கட்டப்பட்ட அணைக்கட்டே 'மேட்டூர் அணைக்கட்டு' என்பது.

மேட்டூர் அணைக்கட்டு

3. மேட்டூர் என்பது சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்கள் கலக்கும் இடத்தில் உள்ளது. அங்கு இயல்பாக உள்ள மலைத் தொடரை உதவியாகக் கொண்டு பெரிய தேக்கம் உண்டாக்கப்பட்டுள்ளது. அணையில் மூன்று வித மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அணையின் உயரம் கடல் மட்டத்திற்குமேல் 790 அடி ஆகும். அதனால் மூன்றும் மதகு கடல் மட்டத்திற்கு 770 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மதகால் காவிரியில் வரும் அதிகமான நீர்ப் பெருக்கம் வெளிப்பட்டு வழிந்துவிடும். 720 அடி உயரத்தில் இரண்டாம் மதகு வரிசை உள்ளது. தண்ணீர் மட்டம் 770 அடிக்குக் குறைந்து 720-க்குமேல் இருந்தால், இக்கதவுகள் திறக்கப்படும். அதனால், தண்ணீர் விளை நிலங்கட்குத் தாராள

மாகப் பாயும். நீர் மட்டம் 720 அடிக்குக் குறையுமாயின், 690 அடி உயரத்தில் உள்ள மூன்றாம் வரிசை மதகுகள் திறக்கப்படும். அவற்றிலிருந்து வெளிப்படும் நீர் வயல்கட்குச் சென்று பாயும். உலக அணைக்கட்டுகளில் இது முதல்தரமானது; 10 லக்ஷம் கன அடி நீரைத் தேக்கத்தக்கது. இதனைக் கட்டி முடிக்க $4\frac{3}{4}$ கோடி ரூபாய் செலவானது. எங்கும் பயன்படுத்தப்படாத புதிய இயந்திரங்கள் இதனைக் கட்டி முடிக்க வரவழைக்கப்பட்டன. இவ்வணைக்கட்டின் நீரோட்டத்தால் மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கூறப்பட்ட மதகுகள் அனைத்தும் மின்சார சக்தியால் வேலை செய்கின்றன. இவ்வணை கட்டிமுடிய ஆறு ஆண்டுகள் ஆயின. ஆயிரக்கணக்கான வேலையாட்கள் நியமிக்கப்பட்டனர். பல வேலைக் கூடங்கள் ஏற்பட்டன. இப்பொழுது மேட்டூரில் அணைக் கட்டுக்குரிய அலுவலாளர் பலர் இருக்கின்றனர். ஆதலின், மேட்டூர் ஓர் அழகிய சிறு நகரமாக மாறியுள்ளது.

பயன்

4. இவ்வணைக்கட்டு நீரால் வானம் பார்த்த நிலப் பரப்புகள் இப்பொழுது பொன் கொழிக்கும் நிலங்களாக மாறிவருகின்றன. தஞ்சாவூர், சேலம், கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் உள்ள பாழாய்க் கிடந்த நிலங்கள் இன்று விளை நிலங்களாகக் கண் குளிரக் காட்சி அளிக்கின்றன. இங்கு மின்சார உற்பத்தி செய்தல் வெற்றி பெறுமாயின், மேட்டூரில் தொழிற்சாலைகள் அமைதல் திண்ணம்.

முடிவு

5. மனிதன் பார்க்கத்தகும் இடங்களுள் மேட்டூர் அணைக்கட்டு ஒன்றாகும். அதனைப் பார்க்கும் ஒருவனுக்கு அறிவும் ஆராய்ச்சியும் அளிக்கவல்ல அற்புதச் சக்தி நன்கு புலனாகும்.

10. ஸர். ஜகதீச சந்திர போஸ்

[நம் நாட்டு ஆராய்ச்சியாளர் ஒருவர் வரலாற்றைச் சுருக்கிக் கட்டுரையாக வரைக.]

குறிப்புகள் :—1. இளமைப் பருவம்
2. ஆராய்ச்சியும் புகழும்
3. முடிவு

கட்டுரை

இளமைப் பருவம்

1. உலகத்தில் இதுவரை எவரும் கண்டறியாத தாவர சாஸ்திர நுட்பங்களை முதன் முதல் கண்டறிந்து உலகம் வியப்புறச் செய்த பெருமை ஸர். ஜகதீச சந்திர போஸ் அவர்களைச் சார்ந்தது. இவர் வங்க மாகாணத்தில் பிக்ரம் பூர் என்னும் கிராமத்தில் 1858-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆந் தேதி பிறந்தார். இவர் தந்தையார் பகவன் சந்திர போஸ் நிரம்பிய அறிவு உடையவர். அவரிடம் வளர்ந்துவந்த ஜகதீச சந்திரர் உழைப்பு, ஊக்கம், முன்னேற்ற உணர்ச்சி, கூர்த்தமதி இவற்றைப் பெற்று விளங்கினர். இவர் கல்கத்தா வில் உள்ள செயின்ட் ஜேவியர் கல்லூரியிற் சேர்ந்து பி. ஏ., பட்டம் பெற்றார். ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறிய இவர், இங்கிலாந்து சென்று, இலண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1885-ல் இயற்கைத் தத்துவ நூலில் பி. எஸ். ஸி. (B. Sc.) என்னும் பட்டத்தைப் பெற்றார்.

ஆராய்ச்சியும் புகழும்

2. மேனாட்டுக் கல்வி முடிந்ததும் போஸ், தாய் நாட்டை அடைந்தார் ; கல்கத்தாவில் உள்ள மாகாணக் கல்

லூரியில் பூதபௌதிக சாத்திரப் பேராசிரியராக அமர்ந்தார். இவர், ஆராய்ச்சிகள் பல செய்து, தாம் கண்டறிந்த பல உண்மைகளைப் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டார்; பின்னர் மின்சார அலைகளைப் பற்றித் தீவிர ஆராய்ச்சி செய்தார். இவ்வியத்தகு ஆராய்ச்சியே போஸின் பெயரை முதன் முதலில் உலகெலாம் அறியச் செய்தது. அது முதல் மேனாட்டார் பலர் இவர் ஆராய்ச்சிக் கட்டுரை கட்குப் பொருள் உதவி புரிந்து வந்தனர். போஸின் பெருமையை உணர்ந்த வங்க அரசாங்கம் இவர் ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகள் அளித்தது. இலண்டன் சர்வகலா சாலையார் இவருக்கு டி. எஸ். ஸி. (Doctor of Science) என்னும் பட்டத்தை அளித்தனர். அக் காலத்தில் மின் சார அலைகளைப்பற்றி இங்கிலீஷ்காரர் ஒருவரும் அமெரிக்கர் ஒருவரும் போஸும் ஆக மூவரே ஆராய்ந்து வந்தனர். அவருள் வெற்றி பெற்றவர் போஸே ஆவர். இலண்டன் இராயல் சங்கத்தார் போஸை இங்கிலாந்துக்கு அழைத்தனர். போஸ் 1915-ஆம் ஆண்டு இலண்டன் இராயல் சங்கத்தார் வேண்டுகோட்கு இணங்கிச் சென்றார்; இவருடைய ஆராய்ச்சி கட்குரிய மிக மெல்லிய நுட்பமான கருவிகளைக் கண்டு வியந்த வெள்ளையர் 'இவை எங்குச் செய்யப்பட்டவை?' எனக் கேட்டனர். போஸ் நகைத்து, 'இவை எம் தாய்நாட்டில் செய்யப்பட்டவை' என்று விடையளித்தார்.

இவர் ஆராய்ச்சியிற் கண்ட உண்மைகள் யாவை? (1) தாவரங்களுக்கும் விலங்குகட்கும் நரம்புத் தொடர்பு ஒன்றே. மைமோசா மரத்து வாழ்க்கை மனித வாழ்க்கையையே மெய்ப்பித்துவிடுகிறது. (2) நாகரிக மக்களைப்போலவே மரங்களும் இரவு பன்னிரண்டு மணிக்குத் தூங்கத் தொடங்கிக் காலை எட்டு மணிக்கு விழிப்படைகின்றன. (3) மரங்கட்கு மயக்க மருந்தைத் தந்து அவற்றை வேரோடு எடுத்து

வேறு இடத்தில் நட்டு உயிரோடு வளரச் செய்யலாம். (4) மக்களின் வளர்ச்சியை விஞடிக்கு ஒருமுறை அறிவிக்கலாம். இவர் இதற்கு வேண்டிய மிக்க அற்புதக் கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார்.

இவ்வாராய்ச்சிகள் எவரைத்தாம் திடுக்கிடச் செய்யா? பாரிஸ், வியன்னு, பெர்லின், ரோம், டோக்கியோ, நியூயார்க் முதலிய நகரங்களில் உள்ள சர்வகலாசாலையினர் போஸை வரவழைத்து, ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளைக் கேட்டு வியந்து, பெருமைப்படுத்தினர். ஆங்காங்கு இவர் பெற்ற கௌரவப் பட்டங்கள் பல. "உலகிற் சிறந்து விளங்கும் ஒப்பற்ற அறிஞராகிய இவரைப் பெற்ற இந்தியாவுக்கு மேனுடுகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன" என்று பேராசிரியர் மாலிஷ் வியன்னுப் பல்கலைக் கழகக் கூட்டத்திற் கூறியது கவனிக்கத்தக்கது.

முடிவு

3. இப் பெரியார் கல்கத்தாவில் ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்தினுர். அக் கூடத்தில் மேனுட்டு மாணவரும் கீழ்நாட்டு மாணவரும் பயிற்சிபெற்று வருகின்றனர். இந்தியாவிற்கு மேனுடுகளைத் தலை வணங்கச்செய்த இப் பெரியார்க்குச் ஸர். சி. ஐ. இ., சி. எஸ். ஐ. முதலிய பட்டங்களை அளித்து இந்திய அரசாங்கத்தார் மகிழ்ந்தனர். இவருக்கு ஆயுள்வரை முழுச்சம்பளம் கொடுக்க வங்க அரசாங்கம் இசைந்தது. இப் பெரியார் இன்று இவ்வுலகில் இல்லை எனினும், இவரது பெயர் இவ்வுலகில் என்றும் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!"

—பட்டினத்தடிகள்

11. ஐக்கிய நாணயச் சங்கம்

குறிப்புகள் :—1. ஐக்கிய நாணயச் சங்கம்
2. இதன் நோக்கம்
3. இதன் அமைப்பு
4. சங்கங்களும் அதிகாரிகளும்
5. நன்மைகள்
6. முடிவு

கட்டுரை

ஐக்கிய நாணயச் சங்கம்

1. ஐக்கிய நாணயச் சங்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புதுமைகளுள் ஒன்று. இதனைத் தோற்றுவித்தவர் ரெய்பீசன் என்னும் ஜெர்மானியர் ஆவர். அவர் இதனை ஒரு சிறிய கிராமத்தில் ஏற்படுத்தினர். ஆனால், இன்று இஃது உலகெலாம் பரவி மக்கட்குப் பெருந் தொண்டாற்றுகின்றது. இதன் கொள்கைகள் மிக உயர்ந்தவை. இவற்றைக் கவனித்த அரசாங்கத்தார் 1904-ல் இச் சங்கத்தைச் சட்ட மூலம் ஏற்படுத்தினர். அன்று முதல் இச் சங்கம் இந்தியாவில் வளர்ச்சியுற்று இன்று இலக்ஷத்துக்கு மேற்பட்ட சங்கங்களை உடையதாக விளங்குகின்றது.

இதன் நோக்கம்

2. விவசாயிகள், தொழிலாளர் போன்ற சிறிய வருவாய் உள்ளவர்க்குள் சிக்கனம், கூட்டுறவு, சுயவுதவி, ஒற்றுமை ஆகியவற்றைப் பெருக்கி, பயிர்த்தொழில், கைத்தொழில் இவற்றை வளர்க்கப் பணம் கடனாகத் தந்து உதவுவதே இச் சங்கத்தின் நோக்கம் ஆகும்.

இதன் அமைப்பு

3. இச் சங்கத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் கிராமவாசிகள் ஒன்று கூடி, விண்ணப்பம் ஒன்றை எழுதி அனைவரும் கையெழுத்திட்டுக் கூட்டுறவுச் சங்க அதிகாரி கட்கு அறிவித்தல் வேண்டும். அதன்மீது இச் சங்க உத் யோகஸ்தர் ஒருவர் அக் கிராமத்துக்குச் சென்று, சங்கத்தால் கிராமவாசிகட்கு உண்டாகும் நன்மையையும் அவர்கள் சங்கத் தைப் பலப்படுத்த வேண்டும் முறைகளையும் நன்கு தெரிவிப் பார். அவற்றினைக் கேட்கும் கிராமத்தார் தமக்குள் நன்கு யோசித்துத் தங்கள் சம்மதத்தைத் தெரிவிப்பர். உடனே அக் கிராமத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்தப்படும். பத்து அங்கத்தினர்க்குக் குறையாமல் சங்கத்தில் இருத்தல் வேண்டும். சங்கத்தில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆடவர்-பெண்டிர் அனைவரும் சேரலாம். குல வேறு பாடுகளோ-உயர்வு தாழ்வுகளோ சங்கத்தில் தலை காட் டுதல் இல்லை. உறுப்பினர்க்கு இருக்கவேண்டுவன நாணய மும் நன்னடக்கையுமே ஆகும். எல்லா உறுப்பினர்க்கும் சங்கத்தில் சமவுரிமை உண்டு. ஆண்டுக்கு ஒரு முறை இவ் வுறுப்பினர் நற்குணப் பெரியவர்கள் ஐவரைத் தமக்குள் ளேயே தேர்ந்தெடுத்துப் 'பஞ்சாயத்தார்' ஆக்குவர். அவர்கள் தமக்குள் ஒருவரைச் செயலாளர் ஆகவும், ஒரு வரைத் தலைவராகவும் தேர்ந்தெடுப்பர். பஞ்சாயத்தார் ஆண்டுக்கு ஒரு முறை சங்கத்தின் வரவு செலவுக் கணக்கை உறுப்பினர் அனைவர்க்கும் படித்துக் காட்டுவர்.

சங்கங்களும் அதிகாரிகளும்

4. இங்ஙனம் வேலை செய்யும் பதினைந்து சங்கங்கள் சேர்ந்தது ஒரு 'யூனியன்' ஆகும். யூனியனில் இணைக்கப் பட்ட சங்கங்களை மேற்பார்க்க அதிகாரிகள் உண்டு. சங்கங்

களை மேற்பார்ப்பதே யூனியன் வேலையாகும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 'மத்திய பாங்கு' ஒன்று உண்டு. அது அச் சில்லாவில் உள்ள சங்கங்கட்கு வேண்டும்போது பணவுதவி செய்யும். யூனியன்களை மேற்பார்வை பார்க்க ஜில்லா பெடரேஷன் உண்டு. மாகாணப் பெடரேஷன்களைப் பார்வையிட மாகாண யூனியன் உண்டு. இவை அனைத்துக்கும் மேலாக இந்தியாவிற்கே 'ஐக்கியக் கமிட்டி' என்பதொன்று உண்டு. மாகாணச் சங்கங்களைப் பார்வையிட 'ரிஜிஸ்ட்ரார்' என்பவர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜில்லாவுக்கு அல்லது ஒன்றிரண்டு ஜில்லாக்களுக்கு ஓர் 'உதவி ரிஜிஸ்ட்ரார்' இருப்பார். சங்கங்களை மேற்பார்வையிட 'இன்ஸ்பெக்டர்கள்' பலர் உளர். இவ்வதிகாரிகள் அனைவரும் ஒவ்வொரு சங்க வேலைகளையும் பார்வை யிடுவர்.

நன்மைகள்

5. ஒவ்வோர் உறுப்பினரும் சங்கத்தில் பணங் கொடுத்து ஒரு பங்காவது எடுத்தே தீர வேண்டும். ஒரு பங்கு இத்தனை ரூபாய் என்று சங்கத்துக்குத் தக்கபடி வேறுபடும். சங்க உறுப்பினர்க்குச் சிக்கனம் கற்பிக்கப் பலவித டெபாசிட்டுகள் (Fixed and Recurring Deposits) ஏற்படுத்தியுள்ளனர். அவரவர் சக்திக்கு இயலும் அளவு பணத்தை அச் சேமவைப்புகளில் போட்டுவரலாம். சங்கத்தில், கடன் குறைந்த வட்டிக்கே தரப்படுகிறது. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய பிழைப்புக்குரிய காரியங்கட்கும் திருமணம் முதலிய அவசியமான நிகழ்ச்சிகட்குமே கடன் தரப்படும். கடன் வாங்கினவர் குறித்த காலத்திற்குள் கடனைத் தீர்த்துவிட வற்புறுத்தப்படுவர். மார்வாரிகளிடம் கடன் வாங்கி அதிக வட்டிகொடுத்து

அல்லற்படும் மக்கட்கு இவ் வைக்கிய நாணயச் சங்கங்கள் பெருநலம் பயப்பன அல்லவோ?

முடிவு

6. இத்தகைய சங்கங்களால் அயர்லாந்து, ஹாலண்டு, டென்மார்க் முதலிய சிறிய நாடுகள் தங்கள் கைத்தொழில், விவசாயம், வியாபாரம் இவற்றைப் பெருக்கி முன்னேற்ற முற்று வருகின்றன. இயல்பாகவே வறுமையுற்றுள்ள இந் நாட்டார் இச் சங்கப் பயனை நன்குணர்ந்து நாணயமாக நடப்பின், நன்னிலையை அடையலாம்.

12. ஒழுக்கமே உயர்ந்தது

குறிப்புகள் :—1. ஒழுக்கம் யாது ?
2. மேற்கோள்கள்
3. விவேகானந்தரும் சக்கிலியும்
4. முடிவு

கட்டுரை

ஒழுக்கம் யாது ?

1. மனிதனுக்கு இருக்க வேண்டும் குணங்கள் பல வற்றுள் ஒழுக்கமே தலை சிறந்தது. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது தமிழ் மறை. எல்லா உயிர்களினும் சிறந்தது மக்கட் பிறவி. அதற்குக் காரணம் ஒழுக்கமே ஆகும். ஒழுக்கம் அற்ற மனிதர் விலங்கினமாகக் கருதப் படுவர். ஒழுக்கம் கடவுள் தன்மை வாய்ந்தது. உள்ளம் தூய்மையாக இருப்பதே ஒழுக்கத்திற்குத் துணை செய்வ தாகும்.

மேற்கோள்கள்

2. ஒழுக்கம் குலநிற வேறுபாடுகளைக் கடந்தது. கல்வி, சாதிபேதங்களைக் கடந்து நிற்பதுபோல ஒழுக்கமும் எல்லாம் கடந்து நிற்பது. நந்தனார் என்னும் சைவப் பெரிய வர் தீண்டத் தகாதவர் என்று சொல்லப்படுபவர்; ஒரு பிரா மணர் வயலில் வேலை செய்துவந்தவர். அவர் உள்ளம் கள் ளங் கபடற்று விளங்கியது. அவர் இறைவன்பால் உள்ளத் தைச் செலுத்திப் பேரின்பக்கடலுள் மூழ்கினார்; தம்மூர்க்கு அண்மையில் உள்ள சிதம்பரத்தைத் தரிசிக்க விரும்பினார்; பிராமணர், விளைச்சலுக்குப் பிறகு போகுமாறு பணித்தார். பயிர் விளைந்தபின் போதல் என்பது நாள் கடப்பதாகும்.

நந்தனார் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் திருவருளால் பருவம் அல்லாத பருவத்தில் விளைச்சல் உண்டானது. அது கண்ட பிராமணர் நந்தனாரைப் போற்றிப் பணிந்து விடைதந்தார். நந்தனார் சிதம்பரத்தை அடைந்து இறைவணக்கம் செய்தார்; இறுதியில் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமான் கழலடிகளிற் கலந்து பிரியாப் பேறு பெற்றார்.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் திருப்பாணாழ்வார் என்பவர் ஒருவர். அவர் ஸ்ரீரங்கத்தை அடைந்த பாணர் சேரியில் வசித்தவர். அவரும் தாழ்த்தப்பட்டவரென்று கூறப்படுபவர். அவர் திருமாலிடம் கரைகடந்த காதல் உடையவர். அவரைத் திருவரங்கத்தில் தரிசிக்க உயர் வகுப்பார் விடார். ஆதலின், அவர் காவிரியின் கரையிலேயே நின்று அரங்கப் பெருமானைக் காதலால் துதித்துக் காலங் கழித்தனர். ஒரு நாள் அப்பெருங் கோவில் அர்ச்சகராய லோகசாரங்கர் பாணரைக் கரையண்டையும் நிற்கலாகாதெனக் கடிந்தனர். பலர் அவர்மீது கல் எறிந்தனர். அன்றிரவு திருவரங்கப் பெருமான் லோகசாரங்கர் கனவில் தோன்றி, " அப்பனே, ஒழுக்கமே உயர்ந்தது. ஒழுக்கத்திற் சிறந்த பாணனை நாளை நம் கோவிலுக்குள் அழைத்து வா" எனக் கூறியருளினர். லோக சாரங்கர் பெருவியப்புற்று மறுநாள் காலை ஓடோடியும் சென்றார்; திருப்பாணாழ்வார் பாதங்களிற் பணிந்தார்; தாம் செய்த அபசாரத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினார்; அப் பெரியாரைத் தம் தோள்மீது சுமந்து கோவிலுக்குள் அழைத்துவந்து தரிசனம் பெறச் செய்தார். இவற்றால் நாம் அறியத் தகுவது யாது? 'ஆண்டவன் விரும்புவது ஒழுக்கமே யன்றிக் குலம் அன்று. ஆதலின் நாம் ஒழுக்கத்திற்கே சிறந்த மதிப்பு தருதல் வேண்டும்' என்பதே ஆகும்.

விவேகானந்தரும் சக்கிலியும்

3. உலகப் புகழ்பெற்ற மஹான்களில் விவேகானந்தர் தலைசிறந்தவராவர். அவர் மேனாட்டு யாத்திரை முடித்து இந்தியா அடைந்து கல்கத்தாவில் தங்கி இருந்தபோழ்து பெருமக்கள் பலர் அவரைக் கண்டு வணங்கச் சென்றனர். அவர்களோடு அளவளாவிப் பேசுவதிலேயே விவேகானந்தர் தம் பொழுதைச் செலவிட்டார். அன்று அவர் காலை முதல் மாலை வரை உணவு கொள்ளவே இல்லை. இதனைக் கவனித்து வந்த செருப்புத் தைப்பவன் ஒருவன் மனம் புண்பட்டான்; மாலையில் அவர் தனியே இருந்தபோது அவன் மனங் கசிந்து தூரநின்று அவரை வணங்கினான்; வணங்கி, "பெருமானே, நீர் காலைமுதல் இந்நேரம் வரை ஒன்றும் சாப்பிட வில்லையே!" என்று கூறினான். அவனது உள்ளத் தூய்மையைக் கண்ட விவேகானந்தர், "அப்பா! உன்னால் இயன்றதைக் கொடு; சாப்பிடுகிறேன். நீ சக்கிலி என்பதை எண்ணாதே. ஒழுக்கம் உடையவரே மேலோர். சாதிகட்கு அறிஞரிடை மதிப்பில்லை. உன் உள்ளம் தூய்மையானது. ஆதலின் நீயே உணவு கொணர்ந்து தருவாய்" என்று அன்புடன் கூறினார். அவன் மிக்க மகிழ்ச்சி அடைந்து பழங்களையும் வேறு பல தின்பண்டங்களையும் வாங்கி வந்து அவர் முன் வைத்தான். அப்பெரியார் அவனது ஒழுக்கத்தின் மேதகு தன்மையைப் பாராட்டிப் பெருங் களிப்புடன் உண்டு அவனை வாழ்த்தினார்.

முடிவு

4. ஆகவே, இம் மேற்கோள்களாலும் பிறவற்றாலும் உலக இயல்பினாலும், 'ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என்னும் திருக்குறளை நினைவிற் கொண்டு ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நடத்தலே நமது கடமை ஆகும்.

13. பள்ளிக்கூடப் பத்திரிகை

குறிப்புகள் :—1. அதன் நோக்கம்
2. எங்கள் பள்ளிக்கூடப் பத்திரிகை
3. முடிவு

கட்டுரை

அதன் நோக்கம்

1. பெரிய பள்ளிக்கூடங்களில் பள்ளிக்கூட மாணவர் நன்மைக்காக மாதப் பத்திரிகை ஒன்று வெளியிடல் வழக்கம். அது பள்ளிக்கூட வெளியீடு (School Magazine) எனப்படும். அதில் ஆசிரியர் தத்தம் பாட சம்பந்தமான அரிய செய்திகளைக் கட்டுரையாக எழுதுவர்; பிள்ளைகளும் தாங்கள் அறிந்த கதைகளையோ, செய்யுட்களையோ, கட்டுரைகளையோ எழுதுவார்கள். இப் பழக்கத்தால் மாணவர் பல நூல்களைப் படிக்க வாய்ப்புப் பெறுகின்றனர். மாணவர்க்கு எழுதும் பழக்கம் உண்டாகவும் பல நூல்களைப் படிக்க ஊக்கம் உண்டாகவும் இது சிறந்த முறை ஆகும்.

எங்கள் பள்ளிக்கூடப் பத்திரிகை

2. இத்தகைய வெளியீடு எங்கள் பள்ளிக்கூடத்தில் நடந்துவருகிறது. அது மாதந்தோறும் முதல் தேதி வெளியாகின்றது. அது ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஆங்கிலம், தமிழ், பிற பாடங்கள், விளையாட்டு, பொதுச் செய்திகள் என்பன. (1) முதற் பகுதியில் ஆங்கில ஆசிரியர்களும் மாணவரும் எழுதுவர். பாட சம்பந்தப்பட்ட ஆங்கிலப் புலவரால், அரசியல் நிபுணர் முதலிய பெருமக்களுடைய வரலாற்றுச் சுருக்கம், அவர்தம் வாழ்க்கையில் நடைபெற்ற நீதியைப் போதிக்கும் நிகழ்ச்சிகள், அவர்தம் பொருளுரை

கள் இன்ன பிறவும் வெளியிடப்படும். மாணவர் சிறு கதைகளையும் பொதுக் கட்டுரைகளையும் தாமுணர்ந்த ஆங்கில நடையில் எழுதுவர். (2) இரண்டாம் பகுதியில் தமிழ் ஆசிரியரும் தமிழ் மாணவரும் பல செய்திகளை எழுதுவர். பாட சம்பந்தமான தமிழ்ப் புலவர் வரலாறுகளும், அவர்தம் பொன்னுரைகளும், அவர் வாழ்க்கையில் நடந்த பிற நிகழ்ச்சிகளும் பிறவும், பா நயங்களும், இலக்கண விசேடங்களும் மற்றவையும் தமிழ்ப் புலவர் எழுதும் செய்திகள். மாணவர் தமிழ்க் கதைகள், தாம் அறிந்த நிகழ்ச்சிகள், தாம் ஆங்கிலத்தில் படித்துணர்ந்த அரிய செய்திகள் இன்ன பிறவும் தமிழில் எழுதுவார்கள். (3) சரித்திரம், விஞ்ஞானம், கணிதம், பூகோளம் முதலிய பிற பாடங்களைப்பற்றிய கட்டுரைகள் மூன்றும் பிரிவில் இடங்கொண்டிருக்கும். சரித்திர பாட சம்பந்தமாகச் சரித்திராசிரியர் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவார்கள். அசோகன் சாஸனங்கள், சாணக்கியன் செய்த அர்த்த சாஸ்திரத்தின் சுருக்கம், ‘பாணன்’ எழுதிய ஹர்ஷ சரித்திர விவரங்கள், மெகஸ்தனிஸ் எழுதிய இந்தியாவைப்பற்றிய குறிப்புகள், பௌத்த மதக் கொள்கைகள், பௌத்தம் வெளி நாடுகளில் பரவிய குறிப்புகள், தமிழ் நாட்டுப் பழைய செய்திகள், மேனாட்டார் தமிழகத்தைப்பற்றி எழுதியுள்ள விளக்கமான குறிப்புகள், தமிழ் அரசர் சாஸனங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், சித்திரங்கள், கோவில்கள் இவைபற்றிய (எங்கள் சரித்திர நூலில் இல்லாத) அரிய செய்திகளும் இன்ன பிறவும் உள்ளத்தைக் கவரத்தக்கவாறு மாதந்தோறும் எழுதி வெளியிடுவார்கள். இப் பகுதியே எல்லா மாணவரையும் ஈர்ப்பது. பூகோள ஆசிரியர்களும் வியக்கத்தகும் விவரங்களை வெளியிடுவார்கள். சில தீவுகளில் வாழும் மக்கள் பழக்கவழக்கங்கள், பேச்சு, இன்ன பிறவும் படிக்கப் படிக்க இன்பம் பயப்

பன. நமது நாட்டில் இல்லாத பறவைகள், விலங்குகள், ஊர்வன, மர வகைகள் முதலியனபற்றிய செய்திகளைப் படிக்கும்போது எங்களுக்கு வியப்பு உண்டாகும். விஞ்ஞான வளர்ச்சியால் தோன்றியுள்ள பலவகைச் சாதனங்களை விளக்கி விஞ்ஞான ஆசிரியர்கள் அரிய கட்டுரைகள் எழுதுதல் உண்டு. நவீன போர்க் கருவிகள், யந்திர சாதனங்கள், மின்சார அற்புதச் செயல்கள், கம்பியில்லாத் தந்தி இன்ன பிறவும் வியப்புறத்தக்கவையே அல்லவா? மாணவர் படித்து இன்புறும் வகையில், இவை தெள்ளிய நடையில் இருப்பதால், இக் கட்டுரைகளின் பயனை நாங்கள் மெய்யாகவே பெறுகின்றோம். (4) உடற் பயிற்சி, பலவகை விளையாட்டுகள், சாரணர் இயக்கம் பற்றிய பல புதிய செய்திகள் உடற் பயிற்சி ஆசிரியரால் எழுதப்படுகின்றன. மாணவரும் இப் பகுதியில் முனைந்து எழுதுகின்றனர். மாணவர் தத்தம் உடற் பயிற்சி விளையாட்டுகளின் அனுபவங்களை எழுவதில் மகிழ்ச்சிகொள்கின்றனர். மேனாட்டு உடற் பயிற்சி முறைகள், விளையாட்டுகள் இன்ன பிறவும் படங்கள் வாயிலாக விளக்கப்பட்டிருக்கும். (5) பொதுச்செய்திகள் என்னும் பகுதியில் வேடிக்கை, விகடம் பற்றிய செய்திகள் வெளிவரும்; நாடகம், நடிப்பு, ஆடல், பாடல் செய்திகளும் இப் பகுதியில் இடங்கொள்ளும்.

முடிவு

3. சுருங்கக் கூறின், எங்கள் பள்ளிக்கூடப் பத்திரிகை, மாணவராய எங்கட்குப் பல துறைகளிலும் அறிவை ஊட்டி—புதிய புதிய செய்திகளை உணர்த்தி—எங்களை நினைக்கவும் படிக்கவும் எழுதவும் ஊக்கிப் பெருந் தொண்டாற்றுகின்றது என்பதை மனமுவந்து கூறலாம். இப் பத்திரிகை ஒவ்வொரு பள்ளியிலும் இங்ஙனம் வேலை செய்யுமாயின், மாணவர் சிறந்த அறிவாளிகளாக விளங்கக்கூடும்.

14. வெள்ளப் பெருக்கம்

குறிப்புகள் :—1. வெள்ளம் உண்டாதல்
2. வெள்ளக் கொடுமை
3. நமது கடமை

கட்டுரை

வெள்ளம் உண்டாதல்

1. மழை விடாமல் பெய்வதும் அளவுக்கு மீறிப் பெய்வதும் வெள்ளத்திற்கு அடிப்படையாகும். ஏரி, குளம், யாறு முதலிய நீர்நிலைகள் நிரம்பி விடுமாயின், எஞ்சிய தண்ணீர் போவதற்கு இடம் இல்லாமல் கரைகளிலிருந்து வழிந்து சுற்றுப்புறங்களில் பாய்கிறது. இஃதன்றி நகரங்களிலோ ஊர்களிலோ கிராமங்களிலோ விடாத மழையினால் பூமி குளிர்ந்து மழை நீரை இழுக்கச் சக்தி அற்றபோது பெய்யும் மழைநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடும். சாக்கடைகளும் நிரம்புமாயின் சாலைகளில் தண்ணீர் காட்சி அளிக்கும். இந்நீர்ப் பெருக்கம் உண்டாகும் இடங்கள் எவையே ஆயினும் அவை சேதத்திற்கு உட்பட்டே தீரும். சில இடங்களில் ஆறுகள் குளங்கள் குட்டைகள் ஏரிகள் உடைப்பு எடுப்பின், பக்கத்து வயல்கள் பாழாய் விடும் ; பயிர்கள் நாசமுறும்.

வெள்ளக் கோடுமை

2. பெரிய ஏரிகள் உடைப்பெடுத்து நாசமான கிராமங்கள் எண்ணத் தொலையா. சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன் தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள மிகப் பெரிய ஏரியாகிய வீராணம் ஏரி உடைப்பெடுத்தது. அதன் பயனாகச் சுற்றுப்புறக் கிராமங்கள் வெள்ளக் காட்டிற்குள் மூழ்கின. அதற்குச் சுமார் 18 மைல் தூரத்தில் உள்ள சிதம்பரம்

வெள்ளத்திற்குள் மூழ்கியது எனின், அவ்வெள்ளக் கொடுமையை என்னென்பது! வயல்கள் அழிந்தன; பயிர்கள் ஒழிந்தன; கிராமங்கள் இருந்த இடம் தெரியவில்லை. இரயில் பாதைகள் நிலை கெட்டன. ஏரியைச் சுற்றி இருபது கல் அளவும் ஒரே வெள்ளக்காடு. அந்த ஆண்டு அப்பிரதேச மக்கள் விளைச்சலை இழந்து பட்டபாடு சொல்லுந்தரத்ததன்று.

சில வேளைகளில் காவிரி, கொள்ளிடம், வைகை, தாமிரபரணி, கெடிலம், தென் பெண்ணை, கிருஷ்ணா, கோதாவரி முதலிய பெரிய யாறுகளும் அரசலாறு, வெண்ணாறு, வெட்டாறு, வீரசோழன், குடமுருட்டி முதலிய சிற்றாறுகளும் வெள்ளப் பெருக்கால் உடைப்பெடுக்குமாயின், ஆ! அதனால் உண்டாகும் கொடுமைகள் அளவிறந்தனவாம். பல ஆறுகள்மீது குடிசைகளும் வைக்கோல் போர்களும் மிதந்து வருதலைக் காணலாம். ஆறுகளைப் பரிசுகளில் கடப்பவர் நடு ஆற்றில் அகப்பட்டுப் பரிசு கவிழ்ந்து உயிர் இழத்தல் கொடுமையானது. நீரோட்ட வேகத்தால் குளிப்பவர் இழுத்துச் செல்லப்படுவர். உடைப்பால் ஆற்றின் இருமருங்கும் உள்ள வாழைத் தோட்டங்கள் அழிந்துபடும்; சிறிய கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் மறையும்; கால் நடைகள் ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படும்; முதியவர், குழந்தைகள் முதலியோர் கொண்டு செல்லப்படுவர். நீரை எதிர்த்து நிற்கும் வன்மை எவர்க்குத் தான் உண்டு? ஆதலின், ஆற்றின் கரை ஓரமுள்ள ஊர்கள் வெள்ளத்திற்கு இரையாகியே தீரும். ஆற்றுப் பாலங்கள்மீது இரயிற் பாதை அமைக்கப்பட்டிருக்குமாயின், அப்பாதை வெள்ளத்தில் மூழ்கலும் உண்டு; சில இடங்களில் பாதை கெடுதலும் உண்டு. எங்ஙனமாயினும் வண்டிப் போக்கு வரத்து நின்றுவிடும். அதனால் குறிப்பிட்ட நேரங்களில் வண்டி போதலும் வருதலும் தடைப்

படும். அதனால் பிரயாணிகளும் சாமான்களும் குறித்த காலத்தில் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேரத் தடை உண்டாகும். வெள்ளக் கொடுமையால் வீடிழந்து பட்டினி கிடக்கும் மக்கள் பலர்; வயல்கள் வெள்ளக் கொடுமைக்கு இலக்காகிப் பயிர் பச்சைகள் நாசமாக, ஆண்டு முழுவதும் சோற்றுக்கு வழியின்றித் தவிக்கும் ஏழைக் குடியானவர் கொடுமை கொடியது! நகரங்களில் மழை நீர் தேக்கத்தால் பழைய வீடுகள் இடிந்து விழும்; அதனால் உண்டாகும் உயிர்ச் சேதம் மிகுதியாகும்; ஏழை மக்கள் குளிருடன் போராடி உயிர் நீப்பர்; குழந்தைகள் இறக்க நேரும். சுருங்கக் கூறின், வெள்ளத்தால் உண்டாகும் நஷ்டம் மிகுதியாகும்.

நமது கடமை

3. வீடு இழந்து உணவின்றி வாடும் மக்கட்கு நமது வீட்டுத் திண்ணைகளையும் பள்ளிக்கூடம் முதலிய பொது இடங்களையும் தங்குவதற்கு விடல் வேண்டும்; நகர மக்களிடமும் நகர சபையாரிடமும் உணவுப் பொருள்களை வசூலித்து அவ்வேழை மக்கட்கு உணவளித்தல் வேண்டும்; வெள்ளம் தணிந்தவுடன் அவர்கள் பழையபடி வீடு கட்டிக் கொள்ள உதவுதல்வேண்டும்; பொருள் உதவி செய்தல் வேண்டும்; ஆடைகள் தந்து ஆதரித்தல் வேண்டும். இங்ஙனம் நம்மால் இயலும் உதவிகள் செய்து அம்மக்களை நல்வாழ்வு பெறச்செய்தல் நமது கடமையாகும்.

15. சமூகத்துக்குச் சேவை செய்யும் சங்கங்கள்

குறிப்புகள்:—1. சமூக சேவை—யாது?
2. பலவகைச் சங்கங்கள்
3. அவற்றால் பயன்
4. முடிவு

கட்டுரை

சமூக சேவை—யாது ?

1. சமூகம் என்பது மக்கள் தொகுதி. மக்கட் தொகுதிக்கு நன்மை பயக்கத்தக்க முறைகளில் பொதுப்படச் சேவை புரிதல் 'சமூக சேவை' எனப்படும். இச் சேவை எல்லா நாடுகளிலும் செய்யப்பட்டு வருகிறது. இது நம் நாட்டிலும் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், நம்மவர் பலருக்கு அச் சேவை செய்பவர் யார்? அவர்தம் இயக்கங்கள் யாவை? என்னும் விவரங்கள் தெரியா.

பலவகைச் சங்கங்கள்

2. பள்ளிக்கூட மாணவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள 'சாரணர் இயக்கம்' ஒன்று; 'செஞ் சிலுவைச் சங்கம்' மற்றொன்று. 'சீர்திருத்தக் கழகங்கள்' இவ்வகையினவே. இளைஞரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள 'இலக்கியக் கழகங்கள்', பலவகை 'சமாஜங்கள்' இத் துறையில் பணியாற்றுவனவே யாகும். சித்தாந்த சமாஜம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்றன 'சமாஜங்கள்' என்பதில் அடங்கும். இவை யன்றி, அவ்வச் சாதியார்க்கு உழைக்கும் சங்கங்கள் பல: கருணீகர் சங்கம், வேளாளர் சங்கம், முதலியார் சங்கம், நாயகர் சங்கம் என்பன இவ்வகையில் அடங்கும்.

அவற்றால் பயன்

3. சாரணர் சங்கத்தால் அளவற்ற நன்மைகள் உண்டு: சாரணர் சாதிமத வேறுபாடுகளைக் களைந்தவர்; மேலான குணங்குறிகள் உடையவர். பொது மக்கட்கு உழைப்பதே அவர்தம் தலையாய நோக்கம். அரசாங்கத்தார்க்கும் பொது மக்கட்கும் எச்சமயத்திலும் தம்மால் ஆகும்தொண்டு புரிய அவர்கள் தயங்குவதே இல்லை. தேர்-திருவிழாக்களில் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல், திருட்டு முதலியன நடை பெறாமல் பார்த்துக்கொள்ளுதல், வேறு பெரிய கூட்டங்களில் அமைதியை நிலை நாட்டுதல், ஆபத்தில் சிக்கியவரைக் காத்தல், குளத்தில் தவறி விழும் பிள்ளைகளை மீட்டுதல் முதலிய பல துறைத் தொண்டுகள் சாரணர் செய்யத் தக்கவை. சாலைகளில் விழுந்து கிடக்கும் ஆணி, கண்ணாடி, எலும்பு, கூரிய கற்கள் முதலியவற்றை அப்புறப்படுத்துதல், வழிதெரியாமல் அல்லற்படும் மக்களுக்கு வழிகாட்டி உதவுதல், வீதிச்சந்திகள் தெரியாமல் துன்பப்படும் முதியவரைச் சந்திகளைக்கடக்கச் செய்தல், வழி தவறும் சிறுவர்க்கு உதவி புரிதல், தீ, வெள்ளம் முதலிய விபத்துகள் நேரும் இடங்கட்குச் சென்று துன்புறும் மக்கட்கு வேண்டும் உதவிகள் செய்தல் இன்னபிறவும் செஞ்சிலுவைச் சங்கத்தார் புரியும் பொது மக்கள் சேவைகள் ஆகும். இளைஞரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள சீர்திருத்தக் கழகங்கள் வாயிலாகப் பொது மக்கட்குச் சமூக சீர்திருத்தம் சம்பந்தமான பல செய்திகள் அடிக்கடி வெளியிடப்படும்; கற்றறிந்த பலர் காலத்திற்கு ஏற்றபடி தம்மைச் சீர்திருத்திக்கொண்டு பிறர் போற்றும்படி வாழத் தக்க நன் முறைகளை வகுத்துக் காட்டுவர். இத்தகைய சொற்பொழிவுகள், இன்று நாட்டு மக்கட்குச் செய்துவரும் தொண்டு மெய்யான தொண்டாகும். இப் பிரசாரத்தாற்

ளுன் தீண்டப்படாதார் முதலிய தாழ்ந்த மக்கள் சமவுரிமை பெற்றுச் சமூக மக்களாக மதிக்கப்பட்டு வருகின்றனர். கைம்மை மணம், இளமை மணத் தடை, சாதிவேறு பாடு நீக்கம் இன்ன பிற நன்மைகள் இச் சீர்திருத்தக் கழ கங்களால் உண்டானவையே. இலக்கியக் கழகங்களால் பண்டைக் காலத் தமிழர் நாகரிகம், பழக்க - வழக்கங்கள், வீரம், பக்தி, ஒழுக்கம் இன்ன பிற நல்லியல்புகளை நாம் அறிய இடமுண்டாகிறது. அவ்வறிவினுல், நாம் நமது வாழ்க்கையைச் செப்பம் செய்துகொள்ள வழி ஏற்படுகிறது. நம் முன்னோர் வரலாற்றையும் தாய் மொழியின் பெருமை யையும் அறிந்து, பெருமை கொள்ள வசதி ஏற்படுகிறது. உடன்கட்டை ஏறல் கூடாது என்பதைச் சட்டமூலம் ஆக்கி, வேறு பல ஆசார சீர்திருத்தங்களைக் கற்பித்த பெரியாரான இராஜா ராம் மோஹன ராய் ஏற்படுத்திய பிரம்ம சமாஜமும், 'சாதிகள் என்பவை மனிதன் கற்பனைகளே; அக் கற்பனை கள் கடவுள் நெறிக்கு மாறுனவை' என்பதைக் கற்பித்த பெரியார் தயானந்த சரஸ்வதியால் உண்டாக்கப்பட்ட ஆரிய சமாஜமும் மெய்யாகவே பொது மக்கட்குச் சேவை செய்யும் சங்கங்கள் ஆகும். இவை யன்றிப் பலவாக விரிந்துள்ள சாதிச் சங்கங்கள் அவ்வச் சாதி மக்களை நல்வழிப்படுத்தப் பயன்படுகின்றன. எல்லாச் சாதிகளும் சேர்ந்து சமூகம் ஆதல் போல, எல்லாச் சாதிச் சங்கங்களின் பணியும் சமூக சேவை செய்தலே யாகும்.

முடிவு

4. இச் சங்கங்கள் வலுப்பெற இளைஞர் வேலைசெய்தல் வேண்டும். இவற்றால் மெய்யான சமூக சேவை உண்டாக வும் இளைஞர் பாடுபடல் வேண்டும். அந் நிலையிற்றான் சமூக முன்னேற்றம் ஏற்படும்.

16. பள்ளிக்கூட நூல்நிலையம்

குறிப்புகள் :—1. நூல்நிலையம்—யாது ?
2. எங்கள் பள்ளிக்கூட நூல்நிலையம்
3. நாங்கள் பெறும் பயன்
4. முடிவு

கட்டுரை

நூல்நிலையம்—யாது ?

1. நூல்நிலையம் என்பது இலக்கியம், இலக்கணம், சரித்திரம், விஞ்ஞானம், உடற்பயிற்சி, விளையாட்டுகள், ஆராய்ச்சி முதலிய பல கலைகளைப்பற்றிய நூல்களைப் பெற்றுள்ள இடம் ஆகும். இந் நூல்நிலையங்கள் மக்கள் அறிவை வளர்க்கும் ஆலயங்கள் ஆகும். ஆன்ம வளர்ச்சியை வளர்க்கும் தேவாலயங்களைப் போல, அறிவு வளர்ச்சிக்கு உரியவை புத்தகாலயங்கள் ஆகும். ஆயிரக் கணக்கான நூல்களை ஒவ்வொரு துறையிலும் பெற்றுள்ள நூல்நிலையங்கள் சென்னையில் இரண்டு உண்டு. அவை அரசாங்கத்தார் நடத்தும் கன்னிமாரா நூல்நிலையம், சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் நூல்நிலையம் என்பன. இவையன்றிச் சிறிய நூல்நிலையங்கள் பல சென்னை நகரில் உண்டு. இவை போலவே சிறு சிறு நூல்நிலையங்கள் ஒவ்வொரு நகரத்திலும் உண்டு; நகராண்மைக் கழகங்கள் நடத்தும் நூல்நிலையங்களும் உண்டு. இவை யாவும் மக்கட்கு அறிவு வளர்ச்சியை ஊட்டுவனவாம்.

இவையன்றி, ஒவ்வோர் உயர்தரக் கலாசாலையிலும் நடுத்தரக் கலாசாலையிலும் கல்லூரியிலும் ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட நூல்நிலையங்கள் இருக்கின்றன. அவற்றை மாணவர் நன்கு பயன்படுத்தி, அறிவு வளர்ச்சி

பெறுகின்றனர். ஆசிரியர்களும் பாடங்களைப் போதித்தற்கு வேண்டும் உதவிகளையும் விவரங்களையும் பல நூல்களிலிருந்து பெறப் பள்ளிக்கூட நூல்நிலையங்கள் பயன்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தும் மாணவர் உண்மையாகவே பேறு பெற்றவர் என்னல் மிகையாகாது.

எங்கள் பள்ளிக்கூட நூல்நிலையம்

2. எங்கள் பள்ளிக்கூடம், சென்னை 'முத்தியால் பேட்டை உயர்கலாசாலை' ஆகும். அதில் உள்ள நூல் நிலையம் மூன்றும் மாடியில் மிகப் பெரிய இடத்தில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் முப்பது கண்ணாடி பீரோக்கள் இருக்கின்றன. அவற்றுள் இருபதாயிரம் நூல்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டு எண் இடப்பட்டு இருக்கின்றன. 'மாணவர் நூல்கள்' என்றும், 'ஆசிரியர் நூல்கள்' என்றும் 'பள்ளியிலேயே பார்த்தற்குரிய நூல்கள்' (Reference Books) என்றும் மூன்று பிரிவுகள் உண்டு. மாணவர் நூல்கள் ஆங்கிலச் செய்யுள், வசனம், கதை எனவும், தமிழ்ச் செய்யுள், வசனம், இலக்கணம் எனவும், சரித்திரம், பூகோளம், இயற்கைச் சரித்திரம், சித்திரம், வானசாஸ்திரம் எனவும் பல பிரிவுகளாகத் தனித்தனிப் பீரோக்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே ஆசிரியர்க்குரிய நூல்களும் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. மூன்றும் பிரிவிற் சேர்க்கப்பட்ட நூல்களும் இங்ஙனம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. எங்கள் நூல்நிலையத்தில் மாணவர்க்கோ ஆசிரியர்க்கோ வேண்டும் நூல்களைத் தந்து உதவுபவர் இருவர் உளர். அவர்கள் நாங்கள் விரும்பும் நூலை எடுத்து, எங்கள் பெயரையும் வகுப்பையும் வகுப்புப் பிரிவையும் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொண்டு தருவர். நாங்கள் ஒரு வாரத்துக்குள், அந்நூலைப் படித்து முடித்துத் திருப்பித்

தரல் வேண்டும். இன்றேல் ஒரு நாளைக்கு அரையணு வீதம் அபராதம் செலுத்தவேண்டும். இக் கட்டுப்பாடு எங்கட்கு மிக்க நன்மையை உண்டாக்குகிறது. ஒரு வாரத்திற்குள் சுறுசுறுப்பாக நூலைப் படித்து முடிக்கவேண்டும் என்னும் கட்டுப்பாடு எங்களை நல்வழிப்படுத்திப் பல நூல்களைப் படிக்குமாறு செய்கிறது. இவ்வாறு நாங்கள் வாரத்திற்கொரு புத்தகம் வீதம் ஓர் ஆண்டில் பல நூல்களைப் படித்து அறிவைப் பெற வசதி உண்டாகிறது.

நாங்கள் பெறும் பயன்

3. சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், விளையாட்டுகள், இலக்கியம், இலக்கணம் முதலிய பலதிறப்பட்ட பாடங்களைப் பள்ளியிற் படித்தலாலும், அவற்றுக்குப் பக்க பலமாக அவை சம்பந்தப்பட்ட பலதிறப்பட்ட நூல்களைப் பள்ளிக்கூட நூல்நிலையத்திலிருந்து பெற்றுப் படித்தலாலும் அக்கலைகளைப் பற்றிய அறிவு இயல்பாகவே எங்கட்கு வளர்ச்சி அடைகின்றது. நாங்கள் எங்கள் பாட சம்பந்தமாகவும் பொது அறிவு சம்பந்தமாகவும் பள்ளிக்கூட நூல் நிலையத்தைப் பயன்படுத்துகிறோம். நூல் நிலையத்துக்கு வரும் பலதிறப்பட்ட பத்திரிகைகளை நாங்கள் பள்ளிக்கூட ஓய்வு நேரங்களில் படித்துப் பயன் பெறுகிறோம். ஆ! நூல்நிலையம் நூற்றுக் கணக்கான-பல்வேறு நாட்டாரான-பேரறிஞர் உள்ளத்தை உணர்த்துவதோடு, நம்மை நன்மக்களாகவும் அறிஞராகவும் ஆக்கும் பண்பு அழகியதே அன்றோ!

முடிவு.

4. இத்தகைய நூல்நிலைய இன்றியமையாமையை நன்கு உணர்ந்து, மாணவர் அதனைப் பயன்படுத்துவரேல், ஒவ்வொரு மாணவரும் அறிவின் திருவுருவாக அமைவர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

17. கற்றவர் நாட்டுக்குச் செய்யவேண்டும் நன்மைகள்

குறிப்புகள்:—1. கற்றவர் யார்?
2. நாட்டின் குறைபாடுகள் யாவை?
3. அவற்றைப் போக்குவது எப்படி?
4. முடிவு.

கட்டுரை

கற்றவர் யார்?

1. சமயம், மொழி, பயிர்த்தொழில், கைத்தொழில், விஞ்ஞானம், சரித்திரம், ஆராய்ச்சி முதலிய துறைகளில் கற்ற இளைஞரும் முதியரும் 'கற்றவர்' எனப்படுவர். இவை அனைத்திலும் ஒருவரே புலமை பெறுதல் இயலாது. ஒவ்வொன்றே ஒருவர்க்கு எளிதாகும். இக்கால ஆங்கிலக் கல்வியால் ஒவ்வொன்றிலும் ஓரளவு அறிவு யாவரும் பெறுதல் இயலும். அவரும் இக்கால நிலையை நோக்கிக் 'கற்றவர்' என்றே கொள்ளப்படுவர்.

நாட்டின் குறைபாடுகள் யாவை?

2. நமது இந்திய நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்வி அற்றவராக இருக்கின்றனர். சமூகத்தைச் சீர் குலைத்துவரும் மதக் கொடுமைகள் பல மலிந்து கிடக்கின்றன; சாதிகள் மிகப் பலவாகப் பெருகிச் சமூக ஒற்றுமையின் அடிப்படையையே அசைத்து வருகின்றன. பெண்கள் ஆடவர்க்கு அடிமைப்பட்டுக் கல்வி அறிவு இல்லாமல், உலக ஞானம் அற்று நடைப் பிணங்களாக இருக்கின்றனர். 'தீண்டாமை' என்னும் தீய நோய் எட்டுக் கோடி மக்களைச் சமூக விலக்குச் செய்துள்ளது. அதன் பயனாய் அம்மக்கள் ஏனை

யோரால் விலங்கினும் கீழ்ப்பட்டவராகக் கருதப்படுகின்றனர்: ஒதுக்கப்படுகின்றனர்; சமூக உரிமைகள் மறுக்கப்படுகின்றனர்; உதவிகள் பல மறுக்கப்படுகின்றனர். கல்வி அறிவு இன்மையால் சுகாதாரக் குறையுடன் இருந்து மரண விகிதத்தை மிகுதிப் படுத்துகின்றனர்; மூடக்கொள்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் உழல்கின்றனர். குடியானவர் உழுதொழிலில் மேனாட்டு முறைகளை அறியாது, பயிர்த்தொழிலைச் சிறப்பாக நடத்தமுடியாத தாழ்ந்த நிலையில் உழல்கின்றனர்; அவர்கள் ஆறு மாதம் வயல்களில் வேலை செய்கின்றனர்; ஏனைய ஆறு மாதம் ஏதொரு தொழிலும் இன்றிப் பட்டினி கிடந்து அல்லலுறுகின்றனர். தொழிலாளர் மேனாட்டார் கைத்தொழில்களைக் கவனித்து நம் நாட்டுக் கைத்தொழில்களைப் பெருக்கிச் செல்வப் பெருக்குடன் வாழ வழியின்றித் துன்புறுகின்றனர். இங்ஙனம் பல துறைகளிலும் நம்நாட்டு மக்கள் 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு' இழிநிலையில் நடைப் பிணங்களாக இருக்கின்றனர் எனல் மிகையாகாது.

அவற்றைப் போக்குவது எப்படி?

ப். கிராமத்தில் உள்ள செல்வர்கள், படித்து வேலையில்லாமல் தவிக்கும் இளைஞரைத் தம் கிராமத்திற் கொண்டு சேர்த்து, அவர்க்கு வேண்டும் வருவாய் அளித்துத் தம் கிராமச் சீர்திருத்தத்தை மேனாட்டு முறைகளில் செய்விக்க முற்படவேண்டும். ஓர் இளைஞர்க்கும் அவர் குடும்பத்துக்கும் வேண்டிய வசதிகள் கிராமத்தார் செய்ய வேண்டும் என்று மனம் கொண்டால் அஃது இயலாத காரியம் அன்று. ஆகவே அவ்விளைஞரைக்கொண்டு கிராம சுகாதாரம், கிராமக் கல்வி, பயிர்த்தொழில் சீர்திருத்தம், குடிசைக் கைத்தொழில்

வளர்ச்சி இன்னபிறவும் ஆங்கில நூல்கள் வாயிலாக அறிந்து முன்னேறுதல் இயலாத காரியமன்று. 'மனம் இருந்தால் வழி உண்டு' அன்றோ? இம்முறையைக் கிராமத்தார் கைக் கொண்டால், எளிதில் கிராமம் முன்னேற்றம் எய்தக்கூடும். பிறர் உதவியை எதிர்பாராத இளைஞர் படிப்பற்ற மக்கட்கு ஓய்வு நேரங்களில் படிப்பைக் கற்பிக்கலாம்; உலக அறிவைப் பிரசங்க வாயிலாக ஊட்டலாம்; இலக்கிய அறிவையும் சரித் திரம், விஞ்ஞானம் முதலிய பல்கலை உணர்ச்சியையும் கேட் போருக்குப்புரியக்கூடியமுறையில் தெளிவிக்கலாம். காலதேச வர்த்தமானங்கட்கு ஏற்றவாறு அப் பாமர மக்களைத் திருத்த இப் பிரசங்கங்களே நல்ல கருவிகள் ஆகும். இந்நாட்டின் பண்டைய நிலைமை, பண்டைச் சமுதாய நிலைமை, இன்றைய நிலைமை இன்ன பிறவும் விளக்கி, இக்காலத்தில் நடந்து கொள்ள வேண்டும் முறைகள் இன்னவையென விளக்குதல் கற்றறிந்தார் கடனாகும். பாமரராக உள்ள பெரும்பாலான மக்கள் அறிவு பெறுதவரை இந்நாடும் இந்திய சமூகமும் உருப்பட முடியா அன்றோ? ஆகவே, நாட்டு முன்னேற்றத் தில் நன்னோக்கம் கொண்ட கற்றறிந்த இளைஞர் தம்மைத் தியாகம் செய்தேனும் தம் தாய் நாட்டு மக்களைத் தம் நிலைக் குக் கொண்டுவரக் கடமைப்பட்டவரே ஆவர். மேனாட்டு இளைஞர் பலர் ஒவ்வொரு நாட்டிலும் இப்பணியை மேற் கொண்டமையாற்றான், அவர்தம் சமூகங்கள் இன்று உயர் நிலையில் இருக்கின்றன.

முடிவு

4. எனவே, கற்றறிந்தார் தியாக உணர்ச்சியுடன் 'எல்லாரும் இன்புற்றிருக்கச் செய்வதே என் கடமை' என்று எண்ணிப் பணியாற்றும் நாளே இச்சமூகம் உயர் வுறும் நன்னாள் ஆகும். அந்நாள் எந்நாள்?

18. உரையாடல் போட்டி

["பிறமொழிக் கலப்பால் தமிழ்வளரும்—தமிழ்கெடும்" என்பது பற்றிப் போட்டி உரையாடல் வரைக.]

கமலம்—பிறமொழிக் கலப்பால் தமிழ் வளரும் என்று பேசுபவள்.

கண்ணகி—பிறமொழிக் கலப்பால் தமிழ் கெடும் என்று பேசுபவள்.

கமலம்:—உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள மக்கள் நெருங்கிப் பழகப் பழக, அவர்தம் பழக்க வழக்கங்களில் மாற்றம் உண்டாதல் இயல்பு. உதாரணமாக ஆங்கில அரசாங்கம் நம் நாட்டில் ஏற்பட்ட பின்னர் நம் பழக்க வழக்கங்கள் பல பெருமாறுதல் அடைந்துவிட்டன. நம் ஆண்மக்களின் தலைமயிரே மாறுதல் அடைந்துவிட்டது; மீசை மாற்றம் அடைந்தது; நடை உடை பாவனைகள் மாறுதல் உற்றன. காலை மாலைகளில் காப்பி, டீ, கொக்கோ, ஓவல்டைன் முதலிய பானவகைகள் குடிகொண்டன. இரயில், பஸ், மோட்டார், டிராம், ரிக்ஷா முதலிய வாகனங்கள் ஆயின. பண்டைக் காலத்திற்கும் இன்றைக்கும் உள்ள வேறுபாடுகள் எத்தனை! பழந்தமிழன் இன்று இருக்கின்றானா? இல்லையே; நாம் இன்று அடைந்துள்ள மாறுதல்கள் இக் காலத்தில் ஏற்பட வேண்டுபவையே. உலகம் எவ்வெவ்வாறு நடைபெறுகின்றதோ அதற்கேற்ப நாமும் நம்மைச் சரிப்படுத்திக் கொண்டு போதலே அறிவுடைமை. அதுபோலவே நாம் பேசும் தமிழ் மொழியும் மாறுதல் அடைந்துகொண்டே வருகின்றது. அஃது ஒரு காலத்தில் தனித்து இயங்கி வந்தது. அப்பொழுது நம் மொழி தனித் தமிழாகவே இருந்தது. பின்னர் வடமொழியாளர் கூட்டுறவு ஏற்பட்டதும், அவர்தம் சம்ஸ்கிருதச் சொற்கள் சிறிது சிறிதாகத் தமி

ழில் இடம் பெற்றன. மத சம்பந்தமான சொற்கள் பல வடசொற்களாகவே உள்ளன. தமிழர் மத விஷயங்களில் வடமொழியாளர் ஆதிக்கம் மிகுந்ததே இதற்குக் காரணம். அதன் பயனாகத் தமிழிலேயே மிகப் பழைய நூலாகக் கருதிப் போற்றப்படும் தொல்காப்பியம் என்னும் உயரிய நூலிலேயே வடசொற்கள் கலந்து இருக்கின்றன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறிதளவு அதிகப்பட்டுள்ளன. கி. பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் பாடப்பெற்ற தேவார-திருவாசக-நாலாயிரப் பிரபந்தங்களில் வடசொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. வடமொழியும் தென்மொழியும் கலந்து புதிய நடை (மணிப்ரவாள நடை) ஒன்று வைணவரால் உண்டாக்கப்பட்டது. வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம் தமிழும் வடமொழியும் கலந்து மணிப்ரவாள நடையாகவே இருக்கிறது.

தமிழில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டதால், மத சம்பந்தமாகப் பல அரிய சொற்கள் தமிழிற் புகுந்தன; வேதங்கள், உபநிஷத்துகள், தந்திரங்கள், இதிகாச புராணங்கள் முதலியவற்றின் உயர் கருத்துகள் தமிழிற் புகுந்தன. எனவே, இக் கலப்பால் தமிழ் நன்மை பெற்றதென்றே நான் கருதுகிறேன். வடநாட்டார் பயன்படுத்திய பல பொருள்களின் பெயர்கள் நமக்குத் தெரியா. அப் பொருள்களும் நம்மிடம் இல்லை. அவர்தம் கூட்டுறவால் அப் பொருள்களும் அவற்றுக்குரிய சொற்களும் தமிழ் நாட்டில் வழங்குகையில் அச்சொற்கள் தமிழிற் கலத்தல் இயல்பே அல்லவா? தமிழ் நூல்களில் காப்பி, டீ, கொக்கோ, ஓவல்டைன், ஹார்லிக்ஸ் முதலிய பானங்களின் பெயர்கள் நுழையவில்லையா? இவை வெள்ளையர் கூட்டுறவால் உண்டானவை அல்லவா? சலாம், கச்சேரி, அமீனா, பஸார், ஜமக்காளம், ஜிமிக்கி முதலிய சொற்கள் முஸ்லிம்கள் கூட்டுறவால் தமிழிற் புகுந்த

சொற்கள். இவற்றை எங்ஙனம் நீக்குவது? இவை தாமாக அவ்வக் காலத்திற் புகுந்துவிட்டன. இவற்றைத் தமிழர் இன்னும் பேச்சிற் பயன்படுத்துகின்றனர். லட்டு, ஜிலேபி, பால்கோவா, பூந்தி, பர்பி, போளி முதலிய தின்பண்டப் பெயர்கள் வடமொழிப் பெயர்கள் அல்லவா? இவை தமிழில் வேரூன்றிவிட்டன.

ஆங்கிலேயர் தம் மொழியைப் பெருக்கப் பலமொழிச் சொற்களையும் கடன் வாங்குகின்றனர்; தம் மொழியை உயர்தர மொழியாக ஆக்குகின்றனர்; உலகில் உள்ள பல மொழிச் சொற்களை அதனிற் காணலாம். அதுபோல அவசியம் நேரும்போது பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் வளருமே அன்றிக் கேடுறாது. அதன் வளர்ச்சி மெய்யாகவே நன்மை தரவேண்டுமாயின், இயல்பாக அதனிற் கலக்கும் பிறமொழிச் சொற்களை அப்படியே விட்டு விடுதல் நல்லதாகும். இதுகாறும் கூறிய சான்றுகளால் 'பிறமொழிக் கலப்பால் தமிழ் வளரும்' என்றே நான் நம்புகிறேன்.

கண்ணகி :—தமிழ்மொழி ஒரு காலத்தில் தனித்து இயங்கிய தென்பதையாவது கமலம் ஒப்புக்கொண்டதை நான் பாராட்டுகிறேன். தொல்காப்பியத்தில் வடசொற்கள் இருப்பதாகக் கமலம் கூறியது உண்மையே. ஏனைய நூல்களில் வடசொற்களின் அளவு மிகுந்திருத்தலும் உண்மையே. நீங்கள் நன்றாக நடுநிலையிலிருந்து சிந்தித்தல் வேண்டும். இவ் வடசொற்கள் இருக்கும் இடங்களில் இருந்திருக்க வேண்டிய தமிழ்ச் சொற்கள் எங்கே? அவை தொல்காப்பியர் காலத்திலேயே (கி. மு. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே) மறக்கப்பட்டு விட்டன என்பது விளங்குகின்றதன்றோ? அதன் பொருள் என்ன? வடசொற்கள் நுழைவால் தமிழ்ச் சொற்கள் பல தமிழ் மொழியிலிருந்து

சிறிது சிறிதாக அகலலாயின-மறைப்புண்டன என்பது தானே பொருள்! நம் தமிழ், அச்சொற்களை இழந்ததெனின், அங்ஙனம் இழந்துவிட்டது மொழிக்கு ஈடுபண்ண முடியாத நஷ்டம் அன்றோ? இங்ஙனம் வடமொழியின் ஆதிக்கத்தால் தமிழ் நாளடைவில் தன் சொற்களை இழந்துவந்துள்ளது என்பதைப் பேராசிரியர் பலர் ஆராய்ந்து கூறியுள்ளனர். இங்ஙனம் ஒருமொழியின் நுழைவால் தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்து மறைகின்றன என்பதை நன்கறிந்தும், பிறமொழிக் கலப்பால் தமிழ் வளரும் என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? இக் கலப்பால் தமிழ் வளர்தற்குப் பதிலாக அழிந்து வருகிறது-ஆவி இழந்து வருகிறது என்று வருத்தத்துடன் கூறுதலே பொருந்தும். இங்ஙனம் வடமொழியாற் கெட்ட மொழிகள் எத்தனை! இந்தியா முழுவதும் இருந்த பழைய திராவிட மொழி, இவ் வடமொழிக் கலப்பாலும் கிரேக்கம், ஈரானியம், பாரசீகம், அரேபியம், மங்கோலியம் முதலிய பல மொழிக் கூட்டுறவாலும் நாசமாகிப் 'பிராக்ருத பாஷைகள்' ஆயிற்று. அவை மீண்டும் மேற்சொன்ன பல மொழிகளால் (அம் மொழியினர் இந்தியாமீது படையெடுத்துக் குடிபுகுந்து வட இந்தியாவை ஆண்டு வந்தமையால்) கெட்டு, இன்று வடநாட்டில் வழங்கப்பெறும் சிந்தி, ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி, மராட்டி, குஜராத்தி முதலிய புதிய ஆரிய மொழிகளாக (Modern Aryan Languages) உருவெடுத்தன என்பதை மொழியாராய்ச்சி நிபுணர்கள் ஆராய்ந்து தக்க சான்றுகளோடு கூறியுள்ளனர். இங்ஙனம் பிறமொழிக்கலப்பால் பழைய திராவிடம் நாசமாயிற்று என்பது மொழியாராய்ச்சியாற் போந்த உண்மையாகும்.

ஆங்கிலம் வந்ததன் பயனாகத் தமிழாது தமிழ்ப்பேச்சுக்கெட்டு, நாம் பாதி-தமிழ் பாதி-ஆங்கிலமாகக் கலந்து பேசலை எவர்தாம் அறியார்! தமிழர்க்குத் தமிழ்ப் பெயர்கள்

கெட்டு, வடமொழிப் பெயர்களே இடப்பட்டு வந்துள்ளதை நீர் அறியீரோ? எந்த நாட்டிலேனும் இந்தக் கேடு உண்டா? இன்று தமிழ்மொழி தமிழ் நாட்டுக் கோவில்களில் உண்டா? திருமணங்களில் தமிழ் மந்திரங்கள் உண்டா? இங்ஙனம் பிறமொழிக் கலப்பால் தமிழர் "பாமரராய்-விலங்குகளாய் - ஊமையராய் - செவிடர்களாய் - குருடர்களாய்" பிறர் இகழ்ச்சிக்கு ஆட்பட்டுக் கேவலம் பெயரளவில் தமிழராக இருக்கின்றனர் என்பதை நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். தமிழர் தமிழ்வளம் இழந்து வாழ்கின்றனர். இக் கேடு பிறமொழிகளால் நேர்ந்தது. தமிழிற் பேசுவதோ - படிப்பதோ - எழுதுவதோ கேவலம் என்று கருதக்கூடிய காலம் வந்துவிட்டதெனின், இதைவிட மோசம் வேறென்ன வேண்டும்! இன்ன பிற காரணங்களால் 'பிற மொழிக் கலப்பால் தமிழ் கெடும்' என்பது நன்கு தெளிவாகிறதன்றோ? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?

இருவர் வாதங்களில் 'எது சரியானது?'—நீங்களே முடிவு கூறுங்கள்.

---

19. நம்மை உயர்ந்தவர் ஆக்கும் குணங்கள்

குறிப்புகள் :—1. உயர் குணங்கள்
2. சான்றுகள்
3. முடிவு

3405

கட்டுரை

உயர் குணங்கள்

1. அன்பு, அருள், உயிர்கட்கு உதவி, சாந்தம், பொறுமை, அடக்கம், ஊக்கம், உழைப்பு, இறையன்பு, இராஜ பக்தி, நாட்டுப் பற்று, சொல் தவறாமை முதலியன ஒருவரை மேன்மைப்படுத்தும் குணங்கள் ஆகும். அன்பு என்பது, உற்றார் உறவினர்பால் காட்டும் பிரியம் ஆகும். அருள் என்பது, எல்லா உயிர்களிடத்தும் பதில் உதவி எதிர் பாராது காட்டும் பேரன்பாகும். புத்தர், ஏசுநாதர் முதலிய பெரியாரைப் போல எல்லா உயிர்களிடத்தும் காட்டும் கரை கடந்த அன்பு வேண்டற்பாலது. அமைதிக் குணம் ஒவ்வொருவரிடத்தும் இருக்கத்தகுவது. எத்தகைய துன்பம் வரினும் சாந்தத்தைக் கடைப்பிடித்துப் பொறுமை காட்டல் போற்றத் தக்க பெருங் குணமாகும். “அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆர்இருள் உய்த்துவிடும்” என்னும் பொய்யாமொழிப்படி அடக்கத்தின் மேன்மையை உணர்ந்து, கற்று அடங்க வேண்டுவனவற்றுக்கு அடங்கிப் போகுமவரே கற்றறிந்த மேலோர் ஆவர். வேலைகளைச் செய்வதில் ஊக்கமும் நினைத்ததை முடிப்பதில் ஊக்கமும் உழைப்பும் காட்டி வேலை செய்தல் பாராட்டத்தக்கது. ஊக்கமும் உழைப்பும் அற்றவர் வாழ்க்கையில் வெற்றி பெறுதல் இயலாது. “கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்” என்னும் திருக்குறள்படி ஒருவன் எவ்வளவு கற்றவனாயினும், இறையன்பு அற்றவனாயின், அக்

கல்வியால் அவன் பெறத்தகும் பயனை இழந்தவனே ஆவன். நாட்டுக் குடிமகன் எவனே ஆயினும், அவனுக்கு இராஜ பக்தி இருக்கவேண்டுவது மிக்க அவசியமாகும். அரசியலால் உண்டாகும் அளவற்ற நன்மைகளை உணரும் அறிஞன் இராஜ பக்தியிற் சிறந்து விளங்குவான் என்பதில் கடுகளவும் ஐயமில்லை. நாட்டுப்பற்று இல்லாதவன் மனித இனத்தில் சேர்த்தெண்ணப்படத்தக்கவன் அல்லன். அறிவும் ஆராய்ச்சியும் உடைய எவனிடத்தும் நாட்டுப் பற்றுக் கருக்கொண்டிருத்தலைக் காணலாம். சொன்ன சொல்லைத் தவருமல் காக்கும் தன்மை மேன்மக்கள்பால் உண்டு. வாழ்க்கையைச் செவ்வனே நடத்த விரும்பும் ஒவ்வொருவரும் சொன்ன சொல்லைத் தவருது பாதுகாப்பர். அங்ஙனம் பாதுகாப்பவரே சமூகத்தில் உயர் நிலையைப் பெறுவர்.

சான்றுகள்

2. 'அன்பே கடவுள்', 'அருளே கடவுள்' என்னும் தூய கொள்கைகளைப் போதித்த புத்த மஹான், நாசரேத்தூர் அடிகள்போன்ருர் சமூகத்தில் எத்தகைய உயர்நிலையை அடைந்தனர் என்பதை அவர் தம் வரலாறுகளே நன்கு உரைப்பன ஆகும். உலகப் பெருமக்கள் பலரிடத்தும்—ஈஸ்வர சந்திரர், ஏப்ரஹாம் லிங்கன், இராஜாராம் மோஹனராய், இராமலிங்க அடிகள் போன்ற பெரியாரிடத்தும் இக் குணங்கள் தலை சிறந்து நின்றதை எவரே அறியார்? நீக்ரோவர், செவ்விந்தியர் ஆகிய அடிமைகளிடம் கொண்ட அளவிறந்த அன்பின் பெருக்கால் அன்ரே ஏப்ரகாம் லிங்கன் அடிமை விடுதலைச் சட்டத்தைப் பலத்த எதிர்ப்புக்கிடையே உண்டாக்கினுர். அவ்வேழைகளிடம் அன்பு காட்டியதால் அன்ரே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்! பாமர மக்கள்மீது கொண்ட அன்பு காரணமாக அன்ரே புத்த மஹான் அரசு

துறந்தார். ஏசுநாதர் சிலுவையில் அறையுண்டார். இத்தகைய பெருமக்கள் உலகப் பெருமக்களாக—ஞானசிரியராக மக்கள் இதயகமலத்தில் வீற்றிருக்கத் தகுதியுடையர் அல்லரோ? எனவே, அத்தகைய பெருங்குணமே நம்மை உயர்ந்தவர் ஆக்கும்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலியவற்றுக்குப் பாண்டவருள் மூத்தவனான தருமன் சிறந்த எடுத்துக்காட்டாவான். மாயச் சூதாடியபோதும் பிற துன்பங்கள் துரியோதனனால் உண்டானபோதும் தருமன் காட்டிய பொறுமைக்கு அளவில்லை என்பதைப் பாரதக் கதையால் பகுத்துணரலாம். அரிச்சந்திரனும் பொறுமை, சாந்தம், அடக்கம் ஆகிய உயர் குணங்கட்கும் சொன்ன சொல் தவறாமைக்கும் சிறந்த சான்றாவன். 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' எனப்படும் பெரியவர் அனைவரும் அடக்கமுடைய மேலோரேயாவர். எடுத்த காரியத்தில் ஊக்கம் காட்டி அதனை முடிக்க இடைவிடாமல் உழைத்து உயர் நிலை பெற்றவரே அமெரிக்கக் கோடீஸ்வரர்களாய ஹென்றி போர்ட், இராக்பெல்லர் முதலியோரும், நம் நாட்டுப் பெருமக்கள் பலரும் பிற நாட்டுப் பேரறிஞர் பலருமாவர். 'உழைப்பே உயர்வு தரும்' என்னும் பொன்மொழிக்கு இலக்காகிய பெருமக்களே உயர்ந்தவர் ஆவர். இறையன்பு கொண்ட பெருமக்கள் பலராவர். அவர்கள் பக்தியால் தம்மை உயர்த்திக் கொண்டவர்கள். இராஜ பக்தியால் ஸர். வால்டர் ராலி முதலிய பெரியவர் பலர் மேலான நிலைமை பெற்றுச் சிறக்க வாழ்ந்திருந்தனர்.

முடிவு

3. இம்மேதக்க குணங்களே நம்மை உயர்ந்தவர் ஆக்கும்; அக் குணங்கள் நம்பால் அமைய உலகப் பெருமக்கள் வரலாறுகள் பெருந்துணை செய்வன ஆகும்.

20. அயல் நாட்டுப் பிரயாணம்

குறிப்புகள் :—1. அயல் நாடுகள்
2. பிரயாணம்
3. காண்பன
4. அறிவன
5. முடிவு

கட்டுரை

அயல் நாடுகள்

1. இந்தியாவிற்கு வடக்கும் கிழக்கும் மேற்கும் உள்ள நாடுகள் அயல் நாடுகள் ஆகும். பெரும்பாலும் இந்தியர் நாகரிகமுள்ள அயல் நாடுகட்கே பிரயாணம் செய்வர். அத்தகைய நாடுகள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி, ரஷியா, அமெரிக்கா, ஜப்பான் என்பன. இந் நாடுகளிற்றான் கைத்தொழில், இரசாயனக் கலை முதலிய பல்கலை வளர்ச்சி பெருகி யுள்ளது.

பிரயாணம்

2. ஒருவர் சென்னையி லிருந்து இங்கிலாந்து செல்வதாக வைத்துக்கொள்வோம்: அவர் சென்னையிலிருந்து பம்பாய் சென்று, அங்கிருந்து நீராவிக் கப்பலில் இலண்டன் செல்லவேண்டும். அவர் கடற் பிரயாணம் செய்யத் தகுதி யுடையவர் என்று அதிகாரிகள் தெரிவித்த பிறகு, கப்பல் அநுமதிச் சீட்டுப் பெற்று, பிரயாணி கப்பலில் புகுதல் வேண்டும். கப்பல் பம்பாயை விட்டுப் புறப்பட்டு அரேபியாவின் தென் கோடியில் உள்ள ஏடனை நோக்கிச் செல்லும். கப்பலில் உள்ளவர் அரபிக்கடலின் அகற்சியையும் அழகையும் கண்டு களிக்கலாம்; கப்பலில் பல நாட்டுப்

பிரயாணிகள் இருப்பர். அவர்தம் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளலாம். கடலின் இயற்கைக் காட்சி, கடலிற் காணப்படும் பல்வேறு பொருள்கள் இவற்றைக் கூடுமான அளவு கண்டு இன்புறலாம். காற்றடிக்கும் பொழுதும் மழை பெய்யும்பொழுதும் கப்பல் நிலைமையை அறியலாம். இங்ஙனம் கப்பலில் இருந்தபடியே இயற்கையையும் செயற்கையையும் கண்டு கண்டு அனுபவித்த வண்ணம் ஏடன் துறைமுகத்தை அடையலாம். ஏடன் துறைமுகம் அரபிக் கடல் என்னும் மாளிகைக்கு அமைந்த வாயில் போன்றது. அது நமது பிரிட்டிஷாரிடம் இருப்பது. அங்குப் பல மணி நேரம் தங்கி இளைப்பாறிக் கப்பல் மறுபடியும் செங்கடல் வழியே மத்தியதரைக் கடலை நோக்கிப் புறப்படும். ஏடனிலும் செங்கடல் துறைமுகங்களிலும் அராபியர், பாலஸ்தீனர், சிரியர், ஈஜிப்டியர் முதலிய பல நாட்டு மக்களைக் கண்டு களிக்கலாம். அவர்தம் பழக்க—வழக்கங்களை ஓரளவு அறிந்து இன்புறலாம். கப்பல் அலெக்ஸாண்ட்ரியா, மால்டா, ஜிப்ரால்டர் என்னும் மத்தியதரைக் கடல் துறைமுகங்களில் தங்கிச் செல்லும். அத் துறைமுகங்கள் பார்க்க அழகுள்ளவை. துறைமுகங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வன. இவற்றைக் கடந்ததும் கப்பல் இரண்டொரு துறைமுகங்களில் தங்கியும் தங்காமலும் இலண்டன் துறைமுகத்தை அடையும்.

காண்பன

3. உலகத்தில் உள்ள தலை நகரங்களில் மிகச் சிறந்ததும் மிக்க மக்கள் தொகுதியைக் கொண்டதும் இலண்டன் மாநகரமே ஆகும். உலகத்தின் கலைகள் யாவும்-ஏன்? உலக நாகரிகமே திருவுருக்கொண்டு விளங்குவது அந் நகரத்திற்றான் என்னல் மிகையாகாது. இலண்டன் துறைமுகம்

உலகத் துறைமுகங்களில் முதல்தரமானது. அங்குப் பல நாட்டுக் கப்பல்களும் வந்து, அவ்வந் நாட்டுப் பொருள்களை இறக்கிய வண்ணம் இருக்கும். இங்கிலாந்தின் செய் பொருள்களைப் பல கப்பல்கள் வெளிநாடுகட்குக் கொண்டு செல்லக் காத்திருக்கும். அத் துறைமுகத்தில் இரவு, பகல் போல ஒரே வெளிச்சமாக இருக்கும். இயற்கையும் செயற் கையும் கூடிய அழகுடைய தேம்ஸ் நதியின் முகத்துவாரத் தில் இலண்டன் பெரு நகரம் அமைந்துள்ளது. சூரிய அஸ்தமனம் அறியாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஒரு குடைக்கீழ் வைத்தாளும் 'பார்லிமெண்ட்' சபைக் கட்டிடங் கள் கண்களுக்கு நல்விருந்தாவன. அமைச்சர்கள் காரியால யங்கள் டௌனிங் தெருவில் வானளாவி இருத்தலைக் கண்டு எவரே வியவாதார்! விழிகட்கு விருந்தளிக்கும் சிங்கார வனங்களும், பெரிய தொழிற்சாலைகளும், பல திறப்பட்ட பெரிய கம்பெனிகளும், பல்பொருட் காட்சிச் சாலைகளும் இலக்ஷக் கணக்கான அறிவியல் நூல்களைக் கொண்ட நூல் நிலையங்களும், பிரம்மாண்டமான பத்திரிகாலயங்களும் வானுற வோங்கி வளம் பெற நிமிர்ந்துள்ள சர்க்கார் காரியா லயங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசப் படுத்துவன வாகும். இங்கிலாந்து முழுவதும் சுற்றிப் பார்ப்பதால் பல வகைப்பட்ட கைத்தொழிற் சாலைகள், வணிகக்கூடங்கள், பயிர்த்தொழிற் கல்லூரிகள், விஞ்ஞானக் கூடங்கள், பலவகை ஆராய்ச்சி நிலையங்கள் இவற்றைக் காணலாம்.

அறிவன

4. இத்தகைய பல திறப்பட்ட கலைக்கூடங்களையும் வியாபாரக் கூடங்களையும் காண்பதால் நாம் இந்தியாவின் நிலை மைக்கும் இங்கிலாந்தின் நிலைமைக்கும் உள்ள வேறுபாடு களை நன்கறியலாம்; நாம் ஒவ்வொரு துறையிலும் எவ்வாறு

முன்னேறலாம்-என்னென்ன புதிய முறைகளைக் கையாண்டு கைத்தொழில், வாணிகம், விவசாயம், கல்வி, கட்டுப்பாடு இவற்றைப் பெருக்கலாம் என்பதை நன்கு உணர்தல்கூடும். இவ்வாறே பிற நாடுகளையும் பார்வையிடுவதால் இதே விஷயங்கள் பற்றிய முன்னேற்றச் சாதனங்களை அறிந்து மீளலாம். அச் சாதனங்களை நம் தாய் நாட்டிற் புகுத்தி-விவசாயம், கைத்தொழில் முதலிய நாட்டு முன்னேற்றத்திற்குரிய விஷயங்களிற் செலுத்தி-உழைத்துப் பல துறைகளையும் முன்னணிக்குக் கொண்டுவர முயற்சிக்கலாம். 'பாடுபட்டால் பலன் உண்டு' அல்லவா? 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?'

முடிவு

5. ஆதலின், வெளி நாட்டுப் பிரயாணம் நம்மை அறிஞர்கள் ஆக்கும்; பல துறைகளைப் பற்றிய அனுபவ அறிவை ஊட்டும்; ஒவ்வொரு துறையிலும் ஊக்கத்தையும் உழைப்பையும் அளிக்கும். ஆதலின், பொருள் உடைய இந்தியர் ஒவ்வொருவரும் அவசியம் அயல் நாட்டுப் பிரயாணம் செய்தல்வேண்டும். பொருள் இல்லாதவர் உழைத்துப் பொருள் சேர்த்து அப் பிரயாணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்.

முயன்றால் முடியாதது உண்டோ?

21. தமிழ் நாடகங்கள்

குறிப்புகள் :—1. முகவுரை
2. பண்டை நாடக வரலாறு
3. இக்கால நாடகங்களும் குறைகளும்
4. செய்ய வேண்டுவன
5. முடிவு

கட்டுரை

முகவுரை

1. தமிழ் நாடகங்கள் என்பவை, தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஏற்பட்டவை ஆகும். அவை திருவிழாக் காலங்களில் சம்பாஷணை (உரையாடல்) ரூபமாக முதலில் அமைக்கப்பட்டன. பின்னர், இடையிடையே இசையோடு பாடப்படும் பாடல்களும் சேர்க்கப்பட்டன; பின்னர், நாளடைவில் இசைக் கருவிகளுடன் காட்சி அளித்தன. கதை தழுவிவரும் கூத்தே 'நாடகம்' எனப்படும். இது முதலில், நூல் எடுத்துப் படிக்கப் போதிய அறிவும் அவகாசமும் இல்லாத பொது மக்கட்கு நல்லறிவு கொளுத்தவே ஏற்பட்டது. ஆயின், நாடக இயல் வளர்ச்சியுற்ற பின்னர் இது, 'வேத்தியல், பொதுவியல்' என இருவகைப்பட்டது. 'வேத்தியல்' என்பது அரசர்க்கு ஆடும் கூத்து. 'பொதுவியல்' என்பது எல்லா மக்கட்கும் ஆடும் கூத்தாகும். இவை தமிழ் நாட்டில் மட்டும் ஏற்பட்ட பிரிவுகள் அல்ல. இங்கிலாந்திலும் ஷேக்ஸ்பியர் என்னும் சிறந்த நாடகாசிரியர் காலத்தில் இவ்விருவகைக் கூத்துகள் சிறப்புற நடைபெற்று வந்தன. தமிழகத்தில் நாடக இயல் சிறப்பாகக் கருதப்பட்டு வந்தது. என்னே? இசையாலும் பேச்சாலும் நடிப்பாலும் மக்கள் உள்ளத்தை ஈர்க்கும் நல்லியல்பு

கள் நாடகம் ஒன்றுக்கே அமைந்திருத்தலாலும், மேலும் காட்சி மாத்திரையானும் உள்ளத்துணர்ச்சியானும் இன்பம் பயக்கவல்லதாக இருத்தலாலும் பண்டைத் தமிழ் மக்கள் இதனை ‘ இயல், இசை, நாடகம் ’ என்னும் தமிழ் வரிசையுள் ஒன்றாகக் கொண்டனர் என்க.

பண்டை நாடக வரலாறு

2. பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் வளர்ச்சியுற்றிருந்த காலங்களில் கூத்துகள் தமிழ் நாடெங்கும் நடிக்கப்பெற்றன. நாடகத்திற்கு இரு கண்களாக அமைந்த நடிப்பும் இசையும் பெருகி வளரலாயின. இவைபற்றி எண்ணிறந்த நூல்கள் தக்க ஆசிரியர்களால் தமிழ் மொழியில் எழுதப்பட்டன. அவை எல்லாம் பிற்காலத்தில் இறந்துபட்டன. ஆயினும் அவற்றின் சிதைவுகளான குறிப்புகள் பல, இன்னும் சிலப்பதிகாரம் போன்ற பெருங் காவியங்களின் உரைகளிற் கண்டு மகிழலாம். அவ்வுரைகளில் காணப்படும் குறிப்புகளைப் பார்த்தே பண்டைக்கால நடிப்பு, இசைபற்றிய நூல்களையும், இவ்விரு கலைகளில் தமிழ் மக்களுக்கு இருந்த அளவு கடந்த ஆர்வத்தையும் ஆற்றலையும் நன்கறியலாம். ஆனால், இந்நாடகங்கள், சமணர்கள் தமிழ் நாட்டிற் புகுந்து தமிழ் அரசரைத் தம் வயப்படுத்திய பின்னர், காமவுணர்ச்சியை ஊட்டுவன என்று கூறிக் கடிந்தனர். ஆகதால், நாளடைவில் தமிழ் நாடகக் கலை இறக்கலாயிற்று. பண்டை நாடக நூலாக இன்று இருப்பது சிலப்பதிகாரம் ஒன்றே ஆகும்.

இக்கால நாடகங்களும் குறைகளும்

3. இக்கால நாடகங்கள் படித்தவரால்—புலமையுடையவரால் நடத்தப்படுதல் இல்லை. குரல் இனிமை ஒன்றைக் கொண்டே இக்காலத்தில் நடிப்பு மதிப்பிடப்படுகிறது. மேலும் கதைகள் சிறப்புடையன அல்ல. நடிப்போ முழு

மோசம். இன்ன சந்தர்ப்பத்தில் பாட வேண்டும் என்னும் நியதி இன்றிக் கண்டபடிப் பாடும் கொடுமை தலைவிரித்தாடு கின்றது. இக்குறைகளினும் தலைசிறந்த குறையாவது— நடிப்பவருள் பெரும்பாலர் ஒழுக்கமற்றவராகக் காணப் படலே ஆகும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இக்காலத் தில் நடிக்கப்பெற்றில; அறிவும் ஆராய்ச்சியும் பொருந்தி யுள்ள நவீன நாடகங்கள் தமிழில் எழவில்லை. ஒழுக்கக் கேடான பாடல்களும் நடிப்புகளுமே பாமர மக்கட்கு விருந் தாகின்றன. இந்நாடகங்களை அறிவுடையவர் காணின், தமி ழர் சமூகம் எவ்வளவு இழிநிலையில் இருக்கின்றது என்பதை நன்கு உணரலாம்.

செய்ய வேண்டுவன

4. இக்குறைகள் நீங்க வேண்டுமாயின், பக்தி, வீரம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, காதல் இன்ன பிற பற்றிய பழைய—புதிய நாடக நூல்கள் எழுதப்பெறுதல் வேண்டும். நடிப்பு, இசை பற்றிய பயிற்சியைப் பல்கலைக் கழகத்தார் தருதல் வேண்டும். இவற்றுக்குத் தேர்வுகளை அமைத்து, இவற்றில் தேர்ந்து பட்டம் பெறுபவரே நடிகராக உரிமை உடையவர் என்னும் வரையறை ஏற்படுதல் வேண்டும். எனவே, ஆராய்ச்சி முறையோடு பயிலப்பெறும் நடிப்பினும் இசையினும் பிழைகள் பல உண்டாகா. நாடகக் கலையில் இச் சீர்திருத்தங்கள் ஏற்படின், பழைய நாடகக் கலை புத்துயிர் பெறும்; தமிழ்மொழியும் வளர்ச்சியுறும்.

முடிவு

5. பாமர மக்களைத் திருத்த நாடகங்களே நற்கருவி கள். ஆதலால், தமிழ் வளர்ச்சியினும் தமிழ் நாடக முன் னேற்றத்திலும் ஊக்கமுடைய பெருமக்கள் இச்சீர்திருத்தங் களைச் செய்ய முனைவராயின், மிக்க நன்மை உண்டாகும்.

22. குறிப்புப் புத்தகம்

குறிப்புகள் :—1. குறிப்புப் புத்தகம்—யாது?
2. குறிப்புகள் தயாரித்த பெரியார்கள்
3. நமது கடமை

கட்டுரை

குறிப்புப் புத்தகம்—யாது?

1. ஒருவன் தனக்கு அறிவு வந்த நாள் முதல் தன் அனுபவங்களையும் தனக்குத் தெரிந்த பிறர் அனுபவங்களை யும் அவற்றாற் போந்த பலாபலன்களையும் குறித்துவைக்கும் நோட்டுப் புத்தகமே 'குறிப்புப் புத்தகம்' என்பது. இதனை 'டய்ரி' எனலும் ஒருவாறு பொருந்தும். இக் குறிப்புகளால் அவரவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நல்ல நிகழ்ச்சிகளையும் தீய நிகழ்ச்சிகளையும் அவற்றாற் போந்த படிப்பினைகளையும் பிற் காலத்தார் படித்துப் பயன்பெற இடமுண்டு. இம் முறை மேனாட்டுப் பெருமக்களிடம் நெடுங்காலமாக இருந்துவரு கிறது. அவர்கள் கடிதப் போக்குவரவுகளையும் குறித்து வைத்துள்ளனர். அவற்றுட் சிறந்தன நூல்களாக வெளிவந் துள்ளன. பலருடைய அரிய சொற்பொழிவுகள் நூல் வடி வில் காட்சி அளிக்கின்றன. கடிதங்கள், அநுபவங்கள், சொற் பொழிவுகள் இவைபற்றிய நூல்களால் மனித சமூகத்திற்கு மிக்க பயன் உண்டு.

குறிப்புகள் தயாரித்த பெரியார்கள்

2. கொலம்பஸ் தமது அமெரிக்க யாத்திரையின் போது பட்ட துன்பங்களைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதி யிருந்தார். அப் புத்தகத்தின் துணையாற்றான் அப் பெரியார் வரலாறு தயாரிக்கப்பெற்றது. அமெரிக்கக் குடியரசுத் தலை

வராக இருந்த 'ஏப்ரஹாம் தந்தையார்' தயாரித்த குறிப்பு களைக்கொண்டே அவரது விழுமிய வரலாறும், கடிதங்களும் சொற்பொழிவுகளும் நூல் வடிவில் வெளியிடப்பெற்றன. 'ட்ரெவெலியன்' என்பார் சேகரித்த குறிப்புகளாற்றான் 'மெகாலே பிரபுவின்' பெருமையை நாம் அறிய இடம் உண் டானது. பாஸ்வெல் தயாரித்த குறிப்புகளைக் கொண்டுதான் இன்று உலகம் போற்றும் உன்னத நூலாகிய 'ஜான்ஸன் வர லாறு' வெளியிடப்பெற்றது. விக்டோரியா இராணியார் குறிப் புப் புத்தகத்திலிருந்து இன்றும் பல சுவையுள்ள கடிதங் களும் நிகழ்ச்சிகளும் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளி யிடப்படுகின்றன. ஜேம்ஸ் குக் என்பார் தம் அனுபவங்களைக் குறித்து வைத்தமையாற்றான் ஆஸ்ட்ரேலியாவைக் கண்டு பிடிக்க அவர் பட்டபாட்டை நாம் நன்கறிய முடிகின்றது. லிவிங்ஸ்டன், ஸர். ஹென்றி எம். ஸ்டான்லி என்னும் பெரு மக்கள் ஆப்பிரிக்காவின் உட்பாகங்களைக் கண்டறிந்த விவரங் களும் அவர்கள் அக் கண்டத்தில் பட்ட இன்னல்களும் அவ் வறிஞர்கள் தயாரித்து வைத்திருந்த குறிப்புகளாற்றும் உல கம் அறிய முடிந்தது. ஜவாஹிர்லால் சிறையில் இருந்த படியே தம் செல்வ மகளுக்கு எழுதிய கடிதங்கள் இன்று இந்தியாவிலும் மேனாடுகளிலும் நூல் வடிவில் வெளிவந்து உலவுகின்றன. அந் நூல் உலக சரித்திரத்தை இயம்புவதா கும். லார்ட் செஸ்டர்பீல்ட் தம் மகனுக்கு எழுதிய கடிதங் கள் ஒவ்வொரு மாணவனும் படித்துப் பின்பற்றத்தக்கவை ஆகும். தம் அநுபவங்களைக் குறித்து வைத்தமையாற்றான் காந்தியடிகள் தமது வரலாற்றைத் தாமே மிக விரிவாகவும் அழகாகவும் எழுதிமுடித்தார். இத்தகைய குறிப்புப்புத்தகம் இல்லாமையாற்றான் நம் தமிழ் நாட்டு வரலாற்றைச் சரியாக எழுத முடியவில்லை. தமிழரசர் தம் வரலாறுகளை எழுதிச் சென்றிலர்; குறிப்புகளும் எழுதினார்கள் இலர். புலவர்கள்

சிற்சில சந்தர்ப்பங்களில் அரசர்கள் பெயர்களையும் குணங்களையும் குறித்துள்ள பாடல்களைக்கொண்டு தமிழரசர் வரலாறு செவ்வனே அமையாதன்றோ? 'குறிப்புகள் தயாரித்தல்' என்னும் பழக்கம் இன்மையால் தமிழகத்திற்கு உண்டான பெருந் தீமையை—தமிழ்ச் சரித்திரம் இல்லாத பெருங் குறையை நாம் நன்குணர்தல் வேண்டும். இங்கிலையிற்றான் குறிப்புப் புத்தகத்தின் அவசியத்தை ஒவ்வொருவரும் விளக்கமாக உணர்தல் கூடும்.

நமது கடமை

3. எனவே, நாம் ஒவ்வொருவரும் குறிப்புப் புத்தகம் வைத்துக்கொள்ளுதல் இன்றியமையாததாகும்; அதனில் தேதியிட்டு நாம் காண்பன—கேட்பன—அனுபவிப்பன—நம் கருத்து இன்ன பிறவும் குறித்துவைத்தல் வேண்டும். அவை நம் சந்ததியார்க்கும் சமூகத்துக்கும், உயர்ந்ததாயின் உலகத்துக்கும் மிக்க பயனுடையன ஆகலாம்.

23. சமயத் தலைவர்கள்

குறிப்புகள் :—1. சமயம்—யாது !
2. பலசமயத் தலைவர்கள்
3. சமய சீர்திருத்தக்காரர்
4. சைவ வைணவத் தலைவர்கள்
5. நமக்குரிய கொள்கைகள்

கட்டுரை

சமயம்-யாது ?

1. ஒருவன் சன்மார்க்கத்தில் வாழ்வதற்கு உரிய சட்ட வரம்புகளின் (நேரிய கொள்கைகளின்) திரட்சியே 'சமயம்' அல்லது 'மதம்' எனப்படும். உண்மை பேசல், அடக்க மாக இருத்தல், கடவுளை வணங்கல், நாணயமாக நடத்தல், நல்லனவற்றையே செய்தல், ஆன்ம வுணர்ச்சி போன்ற வற்றின் கோவையே மதக் கொள்கைகள் ஆகும்.

பலசமயத் தலைவர்கள்

2. இக்கொள்கைகள் நெறி பிறழுகின்றபோது—இவை மக்களால் ஒழுங்காகப் பின்பற்றப் படாதபோது—அறிவும் ஆராய்ச்சியும் உடைய—மக்கள்மீது உண்மையான பற்றுடைய பெரியார் அந்தந்த நாட்டுப் பகுதியில் வெளித் தோன்றி, மக்கட்கு நல்ல மனிதக் கொள்கைகளை விளக்கிப் போதிப்பர். அவரே சமயத் தலைவர்—மதாச்சாரியார் எனப்படுவர். அங்ஙனம் கூறுபவர் தம் அனுபவ விஷயங் களையும் கூறுவர். அவர் கொள்கைகள் கொண்ட சமயம் அவர் பெயரால் வழங்கப்பெறும். இங்ஙனம் வழங்கப் பெறுவனவே கிறித்தவ சமயம், பாரசீகத்தில் உள்ள ஜொராஸ்ட்ரிய சமயம், சீனத்தில் உள்ள கன்ப்யூஸியஸ்

சமயம், புத்த சமயம், ஜைன சமயம் முதலியன. கடவுள் பெயரால் வழங்கப்பெறும் சமயங்கள் சைவம், வைணவம் என்பன.

சமய சீர்திருத்தக்காரர்

3. இம் மதத் தலைவர்கட்குப் பின் சமய சீர்திருத்தக் காரர் பலர் தோன்றினர். ஒரு போது சமயத் தலைவர் போதித்த கொள்கைகள் பிற்றை நாட்களில் மக்களால் கை யாளப் பெறாத போது, அக்காலத்து நிலைக்கேற்பச் சில கொள்கைகளை விட்டும் சிலவற்றைச் சிறிது மாற்றியும் சில வற்றைக் காலத்துக் கேற்பப் புதியனவாகப் புகுத்தியும் சமய சீர்திருத்தக்காரர் வேலை செய்வர். அம்முறையில் வேலை செய்தவர்களே ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த தயா னந்த சரஸ்வதி, பிரம்ம சமாஜத்தை ஏற்படுத்திய இராஜா ராம் மோஹனராய், வேதாந்த மதத்தைப் பரப்பிய விவேகா னந்தர், இராமதீர்த்தர், வைணவத்தைப் போதித்த துளசி தாசர் முதலியோர், ஞானமார்க்கத்தைப் போதித்த சித்தர் முதலியோர், சங்கரர், மாத்வர், இராமாநுசர், இராமலிங்கர் முதலியோர் ஆவர்.

சைவ வைணவத் தலைவர்கள்

4. நமது தமிழ் நாட்டில் இன்று சிறப்புடைய மதங் கள் இரண்டு. அவை சைவம், வைணவம் என்பன. சைவ சமயத்தைத் தமிழ்நாட்டில் வெற்றியுடன் பரப்பிய பெரியார் நால்வர். அவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்பர் ஆவர். அப்பரால் தொண்டைநாடு சம ணத்தினின்றும் சைவம் ஆக்கப்பட்டது. சம்பந்தரால் சோணாடும் பாண்டிநாடும் சைவம் ஆக்கப்பட்டன. இச் சேவைக்காக இப்பெருமக்கள் பட்ட இன்னல்கள் பல.

இவர்களது பெருமுயற்சியால் தமிழகவேந்தர் சைவர்களாகவும், வைணவ ஆழ்வார்கள் சேவையால் வைணவர்களாகவும் மாறினார்கள். வைணவ சமயத்தைப் பரப்பியவர்கள் பன்னிரண்டு ஆழ்வார்கள். ஆனால், அவர்கள் பிறமதங்களைச் சைவ ஆசிரியரைப்போலப் பெருமுயற்சி கொண்டு அடக்கிலர். அவர்கள் தம்மளவில் பக்தி மார்க்கத்தைப் பரப்பிச் சென்றனர் ஆவர். அப்பன்னிரண்டு ஆழ்வார்கள்—பேயாழ்வார், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகராழ்வார், தொண்டர் அடிப்பொடி ஆழ்வார், மதுரகவி ஆழ்வார், திருப்பாணாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் என்போராவர்; இப் பெரியார்கள் பாடிய பாடல்களே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் நூற் பாடல்கள் ஆகும். இங்ஙனமே அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்போர் பாடிய சுமார் 8000 செய்யுட்களைக் கொண்ட பெருநூல் 'தேவாரம்' ஆகும். மாணிக்கவாசகர் பாடியது திருவாசகம் ஆகும். இப்பாக்கள் அனைத்திலும் வற்புறுத்தப்பட்டிருப்பவை நல்லொழுக்கம், ஆன்ம வுணர்ச்சி ஆகிய மேற்சொன்ன இரண்டே ஆகும்.

நமக்குரிய கொள்கைகள்

5. இச்சமயம்—உலகத்துச் சமயப்—பெருமக்கள் போதனைகளிலிருந்து நாம் அறியத் தகுவன யாவை? நல்லொழுக்கம், நல்லறிவு ஆகிய இரண்டே ஆகும். நல்லொழுக்கத்திற்கு அடிப்படையானது நல்லறிவு ஆகும். இவ்விரண்டே மனிதன் பெறத்தக்க பேறுகள். இவற்றையே எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன. இவ்வுண்மையை அனைவரும் உணரின் மதப்பூசல்கள், சாதிச் சண்டைகள், வெளிவேடங்கள் என்பன யாவும் மாய்ந்தொழியும். அன்றே மனித சமூகம் உண்மையான உயர்நிலையை உற்றதாகும்.

24. நோன்பு

குறிப்புகள் :—1. நோன்பு—யாது ?
2. பலவகை நோன்புகள்
3. நோன்பின் பயன்
4. முடிவு

கட்டுரை

நோன்பு—யாது ?

1. 'நோன்பு' என்பது பட்டினி கிடத்தல். சிறிது விளக்கமாகக் கூற வேண்டுமாயின், 'பத்தியோடு—கடவுள் சிந்தனையோடு பட்டினி கிடத்தல்' என்னலாம். இம் முறையைப் பண்டைக் காலந்தொட்டே நம் மக்கள் கையாண்டு வந்துள்ளனர். ஓர் யாண்டில் சில நாட்கள் பட்டினி கிடத்தல் உடல் நன்மைக்கு ஏற்றதே ஆகும். இது, சுகாதார முறையில் பெரிதும் வரவேற்கத் தக்கது; பத்தித் துறையிலும் பாராட்டத் தக்கது. காந்தியடிகள் மௌன விரதம் இருத்தலையும் பட்டினி கிடத்தலையும் அடிக்கடிப் பின்பற்றி வருதல் நோக்கத் தக்கது.

பலவகை நோன்புகள்

2. நோன்பு இருத்தலைப்பற்றி எல்லாச் சமயங்களும் (மதங்களும்) வற்புறுத்துகின்றன. இந்து மதத்தில் மாதத்திற்கு ஒரு முறை நோன்பு இருக்கும்படி திட்டம் உள்ளது. கிறிஸ்தவ மதத்தில் பட்டினி கிடத்தல் வற்புறுத்தப் பட்டுள்ளது. இஸ்லாம் மார்க்கத்தில் ரமலான் நோன்பு பெயர் போனது. அந் நோன்புக்கு உரிய நாட்களில் பகல் முழுவதும் பட்டினி கிடந்து, இரவிற்றான் உண்ணல் வேண்டும் என்று இஸ்லாம் மத நூலாய குர்-ஆன் அருளுகின்றது. பௌத்த மதத்திலும் சமண மதத்திலும் கணக்

கற்ற நோன்புகள் உண்டு. இந்து மத நோன்புகளில் வரலக்ஷ்மி நோன்பு, கார்த்திகை நோன்பு, ஏகாதசி நோன்பு என்பன சிறந்தன ஆகும். ஏகாதசி நோன்பு கடுமையானது. ஏகாதசி முதல் நாள் ஒருவேளை உணவு கொள்ளல் வேண்டும். ஏகாதசி யன்று முழுவதும் பட்டினி கிடத்தல் வேண்டும். மறுநாட் காலையில் சூரியன் கீழ்த் திசையில் தோன்றும்போது சமையல் செய்து உண்ணுதல் வேண்டும். இங்ஙனம் உடல் நலத்திற்கும் ஆன்ம நலத்திற்கும் கலந்து இப் பட்டினி நாட்கள் ஒவ்வொரு மதத்திலும் ஏற்பட்டுள்ளன. அவற்றின் அவசியத்தை உணர்ந்தோ-உணராமலோ மக்கள் அவற்றை அரை குறையாகவேனும் பின்பற்றி வருகின்றனர். அவற்றின் கருத்தை உணர்ந்த அறிஞர் பலர் மதாசாரப்படி பின்பற்றி வருகின்றனர்.

நோன்பின் பயன்

3. நோன்பினுல் உடலுக்கு உண்டாகும் நன்மை யாது? நமது உடலில் நடைபெறும் வேலைகள் என்ன என்று நாம் அறிவதில்லை; அறிந்துகொள்ளவும் ஆசைப்படுதல் இல்லை. உணவு சீரணமாகும்போது அஃது எம்மாறுதல்களை அடைகின்றது? சத்துப் பொருள் என்ன ஆகின்றது? அசத்துப்பொருள் யாதாகின்றது? உடலில் உள்ள உறுப்புகள் நாடோறும் ஓயாது வேலை செய்தல் எங்ஙனம்? என்பன போன்ற பல விளுக்கட்கு விடை கண்டு தெளிதல் அவசியமாகும். உரிய காலங்களில் மல ஜலங்களைக் கழியாவிடின், குடலில் துன்பமுண்டாகும். குடலில் அழுக்குத் தங்குவதால் உணவில் வெறுப்பு, ஏப்பம் உண்டாதல், உடற்சோர்வு உண்டாதல், முகத்தோற்றம் மாறுபடுதல் முதலியன ஏற்படும். அக் காலங்களில் பட்டினி கிடத்

தலே சரியான மருந்தாகும். உடனே குடல் துன்பம் ஒழிந்து, அது முன்போல வேலே செய்யத்தொடங்கும். குடல் நோய் உண்டாதற்கு முன்னரே சரியான முறையில் நோன்புகளைப் பின்பற்றினவரின், சீரணக் கருவிகள் நல்ல நிலேயில் இருக்கும்; நோய் என்பது வராது. ஆதலின், பக்தியோடு கலந்த நோன்பு நாட்கள் அல்லாமல், வாரத்திற்கு ஒரு முறையோ, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ, மாதத்துக்கு ஒரு முறையோ நோன்பு இருத்தல் இன்றியமையாதது. அந் நாளில் தண்ணீரைத் தவிர, வேறு எவ்வுணவையும் உட்கொள்ளல் ஆகாது. இவ்வாறு அடிக்கடி நோன்பு இருப்பின், சீரணக் கருவிகள் பூரண ஓய்வைப் பெற்று, மீண்டும் தம் வேலேகளைச் செவ்வனே செய்துவரும். இதுவே நோன்பிருத்தலின் சிறந்த இரகசியம் ஆகும்.

முடிவு

4. நோன்பிருந்த மறு நாள் மிதமிஞ்சி உண்ணலாகாது. அங்ஙனம் உண்ணுதல் மிக்க கேடு பயக்கும். மிதமான உணவை ஆவல், அவசரம், கூச்சல், குழப்பம் இல்லாமல் அமைதியாக உண்ணுதல் வேண்டும். இம் முறைப்படி நாம் நடப்போமாயின், உடல் உரம் பெற்று, என்றும் அழியா இளமை பெற்றுப் பொலிவுற்று நீண்டநாள் வாழலாம்.

25. கடிதங்கள்

வியாபாரக் கடிதம்

10, மேலை ராஜவீதி.
தஞ்சாவூர், 15—10—'40.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி
மானேஜர் அவர்கட்கு,

ஐயன்மீர்,

கீழ்க்கண்ட புத்தகங்களை அன்புகூர்ந்து இரயில்வே பார்சலில் உடனே அனுப்பி உதவுக.

			ஒவ்வொன்றிலும்
சன்மார்க்க தீபம்	புத்.	I, II, III	,, 1 டஸன்
பொற்கால வாசகம்	புத்.	I, II, III	,, 2 ,,
பாண்டியன் தமிழ் வாசகம்	புத்.	VI, VII, VIII	,, 2 ,,

இங்ஙனம்:
உங்கள் உண்மையுள்ள
சு. கந்தசாமி,
புத்தக வியாபாரி.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
மானேஜர் அவர்கட்கு,
20, மௌண்ட் ரோடு, சென்னை.

விளம்பரக் கடிதம்

15, சைனு பஸார் ரோட்,
சென்னை, 20—10—'40.

மானேஜர் அவர்கட்கு,
"ஹிந்து" பத்திரிகை நிலையம்,
மவுண்ட் ரோட், சென்னை.

ஐயன்மீர்,

இதனுடன் அனுப்பியுள்ள எங்கள் கம்பெனியைப் பற்றிய விளம்பரத்தைத் தங்கள் உயரிய நாள் தாளில் ஒரு வாரம் விளம்பரம் செய்ய வேண்டுகிறேன். நான் அதற்குரிய செலவை ஏற்றுக்கொள்கிறேன்.

இங்ஙனம்:
தங்கள் உண்மையுள்ள
மரகத வேலன்,
'சரஸ்வதி ஸ்டோர்ஸ்' உரிமையாளன்.

பொதுக் கடிதம்

[உன் தெருவில் உள்ள அசுத்தத்தைப்பற்றி நகரசபைச் சுகாதார அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுது.]

2, வள்ளுவன் தெரு,
வண்ணையம்பதி, சென்னை.

நகரசபைச் சுகாதார அதிகாரி அவர்கட்கு,
ரிப்பன் கட்டிடம், சென்னை.

ஐயன்மீர்,

வண்ணையம்பதியில் கூலியாட்களும் தொழிலாளருமே மிகுதியாக வாழ்கிறார்கள். ஆதலால் அவர்கட்குப் போதிய கல்வி அறிவு இல்லை; அதனால் தெருக்களில் குழந்தைகளை மலசலங்கழிக்க விடுகிறார்கள்; இராப்போதில் பெரியவர் பலரும் அசுத்தம் செய்கின்றனர். எங்கள்

வள்ளுவன் தெருவில் எப்பொழுதும் அசுத்தமே நிறைந் திருக்கிறது. சாக்கடைகளில் நீர் சரியாகப் போகாததால், தெருவில் சாக்கடை நீர் ஓடுகிறது. தெருவில் பல பெண் கள், காய்கறிக் கடைகளை வைத்துக்கொண்டு நாள் முழுவதும் இருக்கிறார்கள். அவர்கள் விற்பன விலை மலிவான பண்டங் கள், அழுகிய பழங்கள், நாள்பட்ட காய்கறிகள் முதலியன. இவை சுகாதாரத்திற்கு முற்றும் மாறானவை அல்லவா? அப் பெண்கள் ஓயாமல் கூச்சல் இடுதலும் சண்டையிடுதலும் அத் தெருவில் உள்ள எங்கட்குத் தலைவலியாக இருக்கின்றன. சுகாதாரம் இந்தத் தெருவில் கடுகளவும் இல்லை. உங்கள் கீழ் உள்ள சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இந்தப் பக்கத்தை மறந்து விட்டார்கள் போலும்! ஆகவே, தாங்கள் அன்பு கூர்ந்து ஒரு முறை வந்து நேரே பார்த்து ஆவன செய்யு மாறு வேண்டுகிறோம். வண்ணையம்பதி என்று நல்ல வாச ஸ்தலமாக மாறுமோ!

உங்கள் நல்வரவை எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்:
உங்கள் கீழ்ப்படிதல் உள்ள
பு. மா. கோவிந்த ராஜன்.

26. இளைஞர் இயக்கம்

குறிப்புகள் :—1. இளைஞர் இயக்க நோக்கம்
2. இளைஞர் இயக்கங்கள்
3. அவற்றால் வரும் பயன்
4. முடிவு

கட்டுரை

இளைஞர் இயக்க நோக்கம்

1. இன்று உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் இளைஞர் இயக்கம் தோன்றியுள்ளது. இளைஞரே எதிர்காலத்தில் நாட்டைப் பாதுகாப்பவர்; நாட்டின் அரசியலை நடத்துபவர்; நாட்டின் அரசியல் என்னும் வண்டிக்கு அச்சாணி போன்றவர்; எதிர்கால நாட்டையோ சமூகத்தையோ உயர்த்தும் திறனும் தாழ்த்துந் திறனும் இளைஞரிடமே உள்ளன. இத்தகைய நாட்டின் பெருஞ் செல்வமாகவும் உயிர்நாடியாகவும் இருத்தலாற்றான் பிரிட்டிஷார் இங்கிலாந்தில் உள்ள குழந்தைகளிற் பலரைப் போரைக் கருதி வெளிநாடுகட்கு அனுப்பிக் காக்கச் செய்கின்றனர். இங்ஙனமே ஒவ்வொரு நாட்டினரும் இளம்பிள்ளைகளை இளைஞர் ஆக்குவதிலும் இளைஞர் இயக்கங்களைத் தோற்றுவித்தலிலும் ஆர்வங்காட்டி உழைக்கின்றனர். இவ்விளைஞர் தம் நிகழ்காலக் கடமைகளை உணரவும், எதிர்காலக் கடமைகளை உணரவும், உணர்ந்து நாட்டிற்கு உகந்த முறையில் நடக்கவும் செய்யவல்லவை இளைஞர் இயக்கங்களே ஆகும். அதனாற்றான், இளைஞர் இயக்கங்கள் எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

இளைஞர் இயக்கங்கள்

2. பல்கலைக் கழக மாணவர் இயக்கம், பள்ளிக்கூட மாணவர் இயக்கம், தொழில்புரியும் இளைஞர் இயக்கம், கிறித்

தவ இளைஞர் இயக்கம் என்பன எல்லா நாடுகளிலும் உண்டு. பல்கலைக் கழக இளைஞர் இயக்கத்தில் பேராசிரியர் பலரும் அடிக்கடி வந்து, பல அரிய செய்திகள் பற்றிப் பேசி இளைஞர்க்குப் பரந்த உலக ஞானத்தை ஊட்டுவர்; அரசியல் அறிஞர் பலர் அவ்வப்போது வந்து, பொதுவாக உலக அரசியல் நிலைமையினையும் சிறப்பாகத் தமது நாட்டு அரசியல் நிலைமையினையும் குறிப்பிட்டு, இளைஞர் கடமைகளை வற்புறுத்திச் செல்வர். சரித்திரம், விஞ்ஞானம், இலக்கணம், இலக்கியம், ஆராய்ச்சி முதலிய பல அறிவியல் துறைகளில் வல்ல பிற சர்வகலாசாலைப் பேரறிஞர் பலரும் கழகக் கூட்டங்களில் பேச்சாளராக அமர்ந்து, அவ்வக் கலைகளைப்பற்றிய வரலாறுகளை விளக்கி, அவற்றாலாகும் நன்மைகளைச் சுட்டி மாணவர் அக்கலைகள்பால் கொள்ள வேண்டும் பற்றினையும் மதிப்பினையும் வற்புறுத்திச் செல்வர். இங்ஙனம் பல்கலைக் கழக இளைஞர் கழகங்கள், பல்கலைக் கழகப் பட்டம் பெறும் இளைஞர்க்குப் பல துறைகளிலும் அறிவைப் பெருக்கப் பெருங் கருவிகளாக அமைகின்றன.

இந்நலன்கள் யாவும் ஓரளவு உயர்கலாசாலை இளைஞர்க்கும் அவ்விளைஞர் இயக்கத்தால் உண்டாகும். அம்மாணவ—மாணவிகள் தத்தமக்குத் தெரிய வேண்டும் பல கலைகளைப் பற்றிய அறிஞரைத் தம் கழகத்திற்கு அழைத்துப் பேசச் செய்து, பெருநன்மை அடைகின்றனர். இப்பேச்சாளர் பேசுங்கால் அறிவுள்ள—எதிர்கால நோக்கம் கொண்ட இளைஞர் குறிப்பு எடுத்துக் கொள்வர்; அமயம் வாய்க்கும்போது அக்குறிப்புகளைப் பயன்படுத்தி அறிவு பெறுவர். உயர்கலாசாலை மாணவர் இக்கழகத்தால் பெறற்கரிய நன்மை பெறுகின்றனர்.

தொழில் புரியும் இளைஞர் இயக்கம் தொழிலாள இளைஞர்க்கு நல்வழி காட்டும் சாதனமாகும். அத்தொழிலாளர்

இயக்கத்தில் தொழிலாளர் சம்பந்தமான அறிவியற் செய்திகள் சிறப்பாகவும் நாட்டு நடைமுறைகளும் உலக அறிவும் கொண்ட செய்திகள் பொதுவாகவும் பேசப்படும். தொழிலாளர் இயக்கங்களில் தொடர்பு கொண்டுள்ள பெருந்தலைவர்களே இவ்விளைஞர் இயக்கக் கூட்டங்களில் பேசுவர். வேறு வெளி அறிஞர் பலரும் பொது விஷயங்களைப்பற்றிப் பேசுவர். மற்ற நாடுகளில் தொழிலாள இளைஞர் இயக்கங்கள் எம்முறைகளில் வேலை செய்து வருகின்றன—அவற்றின் நோக்கம் என்ன என்பன போன்ற சுவையுள்ள செய்திகள் மேனாடு சென்று மீண்ட தொழிலாளர் தலைவர்களாலும், மேனாட்டிலிருந்துவரும் தொழிலாளர் தலைவர்களாலும், மேனாட்டுப் பத்திரிகைகளைப் படிக்கும் அறிஞர்களாலும் பேசப்படும். அப்பேச்சுகளால் தொழிலாள இளைஞர் பல துறைகளில் நன்மை அடைகின்றனர்.

அவற்றால் வரும் பயன்

3. இப் பலதிறப்பட்ட இளைஞர் இயக்கங்கள் புரியும் தொண்டு யாது? ஒரு நாட்டு இளைஞர் மற்ற நாடுகளில் உள்ள இளைஞர்களுடைய பழக்க வழக்கங்களை அறியலாம்; அவர்களுடைய அறிவியல் துறைகளைப் பற்றிய பல விவரங்களை அறியலாம்; தம்மிடம் உள்ள குறைபாடுகளைப் போக்கலாம்; சிக்கனம், செங்நெறி பற்றிய தூய வாழ்வு, கைத்தொழில், விவசாயம், வாணிபம், சரித்திரம், விஞ்ஞானம் போன்ற அறிவியல் துறைகள் இவற்றில் அவர்கள் பெற்றுள்ள முற்போக்கு, அதற்கேற்ப இவ்விளைஞர் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் முறை இன்னபிறவும் அறிந்து பின்பற்றலாம். பல பெருமக்கள் இவ்வியக்கக் கூட்டங்களிற் பேசுவதால் அப்பெரு மக்களுடைய பேரறிவு, சொல்லாற்றல் முதலியன இளைஞர் முன்னேற்றத்துக்குத் தூண்டுகோலாக

அமையும். இளைஞர் பெரியரைப் பார்த்தே தம் வாழ்வைச் செப்பனிட வேண்டுபவராக இருத்தலின், அவர்கள் எப்பொழுதும் பெரியவர்கள் கூட்டுறவு கொள்ளுதலே சிறந்ததாம். அக்கூட்டுறவிற்கு இவ்விளைஞர் கழகங்கள் பெருந்துணை புரிவனவாகும்.

முடிவு

4. சுருங்கக் கூறின், இவ்வியக்கம் இளைஞனைப் பேசச் செய்கிறது; தன்னைப் பற்றியும், தன் நாட்டைப் பற்றியும், தன் எதிர்காலத்தைப் பற்றியும், உலக நிலையைப் பற்றியும் நினைக்கச் செய்கிறது; அவனை இயன்ற அளவு முற்போக்கில் போகச் செய்கிறது; அவன் இவ்வியக்கத்தை நன்கு பயன்படுத்துவானாயின், நாட்டிற் சிறந்த அறிஞனாவான் என்பதில் ஐயமில்லை. ஆகலின், இளைஞர் இயக்கங்கள் நாட்டிற்குப் பெருந்தொண்டு செய்வன ஆகும்.

---

27. எனது வடநாட்டு யாத்திரை

குறிப்புகள் :—1. அல்லஹபாத்
2. சரித்திரச் சிறப்பு
3. மதச் சிறப்பு
4. கட்டிடச் சிறப்பு
5. விழாக்கள்
6. முடிவு

கட்டுரை

அல்லஹபாத்

1. நான் ஒரு முறை என் பெற்றோருடன் அல்லஹ பாத் சென்றேன்; அங்குள்ள இயற்கைக் காட்சிகளும் செயற் கைக் காட்சிகளும் என் இதயத்துள் ஊடுருவின என்னல் மிகையாகாது. இந்தியாவில் காசி, ஹரித்துவாரம் முதலிய சிறந்த நகரங்களைவிட, அல்லஹபாத் சிறந்ததென்றே கூறு தல் வேண்டும். கங்கையும் யமுனையும் ஒன்று சேரும் இட மாதலின், அஃது உயர்ந்ததாகும். இவ்விரண்டு பெரு நதி களும் கலக்கும் இடத்தில், சிறிது வெளுத்த கங்கைப் பிரவா கத்துக்கும் கருநீலமான யமுனைப் பிரவாகத்துக்கும் நடுவிற் கோடு கிழித்தாற்போல மிக்க தூரம்வரை ஒரு வெண்மைக் கோடு தெரிகின்றது. அது 'சரஸ்வதி' நதி என்று கூறப்படு கின்றது. இங்ஙனம் அல்லஹபாதில் கங்கை, யமுனை, சரஸ் வதி என்னும் மூன்று யாறுகள் கலத்தலால் 'திரிவேணி' என் றும் அல்லஹபாத் கூறப்பெறும்.

சரித்திரச் சிறப்பு

2. இவ்விடம், மிகப் பழைய காலத்திலிருந்தே சிறந்த தாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இங்கு முனிவர்கள் பலர் தவம் செய்துகொண்டிருந்தனர்; புத்த மஹான் தம் உயர்

கொள்கைகளை இங்கு உபதேசித்தனர்; அறம் வளர்த்த அசோக மன்னன் இங்குக் கற்றூண் நட்டுப் புத்த மதக் கொள்கைகளை மக்கட்குப் போதித்தான். இங்குத்தான் ஹர்ஷவர்த்தனன் பண்டிதர்களையும் அறிஞர்களையும் வர வேற்று மத சம்பந்தமான மஹாநாடுகளைக் கூட்டினான். சீன யாத்திரிகரான ஹியூன்ஸங் இம் மஹாநாடுகளைக் கண்டு களித்த இடமும் இதுதான். சங்கராச்சாரியார் 'மக்கட்கு ஆத்ம ஞானம் இன்றியமையாதது' என்னும் உண்மையை விளக்கிப் பேசியதும் இங்குத்தான். இங்ஙனம் பெரியோர் பலர் இங்குச்செய்த சொற்பொழிவுகளும் உபதேசங்களும் பல வாம். மொகலாய மன்னரான அக்பர் புண்ணியநகரமொன்றை இங்குத்தான் ஏற்படுத்தினார்; அதற்குக் 'கடவுளின் நகரம்' என்ற பொருள்கொண்ட 'அல்லஹபாத்' என்னும் பெயர் இட்டார். கி. பி. 1765-ல் ஷா ஆலம் பாஷா இராபர்ட் கிளைவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் அல்லஹ பாதுக்குப் பதிலாக வங்காளம், பீஹார், ஓரிஸ்ஸா முதலிய வற்றைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கொடுத்தார் எனின், அல்லஹபாதை அவர் எவ்வளவு சிறந்த நகரமாக மதித்திருந்தார் என்பது விளங்குகிறதன்றோ? 1858-ல் லார்ட் கானிங் அல்லஹபாத் கோட்டை மதில்மீது நின்றே கிழக் கிந்திய அரசியலைத் தாம் ஏற்றுக்கொண்டதாக விக்டோரியா மஹாராணியார் அனுப்பிய நற்பத்திரத்தைப் படித்தார். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர், அல்லஹபாத் மத்திய மாகாணங் களின் தலைநகரமாக விளங்கிவருகின்றது.

மதச் சிறப்பு

3. சிவன் கோவிலும் வைணவக் கோவிலும் பரத்வாச முனிவர் கோவிலும் வாசுகியின் கோவிலும் ஆதிசேடன் ஆலயமும் சிறப்புற்ற ஆலமரமும் முனிவர் பர்ணசாலை

களும் சேர்ந்து திரிவேணிக்கு ஒரு திலகமாய் அமைந்து பொலிகின்றன. இராமரும் பாண்டவரும் இப்புண்ணிய பூமியைத் தரிசித்ததாக இதிகாசங்கள் இயம்புகின்றன.

கட்டிடச் சிறப்பு

4. அல்லஹபாதுக்கு உள்ள இயற்கை அழகோடு சேர்ந்துள்ள செயற்கை அழகு செப்புந்தரத்ததன்று. அக்பர் சக்கரவர்த்தியின் கோட்டை கண்டு களிக்கத் தக்கது. அக்கோட்டைக்குள் மிக்க அழகமைந்த அக்பரது அரண்மனை இந்தியாவின் பண்டைச் சிறப்பை விளக்கி நிற்கின்றது. அசோகன் அழகுற நாட்டிய கற்றூண் ஒன்று, இக் கோட்டைக்குள் இருக்கின்றது. இக் காலத்தில் இக் கோட்டையைப் போர்க் கருவிகள் வைக்கும் இடமாக அரசியலார் பயன்படுத்துகின்றனர். இரயில்வே நிலயத்துக்கு அருகில் உள்ள குஸ்ருபாக் என்பது மொகலாய மன்னர்தம் சிறப்பைக் குறிக்கும் மற்றோர் அடையாளம் ஆகும். ஜஹாங்கீர் மன்னரின் மூத்த மகனை குஸ்ருவின் உடல் அங்கு அடக்கஞ் செய்யப்பெற்றுப் பெரிய கோரி கட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் குஸ்ருவின் தாயார் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அல்லஹபாத் நகரில் உள்ள அழகிய கட்டிடங்களும் சிங்காரப் பூஞ்சோலைகளும் கண்டுகளிக்கத்தக்கவை. அங்குப் பல கலாசாலைகள் இருக்கின்றன; பெரிய சங்கங்கள் இருந்து பல துறைகளில் வேலை செய்கின்றன; நூல் நிலயங்களும் விளையாடும் இடங்களும் அறச்சாலைகளும் இருந்துவருகின்றன.

விழாக்கள்

5. அவ்விடத்தில் நடைபெறும் மகமேளா, கும்பமேளா என்னும் இரண்டு சிறந்த விழாக்கள் காணத்தக்கவையாம். ஆண்டுதோறும் ஜனவரி—பிப்ரவரி மாதங்களில் சூரியன் மகர லக்கினத்தில் இருக்கையில் மகமேளா கொண்

டாடப்படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை கும்பமேளா நடைபெறுகின்றது. இக் காலங்களில் இலக்ஷக் கணக்கான இந்தியர் அல்லஹபாத் சென்று, சங்கம இடத்தில் நீராடிப் பூசை புரிவர்.

முடிவு

6. கங்கா நதியின் வெண்ணிறம் வாய்ந்த நீர்ப் பெருக்கம், கரு நிறம் பெற்ற யமுனை நீருடன் கலந்து ஒளிரும் காட்சியைப் பார்க்கும்பொழுதும், காலையில் கதிரவன் கிரணங்கள் நீர்த்துளிகளில் பல நிறங்களாக மாறி விளையாடலைக் காணும்பொழுதும், அமைதி கெழுமிய இரவில் தண்மதிக் கிரணங்கள் சங்கம நீரைத் தழுவி முத்தமிட்டுக் களிக்கும் காட்சியைப் பார்க்கும்பொழுதும் கன்மனம் படைத்தவரும் இயற்கை எழிலை நுகர்ந்து இன்புற்று, இந்தியத் தாயின் இயற்கை அழகில் ஈடுபடுவர்.

28. எனது விருப்ப பாடம்

குறிப்புகள் :—1. விருப்ப பாடம் யாது ?
2. எனது பற்று
3. நான் எடுத்துக்கொண்டவையும் அவற்ருல் வரும் நன்மையும் நான் செய்த வேலையும்
4. முடிவு

கட்டுரை

விருப்ப பாடம் யாது ?

1. ஐந்தாம் பார மாணவர் விருப்ப பாடங்கள் இரண்டு எடுத்தல் சில ஆண்டுகட்கு முன் வழக்கத்தில் இருந்தது. ஆனல், இப்பொழுது ஏதேனும் ஒரு பாடம் எடுத்துக் கொண்டாற் போதும். ஆங்கிலம், ஆரம்ப கணிதம், தாய் மொழி, இந்திய சரித்திரம், பூகோளம், இயற்கைப்பாடம் இவை கட்டாய பாடங்கள். பீஜகணிதம், பூதபௌதிக சாத்திரம், இரசாயன சாத்திரம், 'டைப்' அடித்தல், கணக்குப் பார்த்தல் (Book-Keeping) முதலியன விருப்ப பாடங்கள். இவற்றுள் ஒன்றை மாணவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளுதல் வேண்டும். அந்த ஒன்றில் அவர்கள் ஓரளவு ஆழ்ந்த அறிவு தரப்பெறுகின்றனர். ஏதேனும் ஒரு கலையில் சிறப்புப் பயிற்சி பெறுதற்கே இஃது ஏற்பட்டுள்ளது.

எனது பற்று

2. எனக்குச் சிறு வயதுமுதல் நாட்டுக் கதைகளைக் கேட்பதில் பெருவிருப்பம். அதனல் நான் பள்ளிக்கூடத்தில் சரித்திர பாடங்களைப் பெரிதும் விரும்பிப் படித்து வந்தேன்; சரித்திர பாடநூலைத் தவிர, யான் எங்கள் பள்ளிக்கூட நூல்நிலையத்தில் இருக்கும் தமிழில் எழுதப் பட்டுள்ள சரித்திர நூல்களை எல்லாம் படித்தேன். அவை இந்தியா, இலங்கை, சீனம், ஜப்பான், பாரசீகம், இங்கி

லாந்து, கிரீஸ், இட்டாலி முதலிய பல நாடுகளைப் பற்றியன. அவை அவ்வந்நாட்டு மக்களுடைய பழக்க—வழக்கங்களையும் நாகரிகத்தையும் நன்கு விளக்குவன. அவற்றைப் படித்த யான், ஒவ்வொரு நாட்டாருடைய மதக்கொள்கைகள், விநோதப் பழக்க வழக்கங்கள், அரசியல்முறை, நகர அமைப்பு, நாட்டுப்பற்று, கைத்தொழில்கள், வாணிபம், விவசாயம் முதலிய பலதிறப்பட்ட செய்திகளை உணர்ந்து மகிழ்ந்தேன். அதனால் அந் நாடுகளைப் பற்றியும் பிற தீவுகளைப் பற்றியும் எழுதப்பட்டுள்ள ஆங்கில நூல்களைப் படிக்க அவாவினேன்; நான்காம் பார மாணவனாக இருக்கையில் சென்ற ஆண்டு முழுவதிலும் பல ஆங்கில நூல்களை வாசித்தேன்; இங்கிலாந்தின் சரித்திரம், ரோமசரித்திரம், ஜெர்மனி சரித்திரம், அமெரிக்க சரித்திரம் முதலியன படித்தேன்; ஆப்பிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா முதலிய புதிய கண்டங்கள் கண்டுபிடித்த உழைப்பாளிகளான கொலம்பஸ், லிவிங்ஸ்டன், ஸர். ஹென்றி, எம். ஸ்டான்லி, காப்டன் குக் முதலியவர்கள் விநோத வரலாறுகளையும் அவர்கள் கருத்துக்களையும் விளக்கும் விரிவான நூல்களை ஊன்றிப் படித்தேன். இங்ஙனம் பல அற்புத மனிதர்களின் வரலாறுகளைப் படிக்கப் படிக்கப்-பலநாட்டு வரலாறுகளைப் படிக்கப் படிக்க-எனக்குச் சரித்திரக் கலையில் நிறைந்த அறிவைப் பெறவேண்டும் என்னும் அவா பிடர் பிடித்து உந்தலாயிற்று; அதன் பயனாகவே, நான் ஐந்தாம் பாரத்தில் சரித்திர பாடத்தை என் இஷ்ட பாடமாக ஏற்றுக்கொண்டேன்.

நான் எடுத்துக் கொண்டவையும்
அவற்றால் வரும் நன்மையும் நான் செய்த வேலையும்

3. எனது விருப்ப பாடத்தில் இந்திய சரித்திரமும் இங்கிலீஷ் சரித்திரமும் சேர்ந்தன ஆகும். இந்திய சரித்

திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அசோகன், சந்திர குப்தன், ஹார்ஷன், பாஹியான், ஹிவான்ஸங் முதலிய பலரைப் பற்றிய குறிப்புகளைப் படிப்பதோடு நான் திருப்தி அடைவதில்லை. சந்திரகுப்த மோரியன் அரசியலை நன்கறிய வேண்டுமாயின், அவனுடைய அமைச்சனுன சாணக்கியன் எழுதியுள்ள பொருள் நூலை நன்கு படித்தல்வேண்டும். அந் நூலில் பொருள் வருவாயைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் சாணக்கியன் பலவாறு விளக்கியுள்ளான். அந் நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனுடன் மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்னும் நூலையும் கொண்டு ஆராய்வதால் மோரிய வம்சத்து முதல் அரசனைப் பற்றிய பல சுவையுள்ள செய்திகளை அறியலாம். அசோகனது அறச்செயலை அவனுடைய கல்வெட்டுகள் காட்டுகின்றன. அவை பற்றிய ஆங்கில நூல்கள் வெளிவந்துள்ளன. ஹார்ஷ தேவனைப் பற்றிப் 'பாணன்' என்னும் பெருங்கவிஞன் 'ஹார்ஷ சரித்திரம்' ஒன்று எழுதியுள்ளான். அந்நூல் ஹார்ஷ தேவனது பெருஞ் சிறப்பை வெள்ளிடைமலைபோல் விளக்கமுறச் செய்கிறது. பாஹியான் எழுதியுள்ள பிரயாணக் குறிப்பும் ஹிவான்ஸங்கின் குறிப்பும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. அவை பல பழைய செய்திகளை நன்கு விளக்குகின்றன. தமிழ் அரசர்களைப் பற்றிச் சரித்திர நூலில் வரும் குறிப்புகளை விளக்கமாக அறிய ஆராய்ச்சியாளர் அழகுற ஆங்கிலத்தில் வரைந்து வெளியிட்டுள்ள 'சோழர் வரலாறு', 'சோழர் அரசியல்', 'பாண்டியர் வரலாறு', 'சேரர் வரலாறு', 'பல்லவர் வரலாறு' என்னும் பெரிய நூல்களைப் படித்தல் வேண்டும். ஜஹாங்கீர், ஔரங்கஜேப் போன்ற மொகல் மன்னரைப் பற்றிப் படிக்கும்போது இவர்களைப் பற்றித் தனித்தனியே எழுதப்பட்டுள்ள ஆராய்ச்சி நூல்களைப் படித்துப் பல விஷயங்களை

அறிதல் வேண்டும். ஓய்வு நேரங்களில் சென்னைக் கன்னிமாரா, பல்கலைக் கழக நூல்நிலையங்கட்குச் சென்று சரித்திர சம்பந்தமான பல படங்களையும் சித்திரங்களையும் சாஸனங்களையும் பார்த்து மகிழ்தல் வேண்டும். இங்ஙனம் பல நூல்களைக் கற்பது கடினமாகத் தோன்றலாம். எனினும், ஆர்வமுடையார்க்குப் படிப்பது பெரு விருந்தாகும்.

முடிவு

4. ஆதலின், நான் இந்நூல்களை இந்த வகுப்பிலும் அடுத்த வகுப்பிலும் படித்துப் பயன்பெற வேண்டுமென்னும் பேரவாவினுற்றான் சரித்திர பாடத்தை என் விருப்ப பாடமாகக் கொண்டேன். இறைவன் என் விருப்பம் முற்றுப்பெறச் செய்வானாக!

---

29. ஆகாய விமானம்

குறிப்புகள் :—1. மனிதன் முயற்சி
2. படிப்படியான முன்னேற்றம்
3. ஜெப்லின் விமானம்
4. ஏரோப்ளேன்
5. பறக்கும் முறை
6. அவற்றின் பயன்
7. முடிவு

கட்டுரை

மனிதன் முயற்சி

1. பறவைகள் முதலியவை பறப்பதைக் கண்ட மனிதன் தானும் பறக்க விரும்புதல் இயல்பே அன்றோ? மனிதன் இறகுகளைக் கட்டிக்கொண்டு பறக்க முயன்றான்; உயர்ந்த கோபுரங்களின் உச்சியிலிருந்து பறக்க முயன்று கீழே விழுந்து மாண்டான்; பின்னர்ப் பலூனைச் செய்து பறக்க விட்டான்; அதன் அடியில் ஆவியை உண்டாக்கும் பொருள்களைப் போட்டெரித்து ஆவி யுண்டாக்கி, ஆவியின் வன்மையால் பலூனை மேலே பறக்க விட்டான். இங்ஙனம் அவ்வக் கால மனிதர்கள் பலவாறு முயன்று பயன் பெறாது போயினர். எனினும் அவர்களது முயற்சியே ஆகாய விமானத்தைக் கண்டுபிடிக்க அடிப்படையாக இருந்தது என்பதை மறத்தல் தவறு.

படிப்படியான முன்னேற்றம்

2. ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த பெருமை பிரான்சு நாட்டுக்கே உரியது. அமெரிக்காவில் ஓர்வில் ரைட், வில்லோரைட் என்னும் இரண்டு சகோதரர்கள் பெட்ரோலால் இயங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஒரு விமா

னத்தைச் செய்து 1903-ல் பறக்க விட்டனர். அது 59 விநாடிகளில் 852 அடி தூரம் சுற்றிக் கீழே இறங்கியது. பின்னர் அவர்கள் பிரான்சு தேசம் சென்று அரசாங்கத்தார் உதவி பெற்று ஒரு விமானம் செய்தனர். அதன் பின்னர்ப் பலர் ஆகாய விமானங்களைச் சீர்திருத்தலாயினர். எல்லோருடைய அறிவும் ஆராய்ச்சியுமே இன்றுள்ள புதிய புதிய ஆகாய விமானங்களாகக் காட்சி அளிக்கின்றன.

ஜெப்லின் விமானம்

3. ஆகாய விமானங்களில் ஜெப்லின் என்பது ஒன்று. இது ஜெர்மானியரால் முதன் முதலில் செய்யப் பெற்றது. இது சுமார் 700 அல்லது 800 அடி நீளம் உள்ளதாகவும் சுமார் 80 அடி உயரம் உள்ளதாகவும் இருக்கும். 'ஆகாயக் கப்பல்' என்னும் பெயர் இதற்குப் பொருத்தமானது. இதில் பல அறைகள் கூண்டுகளைப்போல உள்ளன. அவற்றுள் காற்று நிரப்பப்பட் டிருக்கும். இதன் இயந்திரம் ஆயிரக்கணக்கான குதிரை பலம் உடையது. காற்றுப் பைகட்குக் கீழே சுக்கான், பிரயாணிகளின் இடங்கள் அமைந்திருக்கும். இதில் நூற்றுக் கணக்கான மக்கள் பிரயாணம் செய்யலாம். இது, காற்றைவிட மென்மையானதாக இருத்தலால் தானகவே பறக்கும். திசை நோக்கித் திருப்பவும் முன்னுக்குத் தள்ளவும் இதில் இயந்திரங்கள் உண்டு. இந்த விமானங்கள் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவிற்குப் பிரயாணம் செய்து வருகின்றன. இதனைக் கண்டு பிடித்தவர் 'கவுன்ட் ஜெப்லின்' என்னும் ஜெர்மானியர். அதனாற்றான் இஃது அவர் பெயர் பெற்று விளங்குகின்றது.

ஏரோப்ளேன்

4. சென்னை முதலிய இடங்களிற் பறப்பது 'ஏரோப்ளேன்' என்பது. இது ஒற்றைச் சிறகு விமானம், இரட்

டைச் சிறகு விமானம், முச்சிறகு விமானம் என மூவகைப் படும். ஒன்றைவிட ஒன்று கனமாகவும் உழைக்கக் கூடிய தாகவும் இருக்கும். ஒரு சிறை விமானம் வேகமாய்ப் பறக்கும். இரு சிறை விமானம் வானத்தில் ஆடாமற் பறக்கும். முச்சிறை விமானம் மிகுந்த பாரத்தைச் சுமக்கும்.

பறக்கும் முறை

5. இது கிளம்பிப் பறப்பதற்குக் காற்றுத் தேவையானது. ஆகலால், இவ் விமானத்தில் உள்ள பெட்ரோலால் இயங்கும் இயந்திரம் பெரிய சுழற்காற்றை உண்டாக்கி விமானத்தை மேலே எழுப்புகிறது. ஏரோப்ளேன் முன்புறம் காந்த விசிறியின் சிறகு போன்ற மரத்துண்டு ஒன்று காணப் படும். அஃது இயந்திரம் ஓடும்போது மிக்க வேகமாகச் சுற்றும். அவ்வமயம் விமானம் தரையில் மிக்க வேகமாக ஓடும். காற்றின் வேகம் போதியதாயின் விமானம் மேலே எழும். விமானம் எப்பக்கமும் சாயாமல் இருத்தற்கு இருபுறங்களிலும் இரண்டு மரச் சட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. விமானம் சாயும்போல் இருப்பின் அதற்கு ஏற்றவாறு இறகைத் தாழ்த்தவோ உயர்த்தவோ வேண்டும். இங்ஙனமே விமானம் வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்பவேண்டுமாயின், வால் பக்கத்தின் மேற்புறம் உள்ள ஒரு சட்டத்தை வலப் பக்கமோ இடப்பக்கமோ மாற்றுதல் வேண்டும். இங்ஙனம் இவ்விவரங்களைத் தெரிந்து பழகி ஓட்டுபவர் 'பைலட்' (விமானம் ஓட்டிகள்) எனப்படுவர்.

அவற்றின் பயன்

6. 'வான ஊர்திகள்' என்னும் ஆகாய விமானங்கள் போரில் மிகுந்த பயனைத் தருகின்றன; எதிரிகளின் இருப்பிடத்தை அறிகின்றன; எதிரிகளின் போர் ஆயுதங்களை அறிகின்றன; எதிரிகளின் போர் வீரர்கள், கப்பல்கள்,

பெட்ரோல் கிணறுகள், இராணுவ இடங்கள் இவற்றை அறிந்து அவற்றின்மீது குண்டுகளைப் பொழிந்து நாசமாக்குகின்றன. இவ்வேலையில் ஈடுபடுபவை 'பாம்பர்' எனப் படும். இப்பொழுது நடைபெறும் ஐரோப்பியப் பெரும் போரில் ஆகாய விமானங்களே பெரும் பங்கு கொண்டுள்ளன. ஜெர்மானியர் பெருந்தொகையுள்ள வான ஊர்திகளைக் கொண்டு இங்கிலாந்தில் உள்ள குடிகள்மீதும் கட்டிடங்கள் மீதும் பிறவற்றின்மீதும் குண்டுகளைப் பொழிந்து சேதத்தை உண்டாக்கி வருகின்றனர். இங்ஙனமே பிரிட்டிஷாரும் விமானங்களைப் பயன்படுத்தி எதிரிகளின் பலத்தை ஒடுக்கி வருகின்றனர். ஆகாய விமானங்களைப் பெற்றுள்ள நாடுகளே மதிக்கப் பெறும் காலமாக நிலைமை மாறிக் கொண்டு வருகின்றது.

முடிவு

7. சாதாரண நாட்களில் கொசுக்களை அழிக்க ஆகாய விமானங்களிலிருந்து மருந்துகளைத் தூவலாம்; அவசரப் பிரயாணம் செய்யலாம்; தபால் போக்கு வரவு விரைவில் நடைபெற வழியேற்படுகிறது; காடுகளில் பற்றும் தீயை விமானங்களிலிருந்து மருந்துகளைப் போட்டு அணைக்கலாம்; பயிர்களை நாசப்படுத்தும் வெட்டுக்கிளி முதலியவற்றை விமானங்களிலிருந்து மருந்துகளைத் தூவி அழிக்கலாம். பல இடங்களைக் கண்டுபிடிக்க இவ் விமானங்கள் பயன்படுகின்றன. இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வாரம் ஒரு முறை தபால் வர இவ் விமானங்கள் பேருதவி புரிகின்றன. அவசர வேலைகளை முன்னிட்டுப் பல நாட்டு இராஜ தந்திரிகள் விரைவில் ஒன்று சேர இவை பெருந்துணை ஆகின்றன. ஆ! இவை இன்னும் எவ்வெவற்றிற்குப் பயன்படுமோ? அறிவார் யார்?

30. படக் காட்சி

குறிப்புகள் :—1. படக்காட்சி—வரலாறு
2. படக்காட்சிகளைத் தயாரித்தல்
3. தமிழ்நாட்டுப் படங்கள்
4. நன்மை தீமைகள்
5. முடிவு

கட்டுரை

படக்காட்சி—வரலாறு

1. படக்காட்சி நாடகத்திலிருந்து பிறந்ததாகும். வெளிச்சத்தில் மனிதன் நிழல் படுவதிலிருந்து இப்படக் காட்சி தோன்றலாயிற்று. இது முதலில் செம்மையுற்றதாக இல்லை. ஆனால் அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர நடிப்பைத் திறம்படப் படமெடுக்கலாயினர். படத்திற் காணப் பட்ட உருவங்கள் கைகால்களை அசைத்தனவேயன்றி இடம் விட்டு நகர்வனவாகத் தோன்றவில்லை. அங்கிலேயில் அமெரிக்காவில் இருந்த புகழ்பெற்ற விஞ்ஞானியான தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் இத்துறையில் ஆராய்ச்சி செய்யலானார். அவர் தமது கூரிய மதிவன்மையால் படக்காட்சியைத் திறமையுறச் செய்து முடித்தார். அவர் வேலையின் பயனாய்ப் படத்தில் காணப்பட்ட உருவங்கள் நகர்வன போலத் தோன்றின. இங்கிலேயில் சுமார் முப்பதாண்டுகட்கு முன்வரை படங்கள் இருந்துவந்தன. ஆனால் அதன் பின்னர் அப்பெரியாரே தாம் கண்டறிந்த கிராமபோனையும் படக் காட்சியையும் இணைத்து 1912-ல் பேசும் படக் காட்சியைக் கண்டறிந்தார். படத்தில் நடிப்பவர் பேசிய கிராமபோன் தட்டின் ஓசையை மின்சார சக்தியால் அதிகரிக்கச் செய்தார்; படச்சுருள் சுழல்கையில் தட்டையும் ஓடச் செய்து, காட்சித் திரைக்குப் பின் மின்சார ஓசை அதிகரிக்கும் கருவியை அமைத்தார். இங்

ஙனம் பேசும் படக் காட்சியே இப்பெரியார் கண்டு பிடித்தது. இவரது உழைப்பின் பயனையே இன்று உலகம் கண்டு களிக்கின்றது.

படக்காட்சிகளைத் தயாரித்தல்

2. படக்காட்சி ஒன்று தயாரித்தல் எங்ஙனம்? அது தயாரிக்கப்பெறும் இடம் 'ஸ்டூடியோ' எனப்படும். அவ்விடம் மிகப் பெரிய மைதானமாதல் வேண்டும்; அழகிய சோலையாகவும் இருத்தல் வேண்டும். படத் தயாரிப்புக்கு உரிய பல வசதிகளை உண்டாக்கிக் கொள்ளும் இடமாக இருத்தல் வேண்டும். அங்கு நடிகர்கள் நடிக்கும்பொழுது படம் எடுக்கும் நிபுணர் திறம்படப் படம் எடுப்பர். அது 'ஷூட்டிங்' எனப்படும். அவர்கள் பேசுவது முன் சொன்னவாறு கிராமபோன் தட்டுகளில் எடுக்கப்படும். இங்ஙனம் ஒரு படம் எடுக்கக் குறைந்தது மூன்று முதல் ஆறுமாத காலம் ஆகும். கதையை எழுதுபவர் ஒருவர்; பாட்டுகளைக் கட்டிக் கொடுப்பவர் ஒருவர். நடிப்புக் கற்பிப்பவர் ஒருவர். படம் பிடிப்பவர் ஒருவர்; காட்சிகளைத் தீட்டுபவர் பலர்; வேண்டும் ஆடைகளைத் தைப்பவர் சிலர். நடிப்பவர் பலர். ஸ்டூடியோவில் உள்ள சிப்பந்திகள் பலர். இங்ஙனம் பலர் இப்படக்காட்சியில் பிழைக்கின்றனர். ஸ்டூடியோக்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது அமெரிக்காவில் உள்ள 'ஹாலிவுட்' என்பதாகும். அந்த இடத்தில் சாதாரண மக்கள் இல்லை. நடிகர்களும் படக் காட்சிச் சம்பந்தமானவர்களுமே இருக்கின்றார்களாம். அவ்விடம் 'பூலோக சுவர்க்கம்" என்று கூறப்படுகிறது.

தமிழ் நாட்டுப் படங்கள்

3. சென்னை நகரத்தில் சுமார் பத்து ஸ்டூடியோக்கள் உள்ளன. அவற்றில் தமிழ்ப் படங்களே மிகுதியாக எடுக்

கப்படுகின்றன. தெலுங்கு, ஹிந்தி முதலிய படங்கள் கதையிலும் நடிப்பிலும் முன்னேற்றம் பெற்றுள்ளன. ஆனால் தமிழ்ப் படங்கள் இவ்விரண்டிலும் பிற்போக்கடைந்துள்ளன. நடிகர்களின் திறமையற்ற தன்மையும் சரியான கதைகள் அமையாமையுமே காரணமாகும். தமிழ்ப்படம் எடுப்போர் பழைய புராணக் கதைகளையே படம் பிடித்துக் கொண்டு சுவையற்ற நிலையில் போதல் வருந்தற்குரியது. தமிழ் மக்களுடைய பழைய சொத்தாகிய—மறந்து விடப் பட்ட சங்க நூல்களில் உள்ள படிப்பினையுள்ள—தமிழருடைய அறிவாற்றல்களை விளக்கும் காட்சிகளைத் திரட்டிப் படம் பிடித்தலே நன்றாகும். இப்போது 'மணிமேகலை' என்னும் தமிழ்க் காவியம் படமேடைக்கு வந்துள்ளது பாராட்டத்தக்கது. இங்ஙனமே சிலப்பதிகாரம், சங்கப்புலவர் வரலாறுகள் முதலியன படமாகப் பிடிக்கப்படல் வேண்டும். ஔவையார், நக்கீரர், இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார், அகப்பொருள் வாழ்க்கை அமைந்த கதைகள் இன்ன பிறவும் நாடகமாகவும் படக்காட்சியாகவும் வெளி வரல் வேண்டும். 'கோவலன்' படம் சிலப்பதிகார உண்மைக்கு மாறாகவும் தவறாகவும் நடிக்கப்படல்—கதையைக் கட்டியிருத்தல்—கண்டிக்கத் தக்கன ஆகும்.

நன்மை தீமைகள்

4. தமிழ்ப் படக்காட்சிகளாலும் பிற படக்காட்சிகளாலும் மக்களின் அறிவு மேம்படுகிறதென்பதில் ஐயமில்லை. நாம் காண முடியாத இடங்களையும்—காட்சிகளையும்—போர்களையும்—பற்பல நாட்டு மக்களையும்—அவர்தம் பழக்க வழக்கங்களையும்—பிறவற்றையும் கண்டு உலகியலை அறிந்து இன்புறுகிறோம். இவ்வளவில் படக்காட்சிகள் நமக்குப் பேருதவி புரிகின்றனவேயாகும். ஆயின் ஒழுக்கக்கேடான

சில படங்களும் காட்சிகளும் இடையே புகுந்துவிடலால் அறிவற்ற—மனவுறுதியற்ற மக்கள் கெட்டுவிடவும் உதவி புரிகின்றன என்னல் தவறாகாது. வேடிக்கைக் காட்சிகள் இழிவாகப் போகும்படி விடுதல் ஆகாது. சீர்திருத்த நோக்குடைய கதைகள் தமிழில் மிகுதல் வேண்டும். இக் காலத்துக் கேற்றவை அவையே. கம்பர், அம்பிகாபதி, காள மேகம், திருவள்ளுவர், மணிமேகலை முதலிய படங்கள் தமிழில் வந்துள்ளமை பாராட்டற்பாலதே. அவற்றால் தமிழ் மக்கள் ஓரளவேனும் தமிழறிவு பெற்றுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய தமிழ்ப்படங்களே பெருகுதல் வேண்டும்.

முடிவு

5. தமிழ் மக்கள் தமிழ்ப் படங்களைச் சிறப்பாகவும் ஏனைய மொழிகளில் வரும் படங்களைப் பொதுவாகவும் பார்த்து உலகியலை அறிந்து நல்வழிப் படல் வேண்டும்.

31. கூட்டுறவு இயக்கம்

குறிப்புகள் :—1. முன்னுரை
2. நோக்கம்
3. நன்மை
4. கடைகளுக்கு உரிய விதிகள்
5. டென்மார்க் நாடு
6. முடிவு

கட்டுரை

முன்னுரை

1. மக்கள், இயக்கத்தை எவ்வளவு பயன்படுத்துகிறார்களோ, அதற்கேற்ற முறையில் ஊதியம் அடைவது என்னும் உடன்படிக்கைமீது கூட்டுறவு வியாபாரம் செய்வதற்கு எளியவர்கள் ஒன்று கூடுவது 'கூட்டுறவு இயக்கம்' எனப்படும். பயிர்த்தொழிலாளர்க்கும் கைத்தொழிலாளர்க்கும் சிறிதுவருவாய் உடையவர்க்கும் சிக்கனத்தையும் தன் முயற்சியையும் வளர்க்க இத்தகைய இயக்கங்கள் இன்றியமையாதவை. இங்கிலாந்து, ஜெர்மனி, டென்மார்க், ஹாலண்ட் முதலிய மேனாடுகளில் இவ்வியக்கங்கள் உண்டாகி, மக்களை உயர் நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

நோக்கம்

2. மக்கள் ஒன்று சேர்ந்து சிறிது தொகை முதல் போடுதல் வேண்டும்; அம் முதலைக்கொண்டு வியாபாரம் நடத்தல்வேண்டும். உறுப்பினர் தமக்கு வேண்டப்படும் எல்லாப் பொருள்களையும் தம்மால் ஏற்படுத்தப்பட்ட கடையிலேயே வாங்குதல் வேண்டும். ஆண்டு முடிவில் உண்டாகும் ஊதியத்தில் செலவைக் கழித்து, மீதியில் முதல் தொகைக்குரிய வட்டியையும் கழித்து, எஞ்சிய தொகை

யைக் கடையில் பொருள்களை வாங்கிய உறுப்பினர்க்கு, அவர்கள் வாங்கிய பொருள்களின் மொத்த விலைக்குத் தக்க வாறு பங்கு போட்டுக் கொடுத்தல்வேண்டும். இதுவே கூட்டுறவு இயக்கத்தின் சிறந்த இரகசியம் ஆகும்.

நன்மை

3. இச் சிறந்த முறையால் எளியவர் தம் பொருளாதார நிலையை மேம்படுத்த வழியுண்டாகிறது. அவர்கள் தாங்கள் நிறுவிய கடையில் வாங்கும் பொருள்கள் பிற கடைகளில் வாங்கும் பொருள்களைவிடச் சிறந்தவையாகும். என்னை? பெரும்பாலும் கடைக்காரர் ஊதியத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்களே அல்லாமல் சரக்குகளை நல்லவையாக வாங்கிக் குறைந்த ஊதியம் வைத்து விற்பதில்லை ஆதலின் என்க. அதிக விலையைத் தந்தபோதிலும், பெரும்பான்மை மட்டச் சரக்கையே பெற நேரிடுகிறது. பொருள்களின் நிறையும் அளவும் சரியாக இருப்பதில்லை. கூட்டுறவுக் கடையில் இத்தகைய வேறுபாடுகள் உண்டாக இடமில்லை. அங்கு நல்ல சரக்கைப் பெறலாம்; சரியான நிறையும் அளவும் காணலாம். தகாத முறையில் மிகுந்த ஊதியம் பெறல்வேண்டும் என்னும் நோக்கம் இல்லை. இவையே கூட்டுறவு இயக்கக் கடைகட்கு இருக்கும் சிறப்புகள் ஆகும்.

கடைகளுக்கு உரிய விதிகள்

4. இக் கூட்டுறவு இயக்கக் கடைகள் கவனிக்கவேண்டும் விதிகள் பின்வருவன ஆகும்:—(1) கூட்டுறவு இயக்க உறுப்பினர் அனைவரும் தமது கடையிலேயே வாங்குதல் வேண்டும்; கடை உறுப்பினரையும், உறுப்பினர் கடையையுமே நம்பி இருத்தல் வேண்டும். (2) கடையில் நடைபெறும் வியாபாரம் ரொக்க வியாபாரமாகவே இருத்தல்வேண்டும். கடன் தருவதால் பணம் வசூலாகாமற்போகலாம்; பணம்

வெளியில் தங்குவதால் வியாபாரக் குறைவு உண்டாகும்; வரவரப் பணக் கஷ்டம் ஏற்பட்டு இறுதியில் நஷ்டமே கடைக்கு உண்டாகும். (3) கடைக்கு வேண்டும் சரக்குகளை அவை உண்டாகும் இடங்களிலிருந்தே வரவழைத்தல் வேண்டும். அதனால், பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். பொருள்கள் நன்றாக இருப்பதுடன், குறைந்த ஊதியத்திற்கும் விற்கப்படுதலால், இவ்வியக்கத்தில் உறுப்பினர் மிகுதியாகச் சேர்வார்கள்.

டென்மார்க் நாடு

5. ஐரோப்பிய நாடுகளில் டென்மார்க் மிகச் சிறிய நாடாகும். அதன் மக்கள் தொகை 35 லக்ஷம் ஆகும். இக் குறைந்த ஜனத் தொகையுள்ள அச் சிறிய நாடு, கூட்டுறவு இயக்கத்தால் உயர் நிலையை அடைந்து வருகின்றது. ஒரு காலத்தில் அந் நாட்டுச் செல்வ நிலை தாழ்ந்திருந்தது. ஆனால், இன்று டென்மார்க்கின் வரலாறு வியப்புறு விதமாக அமைந்துள்ளது. ஒருபோது அந் நாட்டிற்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை கப்பல் கப்பலாக வந்தது. ஆனால் இன்று அந் நாட்டார் தம் நாட்டிலேயே தமக்கு வேண்டிய தானியங்களை உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் தமக்குள்ளே கூட்டுறவு இயக்கங்களை நிறுவினர்; விவசாயிகட்கு அரசாங்கம் பொருள் உதவியும் செய்தது. விவசாயிகள் தமக்குவேண்டிய ஏர், எரு, விதை முதலியவற்றைக் கூட்டுறவுக் கடைகளிலேயே பெற்றனர். கால்நடைகட்கு வேண்டும் தானியங்களை விற்கும் சங்கங்கள், பயிராகும் பொருள்களை விற்கும் சங்கங்கள், பால் பண்ணைகள், கோழிப் பண்ணைகள், ஏழை விவசாயிகட்குப் பொருள் உதவும் சங்கங்கள் எனப் பலதிறப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டுவிட்டன. குடியானவர் பயிர் வேலை இல்லாதபோது பசுக்களின்

பாலைக் கறந்து சுகாதார முறைப்படி பச்சை வெண்ணெய் எடுத்துக் கூட்டுறவு முறையில் வியாபாரம் செய்கின்றனர்; ஆடு, பன்றி, கோழி இவற்றை வளர்க்கின்றனர்; இவற்றின் இறைச்சியையும் கோழி-வாத்து இவற்றின் முட்டைகளையும் விற்றுப் பணம் சம்பாதிக்கின்றனர். அந் நாட்டுப் பள்ளி களில் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய போதனையே சிறந்த இடம் பெற்றுள்ளது. இங்ஙனம் அந் நாட்டார் அனைவரும் கட்டுப்பாடாகக் கூட்டுறவு இயக்கத்தை ஆதரித்து வருதலால் அந் நாடு செழுமையுற்றுத் திகழ்கின்றது.

முடிவு

6. இந்திய மக்கள் ஒற்றுமையும் செல்வமும் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டுமாயின், கூட்டுறவு இயக்கங்கள் ஆயிரக்கணக்கில் தோன்றுதல் வேண்டும். அவ்வியக்கங்களாற் றான் நம் நாட்டு ஏழை விவசாயிகள் உயர் நிலையைப் பெறக் கூடும்.

32. பேச்சு வன்மை

குறிப்புகள் :—1. சொல்லாற்றல்—யாது ?
2. சான்றுகள்
3. முடிவு

கட்டுரை

சொல்லாற்றல்—யாது ?

1. பேசுதல் எல்லார்க்கும் எளியதன்று. பேசப் போகும் விஷயத்தை மனத்தில் தெளிவாக ஒழுங்குபடுத்திக்கொண்ட பின்னரே பேசுதல் எளிதாக முடியும். அவ்வொழுங்கு இன்றேல், பேசுதல் எளிதில் அமையாது. பேசும்பொழுது விஷயத்துக் கேற்றபடி வன்மையாகவும் மென்மையாகவும் பேசுதல் வேண்டும். கேட்பவரைத் தன் வயப்படுத்தும் சக்தியுடைய பேச்சே 'சத்துடையது' ஆகும். அச் சொல்லாற்றல் இன்றேல், பேச்சில் உயிர் இல்லாது போகும். இது நோக்கியே குமரகுருபர அடிகள்,

"சொல்வன்மை இன்றேல் என்னும் ! அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து"

என்றருளிப் போந்தார்.

சான்றுகள்

2. இத்தகைய சொல்லாற்றல் பெறுபவரே உலகிற் சிறந்த பேச்சாளர் ஆவர். ஒரு நாட்டை அடக்கி ஆளுந் திறம் படைத்த சொல்லாளர் இல்லாமல் இல்லை. அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக விளங்கிய ஏப்ரஹாம் லிங்கன் என்பவர் மிக எளிய குடும்பத்தினர். அவர் தம் சொல் வன்மையாற்றான் வழக்கறிஞரானார் ; தமது மாகாணச் சட்ட சபையில் உறுப்பினர் ஆனார் ; வாஷிங்டனில் உள்ள காங்கிரஸ் பேரவையில் உறுப்பினர் ஆனார் ; இறுதியில்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரும் ஆனார். அப்பெரியார் இருமுறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவர் குடியரசுத் தலைவராவதை எண்ணுந்ததற்கு முன்பு 1860-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ஆந் தேதியன்று நியூயார்க் நகரில் அறிஞர் பலரது அவை முன் நின்று அரசியல் பற்றிய சொற்பொழிவு செய்தார். அவருடைய உயர்ந்த உருவமும் தடிப்பேறிய கைகளும் மாசுற்ற ஆடைகளும் அவையோரைத் தம் வயப்படுத்தில. அவர் முதலில் ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பைப் பற்றிய சட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிப் பேசினார். அப்பொழுது அவரது முகம் பிரகாசித்தது. அவரது குரல் உயர்ந்தது. சபையோர் தம்மை மறந்து சொற்பொழிவில் ஆழ்ந்தனர்; 'இவர் சாதாரண மனிதர் அல்லர்' என்று பலர் கருதினர்; அவரது சொல்வன்மையை வியந்தனர். லிங்கன் தம்மை மறந்தார்; தாம் அறிஞர் முன்பு பேசுவதை மறந்தார்; அவரது முழுக் கவனமும் அமெரிக்க அரசியலைப் பற்றி நின்றது. அவர் சொற்கள் தடையின்றித் தாராளமாக வெளிவந்தன. சொல்லும் பொருளும் பருந்தும் அதன் நிழலும்போலப் பிணைந்து சென்றன. அவையோர் தம்மை மறந்திருந்தனர். அங்கிலேயில் அவர் அடிமைத் தனத்தைப் பற்றிப் பேசுகையில், "அடிமைத்தனம் நியாயமாயின், எல்லாச் சட்டங்களும் நியாயங்களும் அமைப்புகளும் நியாயமற்றவையே ஆகும். அடிமைத்தனம் நியாயமாயின், அதனை எல்லா மாகாணங்களிலும் பரவவிடுவோம். அது சரியன்றாயின், நாம் அனைவரும் கூடி அதனை அறவே ஒழித்து விடுவோம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று பேசிக் கேட்டபோது அவையோர் நீண்டநேரம் கரகோஷம் செய்தனர். லிங்கன் தம் பேச்சு முடிந்ததும் சபையோரை உற்று நோக்கினார்; ஒவ்வொருவரும் தம்மை ஆவலோடு

நோக்குவதை உணர்ந்து மகிழ்ந்தார். அதிகம் அறைவ தேன்? அக்கூட்டத்துப் பெருமக்கள் பலரும் அன்றே அவரைக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிற்கும்படி வற் புறுத்தினர். லிங்கன் தேர்தலில் வெற்றி பெற்றார். லிங்கன் இந்த ஒப்புயர்வற்ற தலைவர் பதவிக்கு வந்ததற்கு அவர்பால் இருந்த சொல்வன்மையே சிறந்த காரணமாகும். அவர் பரம ஏழை. கண்ணுக்கு அழகானவரும் அல்லர். வேறு எவ்விதத் தந்திரத்தாலும் அவர் அவ்வுயர் பதவியைப் பெற் றிலர். அவரது சொற்பொழிவைக் கேட்ட எல்லாக் கட்சி மக்களும் அவர் வயப்பட்டனர். அத்தகைய சொல் வன்மையே நாம் பெறத்தக்கதாகும்.

இங்கிலாந்தில் சொல்வன்மை பெற்ற பேரறிஞர் பல ராவர். அவருள் மெக்காலே பிரபு ஒருவர். அவர் 1830-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த பார்லிமென்ட் கூட்டத்தில் யூதர்களை ஆதரித்துப் பேசிய பேச்சே அவரைப் பெருஞ் சொல்வன்மை உடையவராக உலகம் மதிக்கத் தலைப்பட்டது. அப் பேச்சுக்குப்பின் அவர் படிப்படியாக உயர்ந்த பதவி களைப் பெற்றார்; பிரிட்டிஷ் மந்திரியாகவும் விளங்கினார். அவருடைய பேச்சின் வன்மையை-பேசும் முறை யை-தடை இன்றிக் கரைபுரண்டு ஓடிவரும் வெள்ளம் போலச் சொற்கள் அடுக்கடுக்காக அடுக்கிச்செல்லும் அழகை -கேட்பவர் அயர்வுறாமலும் கூறியது கூறாமலும் இனிமை குறையாமலும் பேசும் திறமையை அனைவரும் பாராட்டினர். அவரைப்போன்றே 'எட்மண்ட் பர்க்' என்பவரும் சிறந்த பேச்சாளர். அவர் பேச எழுந்தால் பார்லிமென்டில் ஓசை இராது. எல்லாக்கட்சி உறுப்பினரும் தம்மை மறந்து அவரது பேச்சில் ஆழ்வர். அவரது சொன்மாரியில் முழு கித் திளைத்தவர் பலராவர். அப் பெரியாரே கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் புரிந்த பல தவறுகளை மணிக்

கணக்காகப் பேசி, வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு இந்தியாவிற் செய்த சில தீச்செயல்களைத் தக்க சான்றுகளுடன் விளக்கி அவையோரை அதிசயிக்கச் செய்தனர்; அரசியலாரை வாயடங்கச் செய்தனர். இங்ஙனம் சொல்லாற்றல் வாய்ந்த பெருமக்கள் இந்தியாவிலும் உண்டு. அப் பெரியார்களுள் முஹம்மத் அலீ ஜின்னுஹ், சரோஜனி தேவியார், சர். ஏ. இராமசாமி முதலியார், சர். சி. பி. இராமசாமி ஐயர், சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சர். தேஜ் பஹதூர் சாப்ரூ, ஜவாஹிர்லால் நேரு, சுரேந்திரநாத் பானர்ஜி சிறந்தவராவர்.

முடிவு

3. நாம் அனைவரும் இப்பெருமை யளிக்கும் சொல்லாற்றலைப்பெற முயலல் வேண்டும். நாம் பல நூல்களைப் படித்துப் பல செய்திகளை அறிதல் வேண்டும்; உலக அறிவை மிகுதியாகப் பெறுதல் வேண்டும்; எந்த விஷயம் பற்றியும் பேசக்கூடிய ஆற்றல் கைவரப் பெறுதல் வேண்டும். அங்ஙனமாயிற்றான் நாம் நல்ல பேச்சாளராதல் கூடும்.

33. திருவிதாங்கூர்

[நீ அறிந்த சமஸ்தானம் ஒன்றைப் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.]

குறிப்புகள் :—1. திருவிதாங்கூர்
2. அரசியல்
3. சிறப்புகள்
4. முடிவு

3405

கட்டுரை

திருவிதாங்கூர்

1. இந்தியாவில் ஏறக்குறைய அறுநூறு சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகப் பெரியன சிலவே. அச்சிலவற்றுள் ஒன்று தமிழ் நாட்டில் உள்ள 'திருவிதாங்கூர்ச் சமஸ்தானம்' என்பது. இந் நாட்டில் இயற்கை வளங்கள் யாவும் மலிந்துள்ளன. இயற்கை அன்னையின் இன்பக் காட்சிகள் பலவும் இங்குக் கண்டு களிக்கலாம். எங்குப் பார்க்கினும் மலைத்தொடர்கள், மரச் சோலைகள், நீர் நிலைகள் கான்யாறுகள், கால்வாய்கள், வளங்கொண்ட காடுகள் முதலியன இடையறா இன்பத்தை அளித்துக் கொண்டிருக்கின்றன. இந்நாடு மிகப் பழைய காலந் தொட்டே சேரமன்னர் பரம்பரையினரால் ஆளப்பட்டு வருவதாகும். பண்டைத்தமிழகத்து மூவேந்தருள் 'சேரர்' என்பவர் மேற்குப்புற நாட்டை ஆண்டவர். திருவிதாங்கூர், கொச்சி முதலிய இடங்கள் சேர நாட்டைச் சேர்ந்தவை. அக்கால அரசர் 'வரம்பர்' எனப்பட்டனர்; இக்கால அரசர் 'வர்மர்' (வர்மா) எனப் பட்டம் கொள்கின்றனர். சேரன் - செங்குட்டுவன், இமய வரம்பன் - நெடுஞ்சேரலாதன் என்னும் சங்ககாலச் சேரமன்னரும்

சேரமான் பெருமாள் நாயனார் எனப்பட்ட இடைக்காலச் சேர மன்னரும் திருவிதாங்கூரை ஆண்டவர்களே யாவர். அந்நாடு நெடுங்காலம் தமிழ் நாடாகவே இருந்தது ; பின்னர் வட மொழியாளர் கூட்டுறவால் பழந் தமிழ் கெட்டு மலையாளமாகியது ; மக்களும் 'மலையாளிகள்' என்று வழங்கப் பெற்றனர். இப்பொழுது அந்நாட்டில் மலையாள மொழியே வழங்குகின்றது. பழைய மலையாள நூல்கள் யாவும் தூய தமிழ் நூல்கள் என்றே கூறல் தகும். கி. பி. 17-ஆம் நூற்றாண்டு வரை மலையாள மாப்பிள்ளைகள் தமிழ் எழுத்துகளையே எழுதி வந்தனர். மலையாளப் பகுதிகளில் தமிழ்ச் சாஸனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அரசியல்

2. திருவிதாங்கூருக்குத் தலை நகரம் 'திருவனந்தபுரம்' என்பது. அது அழகு மிக்க நகரம்; திருமால் அனந்த சயனத்தில் உள்ள பெருங் கோவிலையுடைய புண்ணிய நகரம் ; அரசரது அரண்மனை, உயர்நீதி மன்றம், சட்டசபை முதலிய பல பெரிய கட்டிடங்களும் காரியாலயங்களும் நிறைந்துள்ள இடம். கடற்கரை ஓரத்தில் உள்ள நகரம். நாட்டுச் சட்ட திட்டங்கள், நீதி முறை, நிருவாகப் பொறுப்பு இவற்றைச் சட்ட சபையோடு கூடிய திவான் அரசர் சார்பாகக் கவனித்து வருகின்றார். அவரே சட்ட சபைக்குத் தலைவர் ஆவர். அவருக்குக் கீழ்ப் பல இலாகாக்கள் இருக்கின்றன. இப்பொழுது திருவிதாங்கூரின் திவானாகத் திகழ்பவர் சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர் என்பவர். இவர் அரசியல் அறிவு மிக்குடையவர் ; சென்னை அரசாங்கத்திலும் இந்திய அரசாங்கத்திலும் அமைச்சராக இருந்து 'சிறந்த அரசியல் நிபுணர்' எனப் பெயர் பெற்றவர். இவரது நிருவாகத்தில் திருவிதாங்கூர் உயர் நிலையை அடைந்து வருகின்றது.

சிறப்புகள்

3. இச் சமஸ்தானத்தில் பொதுவாகப் பயிர்த்தொழிலும் கைத்தொழிலும் சாதாரண நிலையிலேயே இருந்து வருகின்றன. எனினும் மற்றச் சமஸ்தானங்களை விடக் கைத்தொழிற் சாலைகள் சில இங்குண்டு என்பதை மறுத்தல் இயலாது. காகிதம் செய்யும் தொழிற்சாலையும், மின்சாரத்தை உண்டாக்கும் நிலையமும், சர்க்கரைத் தொழிற் சாலையும் இங்குச் சிறந்த வேலை செய்து வருகின்றன. கல்வித் துறையில் இச் சமஸ்தானமே இந்தியாவில் முன்னணியில் இருப்பதாகும். இங்குத் தாய்மொழிக் கல்வி, ஆங்கிலக் கல்வி, உயர்தரக் கல்லூரிக் கல்வி என்னும் மூன்று துறைகளிலும் கல்வி அளிக்கப்படுகின்றது. தாய்மொழிக் கல்வி எல்லோர்க்கும் இலவசமாக அளிக்கப்படுகின்றது. பெண் மக்கட்கு எவ்விதக் கல்விக்கும் பாதிக் கட்டணமே விதிக்கப்பட்டுள்ளது. அங்கு 8 கல்லூரிகள், 250 ஆங்கிலக் கலாசாலைகள், 3500 தாய்மொழிப் பள்ளிகள் இருந்து கல்விப் பணி புரிகின்றன. பெருந்தொகையினராகப் பெண்கள் மேற் கூறப்பெற்ற எல்லாக் கலாசாலைகளிலும் கல்வி பயின்று வருதல் குறிப்பிடத்தக்கது. பெண்கள் முன்னேற்றம், நவீன முன்னேற்றம், சீர்திருத்தநிலை இவற்றுக்குப் பெருங் காரண கர்த்தராக இருந்து ஏழாண்டுகள் இடையறாத் தொண்டு செய்தவர் இப்போதுள்ள அரசரது பெரிய தாயார் சேது லக்ஷ்மிபாய் அம்மையாரே ஆவர். இவருக்குப்பின் 1931-ல் இன்றுள்ள சித்திரைத் திருநாள் மஹாராஜா பட்டம் அடைந்தார். அவரும் அவர் தாயாராகிய சேது பார்வதிபாய் அம்மையாரும் இன்று இச் சமஸ்தானத்தைக் கவனித்து வருகின்றனர்; நாட்டு முன்னேற்றத்துக்குரிய பல துறைகளில் வேலை செய்கின்றனர்; அண்

மையில் இவ்விருவரும் திவானுடன் இந்தியா முழுவதும் சுற்றினர்; இங்கிலாந்து சென்று அரசியல் விஷயங்களை அறிந்து மீண்டனர். அரசர் தாழ்த்தப்பட்ட மக்கட்குக் 'கோவில் நுழைவு' உரிமையை மனமுவந்து அளித்துள்ளார்; குல நிற வேறுபாடுகள் திருவிதாங்கூரில் கவனிக்கப்பட்டில. ஆற்றல் பெற்றவர் உயர்பதவிகளைப் பெற்று வருகின்றனர். பெண்மணிகள் பலர் உயர்ந்த பதவிகளில் இருந்து வருகின்றனர்.. விவசாய நீர்ப்பாஸன வசதி, குழாய் நீர், இருப்புப் பாதைப் பெருக்கம், 'பஸ்' போகும் பாதைகளின் பெருக்கம், மின்சார விளக்கிடுதல் முதலிய பல முன்னேற்ற ஏற்பாடுகள் திறம்பட அமைந்துள்ளன. இந் நாட்டைச் சேர்ந்துள்ள கன்னியாகுமரி முனை காணத்தக்க இடமாகும். அது முக்கடல்கள் கூடும் இடமாகும்; சூரியன் தோற்றமும் மறைவும் தெளிவாகப் புலப்படும் அரிய இடமாகும்.

முடிவு

4. இயற்கை அழகும் செயற்கைச் சிறப்பும் கொண்டுள்ள திருவிதாங்கூரைத் தமிழ் மக்கள் கண்டு களித்தல் வேண்டும். மலையாளிகள் உடலை ஓம்புபவர்; சிக்கன வாழ்வு நடாத்துபவர்; அறிவும் ஆற்றலும் உடையவர். அவர்களை அத் துறைகளில் பின்பற்றல் தமிழ் மக்கள் முன்னேற வழியாகும்.

34. மின்சாரம்

குறிப்புகள் :—1. வரலாறு
2. வகைகளும் பயனும்
3. கண்டறியப் பெற்றவை
4. முடிவு

கட்டுரை

வரலாறு

1. மின்சாரம் இயற்கையின் இரகசியச் சக்திகளுள் ஒன்றாகும். அஃதாவது உஷ்ணம், ஒளி, காந்தம், ஒலி முதலியவற்றைப் போலவே மின்சாரம் இயற்கையின் ஓர் அம்சமாகும். மின்சாரத்தால் நடைபெறு வேலைகள் உலகில் இல்லை என்னலாம். இது காற்றைப் போலக் கட்புலனுக்குத் தோன்றாமல் எங்கும் நிறைந்திருப்பது. ஆனால், காற்றை அதன் செயல்களைக் கொண்டு அறிதல் போல இதனை இதன் செயல்களைக் கொண்டுதான் அறிதல் கூடும். இதற்குள் சூடும் வெளிச்சமும் வேகமும் அடங்கி யுள்ளன. இதனைத் தொழில் முறையிற் பயன்படுத்துகையில் அவை வெளிப்படும். இதனை ஒருவகையிற் பயன்படுத்தினால் இதிலிருந்து சூடு உண்டாகும்; வேறொரு வகையிற் பயன்படுத்தினால் வேகம் உண்டாகும்; பிறிதொரு வகையிற் பயன்படுத்தினால் வெளிச்சம் தோன்றும். இத்தகைய விநோத சக்தி வாய்ந்த மின்சாரம் எல்லா வேலைகட்கும் உபயோகப் படுவதில் வியப்பில்லை அன்றோ? மக்கள் தத்தம் தேவைக்கு ஏற்றபடி இதனைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நீராவியால் செய்யப்பெற்று வந்த பல வேலைகள் இன்று மின்சார சக்தியால் நடைபெறுகின்றன.

வகைகளும் பயனும்

2. இது கூட்டு மின்சாரம் (Positive Electricity) என்றும் கழி மின்சாரம் (Negative Electricity) என்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் கூட்டு மின்சாரம் கழி மின்சாரத்தோடுதான் சேரும்; பிறிதொரு கூட்டு மின்சாரத்தோடு சேராது. அங்ஙனமே கழி மின்சாரமும். இவ்விரு மின்சாரமும் ஒன்று சேர்ந்து பல அற்புதச் செயல்களைச் செய்கின்றன. மின்சாரம் ஒரே நிலையில் இருப்பின் தேக்க மின்சாரம் (Static Electricity) என்றும், ஓடுகையில் ஓடும் மின்சாரம் (Current Electricity) என்றும் சொல்லப்படும். இவற்றுள் பின்னதே உலகத்தில் தொண்டு செய்வது. இது, தான் செல்லும் கம்பிகளை எரித்து உஷ்ணப் படுத்தி ஒளிரச்செய்யும். இத் தன்மையைக் கொண்டே பெரிய நகரங்களில் எல்லாம் மின்சார விளக்குகள் மிக்க ஒளியுடன் பிரகாசிக்கின்றன. இவை யன்றிச் சமையல் செய்யவும் மின்சார அடுப்புகள் பயன்படுகின்றன. வெந்நீரை உண் டாக்கவும் இவ் வடுப்புகள் உபயோகப்படுகின்றன. மின் சாரம் செலுத்தப்பெற்ற தண்ணீர் பிராண வாயு, ஜலவாயு என்று இரண்டாகப் பிரிந்து விடுகிறது. இவ்வாறே மற்ற உலோகங்களையும் தனித் தனியாகப் பிரிக்கும் வன்மை இதற்குண்டு. ஆயின் இம் மின்சாரம் இரப்பர், பலகை, கந்தகம், எபொனைட் என்னும் ஒருவித அரக்கு முதலிய பொருள்களுட் செல்லாது. ஆதலால், மின்சார வேலை செய் பவர் மின்சாரம் தம்மைத் தாக்காதிருக்க இரப்பர் முதலிய வற்றால் ஆகிய உறைகளைப் போட்டுக்கொள்வர். மின்சாரம் காந்த சக்தியை உண்டாக்க வல்லது. இதன் சக்தியைப் பெற்ற இரும்புத் துண்டுகள் தம்போன்ற பொருள்களை இழுப்பதுண்டு.

கண்டறியப் பெற்றவை

3. 1843-ல் அமெரிக்க அறிஞரான சாம்பல் மார்ஸ் என்பவர் இம் மின்சார சக்தியால் 'தபால்' அனுப்பும் முறையைக் கண்டறிந்தார். அம் முறையால் ஆயிர மைல் கட்கு அப்பால் உள்ளவர்க்கும் விரைவிற் செய்தியைத் தெரி விக்கலாம். இதுவே இன்று தபால் நிலையங்களில் உள்ள தந்தி யடிக்கும் முறை. இதற்குப் பின் அறிவும் ஆராய்ச்சி யும் பெருகப் பெருக, கடல் நீரிலும் தந்திக் கம்பிகளைச் செலுத்தி, அவற்றின் வாயிலாக ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் செய்தி அனுப்பும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. மின்சார அலைகளின் வேகத்தால் செய்தி கள் மிக்க விரைவில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக் குச் செல்லுகின்றன. நேருக்கு நேராக உடனுக்குடன் பேசும் 'டெலிபோன்' கருவியும் இம் மின்சாரத்தின் சக்தியைக் கொண்டே பணி ஆற்றுகிறது. இவ்வாராய்ச்சிகட்குப் பிறகு, மின்சாரக் கம்பி இல்லாமலே மின்சார சக்தியால் நெடுந்தூரம் செய்தி அனுப்பும் கம்பி இல்லாத் தந்தி கண்டு பிடிக்கப்பட்டது. இஃது உலக அற்புதங்கள் பலவற்றுள் மிகச் சிறந்ததென்றே கூறுதல் வேண்டும். இம் முறையால் இன்று கடலிற் செல்லும் கப்பல்களிலும் வானத்திற் பறக் கும் ஊர்திகளிலும் கம்பி யில்லாத் தந்திக்குரிய சாதனங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் உதவியால் நெடுந் தூரத்தில் உள்ள கப்பல்களும் ஊர்திகளும் ஒன்றோ டொன்று செய்திகள் பேசவும், பூமியில் இருக்கும் தந்தி நிலையங்களோடு செய்திகளை அறிவிக்கவும் தெரிந்துகொள்ள வும் வசதி ஏற்பட்டுள்ளது. ஆபத்தில் அகப்பட்ட கப்பல் களும் வான ஊர்திகளும் இக் கம்பியில்லாத் தந்தியின் மூலம் வேறு கப்பல்கட்கோ ஊர்திகட்கோ தமக்கு நேர்ந்

துள்ள கேட்டை விளக்கி உதவி பெற வசதி உண்டாகிறது. இப் புதிய சாதனம் கண்டறியப் பெற்ற பிறகே கப்பல்கள் கவலையின்றிக் கடலிற் பிரயாணம் செய்கின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் மின்சார சக்தியால் ஓடும் டிராம் வண்டிகள் இருக்கின்றன. தொடர் வண்டிகளும் மின்சார சக்தியால் சில இடங்களில் ஓடுகின்றன. அமெரிக்கா, ஜெர்மனி முதலிய ஆராய்ச்சி மிக்க நாடுகளில் மின்சார சக்தியைக் கொண்டே ஆட்கள் துணை இன்றிக் கப்பல் தாமே கடலிற் போகவும், வான ஊர்திகள் பறக்கவும், வேண்டும் பணிகளைச் செய்யவும் இயக்கக் கூடுமோ என்பதை அறிய ஆராய்ச்சி நடைபெறு கின்றது. அம் முறை வெற்றி அளித்தல் கூடும் என்பது நம்பப்படுகிறது.

முடிவு

4. மக்களின் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக மின்சார சக்தியால் என்னென்ன அற்புதங்கள் நிகழுமோ, அறியோம். இத்துறையில் நம்மவர் முயன்று ஆராய்ச்சி நடத்தி மேலும் பல புதிய சக்திகளைக் கண்டு உலகிற்கு உணர்த்தின், நம் நாட்டிலும் ஆராய்ச்சி யுடையார் உளர் என் னும் மதிப்பு உலக மக்கட்கு ஏற்படும் அன்றோ ?

35. போர்க் கருவிகள்

குறிப்புகள் :—1. பண்டைக் கருவிகள்
2. முன்னேற்றம்
3. தரைப்படைக் கருவிகள்
4. நீர்ப்படைக் கருவிகள்
5. வானப்படைக் கருவிகள்
6. முடிவு

கட்டுரை

பண்டைக் கருவிகள்

1. துப்பாக்கி, பீரங்கி முதலிய போர்க் கருவிகள் நம் நாட்டில் பழைய காலத்தில் இல்லை. மனிதன் முதன் முதல் கற்களைத் தற்காப்புக் கருவிகளாகப் பயன்படுத்தினான்; இரும்பு முதலிய உலோகங்கள் கண்டெடுக்கப்பட்ட பின்னர் ஈட்டி, வாள், அரிவாள், கோடரி, குந்தம், அம்புகள் முதலியவற்றைச் செய்து கொண்டான். இவையே நம் நாட்டில் நெடுங்காலம் இருந்தவை. ஆயின் பலவகை விநோத பாணங்களை நம்மவர் பயன்படுத்தினர் என்பது இராமாயணத்திலும் மஹா பாரதத்திலும் பிற நூல்களிலும் காணலாம். இந்நிலைமை ஒரு காலத்தில் எல்லா நாடுகளிலும் இருந்து வந்ததே ஆகும்.

முன்னேற்றம்

2. ஆனல், மனிதனது அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக மேனாட்டு மனிதன் துப்பாக்கியைக் கண்டு பிடித்தான்; பின்னர்ப் பெரிய குழையில் மருந்தை அடித்து நெடுந்தூரம் சுடக்கூடிய முறையை அறிந்தான். அப்பெருங் குழையே 'பீரங்கி' என்பது. இப்பீரங்கி பல வகைப்படும். சிறிது தூரம் முதல் 100 மைல் தூரம் வரை சுடக்கூடிய

இராகூதத பீரங்கிகள் பல இருக்கின்றன. இன்று நடைபெறும் போரில் பிரிட்டிஷாரும் ஜெர்மானியரும் தத்தம் எல்லைகளில் இருந்து கொண்டு இப்பீரங்கிகளைப் பயன்படுத்துகின்றனர். சென்ற மகா யுத்தத்திலும் இவை உபயோகிக்கப்பட்டன. இங்ஙனமே நீர், நிலம், வானம் இம் மூவினத்துப் போர்க் கருவிகளும் வரவர முன்னேற்றம் பெற்றுள்ளன.

தரைப் படைக் கருவிகள்

3. முன்சொன்ன பீரங்கிகளைக் கைவண்டிகளில் ஏற்றி ஒரு படை முன்செல்லும். இதற்குப் 'பீரங்கிப் படை' என்பது பெயர். மோட்டர் சைக்கிளில் சிறிய வன்மையுள்ள துப்பாக்கிகளை இணைத்து, அதனை வீரன் செலுத்திப் படைக்குமுன் போவதுண்டு. இப் புதிய படைக்கு 'மோட்டர் சைக்கிள் வீரர் படை' என்பது பெயர். இதனை இன்று நடைபெறும் போரில் ஜெர்மானியர் பிரான்ஸில் பயன்படுத்தினர். இப் படைகட்குப் பின்னால் போர் வீரர்கள் வன்மையுள்ள துப்பாக்கிகளை ஏந்தி அணிவகுத்துச் செல்வர். இதுவே 'காலாட் படை' என்பது. இவர்கட்கு முன்னும் பின்னும் மலைகளையும் மாளிகைகளையும் இடித்துத் தள்ளிச் செல்லும் 'டாங்குகள்' என்னும் கவசம் தரித்த மோட்டார்கள் படை செல்லும். இப் படையே மிகக் கொடியது. இதனை மிகுதியாகப் பயன்படுத்தியே ஜெர்மனி பிரான்ஸைச் சில நாட்களுக்குள்ளேயே தோற்கடித்து விட்டது. இக் கவச மோட்டார்ச் சக்கரங்கள் இரும்பு-எஃகுச் சங்கிலிகளால் இணைக்கப்பட்டவை. இவற்றினை இயக்குபவரும் வீரர்களும் வண்டிக்குள் இருப்பர். அவர்கள் இருப்பது வெளியே தெரியாது. அவர்களைத் தாக்கவும் பிறரால் முடியாது. இம் மோட்டாரின் மேலிடத்தில் வன்மையுள்ள சிறு பீரங்கிகளும் துப்பாக்கி

களும் இணைக்கப் பட்டிருக்கும். இம் மோட்டார்ப் படையை மிகுதியாகப் பெற்றுள்ள நாடே தரைப் போரில் வெற்றி பெறும் என்பதைத் துணிந்து கூறலாம்.

நீர்ப்படைக் கருவிகள்

4. நீர்ப்படையில் போர்க் கப்பல்கள் தலைமை பெற்றவையாகும். ஒவ்வொரு போர்க் கப்பலிலும் பலவகைத் துப்பாக்கிகளும் பெரிய பீரங்கிகளும் இணைக்கப் பெற்றிருக்கும். அவை மிகுந்த தூரம் குறிபார்த்துச் சுடக்கூடியவையாக இருக்கும். இப் போர்க் கப்பல்கள் சிறியவை, பெரியவை, மிகப் பெரியவை எனப் பலவகைப்படும். இத்தகைய போர்க் கப்பல்களை மிக்குடைய நாடு இங்கிலாந்தேயாகும். இப்போர்க்கப்பல்களுக்கு அடுத்தபடி நாசகாரிகள் (Destroyers) என்றொரு வகைப் போர்க் கப்பல்கள் உண்டு. இவை நிறையிற் குறைந்தவை; மிக்க வேகமுடையவை. இவற்றிலும் பெரிய துப்பாக்கிகளும் பீரங்கிகளும் இணைக்கப்பட்டிருக்கும். இவை வியாபாரக் கப்பல்கட்குத் துணைபோகும்; போர்க் கப்பல்கட்குமுன் படையாகச் செல்லும். இவையன்றிக் 'குரூய்சர்ஸ்' (Cruisers) என்னும் ஒருவகை 'நாசகாரிகள்' இருக்கின்றன. இவையும் போர்க் கப்பல்கட்கு அடுத்தபடியானவை. அவற்றுள் சிலரே இருந்து வேலை பார்ப்பர். இவையன்றி 'பீரங்கிப் படகுகள்' உண்டு. இவை கொடியவை; உருவில் சிறியவை. பெரிய கப்பல்களையும் பீரங்கி வெடியால் துளைத்துக் கடலில் அமிழ்த்தும் ஆற்றல் பெற்றவை. இவற்றினும் கொடியவை 'டார்ப்பிடோப் படகுகள்' என்பவை. 'டார்ப்பிடோ' என்பது கப்பலைத் துளைத்து மூழ்கடிக்கும் வன்மை வாய்ந்த நீண்ட கருவியாகும். அதனை ஏற்றிச் சென்று கப்பலின் அருகிற்போய் 'டார்ப்பிடோ'வைக் குறிபார்த்து விடும் வன்மை இப் படகுக்கு உண்டு.

இவை யாவற்றினும் மேலாக மிக்க கொடுமை வாய்ந்தது 'சப்மரைன்' என்னும் நீர்மூழ்கிக் கப்பல் ஆகும். இது எவர்க்குந் தெரியாமல் கடலுள் இருந்து திடீரென மேல் மட்டத்திற்கு வந்து டார்ப்பிடோவை விட்டுக் கப்பலைத் துளைத்து மூழ்கடிக்கும்; நீருக்குள் இருந்தும் இவ் வேலையைச் செய்து விட்டுப் போய்விடும். இதனை மிகுதியாகப் பெற்றுள்ள நாடு கடற் போரில் சளையாது.

வானப் படைக் கருவிகள்

5. இவை யாவற்றினும் இன்று மேலான முன்னேற்றம் பெற்றிருப்பது ஆகாயப் போராட்டமேயாகும். ஆகாய விமானங்கள், பகைவர் விமானங்களை 'விரட்டிச் செல்பவை' (Chasers) என்றும், 'சண்டை யிடுபவை' (Fighters) என்றும், 'குண்டுகளை எறிபவை' (Bombers) என்றும் மூவகைப்படும். இவற்றை மிக்குடைய நாடே போரில் பெருமை பெறும். இவை ஊர்களை அழித்து நாசமாக்கும்; மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கிவிடும்; இப்படையே இங்கிலாந்தையும் ஜெர்மனியையும் போரில் ஈடுபட்ட எல்லா நாடுகளையும் அழித்து வருகின்றது.

முடிவு

6. விஞ்ஞான அறிவு வளர வளர மண்ணாசை கொண்ட நாடுகள் தற்காப்புக்காகவும் பிறரை வெல்லவும் என்றே அபரிமிதமாகப் போர்க் கருவிகளைப் போட்டிமீது தயார் செய்து குவிக்கின்றன. அவை அளவு கடந்துவிடின், ஏதேனும் ஒரு காரணம் காட்டிப் பிற நாடுகள்மீது போர் துவக்குகின்றன. இந் நாச காரியத்துக்குரிய போர்க் கருவிகளை உண்டாக்கும் அறிவு நற்றுறையில் செலவழிக்கப்படுமாயின், வானுலக இன்பத்தை இம் மண்ணுலகிலேயே பெற வழியுண்டு. ஆயினும் இதனைக் கேட்பவர் யாவர்?

36. பெரியோர் வரலாறுகள்

குறிப்புகள் :—1. பெரியோர் யாவர் ?
2. அவர் வரலாறுகள்
3. நாம் பெறும் நன்மை
4. முடிவு

கட்டுரை

பெரியோர் யாவர் ?

1. பெரியோர் யாவர் ? அறிவுத் துறையிலும் ஒழுக்க நெறியிலும் நாட்டுச் சேவையிலும் தம் வாழ்க்கையைச் செலவிட்டவரே 'பெரியோர்' எனப்படுவர். அறிவுத் துறையில் பெயர் பெற்றோர் கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர், ஐஸக் நியூட்டன், கலீலியோ, எடிசன், ஹென்றி போர்ட் முதலியோர் ஆவர். ஒழுக்க நெறியில் பெயர் பெற்றவர் புத்தர்பெருமான், மஹாவீரர், இயேசுநாதர், முஹம்மத் நபி, சாக்ரடிஸ், விவேகானந்தர், இராமகிருஷ்ணர், இராமதீர்த்தர், காந்தியடிகள் முதலியோர் ஆவர். நாட்டுச் சேவையில் பெயர் பெற்றவர் அலெக்ஸாண்டர், சீஸர், கரிபால்டி, வாஷிங்டன், லிங்கன், நெப்போலியன், இக்கால அரசியல் தலைவர்கள் முதலியோர் ஆவர்.

அவர் வரலாறுகள்

2. இப் பெரியார்களின் வரலாறுகளைப் படிப்பதால் உழைப்பு, ஊக்கம், உணர்ச்சி, நாட்டுப்பற்று, பக்தி முதலிய நல்லியல்புகளில் மனம் செல்லும். கம்பர் இராமாயணத்தைத் தமிழிற் பாடிய பெரும் புலவர். அவர் பாடல்களைப் படிப்பதால் தமிழ்ச்சுவையும், பா நயமும், பக்திப் பெருக்கமும், புலமை பெற அறிவும், வருணனை விதமும், இன்ன பிறவும் எளிதின் உணரலாம். இங்ஙனமே காளிதாசர், ஷேக்ஸ்பியர்

செய்த நூல்கள் ஆகும். மன அமைதியை ஏற்படுத்துவன நூல்களே ஆகும். கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் போன்ற பெரும் புலவர் நூல்களும் அவர்தம் வரலாறுகளும் நம்மை உயர்நிலைக்குக் கொண்டு செல்வன ஆகும். அவர்தம் ஏழ்மை நிலை-உழைப்பு—ஊக்கம்-அவற்றால் பெற்ற புகழ்-பெரும் புலமை இன்ன பிறவும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்; அவர்களது நல்வாழ்வில் நம்மைச் செலுத்த அவ் வரலாறுகள் பெரிதும் பயன்படும்.

ஆராய்ச்சித் துறையிற் பெயர்பெற்ற நியூட்டன், எடிசன் போன்றார் வரலாறுகள் அற்புதமானவை. எடிசனது எளிய வாழ்வு, அவருடைய விடா உழைப்பு, ஆராய்ச்சிகள், அவற்றால் உண்டான பயன்கள், அவரது பெருமை இன்ன பிறவும் கொண்ட அவரது வரலாறு இளைஞர் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் உண்டாக்கும். மின்சாரத்தால் நாம் பெறும் நலன்கள் யாவும் எடிசனது பேருழைப்பால் உண்டானவை எனின், அப் பெரியாரைப் போல உலக மக்கள் உள்ளத்தில் நாம் குடிகொள்வது என்று? அவரைப்போல அரிய வேலைகளைச் செய்து, உலகத்தார் உள்ளத்தைக் கவர உணர்ச்சியை ஊட்டுவதன்றோ அவர் தம் அரிய வரலாறு? 'மரத்திற்கும் இன்ப துன்பங்கள் உண்டு. அவையும் மக்களைப் போலத் தூங்கி விழிக்கின்றன. அவற்றிற்கு மயக்க மருந்தைத் தந்து வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று நடலாம்' என்று வியத்தகு ஆராய்ச்சிகளைச் செய்து காட்டிய இந்தியப் பேரறிஞரான ஸர். ஜகதீச சந்திர போஸ் என்பார் தம் அரிய வரலாறு எவரைத்தான் வியக்கச் செய்யாது? 'அப் பெரியாரது உழைப்பில் ஓரளவேனும் கைக்கொண்டு நாமும் உயர்வடைய வேண்டும்-உலகப் புகழ்பெற வேண்டும்' என்று எண்ணாத மாணவன் விலங்காவன் அல்லனோ? ஸர். ஸி.

வி. இராமன் வரலாறு எவ்வளவு இனிமையானது! ஒளியைப்பற்றி அவர் கண்ட அற்புதங்கள் பல. அவர் நம் தமிழ் நாட்டவர். அவரது வரலாறு மாணவர்க்கு உணர்ச்சி ஊட்டத்தக்கது.

நாம் பெறும் நன்மை

3. ஒழுக்க நெறியைப் போதிக்கப் புறப்பட்ட புத்தர் பெருமான் வரலாறு எவர் உள்ளத்தைத்தான் கவராது! பாமர மக்கள் நல்வாழ்வைப் பெறத் தம்மைச் சிலுவையில் அறையச்செய்த நாசரேத்தூர் அடிகளை உலகம் மறத்தல் இயலுமோ? அநாகரிகரை நல்வழிப்படுத்த முயன்றதால் அல்லவோ முஹம்மத் நபி நாயகம் மக்காவிலிருந்து மதீனுவுக்கு ஓடநேரிட்டது. ஆ! உலக மக்களைச் சீர்ப்படுத்தப் போந்த பெரியார் பட்ட இன்னல்கள் பல. தம் சமதருமக் கொள்கைகளைப் பரப்ப முயன்ற காரணத்தால் இராஜா ராம் மோகனர் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார்; கைம்மை மணத்தை ஆதரித்ததால் ஈஸ்வர சந்திரர் சாதி விலக்குச் செய்யப்பட்டார். ஆ! இப் பெரியார்கள் பொதுமக்கள் நலத்திற்கு உழைத்துத் துன்பப்பட்ட மஹான்கள் ஆவர்.

முடிவு

4. இவர்களுடைய வரலாறுகளால் நாம் சகிப்புத் தன்மை, தந்நலமற்ற சேவை செய்ய உணர்ச்சி, உழைப்பு, ஊக்கம், இடைவிடா முயற்சி, துன்பத்தை இன்பமாகக் கருதும் மனப்பான்மை முதலிய நல்லியல்புகளைப் பெறுகின்றோம். நடுக்கடலில் திசை கெட்டலையும் கப்பலுக்கு ஆறுதல் அளிக்கும் கலங்கரை விளக்கம்போல-அறியாமை உலகில் அல்லலுற்று நிற்கும் நமக்கு இப்பெரியோர் வரலாறுகள் ஆறுதல் அளித்து வாழ்வை உயர்வடையச் செய்கின்றன வாகும்.

37. நோபெல் பரிசு

குறிப்புகள் :—1. நோபெல் வரலாறு
2. இவர் வைத்த பரிசு
3. அதன் நோக்கம்
4. பரிசு வழங்கல்
5. அதனைப் பெற்றவர்
6. முடிவு

கட்டுரை

நோபெல் வரலாறு

1. ஆல்ப்ரெட் நோபெல் என்பவர் ஸ்வீடன் நாட்டவர். இவர் இயைபு நூற் கலைஞர். இவர் ஸ்வீடன் நாட்டுத் தலைநகரான ஸ்டாக்ஹோம் என்னும் பதியில் 1833-ல் பிறந்தவர். இவர் தம் தந்தையாருடன் இரஷ்யாவில் இருந்தார்; தந்தையாருடைய வெடி மருந்துச்சாலையில் வேலை பார்த்தார்; இயைபு நூல் ஆராய்ச்சியையும் நடத்திவந்தார். இவர் தம் ஆராய்ச்சியின் பயனாகக் காற்றை அளக்கும் கருவியும் நீர்ப் பொருள்களை அளக்கும் கருவியையும் கண்டறிந்தார். இவர் தம் முப்பதாம் வயதில் பெரிய பாறைகளைத் தகர்த்தெறியும் வன்மை வாய்ந்த 'டைனமைட்' என்னும் வலிய வெடி ஒன்றைக் கண்டுபிடித்தார் ; அதைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டார் ; அதனால் இரஷியாவில் திரண்ட பொருள் சம்பாதித்தார். இவற்றுடன் இவர் தமது சொந்த ஊரை அடைந்தார் ; தமது பெருஞ் செல்வத்தை யாது செய்வதென்று யோசித்தார் ; நண்பர் பலரைக் கலந்து ஆலோசித்தார் ; முடிவில் பெரும் பொருளை ஸ்வீடன் அரசாங்கத்தினிடம் ஒப்புவித்தார்; அதன் வட்டியைக்கொண்டு உலக அறிஞர்களுள் ஐந்து பேருக்கு ஆண்டுதோறும் பரிசு தருமாறு

தம் விருப்பத்தை எழுதிவைத்தார். இவர் இவ் வேலையை 1895-ல் செய்து முடித்தார்.

இவர் வைத்த பரிசு

2. இப் பரிசு இவர் பெயரால் 'நோபெல் பரிசு' என்று வழங்கப்படுகிறது. இது ஐந்து பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பரிசும் எண்ணாயிரம் பவுன் மதிப்புடையது. அஃதாவது ஐந்து பரிசுகட்கும் ஆண்டுதோறும் நாற்பதினாயிரம் பவுன் எனின், இவ் வட்டிக்குரிய முதல் தொகை யாதென்பது! இப் பெருமகனது வள்ளற் றன்மையை என்னெனப் புகழ்வது! உலக மக்கட்குப் பயன்படும் வகையில் புதிய உண்மைகளைக் கண்டறிந்து வெளியிடும் அறிஞர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பரிசாக மூன்று பரிசுகள்; சிறந்த இலக்கிய நூலை எழுதி வெளியிடுபவர்க்கு ஒரு பரிசு; உலக அமைதிக்கு உழைக்கும் பெரியார் ஒருவருக்கு ஒரு பரிசு—ஆக ஐந்து பரிசுகள் ஆண்டுதோறும் அளிக்கப்படல் வேண்டும் என்பது நோபெல் விருப்பம். அவ்விருப்பத்தை ஆண்டுதோறும் நிறைவேற்றி வைக்க அறிஞர் குழு ஒன்று ஸ்டாக்ஹோமில் இருந்துவருகின்றது. இக் குழுவினர் தகுதியுடையவர்க்கே பரிசுகள் வழங்குகின்றனரே அன்றி, வேறு காரணங்களைக் கொண்டு பரிசுகள் அளிப்பதில்லை. நிற—குல—மத் வேறுபாடுகள் இத் துறையில் கவனிக்கப்படா. தகுதி ஒன்றே கவனிக்கப்படும்.

அதன் நோக்கம்

3. எண்ணாயிரம் பவுன் பரிசு எனின், எவர்தாம் உழைத்து வேலை செய்யார்! உலக அறிஞர் பலர் தத்தம் துறைகளில் அரும் பாடுபட்டு உழைத்துப் புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்க முனைதல் இயல்பே. இப்பரிசைப் பெறப்

பலர் ஆண்டுதோறும் உழைக்கின்றனர்; அரிய பெரிய ஆராய்ச்சிகள் நிகழ்த்துகின்றனர்; 'பரிசு வரும்' என்னும் ஆர்வத்தால் புதிய புதிய அற்புதங்களைக் கண்டறிகின்றனர். அவ் வற்புதங்களால் உலக மக்கட்கு நன்மையே விளைகின்றன. இந் நோக்கம் கொண்டே நோபெல்பெரியார் இப் பரிசுகளை ஏற்படுத்தினர். இவர் நோக்கம் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இரசாயன சாத்திரம், பூத பௌதிக சாத்திரம், தாவர சாத்திரம், வான சாத்திரம், சரித்திரக் கலை, ஆராய்ச்சித் துறை முதலிய பல துறைகளில் உழைக்கும் அறிஞர்கள் இப் பரிசுகள் பெற மேலும் முயன்று அரும் பெரும் விஷயங்களைக் கண்டறிய முனைகின்றனர்; வெற்றியும் பெறுகின்றனர்; அவர்கள் பரிசு பெறுகின்றனர்; உலகமும் நன்மை பெறுகின்றது.

பரிசு வழங்கல்

4. ஆண்டுதோறும் நோபெல் பெரியார் இறந்த நாட் கொண்டாட்டத்தன்று ஸ்டாக்ஹோமில் ஓர் உலக மஹாநாடு கூடும். அக் கூட்டத்தில் ஸ்வீடன் மன்னரால் இந்த ஐந்து பரிசுகளும் வழங்கப்படும். பரிசு பெற்றவர் ஒவ்வொருவரும் நற்சாட்சிப் பத்திரம் ஒன்றும் பொற்பதக்கம் ஒன்றும் அளிக்கப் பெறுவர்; அவற்றோடு எண்ணாயிரம் பவுனுக்கு ஓர் உண்டியல் அளிக்கப் பெறுவர். பரிசு பெற்றவர் அம் மாநாட்டில் சொற்பொழிவாற்றக்கூடாது. ஆயின், உலக அமைதிக்காகப் பரிசு பெற்றவர்மட்டும் ஆஸ்லோ (Oslo) என்னும் இடத்தில் 'உலக அமைதி' என்பது பற்றிய விரிவுரை ஒன்று நிகழ்த்தல் வேண்டும் என்பது விதி. விழாவின் இறுதியில் பரிசு பெற்றோர்க்கு ஸ்வீடன் மன்னர் விருந்தளிப்பர். இம் முறை 1901 முதல் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

அதனைப் பெற்றவர்

5. இப் பெரும் பரிசுகளை அமெரிக்கா, இரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாட்டுப் பல்கலை அறிஞர்கள் பெற்றுள்ளனர். 1901-ல் உலக அமைதிக்குப் பாடுபட்டாரென ஆஸ்ட்ரியப் பெண்மணி ஒருவர்க்குப் பரிசு வழங்கப் பட்டது. நமது இந்தியாவில் இரண்டு பேரறிஞர் இப் பரிசு பெற்றுள்ளனர். 1913-ல் கவி இரவீந்திரநாத் தாகூர் தமது 'கீதாஞ்சலி' நூலுக்காகப் பரிசு பெற்றார். 1930-ல் சர். சி. வி. இராமன் ஒளியைப்பற்றிக் கண்டறிந்த புதுமைகட்காகப் பரிசு பெற்றார்.

முடிவு

6. இங்ஙனம் உலகத்திலேயே பெருந் தொகை கொண்ட பரிசுகளை ஏற்படுத்தி அறிஞரை மேலும் அறிஞராக்கிவரும் நோபெல் பெரியாரது முயற்சி தழைக! அவரது அறநெறி என்றும் பொலிக! அவரைப் பிற செல்வர் பின்பற்றுவாராக!

38. அயல்நாட்டார் நமக்குச் செய்யும் தொண்டுகள்

குறிப்புகள் :—1. அயல் நாட்டார் யார்?
2. அவர்கள் செய்துள்ளவை
3. முடிவு

கட்டுரை

அயல் நாட்டார் யார்?

1. சரித்திர காலத்திலிருந்து நாம் கவனிப்போமாயின் இந்தியாவுக்கு வெளிநாடுகளிலிருந்து வந்த அனைவரும் அயல் நாட்டாரே ஆவர்.

அவர்கள் செய்துள்ளவை

2. மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்கர் மகத ராச்சியத்தைப்பற்றி எழுதிவைத்த 'இண்டிகா' என்னும் நூலே இந்திய சரித்திரம் எழுத உதவிபுரிந்த கருவிகளுள் ஒன்றாகும். இங்ஙனமே தாலமி, ப்ளினி, பெரிப்ளஸ் என்னும் நூலின் ஆசிரியர் முதலிய கிரேக்கர்கள் இந்நாட்டு வாணிகம் முதலியவைபற்றி எழுதிய குறிப்புகள் நம் சரித்திரம் அறியப் பெருந்துணை புரிவன. இப்படியே அராபிய-பாரசீக-சீன யாத்ரிகர், வியாபாரிகள் முதலியோர் எழுதிவைத்துச் சென்ற குறிப்புகள் இந்திய சரித்திரத்திற்குப் பேருதவி புரிந்துள்ளன. ரோமர்கள், கிரேக்கர்கள் வரலாற்று நூல்களிலிருந்தும் நம் நாட்டைப் பற்றிய குறிப்புகளை அறிந்து மகிழ்கின்றோம். 'தாரநாத்' என்னும் திபேத்துச் சரித்திராசிரியன் எழுதிய குறிப்புகளைக் கொண்டு மௌரிய-பிந்துசாரனைப் பற்றிய பல குறிப்புகளைப் பெறுகின்றோம். இங்ஙனம் பற்பல நாட்டார் எழுதி வைத்துள்ள குறிப்புகள்

நமது இந்திய சரித்திரத்திற்கு வேண்டும் சில அம்சங்களை உதவியுள்ளன. நிற்க.

ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின்னர் நமக்கு மேனாட்டாரால் உண்டான நன்மைகள் அளவிறந்தன ஆகும். அவற்றுள் தலையாயது கல்வியாம். ஆயிரக் கணக்கான கல் தூரத்திலிருந்து கடல் கடந்து, தம் கைப்பொருளைக் கொண்டு இங்கு வந்து தங்கி, பள்ளிக்கூடங்களை அமைத்து நம்மவரையும் வேலைகளில் அமர்த்திக்கொண்டு நம்மவர்க்கு இலவசமாகவும் சம்பளம் பெற்றும் கல்வி புகட்ட முனைந்தவர் மேனாட்டாரே ஆவர். கிறித்தவப் பாதிரிமார்களே நமக்குக் கல்விச் செல்வத்தை அளித்த பெருமக்கள் என்னல் மிகையாகாது. குளிர் நாட்டினராகிய அவர்கள் இவ் வுஷ்ண நாட்டிற் குடியேறிச் சாதாரண இல்லங்களில்-சாதாரண வாழ்க்கை நடத்திக்கொண்டு இந்நாட்டு ஏழை மக்கட்குத் தொண்டு செய்ய விரும்பினர் எனின், அவர்தம் தந்நலமற்ற சேவையை என்னெனப் பாராட்டுவது! அமெரிக்கன் மிஷன், சர்ச் ஆப் ஸ்காட்லண்ட் மிஷன், டச்சு மிஷன், ஜெர்மன் லூதர் மிஷன் எனப் பலதிறப்பட்ட சங்கங்களைச் சேர்ந்த பாதிரிமார்களும் கன்னிப் பெண்களும் 'மக்கள் தொண்டே இறைவன் தொண்டாகும்' என்னும் சீரிய நோக்குடன் இந் நாடு புக்குத் தொண்டு செய்த-செய்கின்ற பெற்றியை எங்ஙனம் எழுத்தால் எழுத முடியும்! அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள் அமெரிக்கர் பண உதவியாலும் பிற அவ்வந் நாட்டுப் பணவுதவியாலுமே சிறப்பாக நடைபெறுகின்றன. அவற்றை நடத்தும் தலைவர்கள் அம்மேனாடுகளில் இருந்தே வந்திருக்கின்றனர்; அவர்கள் தந்நலமற்ற சேவையால் இந்தியர் கண் போன்ற கல்வி பெற்றனர்; மேனாட்டு அறிவு விளக்கம் பெற்றனர்; முற்போக்கான எண்ணங்களைப் பெற்று உலக மக்களைப்போலத் தாமும் முன்னணியை

நோக்கிச் செல்லத் தலைப்பட்டனர். பல இடங்களில் இவ் வாங்கிலப் பாதிரிமார் கைத்தொழிற் சாலைகளையும் வைத்து நடத்துகின்றனர். செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள 'ஈக் காடு' என்னும் கிராமத்தில் பின்னல், தையல், தச்சு வேலை கள் முதலியவை பெண்கட்குக் கற்பிக்கப்படுகின்றன. இங் ஙனம் பல பள்ளிகளில் பெண்கட்குக் கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அப் பெண்கள் பயிற்சி பெற்றுப் பிழைப்புக்கு வழி தேடுகின்றனர். மதுரையில் உள்ள அமெரிக்கன் கல்லூரி ஆயிரக் கணக்கான இந்திய மாணவரை உற்பத்தி செய்துள்ளது. சென்னையில் உள்ள லயோலா, கிறித்தவக் கல்லூரிகள் ஆயிரக் கணக்கான இந்திய மாணவரை உயர்ந்த அறிவாளிகள் ஆக்கி உள்ளன. சென்னை யில் மட்டும் இம்மேனுட்டார் பள்ளிக்கூடங்கள் சுமார் ஐம்ப துக்கு மேற்பட் டிருக்கின்றன. அப் பள்ளிகளில் நூற்றுக் கணக்கான ஆண்-பெண் பிள்ளைகள் இலவசமாகவும், சம்பளம் தந்தும் கல்வி பெறுகின்றனர். ஙிற்க.

கிறித்தவ மதப் பிரசாரத்துக்கென இந்நாடு புக்க பாதிரிமார் தாம்தாம் குடிபுகுந்த மாகாணத்து மொழி யைப் பயின்று, அதனை ஆராய்ச்சி செய்து, அதன் அருமை பெருமைகளை ஓர்ந்து அரிய ஆராய்ச்சி நூல்களும் அகராதி களும் எழுதியுள்ளனர். அங்ஙனம் நம் தமிழ் மொழிக்குச் சேவை செய்துள்ள பெரியாருள் டாக்டர் கால்ட்வெல், பெஸ்கி, ராட்லர், வின்ஸ்லோ, போப் முதலியோர் சிறப்பித் துக் கூறத்தக்கவர் ஆவர். கால்ட்வெல் பாதிரியார் தமிழ் மொழியின் பெருமையைப் பற்றி 800 பக்கங்கொண்ட விரி வான ஆராய்ச்சி நூல் ஒன்றை வரைந்துள்ளார். பெஸ்கி என்பவர் தமிழில் முதன் முதலாகச் 'சதுர் அகராதி' ஒன்றை யும் 'தேம்பாவணி' என்னும் தீஞ்சுவைக் காவியத்தையும் பிற நூல்களையும் எழுதியுள்ளார். ராட்லர், வின்ஸ்லோ என்

பவர்கள் அகராதிகளைத் தொகுத்துள்ளனர். ஜி. யூ. போப் என்பவர் நாலடியார், திருவாசகம் என்னும் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இப் பெருமக்கள் சேவை, தமிழின் பெருமையை மேனாட்டார் உணர்ந்து மதிக்க ஏதுவாயிற்று. தமிழுக்கும் தமிழர்க்கும் இறவாத புகழைத் தந்துள்ள இப் பேரறிஞர் சேவையைத் தமிழர் மறத்தல் இயலுமோ? கூறுங்கள்.

முடிவு

3. இப் பெருமக்களைப் பின்பற்றித் தமிழராய நாம் நம் பழைய நாகரிகத்தையும் பிற கலைகளையும் மேனாட்டு மொழிகளில் எழுதி, நாகரிக நாடுகளின் மதிப்பைப் பெறுதல் சிறந்ததாகும். இவர்களைப் போல நம் மக்கட்கு நாமே உறுதுணையாக இருந்து எல்லா நலங்களையும் அளித்துச் சமூகத்தை உயர்த்தப் பாடுபடல் வேண்டும்.

39. பெரியார் பொன் மொழிகள்

குறிப்புகள் :—1. பெரியார் யார் ?
2. பொன் மொழிகள் எவை ?
3. பொன் மொழிகள் சில
4. அவற்றால் ஏற்படும் நன்மை
5. முடிவு

கட்டுரை

பெரியார் யார் ?

1. பெரியார் என்பவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தவரே யாவர். கல்வி யிற் சிறந்த கம்பர், திருவள்ளுவர், இளங்கோ அடிகள், ஷேக்ஸ்பியர், மில்ட்டன், டென்னிஸன், கோல்ட் ஸ்மித், ஜேம்ஸ் ஆலன், காளிதாசன் முதலியவர் கல்விமான்கள். சித்தர்கள், இருடிகள், முனிவர்கள், மஹான்கள், துறவிகள் முதலியோர் ஒழுக்கத்திற் சிறந்தவர் ஆவர்; புத்தர், ஜினர், ஏசுநாதர், முஹம்மத் நபி, நானக் போன்றவர்கள் மத ஸ்தாபகர் ஆவர்; இராஜா ராம் மோகனர், தயானந்த சரஸ்வதி, மார்ட்டின் லூதர், இராமாநுஜர், இராமலிங்க அடிகள், விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்றவர்கள் மதச் சீர்திருத்த வாதிகள்; வியாசர் முதலியோர் முனிவர்கள்; வசிட்டர் போன்றோர் இருடிகள்; குதம்பைச் சித்தர், திருமூலர், சிவ வாக்கியர் போன்றோர் துறவிகள். இவர்கள் அனைவரும் ஒழுக்கத்தைப் போற்றிய பெரியோர் ஆவர். ஸர். ஐஸக் நியூட்டன், பாரடே, தாமஸ் ஆல்வா எடிசன், கொலம்பஸ், காப்டன் குக், ஸர் ஹென்றி எம். ஸ்டான்லி, லிவிங்ஸ்டன், ஜகதீச சந்திர போஸ், சர். பி. ஸி. ரே, காந்தியடிகள், ரோமெய்ன் ரோலண்ட், ஏப்ரஹாம் லிங்கன் போன்

ரூர் அறிவிற் சிறந்த அறிஞர்கள். இப் பலதுறை விற்பன்னர் அனைவரும் 'பெரியார்' எனப்படும் தகுதி பெற்றவரே ஆவர்.

பொன் மொழிகள் எவை?

2. இவர்கள் தம் அறிவிலும் ஆராய்ச்சியிலும் அனுபவத்திலும் பட்டவற்றை மக்கட்கு எடுத்தோதி உள்ளனர். இவர்தம் அனுபவ வாக்கியங்கள் மக்கட்கு வழிகாட்டிகளாக இருப்பவை. அவற்றின்படி மக்கள் நடப்பாராயின், ஆ! அவர்கள் நிலைத்த இன்பத்தைப் பெற்றுத் துய்க்கலாம். இங்ஙனம் பாமரர் உள்ளத்தில் அறிவுச் சுடர் கொளுத்தும் மொழிகளே 'பொன் மொழிகள்' என்பன.

பொன் மொழிகள் சில

3. பெரியார் பொன் மொழிகளுள் சில ஈண்டு மாதிரிக்குத் தருதும்:

(1) நல்ல ஒழுக்கமே உயர்ந்த அணிகலன்.

(2) மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாற்றான்.

(3) மன நேர்மையே இன்பம்; மனக் கோணலே துன்பம்.

(4) எந்த வேலையையும் ஊக்கத்துடனும் உணர்ச்சியுடனும் உடனுக்குடனே செய்து முடிப்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான். —ஜேம்ஸ் ஆலன்

(1) இன்பமும் துன்பமும் உள்ளத்தோடு இயைந்தவை.

(2) குடிகளைக் காப்பவன் அரசனே அன்றி ஆள்பவன் அரசன் அல்லன். —கம்பர்

(1) கடவுள் எங்கும் எல்லாமுமாய் இருப்பவர்.

(2) எல்லார்க்கும் நன்மை விரும்புவதே சிறந்த அறம். —தாயுமானவர்

(1) முயற்சி உயர்ச்சி தரும். —ஹென்றி போர்ட்.

அவற்ருல் ஏற்படும் நன்மை

4. இப்பொன் மொழிகள் பல்துறை அறிஞர் பகர்ந்தவை. இவற்றை நோக்க, நமக்குச் சில உண்மைகள் புலனுகின்றன அல்லவா? 'ஊக்கம், உழைப்பு, முயற்சி இவை இருப்பவர் முன்னேற்றம் பெறுவர்; உள்ளமே இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்கும் வன்மை வாய்ந்தது; கடவுள் யாண்டும் நீக்கமற நிறைந்திருப்பவர்; மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்கிருன், தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளுகிருன் என்பன போன்ற அரிய—இன்றியமையாத—வாழ்க்கைக்குத் தேவையான உபதேசங்களை உணர்கிரேம்; இவற்றைச் சிந்தித்து, மனத்தெளிவு பெறுதல் வேண்டும். இங்ஙனம் பெரியார் பொன்மொழிகளைப் படித்துப் பொருள் உணர்ந்து நல்வழியில் நடப்பவர் பெறற்கரிய இன்பத்தைப் பெறுவர். இன்பத்தை நாடியே எல்லா உயிர்களும் செல்லல் இயல்பு. ஆதலின், இன்ப நிலையில் நாட்டமுடைய நாம் மெய்யின்பத்தைப் பெற இப் பொன் மொழிகளைப் பற்றுக்கோடாகக் கோடல் வேண்டும்.

முடிவு

5. இவை நமக்கு ஆசிரியர் நிலையிலிருந்து மனச்சோர்வு உண்டாகும் போதெல்லாம் ஊக்கமளித்து நல்வழிப்படுத்தும் உறுதுணை போன்றனவாகும். ஆதலின், இவற்றை நாம் நாடோறும் படித்து நல்வழிப்படுதல் அவசியம் ஆகும்.

---

40. போர்ப் பாதுகாப்பு

குறிப்புகள்:— 1. போர்ப் பாதுகாப்பு—யாது?
2. பதுங்கும் இடங்கள்
3. தீ அணைக்கும் படைகள்
4. முடிவு

கட்டுரை

போர்ப் பாதுகாப்பு—யாது?

1. இப்பொழுது நடைபெறும் போர் ஆகாயவிமானப் போராகும். இதுவே மக்கட்குப் பேராபத்தை உண்டாக்குவது. தற்காப்பாற்ற சாதாரணக் குடிமக்கள் வாழும் கிராமங்கள் மீதும் நகரங்கள் மீதும் கணக்கின்றிப் பகைவர் குண்டுகளைப் பொழிகின்றனர். தற்காப்பாற்ற மக்கள் குண்டுகட்கு ஆட்பட்டு இறக்கின்றனர்; அவர்தம் அழகிய வீடுகள் தரைமட்டமாகின்றன; சேமித்த செல்வம் பாழாகிறது; அழகிய ஆடையணிகள் மறைகின்றன. மனித வாழ்வே கொலை செய்யப்படுகிறது; உலக நாகரிகமே சிதைக்கப்படுகிறது. இப்பேரழிவு இன்றைய விமானத் தாக்குதல்களால் இங்கிலாந்து முதலிய நாடுகளில் உண்டாகி இருக்கின்றது. வீடுகளைத் தாக்குதலிலிருந்து காக்க முடியாவிடினும், மக்கள் தம்மைக் காத்துக் கொள்ளுதல் எங்ஙனம்? அங்ஙனம் காத்துக் கொள்ளும் முறையே 'போர்ப் பாதுகாப்பு' ஆகும்.

பதுங்கும் இடங்கள்

2. வெடிகுண்டுகள் வீசும் விமானங்கள் வருவதை அறிந்தவுடன் முன்னறிவிப்பு மணி அடிக்கப்படும். உடனே நகர மாந்தர் பாதுகாப்புள்ள இடங்களில் பதுங்கி விடுகின்

றனர். நிலத்தில் நீண்ட பள்ளங்களைத் தோண்டி மணல் பரப்பி, மேலும் மணல் பரப்பப்பட்ட மூடிகளை உடையன வாகச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு இடங்கள் உண்டு. இவை அல்லாமல் அடியறைகள் பல உண்டு. இங்கிலாந்தில் பூமிக் குள் இரயில் போகின்றது. அவ்வடிப் பாதைகளில் இலண் டன் மக்கள் இராப்பொழுதைக் கழிக்கின்றனர். இங்கிலாந் தில் உள்ள பாதுகாப்பு இடங்கட்கு 'ஆண்டர்ஸன் ஷெல்ட் டர்ஸ்' என்பது பெயர். இவை சில இடங்களில் பெரியன வாகவும் சில இடங்களில் சிறியனவாகவும் இடவசதிக் கேற்ற வாறு அமைக்கப் பெற்றிருக்கும். இவையே இன்று இலண் டன் மக்களைக் காத்து வருகின்றன. இத்தகைய பதுங்கும் இடங்கள் ஜெர்மனி, இட்டாலி முதலிய போரிடும் நாடுகளி லும் உண்டு. பாதுகாப்பு முறைகளுள் இஃது ஒன்றாகும். பகைவர் விமானங்கள் போய் விட்டதை அறிவிக்க மணி அடிக்கப்படும். உடனே மக்கள் தம் பதுங்கும் இடங்களி லிருந்து வெளிப்போந்து வீடுகட்கும் தொழில்கட்கும் செல் வர். இவ்விமானத் தாக்குதல் போன்ற துன்பகரமானது வேறொன்று இருத்தல் இயலாது. 'எப்பொழுது விமானங் கள் வருமோ!' என்று ஏங்கிய வண்ணமே மக்கள் இருப்ப தெனின், அவ்வாழ்க்கை எவ்வளவு துன்பத்துக் கிடமானது!

தீ அணைக்கும் படைகள்

3. விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகளால் மாளிகைகளிலும் தொழிற்சாலைகளிலும் தீப்பிடித்தல் உண்டு. உடனே தீயணைக்கும் இயந்திரங்கள் அவ்விடங்கட்கு விரைந் தோடும்; நீண்ட குழைகளைக் கொண்டு தண்ணீரை மிகுதி யாக வீசி நெருப்பை அணைக்கும். இத்துறையில் வேலை செய்பவர் ஆயிரக் கணக்கானவர். இவரன்றி, இடிந்துவிழும் கட்டிடங்கட்கு அடியில் அகப்பட்டுக்கொள்வோரைக் காக்

கும் படையினரும் உளர். அவர்கள் இடிந்து நாசமான பகுதிகளை அப்புறப்படுத்தி, விபத்தில் சிக்கிய மக்களை வைத்திய சாலைகட்குக் கொண்டு செல்வர்; சாலை ஓரங்களில் நடக்கும்படி மக்களை எச்சரிக்கை செய்யவும் விளக்கணைப்பு வேலையைக் கவனிக்கவும், நகர மக்கள் விளக்கு வெளிச்சம் அதிகமாகப் போடாதிருப்பதைப் பார்க்கவும் பலர் உளர். அவர்கள் சிவிக் கார்ட்ஸ் (Civic Guards) எனப்படுவர். விமானப் படையெடுப்பால் சேதம் அளவிறந்ததாயின், இராணுவப் படையினரும் போலீஸுக்கும் முன் சொன்ன சாதாரணப் படையினர்க்கும் துணையாக வந்து உதவி புரிவர்.

முடிவு

4. இலண்டன் போன்ற பெரிய நகரங்களில் பகைவருடைய விமானங்கள் எளிதில் வாரமல் இருத்தற்காகப் பலூன்களால் பந்தலிடுதல் உண்டு. பலூன்களில் காற்றை நிரப்பி அவற்றை ஒரு குறிப்பிட்ட உயரத்தில் பறக்கவிட்டிருப்பர். அவை அங்ஙனம் பறந்துகொண்டிருக்க இரும்புக் கம்பிகள் அவற்றோடு இணைக்கப்பட்டிருக்கும். இப் பலூன்கள் வெடிக்குமாயின், இவற்றை இணைத்துக்கொண்டிருக்கும் இரும்புத் துண்டுகள் கீழே வீழ்ந்தால் பெருஞ் சேதம் உண்டாகும். எனினும், 'பலூன் கூரை' பாதுகாப்பு முறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இங்ஙனம் இவை, மனிதன் தானே உண்டாக்கிய ஆபத்தினின்றும் தன்னைக் காத்துக்கொள்ளத் தேடியுள்ள பாதுகாப்பு முறைகளுள் சிறந்தவையாகும். இவற்றுள் மூன்றும் பாராவில் சொல்லப்பட்டுள்ள படையினராக இந்திய இளைஞர் இப்பொழுது பயிற்சி பெற்று வருகின்றனர். உலகத்தில் போரே நடைபெறா வண்ணம் ஒழுங்கு முறை ஏற்படுமாயின், அதுவே சிறந்த போர்ப் பாதுகாப்பு ஆகும்.

41. தீபாவலி

நீ அறிந்த திருநாள் ஒன்றைப் பற்றிக் கட்டுரை வரைக.

குறிப்புகள் :—1. தமிழ்த் திருநாட்கள்
2. தீபாவலிப் பண்டிகை
3. அதைப் பற்றிய கதை
4. உண்மை என்ன?
5. முடிவு

கட்டுரை

தமிழ்த் திருநாட்கள்

1. தமிழ்த் திருநாட்கள் பலவாயினும் அவற்றுள் சிறப்புடையன சிலவே. அவை பதினெட்டாம் பெருக்கு, விநாயக சதுர்த்தி, தீபாவலி, கார்த்திகை, பொங்கல், மாசி மகம் என்பனவே ஆகும். இவற்றுள்ளும் மிகச் சிறந்தவை தீபாவலி, கார்த்திகை, பொங்கல் என்பனவே. இவை ஒவ்வொன்றும் பண்டைக்காலத்திலிருந்து கையாளப்படுவதாகும். ஆனால் தீபாவலி பழைய சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படவில்லை. அதனால் அஃது இடைப்பட்ட காலத்துப் பழக்கமாதல் வேண்டும்.

தீபாவலிப் பண்டிகை

2. தீபாவலிப் பண்டிகை ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முன்னாள் அல்லது அமாவாசையன்றே கொண்டாடப்படுவது. அன்று வைகறையில் மக்கள் எழுந்து எண்ணெய் தேய்த்து நீராடுவர்; புதிய ஆடைகளை உடுத்துக் கொள்வர்; அதிரசம், தோசை முதலிய தின்பண்டங்களைச் செய்து நடுவீட்டில் வைத்துப் படைப்பர்; படைத்த பின்

உண்பர்; தம் மகிழ்ச்சிக் கறிகுறியாகச் சீன வெடிகளை வெடிப்பர். அமாவாசை யன்று வரலக்ஷ்மி நோன்பு நோற்கப் படும். பெண்கள் அன்று பகல் முழுவதும் பட்டினி கிடந்து அதிரசம் முதலியன செய்வர்; மாலைப்போதில் அப் பலஹாரங்களையும் நோன்புக் கயிற்றையும் எடுத்துக்கொண்டு அண்மையில் உள்ள கோவிலுக்குச் சென்று பூசை செய்து மீள்வர்; சிலர் தம் இல்லங்களிலேயே 'கலசம்' வைத்துப் பூசை செய்து முடிப்பர். பின்னர் நோன்புக் கயிறுகளைப் பெண்டிரும் ஆடவரும் அணிந்துகொள்வர். அன்று இரவிற்றும் பெண்கள் தாம் செய்த பண்டங்களைத் தின்று பசியாறுவர். தீபாவலி யன்று புதிய மணமக்கள் பெண்வீடு செல்வர்; பெண் வீட்டார் மகளுக்கும் மணமகனுக்கும் புத்தாடைகள் தந்து வரிசை வைப்பர். இவ் வழக்கம் தென்னாட்டு எல்லாச் சாதியாரிடமும் இருந்து வருகின்றது.

அதைப் பற்றிய கதை

3. இவ் விழாவைப் பற்றிய புராணக் கதை ஒன்று உண்டு. அஃது எந்த அளவு உண்மையோ, கடவுளே அறிவார். நரகாசுரன் என்பவன் தேவர்களையும் ஏனையோரையும் துன்புறுத்தி வந்தான். அவன் துன்பங்களைப் பொறுக்க முடியாது அனைவரும் திருமாலிடம் முறை யிட்டனர். அப் பெருமான் நரகாசுரனிடம் போர் துவக்கினர். போர் பல நாட்கள் நடந்தது. இறுதியில் அசுரன் திருமாலுக்குப் பயந்து மலக்கோட்டை கட்டி அதனுள் ஒளிந்துகொண்டான். திருமால் பன்றி உருவெடுத்து அம்மலக் கோட்டையை அமிருதம்போல உண்டுவிட்டார்; அசுரன் அகப்பட்டான். அவனைத் திருமால் கொல்லுஞ் சமயம் அவன் அவரை நோக்கி, "ஐயனே, எனக்கு ஒரு வரம் அருளல் வேண்டும்: ஆண்டுதோறும் இந்த வைகறைப் போதில்

இந்த நன்னாளில் மக்கள் என்னை நினைந்து என்னைய் முழுகி இந்நாளைக் கொண்டாடுவார்களாக !" என்று வேண்டினான். திருமால் அங்ஙனமே வரமளித்தார். அங்ஙனிப் படியே ஆண்டுதோறும் இவ் விழாக் கொண்டாடப்படுகிறதாம்.

உண்மை என்ன ?

4. தமிழ்ப் புலமை நிரம்பிய ஆராய்ச்சியாளர் இக் கொண்டாட்டத்தை வேறு விதமாகக் கூறுகின்றனர்: " 'தீபாவளி' என்னும் சொல் தவறு. அது 'தீப ஆவலி' யாகும். எனவே, 'தீபாவலி' என்பதே சரியாகும். இதன் பொருள் 'விளக்குகளின் வரிசை' என்பது. ஐப்பசி மாதம் இருள் நிறைந்த மாதம்; கார்த்திகையும் அப்படியே. பண்டைக் காலத்தில் இன்றுள்ள விளக்கு வரிசை இல்லை. ஆதலின் முன்னையோர், ஐப்பசி அமாவாசை யன்று தொடங்கிக் கார்த்திகை முடியத் தம் இல்லங்களின் வெளியில் (திண்ணைகள் மீது) வரிசை வரிசையாக விளக்குகள் வைப்பது வழக்கம். அந்த விளக்குகளின் வெளிச்சத்தால் நடந்து செல்பவர் நலம் பெறுவர். இந்த நோக்கம் கொண்டே 'தீபாவலி' ஏற்பட்டது" என்பர்.

முடிவு

5. இஃது எங்ஙனமாயினும், சீன வெடிகளை வாங்கிக் காசைக் கரியாக்காமலும் கைகால்களை இழக்காமலும் இந்நாளைக் கொண்டாடினால் கொண்டாடட்டும்.

42. பஸ் விபத்து

நீ கண்ட 'பஸ் விபத்து' ஒன்றைப் பற்றிக் கட்டுரை வரைக.

குறிப்புகள்:—1. விபத்துகள்-யாவை?
2. காரணங்கள்
3. பஸ் விபத்து
4. முடிவு

கட்டுரை

விபத்துகள்-யாவை?

1. வழி நடத்தற்குரிய சட்ட திட்டங்களை மக்கள் சரியாகப் பின்பற்றாத குறையாலும் பஸ், மோட்டார் முதலிய வாகனங்களை ஓட்டுவோர் கவனக் குறைவாலுமே விபத்துகள் நடக்கின்றன. விபத்து என்பது மேற்கூறப்பட்ட இருவர் அஜாக்கிரதையால் திடீரென உண்டாவதே யன்றி எதிர் பார்த்து உண்டாவதன்று.

காரணங்கள்

2. வழி நடப்பவர் இடது பக்கம் சாலை ஓரமாகப் போதல் வேண்டும்; சாலைகளைக் கடக்கும் பொழுது நாற்புறமும் வண்டிகள் வருகின்றனவா என்பதைக் கவனித்து, வண்டிகள் வரவில்லை என்பதை நன்குணர்ந்த பின்னரே சந்தியைக் கடத்தல் வேண்டும். சாலைகளில் போகும்பொழுது பேசிக்கொண்டு போதல்—அங்கங்கே நிற்றல்—சாலை என்னும் உணர்ச்சியே அற்று நடுவில் நின்று வேடிக்கை பார்த்தல்—விளையாடுதல்—வண்டிக்காரர் ஓசையிடுதலையும் கவனியாது மெய்ம்மறந்து நிற்றல் முதலியன பெருந் தவறாகும். இத்தவறுகள் உடலுக்கு அபாயத்தை உண்டாக்குவன என்

பதை நடப்பவர் எண்ணுதல் வேண்டும். வண்டிகளை ஓட்டிச் செல்பவரும் சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகம் என்பதையும், அதற்கேற்ப மிகுந்த கவனத்துடன் தாம் வண்டி விடுதல் வேண்டும் என்பதையும், கூட்டம் அதிகமாக உள்ள இடங்களில் மெதுவாக ஓட்டுதல் வேண்டும் என்பதையும் எண்ணி நடத்தல் வேண்டும். இத்துறையில் எவ்வளவோ சட்ட திட்டங்கள் இருந்தும் போலீஸ்காரர் ஓயாமல் வழிகளை ஒழுங்கு செய்து வந்தும் விபத்துகள் நடந்தவண்ணமே இருக்கின்றன எனின், பெரும்பான்மை பொது மக்களின் சாலை உணர்ச்சியற்ற தன்மையும் சிறுபான்மை வண்டி ஓட்டுபவர் அஜாக்கிரதையுமே இக்கேட்டிற்குக் காரணமாகும்.

பஸ் விபத்து

3. நான் ஒருநாள் மாலை சென்னை மவுன்ட் ரோட்டில் எல்பின்ஸ்டன் படக்காட்சி நிலையத்தண்டை நின்றுகொண்டிருந்தேன். எதிர்ப்புறத்திலிருந்து ஒரு பெண் நாற்புறமும் கவனியாமல் வாய் நிறைய வெற்றிலை-பாக்கு மென்று கொண்டே ஒய்யாரமாக வந்துகொண்டிருந்தாள். டிராம் வண்டி மிக்க வேகமாக வந்து நின்றது. அவள் அதில் ஏற முயன்றாள். கூட்டம் அதிகம். அதனால் அவள் கீழே நின்றுகொண்டிருந்தாள். டிராம் வண்டி நிற்கும்பொழுதும் மக்கள் கூட்டம் அதன் அருகில் நிற்கும்பொழுதும் பஸ் அப்பக்கம் போவதெனின், போதிய இடவசதி அங்கில்லை. அவ்விடத்தில் நானே பல முறை துன்பப்பட்டதுண்டு. முடிவில் எல்லோரும் டிராமில் ஏறினர். அப்பெண் ஏறப்போகும் சமயம், பஸ் ஒன்று கண்மூடித்தனமாக வந்து, அவள் மீது மோதியது. அவள் வலது காலில் பலத்த அடி. அவள் தலை டிராம் வண்டிமீது பட்டது. தலையிலும் பலத்த அடி. உடனே போலீஸ்காரர் வந்துவிட்டனர்; ஒரே கூட்டம்;

பஸ்காரனை வைபவரும் டிராம் ஓட்டியை வைபவரும் அப் பெண்ணை வைபவரும், 'ஐயோ!' என்பவரும், 'அடடா!' என்பவருமாகப் பலர் அவ்விடத்தில் ஒன்று கூடினர். உண் மையைக் கூறவேண்டுமானால் பஸ் ஓட்டியே தவறு செய்த வன். நான் சாரணர் உடையில் நின்றிருந்தேன். பலர் 'பஸ் ஓட்டி குற்றமற்றவன்' என்று வாதித்தனர். உடனே நான் போலீஸ்காரன் முன்பு சென்று, நான் கண்ட விஷயங்களை விளக்கமாக உரைத்தேன். அவன் என்னைச் 'சாக்ஷி'யாகப் போட்டுக்கொண்டான். அப் பெண் ஜெனரல் ஆஸ்பத்திரிக் குக் கொண்டு செல்லப்பட்டாள். வழக்குத் தொடரப்பட் டது. நான் நான்கு நாள் நீதிமன்றம் சென்று 'சாக்ஷி' கூறினேன். நல்ல காலமாக அப்பெண் விரைவில் குணமுற் றாள். பஸ் ஓட்டி மூன்று மாதச் சிறைத் தண்டனை அடைந் தான்.

முடிவு

4. அந்தப் பயங்கர நிகழ்ச்சியிலிருந்து, நான் மிகுந்த கவனத்தோடு சாலைகளில் நடந்து வருகிறேன்; என் வீட்டில் உள்ள சிறுவர் சிறுமியர்க்கும் என் பள்ளிக்கூட நண்பர்கட் கும் நான் கண்ட விபத்தை விளக்கிச் சாலை உணர்ச்சியை உண்டாக்கினேன். நீங்களும் சாலையுணர்ச்சி உடையீராயின், விபத்துகள் உண்டாகா.

43. பிச்சைக்காரர்

குறிப்புகள் :—1. ஏழ்மை நிலைமை
2. பிச்சையில் விருப்பம்
3. பிச்சைக்காரர் வகை
4. பாத்திரம் அறிந்து பிச்சையிடு
5. அரசியலார் கடமை
6. முடிவு

கட்டுரை

ஏழ்மை நிலைமை

1. 'ஏழ்மை' என்பது பணம் இல்லாமை; பணம் சம்பாதிக்க முடியாமை; வீடு வாசல்கள் இல்லாமை என்னும் ஒரு துணையும் அற்ற தன்மையாகும். இந் நிராதரவான நிலையில் இருப்பவரே 'பிச்சைக்காரர்'. அவர்கட்குத் தம்மூர் என்று ஓர் ஊரில்லை; தம்மவர் என மனிதர் இல்லை. பணம் இல்லாதபோது—பணம் ஈட்டி வாழ வழி இல்லாதபோது அவரை யார்தாம் மதிப்பர்? ஆகவே, கேவலம் இவ்வுடலை வளர்க்கவேண்டி—பாழும் வயிற்றை நிரப்பவேண்டி அவர்கள் பிச்சை ஏற்று உண்டு உயிர் வாழவேண்டியவர் ஆகின்றனர். அவர்கள் நிலைமையே 'கலப்பற்ற ஏழ்மை நிலை' என்பது.

பிச்சையில் விருப்பம்

2. 'ஐயம் இட்டு உண்', 'அறஞ் செய விரும்பு' என்னும் பழமொழிகள் மக்கள் மனத்தில் நன்கு வேரூன்றிவிட்டன. அறம் செய்வது இரக்கத்தால்—மனிதனிடம் உள்ள பரோபகார குணத்தால் நடப்பது. ஆனால், இன்று அத்தன்மை மாறி, 'அறம் செய்வதால் மறு பிறவியில் நலம்

பெறலாம்' என்னும் குறுகிய எண்ணம்—சுயநல எண்ணம் தோன்றிப் பலரை வாட்டுகின்றது. அதற்கேற்ற கதைகளும் நாட்டில் மலிந்துவிட்டன. அவற்றால், மக்கள் 'ஜீவகாருண்யத்தால் ஏழைகட்கு உதவுகிறோம்' என்பதை மறந்து, சுயநல வெறியால் உந்தப்பட்டுப் பலவகை அறங்களைச் செய்கின்றனர். மக்களது இக் குறுகிய நோக்கத்தை உணர்ந்து, சோம்பேறிகளும் சாதாரண நிலையில் உள்ள மக்களும் பிச்சை எடுக்கத் துணிந்துவிட்டனர்.

பிச்சைக்காரர் வகை

3. ஆதலின், இன்றைய பிச்சைக்காரரும் பலவகைப்படுவர். மெய்யாகவே உறுப்பிழந்தவர், நோயாளர், முதியவர், தொழு நோயாளர் என்போர் பிச்சை பெறுவதற்கு உரியவரே யாவர். ஆனால், சோம்பேறிகள், ஓய்வு பெற்றிருக்கும் கிழவர், பிறர் குழந்தைகளை வாடகைக்கு வாங்கித் தம் குழந்தைகள் என்றும், பாலின்றி—உணவின்றி வருந்துகின்றன என்றும் பொய் பல சொல்லிப் பொருளீட்டும் பெண்கள், குடும்பங் குடும்பமாக ஊர் சுற்றும் கூட்டத்தார், வடநாட்டுப் பைராகிகள் முதலியோர் பிச்சை பெறுவதற்கு உரியவராகார்.

பாத்திரம் அறிந்து பிச்சையிடு

4. இவருள் முதலிற் கூறப்பெற்றவரே பிச்சை ஏற்கத்தக்கவர்; பிச்சை பெறவும் தகுதி வாய்ந்தவர்.

"காணார், கேளார், கால்முடப் பட்டோர்,"

எனவரும் மணிமேகலை அடிகளிற் குறிப்பிட்டவர் உண்மைப் பிச்சைக்காரர். நாம் அவர்கட்கே பிச்சை இடல்வேண்டும். ஏமாற்றும் கூட்டத்திற்குப் பிச்சையிட்டு அவர்களை மேலும் சோம்பேறிகளாக்கி, நாட்டில் சோம்பேறிக் கூட்டத்தைப் பெருக்குதல் பெருந் தவறு. தம்மை ஆதரிப்பார் இல்லை என்பதை உணர்ந்தவுடன் அச் சோம்பேறிகள் உழைத்து வேலை

செய்யத் தொடங்குவர்; வாழ்க்கையை உழைப்பின்மீது கட்டுவர்; பொறுப்புள்ள குடி மக்கள் ஆவர். ஆதலின், 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்னும் பழமொழியை நாம் நன்கு கவனித்து நடத்தல் வேண்டும்.

அரசியலார் கடமை

5. மேனாட்டார் பிச்சைக்காரர், நாதியற்றவர் இவர்கள் பொருட்டு வேலை நிலையங்களை ஏற்படுத்தியுள்ளனர்; அந் நிலையங்களில் அவரவர்க்கு உரிய வேலைகள் தரப்படுகின்றன. அவ் வேலைக்கேற்றபடி உணவு, உடைகள் தரப்படுகின்றன. 'பிச்சை யேற்றல் இழிவு' என்பது அங்குப் போதிக்கப்படுகின்றது. இங்ஙனம் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் அநாதை விடுதி ஒன்றில் இருந்தவர்தாம் ஆப்பிரிக்காவில் பல இடங்களைக் கண்டுபிடித்து உலகப் புகழ்பெற்ற ஸர். ஹென்றி எம். ஸ்டான்லி என்பவர். அம் முறையில் நம் நாட்டிலும் அரசாங்கத்தார் பல விடுதிகளை ஏற்படுத்துதல் வேண்டும்; வேலைகளைச் செய்யும்படி தூண்டுதல் வேண்டும்; அப்பொழுது பிச்சைக்காரர் தொகை குறைந்து விடும்; சோம்பேறிக் கூட்டம் மறைந்துவிடும்; சமூகம் உழைப்புக்கு உறைவிடம் ஆகி விளங்கும்; நாட்டுத் தொழில் நிலையும் முன்னேற்றம் அடையும்.

முடிவு

6. ஆதலின், பிச்சைக்காரருள், உண்மையில் பிச்சை பெறத் தக்கவர்க்கே நாம் உதவி செய்தல் வேண்டும்; மற்றவரை இரக்கமின்றித் துரத்துதல் வேண்டும்; அவர்கட்கு நல்லுரை கூறித் தொழில் புரியத் தூண்டுதல் வேண்டும். இம் முறையை அனைவரும் பின்பற்றுவராயின், பிச்சைக்காரர் தொல்லை பேரளவு குறையும்.

44. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல்

குறிப்புகள் :—1. எது ஓய்வு நேரம்?
2. ஓய்வு நேரத்திற்குரிய செயல்கள்
3. அவை பற்றிய விளக்கம்—i. விளையாட்டுகள் ii. தோட்டவேலை iii. புகைப்படம் பிடித்தல் iv. தலைகள் சேர்த்தல்
4. நூல்களைப் படித்தல்
5. முடிவு

கட்டுரை

எது ஓய்வு நேரம் ?

1. ஒருநாளில் நாம் செய்யக் கடமைப்பட்டுள்ள வேலைகளை எல்லாம் செய்து முடித்த பிறகு எஞ்சியுள்ள நேரமே 'ஓய்வு நேரம்' எனப்படும். ஒரு நாள் உத்யோக நாளாக இருப்பினும் விடுமுறை நாளாக இருப்பினும், நாம் நமக்குக் கடமையாக உள்ள வேலைகளைச் செய்து வருகின்றோம் அல்லவா? அவ்வேலைகட்கு வேண்டும் நேரம் போக எஞ்சி நிற்கும் நேரமே 'ஓய்வு நேரம்' ஆகும்.

ஓய்வு நேரத்திற்குரிய செயல்கள்

2. அந்த ஓய்வு நேரத்தைப் பலர் பலவிதமாகக் கழிப்பர். பெரியோர்கள் தம் நண்பர்களோடு அளவளாவிக் கழிப்பர்; சிறுவர் விளையாடிக் கழிப்பர்; பலர் வெளியே போய் வேடிக்கை விநோதங்களைக் காண்பதில் கழிப்பர்; பலர் வீண் பேச்சு, வீண் சண்டை, வீண் சச்சரவுகளில் கழிப்பர். சுருங்கக் கூறின் அவரவர் அறிவுக்கும் பழக்க வழக்கங்கட்கும் ஏற்றபடி அந்நேரத்தை நல்வழியிலோ தீய வழியிலோ கழிப்பர்.

அவை பற்றிய விளக்கம்

3. மாணவராய நாம் அவ்வோய்வு நேரத்தை எப்படிக் கழிப்பது நன்மையைத் தரும்? மாணவராய நாம் அவ் வோய்வு நேரங்களில் வீட்டிற்குள்ளேயே நம் தம்பி-தங்கைய ரோடு விளையாடலாம்; வெளியே சென்று கால் பந்தாடல், ஓடுதல் முதலியவற்றில் கழிக்கலாம். இவ் விரண்டாலும் உடலுக்கு உரமே உண்டாகின்றது. வீட்டின் பின்புறம் தோட்டத்தை உடையவர் தோட்டவேலை செய்தல் நல்லது. தோட்டத்தைக் கொத்துதல், மண் கட்டிகளை உடைத்தல், கற்களையும் பிற அசுத்தங்களையும் அப்புறப் படுத்தல், பாத்திகளைக் கட்டுதல், விதைகளை விதைத்தல், சிறிய வாய்க் கால்களை வெட்டி நீரோட்டத்தை ஒழுங்குபெறச் செய்தல், கிணற்றிலிருந்து நீர் இறைக்கல், பாத்திகட்கு நீர் இறைத் தல், களை எடுத்தல், காய்கறிச் செடிகளை நடுதல், பயிராக்கு தல், மலர்ச்செடிகளை வைத்துப் பயிராக்குதல், எருவகை களைச் சேர்த்தல், தோட்டத்திற்கு வேலி அமைத்தல் முத லிய வேலைகளைச் செய்யலாம். எல்லா வேலைகளிலும் இன் பத்தை உண்டாக்குவது தோட்டவேலையே ஆகும். உலகப் பெரியார்கள் பலர் தம் ஓய்வு நேரங்களில் தோட்டவேலை செய்து வந்தனர்; இன்றும் செய்து வருகின்றனர். ஜெர் மன் சக்கரவர்த்தியாக இருந்த கேய்சர் தோட்டவேலையில் விருப்பமுள்ளவர். துருக்கிக் குடியரசுத் தலைவராக இருந்த கமால் பாஷா தோட்ட வேலையில் ஓய்வுநேரத்தைக் கழித் தவர்.

'புகைப்படம் பிடித்தல்' என்னும் துறையிலும் நாம் பயிற்சி பெறுதல் நல்லதே. இக்கால மாணவர் சிலர் 'காமிரா' வைத்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்கள் ஓய்வு நேரங்களில் வெளிச்சென்று, கண்ணையும் கருத்

தையும் கவரும் கட்டிடங்களையும் வெளி இடங்களையும், மலைகள், யாறுகள், பூஞ்சோலைகள் முதலியவற்றையும் வெளி நாட்டு மக்கள், பெருமக்கள் முதலியோரையும் புகைப் படம் எடுக்கின்றனர். இப் பழக்கம் ஓய்வு நேரத்திற் செய்யும் விளையாட்டே ஆயினும், பிற்கால வாழ்வுக்கு ஒரு தொழிலாகவும் அமையத் தக்கது. ஆதலின், இத்துறையில் மாணவர் பயிற்சி பெறல் போற்றததக்கதே ஆகும்.

மாணவர் சிலர் முத்திரையிட்ட தலைகளை (Stamps)ச் சேர்ப்பதில் ஊக்கங் கொண்டுள்ளனர். இதுவும் பாராட்டத் தக்க செயலே. சுதேச சமஸ்தானங்களிலிருந்து வரும் கடிதங்களில் ஒட்டப்பட்டுள்ள தலைகள், வெளிநாடுகளி லிருந்து வரும் கடிதங்களில் ஒட்டப்பட்டுள்ள தலைகள், முதலியவற்றைச் சேர்த்தல் நலம். அவற்றை ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒழுங்குபெற அமைத்து, இன்னின்ன நாட்டு இன்ன தலைவருடைய அல்லது அரசருடைய அல்லது இன்ன அரசாங்கத்துடைய தலை இது என்பதை அடியில் விளக்கமாக எழுதிவைத்து, அதன் விலை மதிப்பையும் அடியிற் குறிப்பிட்டு வைத்தல் நல்லது. இப் பயிற்சியால் அம் மாணவர் பல நாட்டு முடியரசு, குடியரசு நிலைகளை ஒருவாறு உணரலாம்; தலைகளின் விலைமதிப்பை உணரலாம்; பிற பல நுணுக்கமான விவரங்களையும் உணரலாம்.

நூல்களைப் படித்தல்

4. இத்தகைய பலதிறப்பட்ட செயல்களால் மாணவர்க்குப் பல துறைகள் பற்றிய அறிவு உண்டாகும். அறிவை வளர்த்தலே மனிதர் தலையாய நோக்கம். ஆதலின், அறிவைத் தரும் இன்ப நூல்களை-பெரியார் உபதேச நூல்களை-வீரச்செயல்களை விளக்கும் புத்தகங்களை-இலக்கிய நயம் நிறைந்த நூல்களை-தூய அமைதியை உண்டாக்கி நம்

எண்ணங்களை உயர்த்தும் நூல்களைப் படித்தல் இவை அனைத்தினும் மேலானதாம்.

இத்தகைய பயிற்சிகளோடு தக்கார் பேசும் கூட்டங்கட்குச் சென்று 'கேள்வி முயல்' என்ற வண்ணம், நாம் படித்திராத-கேட்டிராத பல நுட்ப விஷயங்களைக் கேட்டு, உலக அறிவைப் பெறுதல் வேண்டும். கடற்கரை, பொது மக்கள் கூடும் இடங்கள் முதலியவற்றுக்குச் சென்று மக்களுடைய நடையுடை பாவனைகளும் பிறவும் அறிந்து இன்புறல் வேண்டும்.

முடிவு

5. சுருங்கக் கூறின், ஓய்வு நேரங்களை அவரவர் வாய்ப்புக்கு ஏற்றவாறு கழித்து அறிவைப் பெறுதலே நல்லது. மனிதன் தன்னைத் தானே தன் நற்செயல்களால் உயர்த்திக் கொள்கிறான், அல்லது தன் தீச்செயல்களால் தாழ்த்திக் கொள்கிறான் ஆதலின், மேனிலையை அடைய நாம் செய்யும் ஒவ்வொரு சிறு செயலும் நல்லதாக அமைதல் வேண்டும்.

45. சிக்கனத்தின் சிறப்பு

குறிப்புகள் :—1. சிக்கனத்தின் சிறப்பு
2. தந்தையின் அறிவுரை
3. சிக்கனமின்மையால் வரும் தீமை
4. முடிவு

கட்டுரை

சிக்கனத்தின் சிறப்பு

1. 'சிக்கனம்' என்பது தனது நிலைமைக்கு ஏற்ப, அவசியமான துறையில் இயன்றவரை செட்டாக இருத்தல் ஆகும். தனது வருவாய்க்கு ஏற்றபடி தன் செலவினங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு, வருவாயிலேயே ஒரு பகுதியை மீதப்படுத்தலே 'சிக்கனம்' எனப்படும். இம் முறையைக் கையாள்பவன் சிக்கனக்காரன் எனப்படுவான். 'வருவாயில் அரைப் பகுதியைச் செலவிடு; கால் பகுதியைப் பிறர்க்கு வழங்கு; எஞ்சிய கால் பகுதியை மீதம்பிடி' என்பது தமிழ் அறிவுரையாகும். இந்த முறைப்படி இக் காலத்தில் வாழ இயலாதாயினும், பிறர்க்கு வழங்குதலைக் குறைத்து, 'முக்காற் பாகத்தை வீட்டுக்குச் செலவழி; காற்பகுதியை மீதப்படுத்து' என்ற அளவில் ஒவ்வொருவரும் வாழ்ந்தாற் போதுமானது. இத் துறையிலும் இக் காலத்தவர் நிற்பது அரிதாகிறது. 'சிக்கனம் இருந்தால் யாரும் செல்வராக முடியும்' என்னும் ஜான்ஸன் பொன்னுரையை நம்மவர் கவனித்தல் வேண்டும்.

தந்தையின் அறிவுரை

2. லார்ட் செஸ்டர்பீல்ட் என்னும் துரைமகனார் வெளியூர்க் கல்லூரியிற் படித்துவந்த தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில் சிக்கனத்தின் அவசியத்தையும் அதிகம்

செலவிடுதலால் வரும் தீமையையும் நன்கு விளக்கி யுள்ளார். அதன் சாரம் ஈண்டுக் காண்க :—"அறிவற்ற வன் காலத்தையும் பொருளையும் தனக்குப் பயன்படுத்தாமல் வீணாக்குகின்றனன். அறிவுடையவன் இவ்விரண்டையும் தனக்கே பயன்படுத்துகிறான். அறிவாளி தனக்கு வேண் டும் பொருள்களை வாங்கி, வேண்டாத பொருள்களை வாங் காது விடுகிறான். மடையனோ, தனக்கு வேண்டாதவற்றை வாங்கி, வேண்டுபவற்றை வாங்காது விட்டுவிடுகிறான். இப் பேதை டம்பத்துக்காக-பிறர் மெச்சுவதற்காகப் பொருள் களை வாங்குகிறான். இந்த டாம்பீகப் பொருள்கள் இவனது அழிவுக்குக் காரணமாய் முடிகின்றன. இவனுடைய ஆடம் பரத்தையும் அஜாக்கிரதையையும் கண்டு பலர் இவனை ஏமாற்றுகின்றனர். இவன், மிகவும் குறுகிய காலத்துள், அநாவசியமான பொருள்களைப் பெருக்கி, அவசியமான பொருள்கள் இல்லாதவனாகின்றான். யோசனையுடனும் வழி யுடனும் செலவு செய்யத் தவறின், பெருஞ் செல்வனும் விரைவில் ஏழையாதல் திண்ணம். இயன்றவரை, வாங்கும் பொருள்கள் அனைத்தையும் பொருள் கொடுத்தே வாங்கு தல் வேண்டும்; கடன் சொல்லி வாங்குதல் தவறு. நீ கவனத்தோடும் முறையோடும் செலவு செய்; கடன் வாங் காதே. பிறர்க்குக் கொடுக்கவேண்டிய பணத்தைச் சொன்ன தேதியில் நீயே சென்று கொடுத்துவிடு; ஆட்கள் மூலம் அனுப்பாதே. 'மலிவாக இருக்கின்றது' என்று தேவை யற்ற எதனையும் வாங்க விரும்பாதே. 'விலை உயர்ந்தது' என்று பெருமைக்காக எதனையும் வாங்காதே. நீ தினமும் தவறாமல் வரவையும் செலவையும் கணக்கெழுது. வரவை யும் செலவையும் அறிபவன் பணத்துக்குக் கஷ்டப் படமாட் டான். நான் சொன்ன இவற்றைக் கவனித்து நட. உன் எதிர்கால வாழ்வு நலனுறும்."

சிக்கனமின்மையால் வருந் தீமை

3. பலர் முதலில் ஏழைகளாக இருந்து, உழைத்துச் செல்வர் ஆகின்றனர். சிலர் இயல்பாகவே செல்வராக உள்ளனர். இவ்விரு திறத்தாரும் தத்தம் நிலைமையை உணர்ந்து தேவைக்கு ஏற்றபடி பொருளைச் செலவிடாமல் லீலா விநோதங்களிலும் பிற களியாட்டங்களிலும் பொருளை வீணாக்குகின்றனர். இத்தகையவரை நாமே நம் கண்முன் காண்கின்றோம் அல்லவா? முறை தெரியாமல் தொழில் செய்பவரும், வரவு அறியாது செலவு செய்பவரும், குடி முதலிய கேளிக்கைகளில் பொருளை நாசமாக்குபவரும், டாம்பீக வாழ்க்கை நடத்துபவரும், தேர்தல்களில் கண் மூடித்தனமாக ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்பவரும், குதிரைப் பந்தயங்களில் பணத்தைக் கொட்டு பவரும் திடீர் திடீரென நொடித்து வீழ்தலைக் காண் கின்றோம். இது சாதாரண நிகழ்ச்சியே. அவர்கள் பொருள் இழந்தபின், 'கண் இழந்தபின் கங்கா ஸ்நானம்' என்றாற்போலப் பொருள் அருமையை உணரத் தொடங்கு கிறார்கள். அஃது என்ன பயனைத் தரவல்லது? அவர்கள் முன்யோசனையும் எதிர்கால நோக்கமும் உடையாராக இருந் திருப்பின், இக் கேவல நிலைமையை அடைந்திரார் அல்லவா?

முடிவு

4. 'பொருள் இல்லார்க் கின்ப மில்லை', 'பணம் பாதா ளம் வரை பாயும்', 'பணம் பந்தியிலே-குலம் குப்பை யிலே'—என்னும் பணப் பெருமை பற்றிய பழமொழிகளை உள்ளத்திற் பதித்து, சிக்கன வாழ்க்கையைச் சிக்கெனப் பிடித்துச் சீரும் சிறப்பும் உற்று வாழ்தலே நமது கடனாகும்.

46. உடற் பயிற்சி

குறிப்புகள் :—1. உடற் பயிற்சி—யாது ?
2. உடற் பயிற்சியால் உண்டாகும் நன்மை
3. நன்மை அடைந்தவர்
4. முடிவு

கட்டுரை

உடற் பயிற்சி—யாது ?

1. உடலுக்கு உரத்தைத் தரும் பயிற்சி 'உடற் பயிற்சி' எனப்படும். அது தண்டால் எடுத்தல், பஸ்கி எடுத்தல், 'பார்' வேலை செய்தல், கரளா சுற்றுதல், குஸ்தி போடுதல், ஆடுதல், ஓடுதல், நீந்துதல், குதிரையேற்றம், மலைமேல் ஏறுதல் முதலிய பல வகையாகும். இப் பயிற்சிகள் அனைத்தும் உடற் பயிற்சி எனவே கூறலாம். இவை யாவும் உடம்பிற்கு உரம் அளிப்பனவேயாகும். நற்காற்றில் நெடுந் தூரம் உலாவுதலும், காற்றை உள் இழுத்து வெளி விடலும் உடற் பயிற்சி இனங்களில் அடங்கும்.

உடற் பயிற்சியால் உண்டாகும் நன்மை

2. நமது உடம்பில் இரண்டு வித இரத்தக் குழாய்கள் உண்டு: அவை, சுத்த இரத்தக் குழாய்கள், அசுத்த இரத்தக் குழாய்கள் ஆகும். அக் குழாய்களில் அடிக்கடி மாசு படியும். நாம் அம் மாசுகளை உடனுக்குடனே வெளிப்படுத்தல் வேண்டும். இன்றேல் அவற்றால் இரத்த ஓட்டம் தடைப்படும். இரத்த ஓட்டம் தடைப்படின், உடம்பின் பல பகுதிகட்குப் போய்ச் சேரவேண்டும் உணவின் சத்துப் போய்ச் சேர்வதில்லை. அதனால் உடலில் தளர்ச்சி, சோர்வு, இளமைக் கட்டுக் குன்றுதல், கிழப் பருவத் தோற்றம் முதலிய கேடு

கள் தலை காட்டும். இரத்தக் குழாய்களில் உள்ள மாசுகளைப் போக்க மருந்துகள் பயன்படா. உடற் பயிற்சியே அதற் கேற்ற நன்மருந்தாகும். என்னை? உடற் பயிற்சியினால் அம் மாசுகள் வியர்வையாகவும் மலஜலம் முதலிய கழிவுப் பொருள்களாகவும் வெளிப்பட்டுக் கழிகின்றன. அதனால் உடல் நோய் இன்றி என்றும் கட்டழகுடனும் சுறுசுறுப்புட னும் கூடி இருக்கும்.

இம் மாசுகள் எங்ஙனம் உண்டாகின்றன? உணவு, நீர், காற்று இம் மூன்றின் வாயிலாக நம் உடம்பில் ஜீவ அணுக் கள் உண்டாகின்றன. அவை சிறிது காலம் இருந்து இறப் பன. இறந்த அவை உடனுக்குடனே உடம்பினின்றும் நீக் கப்படல் வேண்டும். இன்றேல், அவை உடம்பின் பல பாகங் களிலும் தங்கி இரத்த ஓட்டத்தைப் பாதிக்கும். ஆதலின், அவற்றை உடற் பயிற்சிமூலம் நீக்குதல் அவசியம் ஆகின் றது. அவை வெளிச் சென்றபிறகு இரத்த ஓட்டம் தாராள மாக நடைபெறும்; உடம்பின் எல்லா இடங்கட்கும் இரத்த ஓட்டம் பரவினால், உடம்பு கட்டழகுடன் ஒளிர்ந்து கண் ணுக்குக் காட்சி அளிக்கும்.

நன்மை அடைந்தவர்

3. அமெரிக்காவில் பிலடெல்பியா நகரத்தில் ஸான் போர்ட் பென்னெட் என்பவர் இருக்கின்றார். அவர் இளமை முதலே நோயுற்றிருந்தார்; வயது வந்தபின் வியாபாரத் துறையில் வேலை செய்து வந்தார்; திரண்ட பொருள் ஈட்டி னார். எனினும் அவர் நோயற்ற உடம்பைப் பெற்றிலர். அவர் நோய் நீங்கவும் உடல் உரம் பெறவும் சாப்பிடாத மருந்தில்லை. அவர் தமது முப்பதாம் வயதிலேயே கிழத் தன்மை அடைந்தார்; கண்கள் குழி விழுந்தன; கன்னங்கள் மடிந்தன; தலை மயிர் நரைத்தது; முகவாய்க்கட்டை குறுகி

யது; தலை வழுக்கெடுத்தது. சுருங்கக் கூறின், அவர் நடைப் பிணமாக இருந்தார். ஐம்பது வயதும் ஆயிற்று. அவர் முடிவில் மருந்துகளை மறந்தார்; ஆழ்ந்து சிந்தித்தார்; இயற்கை வாழ்விற்கு ஏற்ற உடற் பயிற்சியே தம்மை மனிதனுக்கும் என்பதை உணர்ந்தார். அவர் அன்று முதல் பொறுமையாகவும் திடமாகவும் உடற் பயிற்சி முறைகளில் ஈடுபட்டார். அன்று முதல் அவரது பிணவாழ்க்கை மண வாழ்க்கையாக மாறத் தொடங்கினது.

என்ன வியப்பு! அவர் ஐம்பது வயதிற்குமேல் மனவுறுதியுடன் சோம்பலின்றி ஓடுதல், நீந்துதல், குதித்தல், கைகால்களை நீட்டுதல், மடக்குதல் முதலிய பயிற்சிகளைச் சிறிது சிறிதாகச் செய்துவந்தார். இப்பயிற்சிகளின் பயனாக, அவர் தமது எழுபதாம் வயதில் முப்பத்தைந்து வயதுடையவராகக் காணப்பட்டார். அவரது உடலைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் வியப்புற்றனர். "இவர் முப்பது வயதுள்ள சாண்டோவைப்போல் இருக்கின்றார்" என்று அந்நகர வைத்தியர்கள் கூறி வியந்தனர். தலை மயிர் நன்றாக அடர்ந்து வளரலாயிற்று. கண் குழிகள் மறைந்தன; கன்னச் சுருக்கம் ஒழிந்தது; கழுத்துப் பெருத்து வன்மை பெற்றது. கைகால்கள் முறுக்குடன் இருந்தன. அவர் தமது எழுபத்தொன்றாம் வயதில் ஏழு நிமிடம் ஐம்பத்தைந்து விநாடிகளில் ஒரு மைல் தூரம் ஓடினார் எனின், அவரது உடல் வன்மையை நாமே நன்கறிந்துகொள்ளலாம்.

முடிவு

4. ஆ! உடற் பயிற்சி கிழவனைக் குமரனுக்கும் மருந்து; குமரனை மன்மதனுக்கும் சஞ்சீவி; நோய்களை அகற்றும் இயமன். நோயற்ற வாழ்வை நமக்கு அளிக்கும் பெருங் கடவுள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா?

47. நான் கேட்ட தலைமைப் பேருரை

[நீ கேட்ட ஒரு தலைமையுரையைப் பற்றிச் சுருக்கி எழுது.]

குறிப்புகள் :—1. ஆண்டு விழா
2. தலைவர் பெருமை
3. அவரது பேருரை
4. முடிவு

கட்டுரை

ஆண்டு விழா

1. நான் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள தென்காசி நகரத்தைச் சேர்ந்தவன். சென்ற ஆண்டு இவ்வூர்-திருவள்ளுவர் சங்கத்தின் 12-ஆம் ஆண்டு விழாச் சிறப்பாக நடந்தேறியது. அவ் வாண்டு விழாவிற்குத் தலைமை வகித்தவர் ஒரு தமிழ்ப் பெரியார். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் என்பவர்.

தலைவர் பெருமை

2. அப் பெரியார் சிறந்த தமிழ்ப் புலவர்; மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1907-ஆம் ஆண்டில் பண்டிதத் தேர்வில் முதல்வராகத் தேறித் தங்கத் தோடாப் பரிசு பெற்றவர்; முப்பது ஆண்டுகளாகக் கல்லூரி மாணவர்க்குத் தமிழ்க் கல்வி ஊட்டி வருபவர். பல அற்புத ஆராய்ச்சி நூல்களை அழகிய தமிழ் நடையில் எழுதி வெளியிட்டுள்ளவர்; திருவிளையாடற் புராண உரையாசிரியர்; பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றுக்கு உரை எழுதியுள்ளவர்; தமிழகத்துச் சைவ மஹாநாடுகளிலும் இலக்கியப் பேரவைகளிலும் தமிழ்ச் சொற்

பெருக்காற்றுபவர்; சிறந்த ஒழுக்கமும் பரந்த நோக்கமும் உடையவர். அப் பெரியவரைக் கண்டதும் அவரது அடக்கம் என்னை அவர்பால் ஈர்த்தது. அவரது சொற்பொழிவு என்னைத் தூய்மைப்படுத்தி, என்னை உண்மைத் தமிழ் மகனுக்கியது எனத் துணிந்து கூறுவேன். நான் அவரது சொற்பொழிவை, அவர் பேசும்போதே விடாமற் குறித்து வந்தேன். நான் விட்டவை போக, அவரது பேச்சின் சாரம் பின் வருமாறாகும்:

அவரது பேருரை

3. "தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பெயர் கொண்டுள்ள இக் கழக ஆண்டு விழாவில் திருவள்ளுவ நாயனுரைப் பற்றிப் பேசலே பொருத்தமானது.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்னும் திருக்குறளின் கருத்தை அறிந்துள்ள நீங்கள், யான் கூறுவனவற்றையும் ஆராய்ந்து மெய்ம்மை காண்டல் கடனாகும்.

"'செந்தமிழ், பைந்தமிழ்' என்று பலவாறு புலவர் பலராலும் சிறப்பித்து ஓதப்பெறும் நம் அருமைத் தாய் மொழியாகிய தமிழில் உள்ள திருக்குறள் என்னும் தெய்வத் திருமறையை அருளிய பெரியார் திருவள்ளுவர் ஆவர். அவரது உண்மை வரலாறு தெரிந்திலது. அவரது வாழ்க்கை வரலாருகப் புனைந்துரைக்கப்பட்ட சில கதைகளே வழங்கி வருகின்றன. அவை யாவும் முழு உண்மைகள் என்றோ, அவற்றிற் சிறிதும் உண்மை இல்லை என்றோ அறுதியிட்டுரைத்தல் இயலாது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் விளங்கிய ஒரு பெரியாரது உண்மை வரலாற்றை

அறிய வேண்டின், அவரது வாய்மொழியாகிய அகச்சான்று களும் அல்லது அவர் காலத்து விளங்கிய ஏனையோர் அவ ரைப் பற்றிக் கூறியுள்ளனவும் துணைசெய்தல் வேண்டும். அவ்விரண்டும் இல்லாவிடினும் அக்காலத்தோடு ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்புற்று வருகின்ற சான்றுகளேனும் இருத் தல் வேண்டும். பிற கூற்றுகள் ஆதாரவாகமாட்டா. எனி னும், இயற்கைக்கு மாறில்லாதனவும் நலம் பயக்கும் உண் மைகளை அறிவுறுப்பனவும் ஆகியவற்றை வேறு உண்மை காணும்வரை தழுவிக்கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. எனவே, திருவள்ளுவர் நங்கை ஒருத்தியை மணந்து இல் லறம் நடத்தினர் என்பதனையும், அவர் ஆடை நெய்தலாகிய தொழிலை மேற்கொண்டு எளிமையுடன் வாழ்ந்து வந்தனர் என்பதையும், இவை போல்வன சிலவற்றையும் நாம் மறுக்க வேண்டுவதில்லை.

" இனி, வள்ளுவர் என்ற பெயர்க்கு 'வண்மை உடை யோர்' என்று சிலர் பொருள் கூறுகின்றனர். அது வள்ளு வக் குடியில் பிறந்தவர் அத்துணை மேன்மையுடையராதல் பொருந்தாது என்னும் கருத்துடன் கூறப்படுவதேயாகும். பழைய இலக்கியங்களில் 'வண்மை உடையோன்' என்னும் பொருளில், 'வள்ளல், வள்ளியோன்' என்னும் பெயர்கள் வழங்குகின்றன. வள்ளுவன் என்பது குடிப்பெயராகவே வழங்குகின்றது. 'வள்ளுவக்குடி' என்பது தமிழ்நாட்டுப் பழங்குடிகளில் ஒன்றாகும். பழம் பெருங்காப்பியமாகிய மணிமேகலை முதலியவற்றில் 'முதுகுடி' என்று கூறப்படு வது அதன் பழமைக்கு உறுசான்றாகும். வள்ளுவர் என் பார் அரச காரியங்களை நகர மாந்தர்க்கு அறிவிக்கும் கருமத் தலைமையுடையார் என்றும், அவர்கள் தானைகள் சூழ யானை மீது இவர்ந்து சென்று முரசறைந்து தெரிவிப்பர் என்றும் தொன்னூல்களால் அறியப்படுகின்றன. பெருங்கதை என்ற

பழங் காப்பியத்தில், தமிழ் வழக்கை ஒட்டி, வள்ளுவர் பற்றிப் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

" அரசருடைய பிறந்த நாள், படையெழுச்சி நாள், மண நாள் என்னும் இப் பெருநாட்களிலேயே அச் செய்திகளை வள்ளுவர் முரசெறிந்து தெரிவிப்பர் என்று கூறியிருப்பது, பொதுவாகப் பறையறையும் பிறரினும் இவருக்குள்ள வேறுபாட்டையும் இவர்தம் மதிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. இக் குடியினர் பண்டு தொட்டே நிமித்தம் அல்லது சோதிடம் எனப்படும் குறிநூலில் வல்லுநராக இருந்து வருகின்றனர். இவ்வாற்றால், வள்ளுவர் குடி என்பது அறிவு முதலிய தகுதியமைந்த ஒரு முதுகுடி என்பது பெறப்படும். இக் குடியிற் பிறந்து சிறந்தமையாற்றான் நம் தெய்வப் புலவர்க்குத் திருவள்ளுவர் என்னும் பெயர் உளதாயிற்றென்பதில் எத்துணையும் ஐயம் இல்லை......ஒவ்வொருவரும் தமிழ் மறையாகிய திருக்குறளைப் படித்துப் பேறு பெற வேண்டுவது கடனாகும்."

முடிவு

4. எனது செய்யுள் நூலில் 'திருக்குறள்' பாடப் பகுதி உண்டு. அதனால், எனக்குத் திருவள்ளுவரைப் பற்றிய இப் பேருரை பேருதவியாக இருந்தது. நான் அன்று முதல் தமிழ்ப் பெரியார்கள் வந்து பேசும் இடங்கட்குச் சென்று குறிப்பெடுக்குந் தொழிலை மேற்கொண்டேன். இவ் வேலை எனக்குப் பல சந்தர்ப்பங்களில் பேருதவி அளிக்கின்றது; சிறப்பாகக் கட்டுரை எழுதும் காலங்களில் இக் குறிப்புகள் எனக்குப் பெரிதும் உதவுகின்றன; எனது தமிழ் அறிவையும் வளம்படுத்துகின்றன. நான், 'கேள்வி முயல்' என்பதன் கருத்தையும் அதனால் உளதாகும் அளப்பரிய நன்மையையும் நன்கு உணர்கின்றேன்.

48. எனது நகர வரலாறு

குறிப்புகள் :—1. சென்னையின் சிறப்பு நிலை
2. அதன் தோற்றம்
3. அதன் வளர்ச்சி
4. அதன் நடைமுறை
5. முடிவு

கட்டுரை

சென்னையின் சிறப்பு நிலை

1. சென்னை நகரம், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநிறுத்தப் பேருதவி புரிந்த பெருமையுடையது. இதுவே, கிழக்கிந்திய கம்பெனியாரின் முதல் வாணிப இடமாகும். இதுவே, பிரிட்டிஷார் தமது நாட்டை விரிவாக்க நடுவிடமாக இருந்து உதவி புரிந்தது. இங்கிருந்துதான் கர்னடகப் போர்கட்கும் மைசூர்ப் போர்கட்கும் படைகள் அனுப்பப்பட்டன. பிரிட்டிஷ் அரசியலை இந்தியாவில் ஏற்படுத்திய கிளைவ் என்னும் அறிஞர் குமஸ்தாவாக வந்தது இந்த நகரத்திற்கே யாகும். அவர் ஆர்க்காட்டு வீரராக விளங்கக் காரணமாக இருந்ததும் சென்னையே யாகும்.

அதன் தோற்றம்

2. இது முன்னர்ச் சிறிய கிராமமாக இருந்தது. அக் கிராமமும் மீன் பிடிப்பவரையே கொண்டிருந்தது. கி. பி. 1639-ல் பிரான்ஸிஸ் டே என்பவர், விஜயநகர அரசர் பரம்பரையைச் சேர்ந்த சந்திரகிரி அரசரிடமிருந்து, ஸாந் தோமிற்கு வடக்கில் உள்ள இடத்தைப் பெற்றார். சென்னப்பன் என்னும் சிற்றரசர் பெயரே இந் நகரத்திற்கு இடப்பட்டது. அதனால், இது 'சென்னப்பன் பட்டணம்'

எனப்பட்டது. அது நாளடைவில் மாறிச் 'சென்னப் பட்டணம்' எனவும் 'சென்னை' எனவும் மருவி வழங்கலாயிற்று. கி. பி. 1640-ல் செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. பிரிட்டிஷ் இராச்சியம் பரவத் தொடங்கியதும், சென்னை மாகாணத்திற்குச் சென்னையே கோநகரம் ஆயிற்று.

அதன் வளர்ச்சி

3. பின்னர், அந்த இடம் வாணிபச் சிறப்புப் பெற்றது. இந்திய வியாபாரிகள் பலர் ஆங்கிலேயரோடு வாணிபம் செய்யக் கோட்டைக்கு வெளியே குடியேறினர்; கோட்டைக்குள் இருந்த வெள்ளையர்க்கு வேண்டியவற்றைச் செய்யக் குடிமக்கள் பலர் சேர்ந்தனர்; படைகளின் இருப்பிடங்கள் பெருகின. அப் படைகள் வைக்கப்பெற்ற இடம் தண்டையார்ப்பேட்டை எனப்பட்டது; வண்ணார்கள் குடியேறிய இடம் வண்ணாரப் பேட்டை எனப்பட்டது; கப்பலிலிருந்து பொருள்களை இறக்கவும் ஏற்றவும் கூலியாட்களும், சாமான்களை வண்டிகளில் ஏற்றி வெளியூர்கட்குக் கொண்டு போகும் வண்டிக்காரர்களும் பிறரும் வண்ணாரப் பேட்டையில் குடியேற ஆரம்பித்ததும், அங்கிருந்த வண்ணார், இப்பொழுது 'புது வண்ணாரப் பேட்டை' என்று சொல்லப்படும் இடத்திற் சென்று குடியேறினர். அவர்கள் முன்னிருந்த இடம் பழைய வண்ணாரப்பேட்டை என்று பெயர் பெற்றுள்ளது. கோட்டையைச் சூழவுள்ள இடத்தில் குடியேறிய பலவகைத் தொழிலாளரும் வியாபாரிகளும் இருந்த இடம் 'கறுப்புப் பட்டணம்' என்னும் பெயர் பெற்றது; ஆனால், காலஞ் சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சென்னைக்கு வந்த நன்னாளில், அவர் பெயரால் 'ஜார்ஜ் பட்டணம்' எனமாறு பெயர் பெற்றது. இன்று இது 'ஜார்ஜ் டவுன்' என்றே வழங்கப்பெறுகிறது.

உத்யோக நிலையங்கள் ஏற்பட்ட பின்னர் மக்கட் கூட்டம் பெருகியது. அப் பெருக்கத்தால் திருவல்லிக்கேணி முதலிய இடங்கள் ஜன நெருக்கம் கொண்டன. பஞ்சாலைகளும், இரயில்வே தொழிற்சாலையும் ஏற்பட்ட பின்னர்ச் சூளை, பெரம்பூர் முதலிய இடங்கள் ஜன நெருக்கம் கொண்டன. இங்ஙனம் சென்னை நகரம் சிறு கிராமத்திலிருந்து பெரிய நகரமாக-மாகாணத்தின் தலைநகரமாக மாறிய வரலாறு சுவை பயப்பதே ஆகும்.

அதன் நடைமுறை

4. இன்றைய சென்னை நகரம் சுமார் ஏழு லக்ஷம் ஜனத்தொகை கொண்டது; பெரிய நகராண்மைக் கழகத்தின் ஆட்சி முறையில் அமைந்திருப்பது; பல பெரிய உத்யோக நிலையங்களையும் பல பெரிய கல்லூரிகளையும், உயர் கலாசாலைகளையும் பெரிய பல நாட்டுக் கம்பெனிகளையும் பெற்றுள்ளது; வட இந்தியாவின் வாயிற் படியாக விளங்கும் சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தையும், தென் இந்தியாவின் கோட்டை வாயிலாக அமைந்துள்ள எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தையும் பெற்றுள்ளது; இவையன்றி, சென்னைக்குள்ளேயே ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்லத் தக்கவாறு பல மின்சார இரயில் வண்டிகள் இருக்கின்றன; அவற்றுக்காகப் புகைவண்டி நிலையங்களும் இருக்கின்றன. அழகிய செயற்கைத் துறைமுகம் உள்ளது; கலங்கரை விளக்கம் உள்ளது. பல்கலைக் கழகம் உள்ளது. சுருங்கக் கூறின், இன்றைய சென்னை நகரம் நாகரிகச் சின்னமாக விளங்குகிற தென்னல் மிகையாகாது.

முடிவு

5. சென்னை நகரம், நாகரிகம் வளர வளர-உலக வாணிபம் பெருகப் பெருக-மேலும் பல துறைகளிற் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

49. நூல் நிலையம்

குறிப்புகள் :—1. நூல் நிலையம் யாது?
2. பெரியோர் கருத்துகள்
3. நமது கடமை
4. முடிவு

கட்டுரை

நூல் நிலையம் யாது?

1. இலக்கியம், சரித்திரம், கணிதம், இரசாயன சாத்திரம் போன்ற பலவகைப்பட்ட சாத்திரங்களைப் பற்றிய அறிவு நூல்கள் பல வரிசை வரிசையாக அடுக்கப்பட்டுப் படிப்பவர்க்கு வசதியளிக்கும் சாதனமே நூல் நிலையம் எனப்படுவது. சென்னை நகரில் சென்னைப் பல்கலைக் கழகநூல் நிலையமும் அரசாங்கத்துக் கன்னிமாரா நூல் நிலையமுமே இம் மாகாணத்திற் பெரியவை. சிற்றூர்களில் சிறிய அளவில் நூல்களைக் கொண்ட நிலையங்கள் சில உண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் சிறிய நூல் நிலையம் உண்டு.

பெரியோர் கருத்துகள்

2. மாண்டேய்ன் என்னும் பெரியார், 'எனது கிழப் பருவத்திலும் நான் தனித்திருக்கும் காலங்களிலும் நூல்கள் எனக்கு இன்பம் அளிக்கின்றன. நான் விரும்பாத நண்பரிடமிருந்து பிரிந்து இருக்க அவை உதவி புரிகின்றன; எனது வாழ்க்கையாகிய பிரயாணத்தில் இனிய உணவளிக்கும் கட்டுச் சோறாகப் பயன்படுகின்றன' என்று கூறியுள்ளார். இட்டாலிய நாட்டுப் புலவரான பெட்ராக் என்பவர், 'நான் நூல் நிலையத்தில் இறந்தகால-நிகழ்காலப் பெருமக்களைச் சந்திக்கிறேன்; அவர்தம் திருவாக்குகளை அறிந்து

இன்புறுகிறேன்; என் வாழ்க்கையை அவர்தம் அனுபவத்தைக் கொண்டு செம்மைப்படுத்துகிறேன். என் உயிர்க்கு உறுதுணையாவன நூல்களே ஆகும்' என்று கூறி மகிழ்ந்துளர். அனடோல் பிரான்ஸ் என்னும் பிரஞ்சு நாட்டு அறிஞர், 'நூல் என்பது ஒரு மாய சூத்திரமாகும். அதினின்றும் பல உருவங்கள், பல தோற்றங்கள், பல யுகங்கள், பல எண்ணங்கள் யாவும் தோன்றி மனத்தைப் பக்குவப்படுத்துகின்றன. நூல், நம்மைச் சென்ற கால உலகத்திற்குக் கொண்டு செல்லும் மாயக்கருவி என்னலாம்' எனப் புகன்றுள்ளார். ஸ்டிவென்ஸ் என்னும் ஆங்கில அறிஞர், 'அவரவர் விருப்பத்திற்கு இசைந்த நூல்களைப் படித்து இன்புற ஏற்ற வசதியளிப்பது நூல் நிலையமே ஆகும். அஃதே நம் உயிர்க்கு உறுதுணையாகும்' எனக் கூறியுள்ளார்.

நமது கடமை

3. இவ்வாறு பல நாட்டுப் பெருமக்களும் நூல் நிலையப் பயனை நுகர்ந்து நுகர்ந்து இன்ப வெள்ளத்தில் திளைத்துள்ளனர்; அகன்ற அறிவைப் பெற்றுள்ளனர். நாம் நல்வாழ்வை எய்த நமது சொந்த அறிவும் ஆன்றோர் அநுபவ மொழிகளும் இன்றியமையாதவை. நாம் நம் சொந்த அறிவை வளர்க்கவே பல நூல்களைப் படிக்க வேண்டும் எனின், ஆன்றோர் பொன் மொழிகளை அறிய மேலும் பல நூல்களைப் படிக்க வேண்டும் அல்லவா? இவ்விரு துறைகளிலும் பெறும் அறிவாற்றான் வாழ்க்கை செவ்விய முறையில் அமைவுறும். ஆதலின், ஒவ்வொருவரும் எழுமையும் சிற்றுயிர்க்கு உற்ற துணையாகிய கல்விக்குரிய பன்னூல்களைப் படித்துப் பயன்பெறத் தவறலாகாது.

நூல் நிலையத்தில் புகும் ஒருவன் உலகத்தையே தன் கண்முன் காண்கின்றான்; உலகப் புகழ்பெற்ற பேரரசரைப்

பார்க்கின்றான்; வீரரைத் தரிசிக்கிறான்; ஞானியரைக் காண்கிறான்; சரித்திராசிரியரைச் சந்திக்கிறான்; கம்பர், ஷேக்ஸ்பியர், காளிதாசர் போன்ற மஹா கவிகளை மாண்புறக் கண்டு மகிழ்கிறான்; ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரைக் கண்களிப்பக் காண்கிறான். அங்கு அவன் உலக முற்போக்கையும், இருள் கடிந்து ஒளிபெற்ற மக்களின் வரலாறுகளையும், உலகச் சம்பவங்களையும் தெள்ளிதில் உணர்கிறான்; புகழுக்கு முன் ஒருவன் வாழ்க்கையில் அடைய வேண்டும் துன்பங்களை உணர்கிறான்; வாழ்க்கைப் போரில் மனிதனுக்கு இருக்க வேண்டும் பொறுமையின் முகட்டைக் காண்கிறான்; பல நாட்டு மக்களின் நாகரிகம், கலை, சமயம் இன்ன பிறவற்றை உணர்கிறான். அவர்தம் அநுபவ மொழிகள் அவன் உள்ளத்திற் பாய்கின்றன; பதிகின்றன. அவன் புத்துணர்ச்சி பெறுகின்றான்; தன் வாழ்க்கை என்னும் மாளிகையை அப் பெரியோர் அநுபவம் என்னும் அடிப்படையின் மீது கட்ட முயற்சிக்கிறான். ஆ! அன்றுமுதல் அவனது வாழ்வு மெய்யின்ப வாழ்வாகிறது. அவன் அன்றுமுதல் புதிய மனிதனாகக் காணப்படுகிறான்.

முடிவு

4. ஆகவே, மனிதனுக்கு உலக அறிவையும் மெய்யறிவு விளக்கத்தையும் பொருளீட்டும் வழியையும் பண்புற ஊட்டும் இன்பமயமான நூல்கள் உள்ள நூல் நிலையமே சிறந்த கோவில் ஆகும். ஆகலான், இத்தகைய நூல் நிலையங்களை உண்டாக்கலே நம்மவர் கடமை; கிராமங்களில் எல்லாம் நூற்கோவில்கள் ஏற்படல் வேண்டும்; கல்வி அறிவு யாண்டும் கவினுற்று விளங்குதல் வேண்டும். கல்வி ஒன்றே மனிதனை உண்மை மனிதனுக்கும் மருந்தாகும்.

---

50. விஞ்ஞான வளர்ச்சி

குறிப்புகள்: —1. விஞ்ஞானம்—யாது?
2. அதன் வளர்ச்சியால் உண்டானவையும் அவற்றுற் பயனும்
3. முடிவு

கட்டுரை

விஞ்ஞானம்—யாது?

1. விஞ்ஞானம் என்பது அறிவியல் துறையாகும். இயற்கையின் பலவகைக் கூறுபாடுகளை ஆராய்ந்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தி வேண்டும் நன்மைகளைப் பெற உதவும் கலையே விஞ்ஞானக்கலை என்பது. நூறு ஆண்டுகளாக இத் துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் புதிய புதிய மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. இத் துறை, வளர்பிறைக்கு நிகரானதாகும்.

அதன் வளர்ச்சியால் உண்டானவையும் அவற்றுற் பயனும்

2. இத் துறையில் உண்டான வளர்ச்சிக்குரிய சின்னங்களுள் எக்ஸ்ரே, ஒலி பரப்பி, கம்பியில்லாத் தந்தி, ரேடியம் (கதிரி), மின்சாரம் முதலியன சிறந்தவை எனக் கூறலாம். இவற்றைப் பற்றிமட்டும் ஈண்டுச் சுருக்கமாகக் காண்போம்: எக்ஸ்-ரே என்பது டாக்டர் ராண்ட்ஜன் என்னும் ஜெர்மானியர் கண்டுபிடித்ததாகும். இஃது இன்னது என்று கூறமுடியாமையால், எக்ஸ் (பொருள் விளங்காத) ரே (ஒளி) எனப் பெயர் பெற்றது. இவ்வொளி உடலுக்குள் ஊடுருவிச் சென்று உள் நிலைமைகளை நன்கு விளக்க வல்லது; இவ் வொளியைக் கொண்டு பிடிக்கப்படும் படத்தினுல் இவற்றை அறியலாம். இது நமது உடலில் உள்ள மாறு

தல்களைத் தெளிவுறக் காட்டுகிறது. சென்ற பெரும்போரில் காயம்பட்ட வீரர் தம் உடலிற் பாய்ந்திருந்த குண்டுகளை இதன் உதவியால் கண்டறிந்து, இரணச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. உலகம் போற்றும் பெரிய விஞ்ஞானியான தாமஸ் ஆல்வா எடிஸன் என்பவர் இவ்வொளியைக் கொண்டு பல ஆராய்ச்சிகளில் வெற்றி பெற்ருர். இவ்வொளி நிலையங்கள் சென்னை போன்ற பெரிய நகரங்களிற்ரும் இருக்கின்றன.

இரேடியம் என்பது ஓர் உயர்ந்த தாதுப்பொருள். இதனைச் சோதித்து அறிந்தவர் போலந்து மாதாகிய 'மேரி' என்பவர். அவருக்குப் பின் பற்பலர் ஆராய்ந்து இதனை எடுக்கலாயினர். இது மூன்று வித ஒளிக்கதிர்களை வீச வல்லது. அறிஞர், இதனைக் காற்ருேடு கலக்கச் செய்து மின்சாரம் செலுத்தப் பயன்படுத்துகின்றனர். இஃது இருளிலும் ஒளிவீசிப் பொருள்களைப் புலப்படுத்தும் ஆற்றல் உடையது. இதனுல், இது வானவூர்திப் போருக்குப் பயன் படுத்தப்படுகிறது; பிளவை எனப்படும் கொடிய நோயைத் தீர்க்க வல்லது; முடக்கு நோயால் உடம்பிற் கரடு கட்டிக் கொள்ளும் பகுதிகளைக் கரைக்க வல்லது. இது கலந்துள்ள ஊற்று நீர்களிற் குளிப்பதால் மக்கள் பலவகை நோய்கள் நீங்கிக் குணமடைகின்றனர்.

ஒலி பரப்பியைக் கண்டறிந்த பெருமை இட்டாலிய நாட்டு அறிஞராகிய மார்க்கோனி என்பார்க்கே உரியது. செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு விண் பொருள் (ஈதர்) மூலமாய் அனுப்ப, முதலில் ஒலி, மின்சார ஆற்றலாக மாற்றப்படுகிறது. இது விண் அலைகளின் உதவியால் குறிப்பிட்ட இடங்கட்கு அனுப்பப்படுகின்றது. அங்கு, இம் மின்சார ஆற்றலை மீண்டும் பழைய ஒலியின் வடிவாக மாற்றிச் செய்திகளை யாவரும் அறிகின்றனர். இவ்வாறே ஒருவர் பாடும் பாட்டில் உள்ள பலதிறப்பட்ட ஓசை

களை எலக்ட்ரோ மாக்னெட்டால் ஆகிய ஒரு கருவி மின் அலைகளாக மாற்றி வான் வெளியிற் செலுத்துகின்றது. அவ் வலைகளைத் தூரத்தில் உள்ள வாங்கிகள் (ரிசீவர்ஸ்) ஏற்றுக்கொண்டு, அவற்றை ஒலிபெருக்கியின்மீது பாய்ச்சி, அப் பாடலைத் தெளிவாய்க் கேட்குமாறு செய்கின்றன. இக் கருவிகள் அனைத்தும் சேர்ந்த தொகுதியே ஒலி பரப்பி எனப்படும். நாம் இன்று இதன் பெரும் பயனை நன்றாய் நுகர்ந்து வருகின்றோம்; உலக நாடுகள் அனைத்திலிருந்தும் அன்றாடம் பலவகைச் செய்திகளைக் காதால் கேட்டறிகிறோம். ஆ! விஞ்ஞான வளர்ச்சியால் உண்டாகியுள்ள மாறுதலை என்னென்பது!

கம்பியில்லாத் தந்தி என்பதும் ரேடியோ போன்றதே; வான் அலைகள் வாயிலாக ஒலியைப் பரப்புவதே ஆகும். இதன் மூலம் பல அற்புதங்கள் நடக்கின்றன; இதற்குரிய கருவி ஒவ்வொரு கப்பலிலும், வான ஊர்தியிலும் உண்டு. திடீரென விபத்து ஏற்படின், கம்பியில்லாத் தந்தி மூலம் உரியவர்க்குச் செய்தி எட்டுகிறது.

இங்ஙனம் பல அற்புத மாறுதல்களை உண்டாக்கும் சாதனங்களுள் மின்சாரம் ஒன்றாகும். அதன் திருவிளையாடலால் பெரிய நகரங்கள் இரவிலும் பெரு வெளிச்சத்தில் இருக்கின்றன; விசிறிகள் தாமாக இயங்குகின்றன. ஆ! பற்பல பொருள்கள் தாமாக இயங்குகின்றன.

முடிவு

3. இவ்வாறு விஞ்ஞான வளர்ச்சியால் உண்டாகியுள்ள அற்புத மாறுதல்கள் பலவாகும். இனி உண்டாக இருக்கும் மாறுதல்களும் பலவாகும். ஆகலின், இவ் வறிவியல் துறையில் அறிவு பெறல் நம்மவர் நீங்காக் கடமை ஆகும்.

---

51. குடி நீக்கம்

குறிப்புகள் :—1. குடி நீக்கம்—யாது?
2. அதன் அவசியம் யாது?
3. அரசியலார் உதவி
4. முடிவு

கட்டுரை

குடி நீக்கம் யாது?

1. கள், சாராயம் முதலிய மயக்கத்தைத் தரும் பானங்கள் 'குடி' என வழங்கப்பெறும். இவற்றை நீக்கு தலே 'மது விலக்கு' அல்லது 'குடி நீக்கம்' எனப்படும். இவை நம் நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் கடைகளில் விற்கப் படுகின்றன. இவற்றுள் தென்னை மரத்திலிருந்து இறக்கப் படுவது 'கள்' எனப்படும்; திராக்ஷை ரஸம் முதலியவற்றி லிருந்து இறக்கப்படுவது 'சாராயம்' முதலியன. இவை யாவும் உடல் நிலையை உஷ்ணப்படுத்தும் இயல்பின; சிறி தளவும் பேரளவுமாக மயக்கத்தை உண்டாக்குவன.

அதன் அவசியம் யாது?

2. இங்ஙனம் மயக்கத்துக்கு உரிய இப் பானங்களை ஏன் நீக்க வேண்டும்? இவை குடிப்பதால், இயல்பான உணவுப் பொருள்களைச் சீரணிக்கச் செய்ய இருக்கும் கருவி கள் அமைப்பு முறையிற் கெட்டு, நாளடைவில் நலிவு அடைந்து, வயிற்றுக் கோளாறுகளுக்கு ஆட்படுகின்றன. அச் சீர் கேட்டால் நரம்புத் தளர்ச்சி, வலியின்மை, சோம்பல் முதலியன உண்டாகும்; பல நோய்கள் புதியனவாகத் தோன்றும். இங்ஙனம் உடல் நலம் கெடுவதே அன்றிக் கைப்பொருளும் கரைகின்றது. பெரும்பாலும் குடிப்பவர்

அனைவரும் ஏழைக் கூலியாட்களே யாவர். அவர்கள் நாட் கூலி ஆறணு முதல் ஒரு ரூபாய் வரையாகும். அவர்கள் தமது கூலியில் பேரளவு தொகைக்குக் குடித்துவிட்டு, எஞ்சியதை வீட்டுக்குக் கொண்டு செல்வர்; அச்சிறு தொகையைக் கொண்டு அவர்தம் குடும்பங்கள் வாழ வழியின்றித் தவிக்கும். இங்ஙனம் தவிக்கும்—சோற்றுக்கு வழியின்றிப் பட்டினி கிடந்து அல்லலுறும்—குடும்பங்கள் மிகப் பலவாகும். இம் மட்டுமோ! குடிகாரன் தன் குடிவெறியில் மனைவி மக்களை வலியச் சண்டைக்கிழுத்து நையப் புடைக்கிறான்; அவன் தன்னை மறந்து அக் குடி நிலையில் 'இன்னது செய்கிறோம்' என்பதை அறியாமற் செய்துவிடும் கொடுமைகள் பலவாகும். அவனே பொழுது விடிந்து, போதை இறங்கியதும், தன் குற்றத்தை நினைந்து வருந்துவதும் உண்டு. அவன் வீட்டா ரோடு மட்டும் நிற்பதில்லை. தன்னைப் போன்றுள்ள மற்றக் குடிகாரருடனும் சண்டையிடுகிறான்; வழிப்போவாரிடம் வலுச் சண்டைக்குப் போகிறான். அதனால், பலரால் புடைக் கப்படுகிறான்; அல்லது போலீஸாரால் விலங்கிடப்படுகிறான்; உதைக்கப்படுகிறான். அந்தோ! குடிகாரன் தனக்காகவும் வாழவில்லை—தன் குடும்பத்துக்காகவும் வாழவில்லை—ஊரா ருக்காகவும் வாழவில்லை. அவன் விலங்கினும் கடைப்பட்ட வனாகி, உலகத்தார் இகழ நடைப்பிணமாகத் திரிகிறான். இங்ஙனம் அவன் தன் அறிவு நிலைமையை இழந்தமைக்குக் காரணம் பாழும் குடியே ஆகும் அன்றோ?

அரசியலார் உதவி

3. இக் குறைபாடுகளை நன்கு உணர்ந்த காங்கிரஸ் அர சாங்கத்தார் தமது ஆட்சிக் காலத்திற் குடி நீக்கச் சட்டத்தை நடைமுறையிற் கொண்டுவரலாயினர். குடியால் அரசாங் கத்திற்கு வந்த வருமானம் ஆண்டொன்றுக்குப் பல கோடி

ரூபாய் ஆகும். அப்பணம் இம் மாகாணக் கல்விக்காகப் பயன்பட்டது. குடி நீக்கச் சட்டத்தால் குடி வருமானம் குறையும்; அதனால், கல்வி வசதியும் குறையும். இவ் வாபத்தான நிலைமையை எங்ஙனம் சமாளிப்பது? குடி நீக்கமும் வேண்டும்; கல்வி வசதியும் வேண்டும் எனில், இன்றுள்ள நிலையில் இரண்டும் நடைபெறா. எனவே, அரசாங்கத்தார் வட ஆற்காடு, சேலம் முதலிய சில ஜில்லாக்களில் மாத்திரம் குடி நீக்கத்தைச் சோதனையாக நடத்திப் பார்த்தனர்; எனினும், அரசாங்க வருமானம் குறையலாயிற்று; அதனாற் பல பள்ளிகளை மூடினர்; வரிகளை மிகுதிப்படுத்தினர். எனினும், குடி நீக்கப்பெற்ற ஜில்லா வாசிகள் எப்படி இருக்கின்றனர்? என்பதே நாம் கவனிக்க வேண்டுவது. அங்கு முன் இருந்த குடிகாரர் பலர் பெருந் துன்பத்துக்கிடையே குடியை அறவே விட்டனர்; தம்மைத் தாம் உணரலாயினர்; தம் மனைவி மக்களைப் பற்றிய கவலை கொண்டனர்; அவர்தம் வருமானம் அப்படியே வீடுவந்து சேரலாயிற்று. இன்று அக் குடும்பங்கள் மெய்யாகவே இன்பமாக வாழ்கின்றன. இங்ஙனம் அரசாங்கம் செய்துள்ள குடி நீக்கச் சட்டம் இந்தியா முழுவதும் பரவி, மதுபானக் கடைகள் அறவே ஒழிக்கப்படுமாயின், இந்தியாவின் வறுமைக்குரிய காரணங்களுள் ஒன்றை நீக்கியவாறாகும்.

முடிவு

4. மனிதரை மாக்களாக்கி மனிதத் தன்மையை ஒழித்துப் பலவிதக் கேடுகட்கு உள்ளாக்கிவரும் மதுபானங்களை ஒழிப்பதில் அரசாங்கத்தாரும் பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைத்தல் அவசியமாகும். 'குடி' ஒழியும் நாளே 'குடி' உயரும் நாளாகும்.

52. பாடங்களைத் தாய் மொழியிற் கற்பித்தல்

குறிப்புகள் :—1. பிற பாடங்களைத் தாய் மொழியில் கற்பதன் அவசியம்
2. அரசியலார் முயற்சி
3. அதன் குறைபாடுகள்
4. குறை நீக்க வழி
5. முடிவு

கட்டுரை

பிற பாடங்களைத் தாய் மொழியில் கற்பதன் அவசியம்

1. நமது தாய்மொழி தமிழ். நாம் படிக்கும் எல்லாப் பாடங்களும் தமிழில் அமைந்திருப்பின், நமது தமிழ் நடை மிடுக்குடையதாக இருக்கும்; தமிழ் நன்றாக வளமுறும். தமிழை அறிந்தவர் நம்முட் பலராதலின், அவர்கள் அனைவரும் பலவகைச் சாத்திர நூல்களைத் தமிழ் மொழியிற் படித்தறிந்து உலக அறிவைப் பெற இயலும். இன்று பலவகைச் சாத்திர நூல்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவை ஆங்கிலம் படித்தவர்க்குப் பயன்படுகின்றனவே ஒழியத் தமிழ் படித்த இலட்சக் கணக்கான மக்கட்குப் பயன்படுவதில்லை. நம் நாட்டு விவசாயிகள், கைத்தொழிலாளர் முதலிய பலதிறப்பட்டவர் தத்தம் தொழில் முறைகளை அறிந்து தொழிலைப் பெருக்குவதற்கு உதவியாக மேனாட்டுத் தொழில் நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். வான சாத்திரம், நில சாத்திரம், இரசாயனக்கலை, பௌதிக சாத்திரம் முதலிய பல திறக் கலைஞானங்கள் தமிழில் இருப்பின், விவசாயிகளும் மற்றவரும் அவற்றைப் படித்துப் பயன் பெறுவர். இந் நன்

முறைக்கு அடிப்படையாகவே பள்ளிக்கூடங்களில் சரித்திரம், விஞ்ஞானம் முதலிய பல கலைகள் தமிழில் போதிக்க வேண்டும். அச் சிறு நூல்களைப் படித்தேனும் மாணவரும் பொது மக்களும் ஓரளவு பல்கலை அறிவைப் பெறுதல் கூடும்.

அரசியலார் முயற்சி

2. இந் நற்பயனை நன்கு உணர்ந்தே அரசாங்கத்தார், உயர் கலாசாலைகளில் இதுகாறும் ஆங்கிலத்திற் கற்பிக்கப் பட்டு வந்த கலைகள் அனைத்தும் தாய் மொழியிலேயே கற்பிக்கப்படல் வேண்டும் என்ற சட்டம் ஏற்படுத்தினர். அவ் விதிப்படி இன்றும் பல பள்ளிகளில் தாய் மொழியிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. எல்லா நூல்களும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர் பலர் ஒவ்வொரு சாத்திரம் பற்றியும் பல நூல்களைத் தமிழ் மொழியில் எழுதியுள்ளனர்.

அதன் குறைபாடுகள்

3. ஆனல், இப் பாட நூல்களால் தமிழ் மொழி வளருமா? எனின், இன்றுள்ள நிலையில் 'வளராது' என்றே உறுதியாகக் கூறலாம். ஏன்? இன்றைய பல்கலை நூல்களைத் தமிழில் எழுதுகின்றவர் ஆங்கிலப் பட்டதாரிகள்; சிறிதளவு தமிழ் கற்றவர். அவர்களுட் பலர் தமிழ் மொழிக்கேற்ற வாக்கிய முடிபு, வாக்கிய அமைப்பு முதலிய—மொழிக்கு அவசியமாயுள்ள பண்புகளை நன்கு அறியாதவர்கள்; மேலும் தெர்மாமீட்டர், ஆஸிட், டெஸ்ட் ட்யூப் என்றெல்லாம் தமிழ் நூல்களில் ஆங்கிலச் சொற்களை எழுதிவிடுகின்றனர். இத்தகைய பிழைபட்ட நடையே இன்றுள்ள பல்கலை சம்பந்தமான தமிழ் நூல்களில் காணப்படுகிறது. இப் பாட நூல்களே ஒரு நாளில் சுமார் மூன்று மணிநேரம்

வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன. தமிழ்ப் பாடம் ஒரு நாளையில் முக்கால் மணியே கற்பிக்கப்படுகிறது. மொழியைப் பண்படுத்தும் தமிழ் நடை தமிழ் வித்வான்களால் முக்கால் மணி நேரம் கற்பிக்கப்படுவதும், ஆபாசத் தமிழ் நடை மூன்று மணி நேரம் கற்பிக்கப்படுவதும் நீடிக்குமாயின், முக்கால் மணி நேரத்திற் கற்பிக்கப்படுந் தமிழ் நடையும் நாளடைவில் ஆபாச நடையாக மாறும் என்பதில் ஐயமில்லை.

குறை நீக்க வழி

4. இக் குறை நீக்கப்பட வேண்டுமாயின்—தமிழ் நடை எப்பொழுதுமே நன்றாக இருக்கச் செய்ய வேண்டுமாயின்—தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல அறிஞர் பலரைக் கொண்டு அரசாங்கம், அந்தந்தக் கலைக்குரிய ஆங்கிலச் சொற்கட்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தயாரிக்கச் செய்ய வேண்டும்; அச் சொற்களையே நூல் எழுதுபவர் பயன்படுத்த வேண்டும் என்னும் விதியை அமைத்தல் வேண்டும்; ஆசிரியர்கள் எழுதி முடித்த நூலைத் தமிழ்ப் புலவர் மேற்பார்வை யிட்டுத் தமிழ் நடையைச் செப்பஞ் செய்து, நன்முறையில் வெளிப்படுத்தல் வேண்டும்.

முடிவு

5. இம் முறைப்படி வேலை நடைபெறுமாயின், பல கலைகளும் நல்ல தமிழ் நடையில் வெளிவரும். தமிழ் மொழி தன் எழிலுடன் என்றும் விளங்கும்; தமிழ் மாணவரும் நற்றமிழ்ப் பயிற்சி பெற்று, நற்றமிழர் ஆவர்.

53. இந்து முஸ்லிம் ஒற்றுமை

குறிப்புகள் :—1. இந்திய வரலாறு
2. முஸ்லிம்கள் யார் ?
3. இந்துக்களும் முஸ்லிம்களும்
4. ஒற்றுமைக்கு உரிய வழிகள்
5. முடிவு

கட்டுரை

இந்திய வரலாறு

1. இந்தியா, பண்டைக் காலம் முதலே வெளி நாட்டினர் பலருக்கும் புகலிடமாக இருந்திருக்கிறது. இதனால் இன்றைய இந்தியாவில் பல நாட்டவர் கலப்பு மிகுதியாகக் காணப்படுகிறது; பழைய ஆஸ்ட்ரேலியர், திராவிடர், ஆரியர், நாகர், பாரசீகர், மங்கோலியர், அராபியர், ஆப்கானியர் முதலிய பல நாட்டவர்—பலதிறத்தவர்—கலப்பு இருந்துவருகிறது. மதவாரியாக ஆராயின், ஹிந்து மதத்தார், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், சீக்கர், பாரசீகர், பௌத்தர், சமணர் எனப் பலதிறத்தாராவர். இவருள் இந்துக்கள் சுமார் 22 கோடியாவர்; முஸ்லிம்கள் 9 கோடியாவர். ஏனைய பகுதியார் தனித்தனியே சில இலட்சக்கணக்கானவரே ஆவர்.

முஸ்லிம்கள் யார் ?

2. இந் நாட்டில் உள்ள முஸ்லிம்கள் பெரும்பாலார் பழைய ஹிந்துக்களே ஆவர்; பின்னரே முஸ்லிம் மதத்தைத் தழுவியவர் ஆவர். வட இந்தியாவிலும் டெக்கானிலும் சுல்தான்கள் ஏறக்குறைய 600 வருட காலம் இந்தியாவை ஆண்டனர். அக் காலத்தில் ஹிந்துக்கள் பலர் முஸ்லிம்கள்

ஆயினர். அவர்கள், மதத்தில் வேறுபட்டவரே அன்றி நாட்டில் வேறுபட்டவர் அல்லர். அவர்கள் மதத்தில் முஸ்லிம்கள்; ஆனால் இந்தியர். எனவே, இந்துக்களுக்கோ—பிற மதத்தினர்க்கோ உரிய எல்லா வகை உரிமைகளும் முஸ்லிம்கட்கும் உண்டு. நாட்டின் நன்மை—தீமைகள் பற்றிய செய்திகளில் அவர்கட்கும் பங்கு உண்டு.

இந்துக்களும் முஸ்லிம்களும்

3. இதுகாறும் நாட்டு விடுதலைப் போரில் முஸ்லிம்களும் தங்கட்கு உரிய கடமைகளைச் செய்து வந்தார்கள்; முஹம்மத் அலீ, ஷௌக்கத் அலீ, டாக்டர் அன்சாரி போன்ற பெயர் பெற்ற முஸ்லிம் தலைவர்கள் நாட்டு விடுதலைப் போரில் சிறை சென்றனர்; தந்நலமற்ற பணிகள் பல செய்தனர்; இன்றும் இரண்டொருவர் செய்துவருகின்றனர். ஆனால், இன்று முஸ்லிம் சமூகம் காங்கிரஸ் பேரவையுடன் கருத்து வேறுபட்டு முஹம்மத் அலீ ஜின்னாஹ் என்னும் பெரியார் தலைமையின்கீழ் ஒன்றுபட்டுத் தனித்து இருக்கின்றது. இக் காரணம் பற்றிச் சிற்சில இடங்களில் இரு சமூகத்திலும் உள்ள பாமர மக்களின் அறியாமையால் சில கலகங்கள் உண்டாகி வருகின்றன. அவற்றினைச் சிலர் 'ஹிந்து—முஸ்லிம் கலகங்கள்' என்று பெயரிட்டு மிகைப்படுத்திவிடுகின்றனர். இவ் வறிவற்ற செயல்களால் இருதிறத்தார்க்கும் பகைமை வளர்கின்றது. சில ஹிந்து அதிகாரிகள் உள்ள இடங்களில் முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்றும், முஸ்லிம்கள் மிகுதியாக உள்ள இடங்களில் ஹிந்துக்கள் கொடுமைப் படுத்தப்படுகின்றனர் என்றும் பலவாறு கூறப்படுகின்றன. உண்மை எங்ஙனமாயினும், இவை எல்லாம் சமூக நன்மைக்கோ, நாட்டு நன்மைக்கோ ஏற்றன அல்ல. இவை யாவும் ஒழிதல் வேண்டும்.

ஒற்றுமைக்கு உரிய வழிகள்

4. இவை எங்ஙனம் ஒழியும்? இரு சமூகத்தவரும் விரிந்த மனப்பான்மை உடையராக நடந்துகொள்ளல் வேண்டும்; ஒருவர் சமயச் சடங்குகளையும் விதிவிலக்குகளையும் மற்றவர் மதித்து நடத்தல் வேண்டும்; பிறர் மனம் எக்காரணம் கொண்டும் புண்படாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். நாட்டு விஷயத்தில் அந்தந்த மதத்தவர் வீதாசாரப்படியுள்ள உரிமைகளைக் கொடுக்க வேண்டும்; முஸ்லிம் மதத்துக்கோ, கலைக்கோ தம்மால் ஊறு நேராவண்ணம் பார்த்துக்கொள்வது ஹிந்துக்கள் தலையாய கடமையாகும். அங்ஙனமே ஹிந்துக்கள் மதத்துக்கோ கலைக்கோ தம்மால் பங்கம் உண்டாகாமல் நடந்துகொள்ளல் முஸ்லிம்களின் தலையாய கடமையாகும். இருதிறத்தாரும் இந் நாட்டிற் பிறந்தவர்; இந் நாட்டிற்கு உரியவர்; இந் நாட்டு நன்மை-தீமைகளிற் பங்கு கொண்டவர் என்னும் எண்ணம் இருவர்பாலும் வேரூன்றி வளர்தல் வேண்டும். நாட்டைப்பற்றிய எத்தகைய செய்தியையும் இருதிறத்தாரும் ஒருமனப்பட்டுக் கலந்து செய்வதே அறிவுடைமையாகும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருவர்பாலும் மிளிர்தல் வேண்டும்; ஒருவரை ஒருவர் உள்ளத் தூய்மையோடு நம்புதல் வேண்டும்; நம்பி மதித்தல் வேண்டும்.

முடிவு

5. இங்ஙனம் இந்துக்களும் முஸ்லிம்களும் மனமொத்து வாழ்வாராயின், இந்தியச் சமூகம் விரைவில் முன்னேற்றம் பெறும்; தனியாட்சி முறைக்கு ஏற்ற நிலையையும் பெற்றதாகும்.

---

54. மாதர் இயக்கம்

குறிப்புகள் :—1. பெண்ணின் பெருமை
2. பிற நாட்டுப் பெண்டிர்
3. நம் நாட்டுப் பண்டைப் பெண்டிர்
4. பெண்கள் முன்னேற்றம்
5. முடிவு

கட்டுரை

பெண்ணின் பெருமை

1. உலகம் ஆண் - பெண் என்னும் இரண்டு பகுதிகளால் ஆக்கப்பட்டதாகும். இவ்விரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. இவ்விரண்டும் ஒன்றுபட்டு நடவாவிடின், உலகம் இல்லை. பெண்மையும் ஆண்மையும் இயைந்து நடப்பதே உலகமாகும். எல்லா உயிர்களிடத்தும் ஆண் - பெண் சக்திகள் அமைந்துள்ளன. எனவே, ஆணுக்கு உள்ள அளவு பெருமை, பெண்ணுக்கும் இயற்கையிலேயே அமைந்துள்ளது என்பது அறியத் தக்கது. பெண், தாய் என்னும் தன்மையில் இயங்குவதால், பெண் நலன் பெரிதும் காக்கப்படல் வேண்டும். ஒரு நாட்டு நன்மை தீமைகள் அந் நாட்டுப் பெண் மக்கள் நிலையைப் பொறுத்தே நிற்பனவாகும். பெண் பெருமை பெற்றால் நாடும் பெருமையுறும். பெண்கள் பெருமைப் படுத்தப்படும் நாளே நமது நாட்டு முன்னேற்றத்திற் கேற்ற நன்னாள் ஆகும்.

பிற நாட்டுப் பெண்டிர்

2. இங்ஙனம் பெண்ணின் பெருமையை நன்குணர்ந்து நடப்பவர் மேனாட்டாரே ஆவர். அவர்கள் தம் பெண்கட்கு உலக அறிவைப் புகட்டிப் பெண்கள் இயக்கங்களைத் தோற்று

வித்துப் பணியாற்றக் கற்பிக்கின்றனர்; பெண்கள் முன்னேற்றத்தில் ஆடவர் பெரும் பங்கு கொண்டிருக்கின்றனர். சான்றாக, இங்குச் சில நாட்டு மாதர் இயக்கங்களைப் பற்றிக் காண்போம்:

நாகரிகத்திற் பிற்போக்கு உடையதாக இருந்த துருக்கி, அதன் இரக்ஷகராகத் தோன்றிய கமால் பாஷாவின் கட்டுத் திட்டங்களால் முற்போக்கு அடைந்தது; பெண்கள் முக்காட்டையும் மூலை வீட்டையும் ஒழித்துப் பள்ளிக்கூடம் சென்றனர்; ஆடவரோடு கல்விச் சாலைகளில் போட்டியிட்டுக் கற்றனர்; அங்ஙனம் கற்ற பலர் இன்று அரசாங்க உத்தியோகங்களிலும், குத்தகை வசூல் வேலையிலும் அமர்ந்துள்ளனர். பலர் சட்ட நிபுணராகவும், வைத்திய நிபுணராகவும் இருக்கின்றனர்; நகர சபைத் தேர்தல்களிலும் பெண்கள் பலர் பங்கு கொள்கின்றனர். கல்வி கற்ற பெண்கள் கல்வி இல்லாப் பெண்கட்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கின்றனர். துருக்கியில் மாதர் இயக்கங்கள் பல பொதுத் தொண்டு ஆற்றி வருகின்றன; சில பத்திரிகைகளைப் பெண்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக நடத்தி வருகின்றனர். அரசாங்கமும் பெண்கள் முற்போக்கில் பேரூக்கம் கொண்டுள்ளது கவனிக்கத் தக்கது.

வைதிகக் கொள்கைகள் நிறைந்த எகிப்து நாட்டிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர்; மூடப் பழக்க வழக்கங்களை அறவே விட்டுக் கல்வி கற்று வருகின்றனர்; பல இயக்கங்களைத் தோற்றுவித்துப் பணியாற்றி வருகின்றனர்; சில பத்திரிகைகளை நடத்தி வருகின்றனர்.

சீன நாட்டிலும் பெண்கள் இயக்கம் நன்றாக வேலை செய்துவருகின்றது. சீனப் பெண்ணுக்குத் தந்தை சொத்திலும் பங்குண்டு; கணவன் சொத்திலும் பங்குண்டு. அவள் அச்சொத்துக்களைத் தன் விருப்பம் போல அனுப

விக்கலாம், விற்கலாம், எது வேண்டுமாயினும் செய்யலாம். சீனப் பெண்கள் தாமாகக் கணவரைத் தேர்ந்து மணக்கலாம். பெண்கள் 15 வயதான பிறகே மணக்க வேண்டும் என்பது சீன அரசாங்கச் சட்டமாகும். அரசாங்கம் பெண்கள் முன்னேற்றத்தில் பெருங் கவலை கொண்டுள்ளது; அவர்கட்குப் பல வழிகளிற் பொருள் உதவி புரிகின்றது. கல்வி கற்ற சீனப் பெண்கள் போலீஸ் படை, துப்பறியும் வேலை முதலியவற்றிற் பங்கு கொண்டுள்ளனர்.

ஜப்பானியப் பெண்கள் அளவு கடந்த முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கலந்து கொள்ளாத இயக்கமே ஜப்பானில் இல்லை என்னல் மிகையாகாது. அவர்கள் மேற்கொள்ளாத தொழிலும் இல்லை. அவர்கள் தமக்கெனப் பல பத்திரிகைகளை நடத்தி வருகிறார்கள்; ஜப்பான் தலைநகராகிய டோக்கியோவில் மட்டும் பெண்கட்கென இருபதுக்கு மேற்பட்ட செய்தித் தாள்கள் வெளிவருகின்றன எனின், அவர்தம் முன்னேற்ற உணர்ச்சியை என்னென்பது!

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பெண்கள் பெற்று வரும் முன்னேற்றமும் போற்றத் தக்கதே ஆகும். அந்நாடுகளிற் பெண்கள் அரசாங்க உத்தியோகங்களில் இருக்கிறார்கள்; அரசியற் சபைகளில் இருக்கிறார்கள். அவர்கள் 'சுதந்தர வாழ்வே சுக வாழ்வு' என்னும் கொள்கை உடையவர்கள். அவர்கட்கு ஆடவர் தரும் மதிப்புச் சிறிதன்று.

நம் நாட்டுப் பண்டைப் பெண்டிர்

3. இன்று இந்நாடுகள், பெண்கள்பால் காட்டிவரும் பெருமை நமது பண்டைத் தமிழகத்திலும் காட்டப்பட்டது என்பதைச் சங்கத் தமிழ் நூல்களால் நன்கறியலாம். ஔவையார் ஓர் அரசனிடமிருந்து மற்றோர் அரசன்பால் தூது சென்

ரூர்; பெண்கள் பலர் இலக்கண நூல்களை இயற்றியுள்ளார்கள்; அரசர்களோடு சரியாசனத்தில் அமர்ந்து, தங்கள் கல்விப் பெருமையைக் கவினுறக் காட்டியுள்ளார்கள். அக்கால அரசமா தேவியரும் அரசர் மகளிரும் புலமை பெற்று விளங்கினர்; கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர்; முழு உரிமையுடன் வாழ்வு நடத்தி வந்தனர்.

பெண்கள் முன்னேற்றம்

4. அத்தகைய தமிழ்ப் பரம்பரையிற் பிறந்த இன்றைய தமிழராய நாம், நம் பெண்கட்குப் பண்டை உரிமையை வழங்குதல் அன்றோ முறை! உரிமை உள்ள இடத்திற்றான் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் தலைகாட்டும்; அவர்களைப் படிக்கவிடல் வேண்டும்; பல கலைகளில் வல்லவராகச் செய்வித்தல் வேண்டும்; பல உத்தியோகங்களிற் புகவிடல் வேண்டும்; அவர்கள் தம்மைத் தாமே பாதுகாக்கக் கூடியவராக்குதல் வேண்டும்; பரந்த உலக அறிவைப் பெறச் செய்தல் வேண்டும்; தம் கடமையை உணர்ந்து முழுப் பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு வசதியளித்தல் வேண்டும்.

முடிவு

5. இங்ஙனம் செய்வோமாயின், நம் பெண்கள் சமூகம் விரைவில் முன்னேற்றம் பெறும்; பெண்கள் முன்னேற்றமே எதிர்கால மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படை ஆதலின், இன்றுள்ள பெண்கள் முன்னேற்றத்தில் ஆடவர் மிக்க கவலை கொள்ளுதல் இன்றியமையாததாம்.

---

55. ஒலிபரப்பி (ரேடியோ)

குறிப்புகள் :—1. ரேடியோ — யாது ?
2. அதன் அமைப்பு முறை
3. அதனைக் கண்டறிந்தவர்
4. அதன் பயன்

கட்டுரை

ரேடியோ—யாது ?

1. ரேடியோ என்பது, ஒருவர் ஓரிடத்திற் பேசுவதையோ பாடுவதையோ பிறிதோர் இடத்திற் கேட்கச் செய்யும் கருவிகளின் தொகுதியாகும். இஃது இக் காலத்தில் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் அமைப்பு முறை

2. மின்சார அலைகள் ஒரு விநாடிக்குச் சற்றேறக் குறைய 1,86,000 மைல் தொலைவு விரைந்து செல்லும் இயல்புடையன. அவை 'விண்' எனப்படும் 'ஈதர்' வழியே கொண்டு செல்லப்படுகின்றன. அவை வான் வழிச் செல்லுங்கால் வானில் தோன்றும் எல்லாப் பொருள்களையும் ஊடுருவிச் செல்லும். ஓரிடத்தில் நாம் பேசும் ஒலியை மின்சார அலைகளாக மாற்றும் கருவி அமைக்கப்பட்டிருக்கும். நாம் அவ்விடத்திற்றான் பேசுதல் வேண்டும். நாம் அங்ஙனம் பேசும் செய்தி குறிப்பிட்ட இடத்திற்கு விண் அலைகளின் உதவியால் அனுப்பப்பெறுகின்றது. அங்கு, இம் மின்சார ஆற்றலை மீண்டும் பழைய ஒலி வடிவமாக மாற்ற வல்ல கருவி அமைக்கப்பட்டுள்ளது. அதன் உதவியால் செய்தி எல்லோருக்கும் கேட்கும். இவ்வாறே பாட

கர் ஒருவர் பாடுகையில், எலெக்ட்ரோ மாக்னட் என்னும் மின் காந்தத்தால் ஆகிய கருவி ஒன்று, அப் பாடலில் உள்ள பலவகை ஓசைகளை மின் அலைகளாக மாற்றி, வான் வெளியிற் செலுத்துகின்றது. இந்த அலைகளைத் தூரத்தில் உள்ள 'ரிசீவர்ஸ்' என்னும் 'வாங்கிகள்' ஏற்றுக்கொண்டு, இவற்றை 'ஒலி பெருக்கி' என்னும் 'லவுட் ஸ்பீக்கர்' மீது பாய்ச்சி, அப்பாடலைத் தெளிவாய்க் கேட்கும்படி செய்கின்றன. இக் கருவிகள் அனைத்தும் சேர்ந்த அமைப்பே ரேடியோ (ஒலிபரப்பி) என்பது.

அதனைக் கண்டறிந்தவர்

3. இவ் வியத்தகு அமைப்பைக் கண்டறிந்த பெரியார் இட்டாலி நாட்டு விஞ்ஞானியாகிய மார்க்கோனி என்பவராவர். இவர், இளமை முதலே இத்தகைய ஆராய்ச்சிகளில் பேருக்கம் கொண்டவர். இவரே மின்சார அலைகளைக் கண்டவர்; அவற்றைத் தம் விருப்பம் போல மாற்றும் முறையைக் கண்டவர்; 1896-ல் கம்பியில்லாத் தந்தியைக் கண்டறிந்தவர்; இவர், தமது 27 வயதிற்குள்ளேயே நோபேல் பரிசைப் பெற்றார்; ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குக் கம்பியில்லாத் தந்திமூலம் பேச வசதியளித்த முதற் பெரியார் இவரே. இவர் பட்ட இன்னல்கள் பல; ஆராய்ச்சியில் இராப் பகலாக உழைத்தார்; மறை பொருளில் செய்திகளை அனுப்பப் பல ஆண்டுகள் பாடுபட்டு உழைத்தார்; வெற்றி பெற்றார். இப் பெரியார் இட்டாலிய அரசாங்கத்தவரால் நன்கு மதிக்கப் பெற்றார்; உலகப் பல்கலைக் கழகங்களால் மதிப்பளிக்கப் பெற்றார்; இவர் கண்டறிந்த ரேடியோ மூலமே 'தொலைக் காட்சி' என்னும் டெலிவிஷன் கண்டறிய வழி ஏற்பட்டது. இப் பேரறிஞர் 1937-ல் காலமானார். ஆயினும், இவர் உழைப்பின் பயனை இன்று உலகம் அனு

பவித்து வருகின்றது. இப் பெரியார் போன்ற ஆராய்ச்சி யாளர்களே 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்பதில் ஐயம் உண்டோ?

அதன் பயன்

4. ஒலிபரப்பியின் பலவகை நன்மைகளிற் சிறந்தது, உயிர்களைக் காத்தல் ஆகும். இது, வழிதப்பிச் செல்லும் கப்பல்கட்கு வழிகாட்டியாக உதவுகிறது. ஒரு கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கு முன் ரேடியோ மூலம் செய்தி அறிவிக்கப்படின், உடனே உதவிக்குப் பல கப்பல்கள் போய் உதவுகின்றன; பிரயாணிகளையும் மாலுமிகளையும் காக்கின்றன. வான ஊர்திகளிற் செல்லும் பிரயாணிகளும் இங்ஙனமே காக்கப்படுகின்றனர். ஆயிரக் கணக்கான கற்களுக்கு அப்பால் உள்ள அரசாங்கங்கள் நேருக்கு நேரே பேசிக்கொள்வதைப் போலச் சிறு போதில் பேசிக்கொள்ள இந்த ரேடியோ அமைப்புப் பேருதவியாக இருக்கின்றது. ரேடியோ இத்தகைய பல துறைகளில் பயன்படுகிறது. நமது நாட்டில் நாம் இதனால் டெல்ஹி, பம்பாய், கல்கத்தா முதலிய இந்திய நகரச் செய்திகளையும் அந் நகரங்களிலிருந்து பாடும் பாடல்களையும், மாஸ்கோ, பாரிஸ், பெர்லின், ரோம், லண்டன், டோக்கியோ, வாஷிங்டன் முதலிய அயல் நகரங்களிலிருந்து பேசும் பேச்சுகளையும் பாடும் பாடல்களையும் அவ்வப்பொழுதே கேட்டு மகிழ்கின்றோம்; இம் முறையால் பல நாட்டார் இசைகளையும் பாடல்களையும் பேச்சு முறையையும் பிறவற்றையும் நாம் இருக்கும் இடத்திலிருந்தே காதாற் கேட்டு இன்புறுகின்றோம். இப்பெரு வசதி அளித்த மார்க்கோனிக்கு நமது நன்றியறிதல் உரியதாகுக.

---

56. போரினால் ஏற்படும் நன்மை தீமைகள்

குறிப்புகள்.:—1. போருக்குக் காரணங்கள்
2. இன்று நடைபெறும் போர்
3. நன்மை தீமைகள்
4. முடிவு

கட்டுரை

போருக்குக் காரணங்கள்

1. மண் ஆசையால் ஏற்படுவது போர். பிறர் ஆதிக்கம் ஏற்படலாகாது என்னும் பொறாமையால் உண்டாவது போர். தன்னாதிக்கமே யாண்டும் பரவி இருத்தல் வேண்டும் என்னும் பேராசையால் உண்டாவது போர்.

இன்று நடைபெறும் போர்

2. இன்று ஐரோப்பாவில் நடைபெறும் போர் மண்ணாசையால் ஏற்பட்டதே யாகும். ஹிட்லர், ஜெர்மன் சர்வாதிகாரியாவர். அவர், சென்ற ஐரோப்பியப் பெரும் போருக்கு முன்னர் ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளாக இருந்தவற்றைத் தம்மிடம் தருமாறு மற்ற வல்லரசுகளைக் கேட்டார். அவை இணங்கவில்லை. அவர் போலந்து தேசத்தில் சேர்ந்திருந்த பழைய ஜெர்மனிக்குச் சொந்தமான நிலத்தைத் திருப்பித் தருமாறு கேட்டார்; அந் நாடு அதனைத் தர மறுத்தது. அதனால்தான் போர் மூண்டது. அதற்கு முன் ஹிட்லர் ஆஸ்ட்ரியா, ஸ்லோவேகியா, ரைன்லண்ட் முதலிய இடங்களை ஜெர்மனியோடு சேர்த்துவிட்டார். அவை பழைய ஜெர்மன் நாட்டுப் பகுதிகளேயாம். ஆனால், அப்போது போர் நிகழவில்லை. போலந்தில் மட்டுமே ஜெர்மனி சண்டை செய்ய

நேர்ந்தது. இச் சண்டை மூன்று வார காலம் நீடித்தது. போலந்து, போரில் தோற்றது. போலந்தை ஜெர்மனியும் ரஷ்யாவும் பங்கிட்டுக்கொண்டன. ஜெர்மனி போலந்தின் மீது படையெடுத்தவுடன், பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் தொடுத்தன. போலந்தில் வெற்றி பெற்ற பிறகு, ஹிட்லர் திடீரென்று நார்வேயையும் டென்மார்க்கையும் கைப்பற்றினர்; பிறகு 1940-ஆம் ஆண்டு மே மாதம் திடீரென்று ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் என்னும் நாடுகள்மீது படையெடுத்தார்; ஐந்து நாட்களுக்குள் ஹாலண்ட் சரண் புகுந்தது; பதினெட்டு நாட்களில் பெல்ஜியம் சரண் புகுந்தது. பின் ஜூன் 16-ஆந் தேதி பிரான்ஸ் சரண் புகுந்தது. இந்தப் பெருவெற்றிக்குப் பிறகு இட்டாலி ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டது. பிரிட்டன் மட்டும் தனித்து நின்று இன்றளவும் இவ்விரண்டு வல்லரசுகளுடனும் கடும்போர் நடத்திவருகின்றது. இப்பொழுது யூகோஸ்லாவியா, கிரீஸ் என்னும் நாடுகளும் ஜெர்மன் ஆட்சிக்கு உட்பட்டு விட்டன. இங்ஙனம் போரில் அடிமைப்பட்ட நாடுகள் பல. போர் இன்றளவும் நடந்து வருகின்றது.

ஆசியாவில் மண்ணாசை கொண்ட ஜப்பான் நான்கு வருடங்களாகச் சீனாவுடன் கடும்போர் செய்துவருகிறது; சீனாவின் வட பகுதியைக் கைப்பற்றிப் பொம்மை அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அது, கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் காத்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா அளவு கடந்த ஆயுதங்களையும் கப்பல்களையும் உண்டாக்கி இங்கிலாந்திற்கு உதவி செய்து வருகின்றது. சுருங்கக் கூறின், ஒரு நாடு மற்றொரு நாட்டை நம்பவில்லை. எங்கும் குழப்பமும் கவலையும் சந்தேகமுமே குடிகொண்டுள்ளன. அடிமை நாடுகள் 'என்று உரிமை கிடைக்கும்!' என்று தவிக்கின்றன. உரிமை நாடுகள்

'என்று நமது உரிமை யாரால் பறிக்கப்படுமோ!' என்று அச்சங்கொண்டு அவதிப்படுகின்றன.

நன்மை தீமைகள்

3. இன்று நடைபெறும் 'மின்னல்' போரினுல், ஒரு குற்றமும் செய்யாத பாமர மக்கள் இல்லங்கள், மாடமாளிகைகள், சரித்திரப் புகழ்பெற்ற கட்டிடங்கள் தரைமட்டம் ஆக்கப்படுகின்றன. குடிகள் கொல்லப்படுகிருர்கள்; சிறை செய்யப்படுகிருர்கள்; பிடிக்கப்பட்ட நாட்டு மக்கள் உணவுக்கும் திண்டாடுகிருர்கள்; தொழிலாளர்கள் உறக்கமும் ஓய்வும் இன்றி இராப்பகலாக வேலேசெய்து துன்பப் படுகிருர்கள். கடலிற் செல்லும் கப்பல்களுக்கும் கப்பல் பிரயாணிகட்கும் ஆபத்து எந்த நேரத்தில் உண்டாகும் என்பது தெரியவில்லே. ஆகாயக் கப்பல்களுக்கும் அமைதி இல்லே. சண்டையிற் சேராத நாடுகட்கும் அமைதி இல்லே. இவ்வாறு யாண்டும் அமைதி இல்லே. விலேவாசிகள் ஏறி விட்டன. பணப்பஞ்சம் தாண்டவமாடுகிறது. வேலே இல்லாத் திண்டாட்டம் தலே விரித்தாடுகிறது. சுருங்கக் கூறின், போரினுல் தீமைகளே ஒழிய நன்மை மிகுதியாக இல்லே எனல் தவருகாது.

முடிவு

4. இப் போர்கள் என்றும் நடைபெருமல் இருக்க வேண்டுமாயின், உலக வல்லரசுகள் ஒன்றுகூடி, நாடுகளே ஒழுங்கான முறையில் பங்கிட்டு ஆள்வதே ஏற்ற முறையாகும். எல்லார்க்கும் யாண்டும் சம உரிமை இருக்குமாயின், போர் நடவாதன்ருே?

---

57. இந்தியாவின் இன்றைய நிலைமை

குறிப்புகள் :—1. பண்டை இந்தியாவும் இன்றைய இந்தியாவும்
2. இந்தியாவின் தொல்லைகள்
3. செய்ய வேண்டுவன
4. முடிவு

கட்டுரை

பண்டை இந்தியாவும் இன்றைய இந்தியாவும்

1. மக்களின் தொகுதியும் ஒன்றுபட்ட வலிமையுமே 'சமூகம்' என்பது. இந்தியச் சமூகம் என்பது 36 கோடி இந்தியரையும் அவர்தம் ஒன்றுபட்ட வலிமையையுமே குறித்தல் ஆகும். இன்று இந்தியச் சமூகத்தின் நிலைமை யாது? பண்டை நிலை யாது? என்பன கவனிப்பது நமது கடமை. பண்டைக் காலத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் போக்குவரவு வசதிகள் மிகக் குறைவு. எனவே, குறிப்பிட்ட ஒரு நாட்டினர் தமக்குள் ஒன்றுபட்டுக் கலந்து வாழ்ந்தனர்; தமக்குரிய கலைகள், நாகரிகம் என்பவற்றை வளர்த்துத் தங்களையும் உயர்த்திக்கொண்டனர். இக் காலத்தில் போக்குவரவு வசதிகள் மிகுதிப்பட்டுள்ளன; பல நாட்டு மக்களும் ஒன்று கூடி வாழ வசதி இருக்கின்றது. பலவித நாகரிகங்களைக் காணவும் கைக்கொள்ளவும் வசதிகள் இருக்கின்றன. கலைகள், வேண்டும் அளவு பெருகியுள்ளன. ஆயினும், மக்கள் நெருங்கிப் பழகப்பழக—அவர்களிடையே ஆன்ம நேய ஒருமைப்பாடு உண்டாக மட்டும் வழியேற்பட வில்லை. இதுவே யாவற்றினும் வேண்டப்படுவது. ஆயின், இஃது உண்டாதலே அருமையாக இருக்கின்றது. இக் கால உலக மக்கட்குள்—சிறப்பாக இந்திய மக்கட்குள் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் பரந்த மனப்பான்மை

இல்லை. இஃது இன்மையாற்றான் மனிதர் சமூகம் ஆன்ம அமைதி இன்றி அல்லலுறுகின்றது.

இந்தியாவின் தொல்லைகள்

2. இந்தியா மிகப் பெரிய கண்டம். அதனுள் பல மாகாணங்கள் உண்டு. ஒவ்வொரு மாகாணமும் பல மதத்தினரைக் கொண்டது; பல மொழியினரைக் கொண்டது; பலவகைக் கொள்கையரைக் கொண்டது. இந் நிலைமை, சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. இந் நிலைமை தவிர்க்க முடியாததாக இருந்து வருகிறது.

இந்தியாவில் உள்ள பெரிய மதம் இந்து மதம் என்பது. ஒரு கடவுள் வணக்கம் முதல் ஆயிரக் கணக்கான சிறு தெய்வ வழிபாடு ஈறாகக் கொண்டிருப்பது; மனப் பிரார்த்தனை முதல் உயிர்க்கொலை வரை யுள்ள வழிபாட்டு முறைகளைக் கொண்டிருப்பது. இம் மதத்தில் முதலில் சாதிகள் இல்லை. ஆயின், பின்னர்ச் சாதிகள் அசைக்க முடியாதபடி அமைந்துவிட்டன. இச் சாதி முறையால் இந்து மதம் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் நாயனர் திருவாக்கின் உண்மைத் தத்துவத்தை இழந்து தவிக்கிறது; இந்துக்களில் எட்டுக் கோடி மக்களைத் 'தீண்டத் தகாதவர்' என்று ஒதுக்கிவிட்டது; அவர்களை ஊர்கட்குப் புறத்தே தள்ளிவிட்டது; அவர்கட்கு எத்தகைய உரிமையும் அளிக்கத் தவறிவிட்டது. இஃதொன்றே இந்து மதத்தின் சீர்கேட்டிற்குப் போதிய காரணமாகும் அன்றோ? இந்து மதம், தான் உண்டாக்கிய சாதிகளால் மக்கட்குள் வேற்றுமையை உண்டாக்கினதே அன்றி, மன ஒற்றுமையை உண்டாக்கத் தவறிவிட்டது. சாதி வேறுபாடுகள் உள்ள இடத்தில் மன ஒற்றுமை உண்டாதல் எப்படி? மன ஒற்றுமையே சமூகத்தின் உயிர் நாடி. ஆனால், இந்து மதம் இவ்வுண்

மையை அறவே மறந்துவிட்டது. அது தன் பெருமையை இழந்துவிட்டது. திறமைக்கேற்ற தொழில்களைச் செய்வதை விட்டு, 'இன்னவர் இன்ன தொழிலைச்செய்ய வேண்டும்' என்னும் வரையறையை ஏற்படுத்தியது பெருந் தவறு. அதனால், 'திறமை' வளர்ச்சியுற வழியில்லை. தொழிலைப் பிறப்போடு பிணைத்த மூடத்தனத்தை என்னென்பது!

செய்ய வேண்டுவன

3. இந்தியா, ஒரு மன நிலை உடையதாக வேண்டுமாயின், சாதி வேறுபாடுகள் அறவே ஒழிதல் வேண்டும்; உயர்வு தாழ்வுகள் நீங்குதல் வேண்டும்; 'யாவரும் இந் நாட்டு மக்கள்' என்னும் உணர்ச்சி வேரூன்றுதல் வேண்டும். 'எல்லோருக்கும் சமூகத்தில் இடமுண்டு' என்னும் உண்மையை எல்லோரும் உணர்ந்து நடத்தல் வேண்டும். அந் நிலையிற்றான், இந்தியா சாதி பேதமற்று, மத வேறுபாடு அற்று—ஒரே மனித உணர்ச்சியுடன் பொலிவுற்று விளங்கும். அவ்வுயரிய நிலையிற்றான், இந்தியா உரிமைபெறத் தகுதி பெற்றதாகும். அந் நிலை பெறாமல், மனித உரிமையைத் தேடாமல், கேவலம் மண் உரிமையைத் தேடுதல்—குதிரைக்குமுன் வண்டியைப் பூட்டும் பைத்தியக்காரன் செயலையே ஒக்கும்.

முடிவு

4. ஆதலின், சாதிப் பூசல்கள், மதப்பூசல்கள், உயர்வு தாழ்வுகள் ஆகிய இவை அறவே ஒழிந்தாற்றான், இந்தியச் சமூகம் உயர் நிலையை எய்த முடியும். அஃது இராதவரை இந்தியா ஒருபோதும் முன்னுக்கு வராது.

58. மேனாட்டு நாகரிகம்

குறிப்புகள் :—1. மேனாட்டு நிலைமை
2. பண்டை இந்திய நிலைமை
3. செய்ய வேண்டுவன
4. முடிவு

கட்டுரை

மேனாட்டு நிலைமை

1. மேல் நாடுகள் ஒரு காலத்தில் உண்மை நாகரிகத்தையும் ஆன்ம வளர்ச்சியையும் பெற்றிருந்தன. ஆயின், அவை சென்ற இரு நூற்றாண்டுகளாக அவ்விரண்டையும் இழந்துவிட்டன. அவற்றைப் பிடித்தலைக்கும் அதிகார வெறியே இவ்விழவுக்குக் காரணமாகும். சிறிது காலமாகப் 'பேராசை' என்னும் நோய் மேனாடுகளைப் பிடித்து அலைக்கின்றது; அவற்றின் மன அமைதியையும் இன்ப வாழ்வினையும் சிறிது சிறிதாகச் சிதறடித்து வருகின்றது; ஆன்ம உணர்ச்சியையே அடியோடு ஒழித்து வருகின்றது. 'சர்வ தேச சங்கம்' என்ற ஒன்றை வைத்துக்கொண்டு, படைக்கல ஒழிப்புப் பற்றிப் பேசிக் கொண்டே எல்லா நாடுகளும் படைக்கலங்களை இரகசியமாகப் பெருக்கிக் கொண்டே சென்றன. இதனால், ஒரு நன்மையும் ஏற்படவில்லை. முடிவில் போரே மூண்டது; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கேவல நிலைமைக்கு மேனாடுகள் இறங்கிவிட்டன; மண்ணாசை மேலீட்டால், மனித இயல்பிற்கே மாறான இயந்திரங்களையும் போர்க் கப்பல்களையும் விஷக் காற்றுகளையும் உண்டாக்கிச் சேமித்த வண்ணமாக இருக்கின்றன. 'வெளியில் வேதாந்தம் பேசல்—உள்ளூரப் பிற நாடுகளைப் பிடித்தாள வழி தேடுதல்' என்னும்

கொடிய கொள்கை அம் மேனாடுகளைப் போரிற் கொண்டுவந்து விட்டுவிட்டது.

இயந்திர வலிமை மக்களை விலங்கு நிலைமைக்குக் கொண்டுவந்து விடுவதாகும். அந் நிலைமை உண்டானது முதல் மேனாட்டார், தம்மை உயர்ந்தவர் என்றும், பிறரைத் தாழ்ந்தவர் என்றும், பிறர் தமக்கு அடங்கி வாழவே பிறந்தவர் என்றும் அகங்காரத்தால் எண்ணித் தவிக்கின்றனர். அவர்கள் செல்வப் பெருக்கமும் இயந்திர பலமுமே 'நாகரிகச் சின்னங்கள்' என்று கருதுகின்றனர். அஃது உண்மையன்று. பேராசை மேனாட்டாரை வளர்த்து வருகின்றது. அவர்கள் திரைகடலோடித் திரவியம் தேடுகின்றனர்; இராப்பகலாக உழைக்கின்றனர்; ஆனால் மன அமைதி கண்டிலர்.

பண்டை இந்திய நிலைமை

2. பண்டை இந்திய மக்கள் மன அமைதி பெற்றவர்கள்; 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் கொள்கை உடையவர்கள்; ஒழுக்கத்திற்கே சமூகத்தில் முதல் இடம் தந்தவர்; செல்வத்தை அடுத்த நிலையிலேயே வைத்திருந்தனர். இந்தியாவில் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பட்டது. வாழ்க்கைக்குச் செல்வமே வேண்டப்படினும்—ஆன்ம வளர்ச்சிக்கு ஒழுக்கமே உயிர்நாடி யாகும் என்னும்—உயரிய தத்துவத்தை நம் முன்னோர் அறிந்து நடந்து வந்தனர். அப் பழக்கத்தாற்றான் இன்றளவும் இந்தியர், அந்நியரையும் இன் முகத்தோடு வரவேற்று உபசரித்து 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்டு' வாழ்கின்றனர்; செல்வத்தைவிட அறிவு நிலைக்கு மதிப்பளித்த மாண்பாற்றான், உலகத்திலேயே தோன்றியிராத வேதங்கள், உபநிஷத்துக்கள் முதலியன இங்குத் தோன்றலாயின,

ஆயினும், இன்றைய இந்தியா—மேனாடுகளின் சேர்க்கையால் பணத்தாசை பிடித்து அலைகின்றது; வழி வழி வந்த உயர்ந்த குணங்களை அறவே கைவிட்டு வருகின்றது. இந்தியாவின் இழி நிலைமைக்கு உரிய காரணங்களுள் இஃது ஒன்றாகும்.

செய்ய வேண்டுவன

3. மேனாடுகள் மண்ணாசையை விடுதல் வேண்டும்; ஒழுக்கமே சமூகத்தில் உயர்ந்தது என்பதை உணர்தல் வேண்டும்; செல்வத்திற்கு அதிக மதிப்பைத் தருதலை நிறுத்துதல் வேண்டும்; எல்லா நாட்டவரையும் சமமாக நினைந்து நடத்துதல் வேண்டும்; எந்த நிறத்தவர் ஆயினும் ஆண்டவன் மக்களே; நம் அருமைச் சகோதரரே என்பதை உணர்ந்து நடத்தல் வேண்டும்; உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுதலைத் தவிர்த்தல் வேண்டும்; மக்களது பாபங்கட்காகத் தம்மையே சிலுவையில் அறையச் செய்த நாசரேத்தூர் அடிகள் பொன் மொழிகளைப் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும்; எல்லா நாடுகளுடனும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுடன் வாழ அறிதல் வேண்டும். இங்ஙனம் மேனாடுகள் வாழுமாயின், இந்தியா உரிமை பெற்று விளங்குமன்றோ? பிற அடிமை நாடுகள் உரிமை பெற்று ஒளிரும் அல்லவா? எல்லா மக்களும் சகோதர உணர்ச்சியோடு வாழக்கூடும் அன்றோ?

முடிவு

4. மேனாடுகள் இங்ஙனம் வாழுமாயின், உலகில் உள்ள எல்லா அடிமை நாடுகளும் விடுதலை பெற்றுச் சுகமாக வாழ வழியுண்டு. எல்லா மக்களும் உண்மையான வாழ்க்கையின் பயனை நுகர்ந்து பேரின்ப நெறி நிற்க வசதியுண்டு. அந் நாள் என்று வரும்?

59. தாய் மொழி வளர்ச்சி

குறிப்புகள் :—1. தாய் மொழி — யாது?
2. அதன் பழமை
3. அதன் பெருமை
4. அதன் சிறுமை
5. செய்ய வேண்டுவன
6. முடிவு

கட்டுரை

தாய் மொழி — யாது?

1. நாம் பிறந்தது முதல் குடும்பத்தில் பேசி வருகின்ற மொழியே 'தாய் மொழி' என்பது. நமது தாய் மொழி தமிழ் ஆகும்.

அதன் பழமை

2. நமது தாய் மொழி மிக்க பழைமை வாய்ந்தது. அதன் காலம் இன்னது என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. இன்றுள்ள பழந் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் கி. மு. 6-ஆம் நூற்றாண்டினது. அஃது இடைச் சங்க நூலாகும். அந் நூல் செய்த தொல்காப்பியர், தமக்கு முன்பு பல இலக்கண நூல்கள் இருந்தன என்றும், இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்றும் கூறியுள்ளார். தலைச் சங்க காலம் கி. மு. 1000 ஆகலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பாரதப் போரில் இரு திறத்தார் படைகட்கும் உணவளித்தவன் உதியன் சேரலாதன் என்னும் சேர நாட்டு மன்னன். இதிகாச காலம் கி. மு. 1400—கி. மு. 600 என்று ரோமேஷ் சந்திர டட் போன்ற சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். அஃது உண்மையாயின், தமிழரசர் அப் பழங் காலத்திலேயே சிறந்திருந்தனர் என்பதை அறிய

லாம். பாரத வீரருள் ஒருவனான அர்ச்சுனன் பாண்டியன் மகளை மணந்துகொண்டான். பாரதத்திற்கு முற்பட்ட இராமாயண காலத்தில் பாண்டியர் தலைநகரம் அலைவாய் (கபாடபுரம்) என்பதாகும். 'அது செல்வச் சிறப்புடையது' என்று சுக்ரீவன் அநுமானுக்குச் சொல்லுகிறான். இதிலிருந்து இராமாயண காலத்திலும் தமிழகம் சிறந்த நிலையில் இருந்து வந்ததென்பதை அறியலாம். எனவே, தமிழ் மொழி மிக்க பழமை வாய்ந்தது என்பதை இதுகாறும் கூறியவற்றால் நன்கு உணரலாம்.

அதன் பெருமை

3. தமிழ் மொழி, தெலுங்கு-கன்னடம்-துளுவம்-மலையாளம் முதலிய திராவிட மொழிகளுக்கு முற்பட்டது பழைய நூல்களை உடையது; தனக்கென்றமைந்த தனி எழுத்துக்களை உடையது; மொழியின் தோற்றுவாயாக இருக்கும் தன்மை எழுத்து, உரு எழுத்து, உணர்வெழுத்து, ஒலி எழுத்துக்களை உடையது. இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் இஃதொன்றே இத்தகைய பெருமையை உடையது; ஏனைய இந்திய மொழிகள் வடமொழியின் உதவி இன்றி இயங்குதல் இயலாது. ஆயின், தமிழ் ஒன்றே வட மொழியின் உதவி சிறிதும் வேண்டாது இன்றளவும் தனித்தியங்க வல்ல ஆற்றல் படைத்த மொழி ஆகும்.

அதன் சிறுமை

4. இத்தகைய தனிமொழி வடமொழியின் ஆதிக்கத்தால்—தன் பழம் பெருமையை இழந்து நிற்கிறது; தமிழின் தனி எழில் இன்று குன்றிக் காணப்படுகிறது. பழைய நூல்களிலேயே சில வடமொழிச் சொற்கள் நுழைந்து அவை இருக்கும் இடத்திற்குரிய தமிழ்ச் சொற்களை மறக்கச்

செய்துவிட்டன. சமண, பௌத்த, வைதீக மதங்கள் தமிழ் நாட்டில் நுழைந்தவுடன் பல வட சொற்கள் தமிழில் இடம் பெற்றன. பிற்காலத் தேவார—திருவாசகப் பாக்கள், நாலாயிரப் பிரபந்தம், வைணவர் வியாக்யானங்கள், இராமாயண, பாரத நூல்கள் முதலியவற்றில் வடமொழிக் கலப்பு மிகுதியாக ஏறிவிட்டது. இதனால், நாளடைவில் தமிழ் தன் பழஞ் சொற்களை இழந்து வருகிறது; அவ்விடங்களில் வட சொற்களைப் பெற்று வருகின்றது. இங்ஙனமே ஆங்கிலத்தின் கூட்டுறவாலும் தமிழ் பல அருஞ் சொற்களின் ஆட்சியைப் பேச்சு வழக்கில் இழந்து வருகிறது வருந்தற்குரியது. இந்நிலைமை நீடித்திருக்குமாயின், தமிழ் மொழி இன்னும் ஆயிரம் ஆண்டுகளில் தன் தனிச் சிறப்பை இழந்துவிடும்; தனித் தியங்கும் ஆற்றலை இழந்துவிடும்; தமிழர் தம் தனிப்பட்ட கலை யுணர்வை இழப்பர். ஆதலின், இவ்விழி நிலைமை உண்டாக இடந்தரல் பெருந் தவறன்றோ?

தமிழ் நாட்டில் தமிழ் மக்கட்குத் தமிழ்ப் பெயர்கள் இல்லை; தமிழ் முறையில் வழி பாடுகள் இல்லை; தமிழைத் தனியே போதிக்கத்தக்க பள்ளிகள் இல்லை; தமிழ்ப் பணியாற்றத் தமிழ்க் கழகங்கள் இல்லை; தமிழ் மக்கட்கு, அவர்தம் தொன்மை நாகரிகத்தை எடுத்தோதச் சிறு நூல் வெளியீடுகள் இல்லை. தமிழர் எந்தக் கட்டுக்கும் அடங்காத பிட்டாரிகளாக—பாரதியார் கூறினாற் போலப் 'பாமரராய், விலங்குகளாய், ஊமையராய், குருடர்களாய், செவிடர்களாய்—நாமமது தமிழரெனக் கொண்டிங்கு' நடைப்பிணங்களாக இருக்கின்றனர். பின் தோன்றிய தெலுங்கு, மஹாராஷ்டிரம், வங்காளம் முதலிய சிறுமொழிகள் உயர் நிலை பெற்றுள்ள இக் காலத்தில், பெரு மொழியாகிய தமிழ், தமிழரது பொறுப்பற்ற நிலையால் தன் மதிப்பிழந்து

தவிக்கின்றது; மொழி, பெருமை இழந்தமையால், அம் மொழியைப் பேசுந் தமிழரும் மதிப்பிழந்து-கலை இழந்து-நாகரிகம் இழந்து தவிக்கின்றனர்.

செய்ய வேண்டுவன

5. தமிழ் உயர் நிலையை அடைய வேண்டுமாயின், தமிழர் அனைவரும் மொழிப் பற்று உடையவராக மாறுதல் வேண்டும்; ஆங்காங்குத் தமிழ்க் கழகங்களை ஏற்படுத்தித் தாய் மொழி வளர்ச்சிக்கு ஆக்க வேலைகள் செய்தல் வேண்டும்; தமிழ்-தமிழர் பற்றிய சிறு நூல்களை வெளியிட்டுத் தமிழர்க்குத் தமிழ்ப் பற்றை ஊட்டுதல் வேண்டும்; தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்கும், தெருக்களுக்கும், நகரங்கட்கும் இடுதல் வேண்டும்; தமிழ்த் திருவிழாக்களைக் கொண்டாடுதல் வேண்டும்; தமிழ் நூல்களைப் பாடங் கேட்டல் வேண்டும்; தமிழர் பண்டைப் பழக்க வழக்கங்களை இயன்ற அளவு கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

முடிவு

6. இதுகாறும் கூறியவற்றைக் கவனித்து நடப்பின், நமது மொழி மேனிலையை அடையும்; தமிழ் மாணவர் தமிழைத் தம் உயிரினும் சிறந்ததாகக் கருதி நடத்தல் வேண்டும்; அதன் வாழ்வு தம் வாழ்வாகவும், அதன் தாழ்வு தம் தாழ்வாகவும் கருதி நடத்தல் வேண்டும். தமிழ் வாழ்க!

60. என் வாழ்க்கையின் நோக்கம்

குறிப்புகள் :—1. எனது ஆர்வம்
2. எனது நோக்கம்
3. எனது கடமை
4. முடிவு

கட்டுரை

எனது ஆர்வம்

1. நான் சரித்திரம் எடுத்துப் படிக்கும் மாணவன். எனது உள்ளம் சரித்திர ஆராய்ச்சியிற் பேராவல் கொண்டுள்ளது; சிறப்பாக இந்திய சரித்திரத்தில் பண்பட்ட அறிவைப்பெற மனம் அவாவுகிறது. அதனால் நான் எம். ஏ. வரை கல்லூரியிற் சரித்திரம் எடுத்துப் படித்துப் பட்டம் பெற அவாவுகிறேன்; பட்டம் பெற்ற பிறகு, சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே சரித்திர ஆராய்ச்சி மாணவனாக இருந்து ஆராய்ச்சி அறிவைப் பெற விழைகின்றேன்.

எனது நோக்கம்

2. வின்ஸென்ட் ஸ்மித் போன்ற சரித்திரப் பேராசிரியர்கள் எழுதியுள்ள இந்திய சரித்திர நூல்களை இப்பொழுது படித்து வருகிறேன். அப்பேராசிரியர்தம் சரித்திர நூல்களில் தமிழ் நாட்டுப் பண்டைச் சரிதம் போதிய அளவு கூறப் பெறவில்லை. காரணம் - தமிழகத்து ஆராய்ச்சி போதிய அளவு நடைபெறாமையே ஆகும்; மேலும், அச் சரித்திராசிரியர்க்குத் தமிழ் இலக்கிய அறிவு இல்லை. தமிழ்ச் சங்க நூல்களைத் துருவி ஆராய்ந்து, தமிழ் நாட்டு அரசர்களைப் பற்றிய வரலாற்றை விரித்தெழுதும் தமிழர் இல்லை. அந்தோ! பரிதாபம்! தமிழர் இவ்வளவு கேவலமாக வாழ்

இன்றனரே! பழந் தமிழ்ப் பட்டினங்களான உறையூர், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, காயல், அலைவாய், முசிறி, தொண்டி, மதுரை, வஞ்சி, மஹாப்லிபுரம் முதலியவற்றை அகழ்ந்து பார்த்துப் பண்டை நாகரிகச் சின்னங்களை வெளிப் படுத்துதல் வேண்டும்; தமிழ் எழுத்துக்களைச் சோதித்து, அவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் கண்டறிதல் வேண்டும்; 'திராவிட நாகரிகம்' என்று பலரால் கருதப்படும் மோஹெஞ் சோ-தரோ நாகரிகத்தைத் தமிழ் நாகரிகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். வட இந்தியாவில் இருந்த பழைய திராவிடத்தின் நிலைமையை நன்கு அறிதல் வேண்டும்; திராவிட மொழிகள் சிதறுண்ட நிலையில் உயிரோடிருக்கும் ப்ராஹூயி, கோண்ட், கூய், ஒராஒன், இராஜ்மஹால் முதலிய மொழிகளைச் சோதித்தல் வேண்டும்; திராவிடச் சிற்பக்கலை, ஓவியக்கலை முதலிய கலைகளைத் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். வெளிநாட்டார், திராவிடரது பண்டை வாணிபத்தைப்பற்றி எழுதி வைத்துள்ள குறிப்புகளைப் படித்தல் வேண்டும். இவை அனைத்தையும் ஆராய்ந்த அறிவைக் கொண்டு, தக்க சான்றுகளுடன் தமிழகத்துச் சரித்திரத்தை நன்முறையில் எழுதி முடித்தல் வேண்டும் என்பதே எனது சிறந்த நோக்கம் ஆகும்.

எனது கடமை

3. நான் இந் நோக்கத்தை உளங்கொண்டு, சரித்திரக் கல்வியிற் சிறந்த புலமை எய்த அவாவுகின்றேன்; சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கும் 'கன்னிமாரா' நூல் நிலையத்திற்கும் அடிக்கடி சென்று, தென் இந்தியா சம்பந்தமான வரலாற்று நூல்களையும் பிற நூல்களையும் வாசித்து வருகின்றேன்; தென் இந்திய சாஸனங்களைப் படித்து மகிழ்கின்றேன்; கி. பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட தமி

மூரசரின் அரசியல் முறைகள் தெளிவாய்க் கிடைக்கின்றன. சங்க நூல்களைக் கொண்டு சங்க கால அரசர்தம் அரசியல் முறையை ஒருவாறு நிர்ணயிக்கலாம்; வெளிநாட்டார் எழுதி வைத்துள்ள குறிப்புகளைக் கொண்டும் தமிழரசர் அரசியல் முறையும் பிறவும் ஒருவாறு உணரலாம். இவை அனைத்தின் துணையைக் கொண்டு பழந்தமிழர் வாணிபம்-வாழ்க்கை-சமயம் - அரசியல் - கலை வளர்ச்சி - நாகரிகம் முதலியவற்றைத் தொகுத்து ஒரு நூல் எழுத விழைகின்றேன்; ஆராய்ச்சித் துறையில் இடம் கிடைக்காவிடின், கல்லூரியில் சரித்திராசிரியனாக அமர்ந்து, எனது நோக்கத்தை நிறைவேற்றுவேன். இதைச் செய்வதே எனது பெருங்கடமை என்று கருதுகிறேன்.

> "தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
> தோன்றலில் தோன்றாமை நன்று"

என்னும் நாயனார் நல்லுரைக் கேற்ப, நான் எனது பணியான கடமையைச் செய்து புகழ் பெற அவாவுகிறேன். திருவருள் துணை செய்யுமாக!

முடிவு

4. ஒவ்வொருவரும் என்னைப் போலக் குறிப்பிட்ட பொருள் பற்றி வேலை செய்வதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்வாராயின், தமிழ் நாடும் தமிழர் சமூகமும் சிறப்படையுமன்றோ? இத் தொண்டினால் இந்திய நாடு பெருமை பெற்றதாகுமன்றோ?

---

61. பழமொழிகள்

குறிப்புகள் :—1. பழமொழிகள்—யாவை ?
2. அவற்றால் அறியப்படுவன
3. முடிவு

கட்டுரை

பழமொழிகள்—யாவை ?

1. பழங் காலத்திலிருந்து கர்ண பரம்பரையாகப் பெரியோர்களால் கூறப்பட்டு வருவன பழமொழிகள் எனப்படும். இவை சிறப்பாகத் தமிழில் ஆயிரத்துக்கு மேற்பட்டனவாக இருக்கின்றன. இவை அவ்வத் தொழிலாளர் அனுபவ மொழிகள், கற்றறிந்த சான்றோர் அனுபவ மொழிகள், பாமர மக்கள் அனுபவ மொழிகள் எனப் பல வகைப்படும். இவற்றால் இவை வழங்கப்பெறும் நாட்டு மக்களுடைய பழக்க-வழக்கங்களையும் நாகரிகத்தையும் தெற்றென அறியலாம். ஆதலால், இவற்றை மேனாட்டார் பொன்னே போலப் போற்றி நூல்களாக அச்சிட்டுள்ளனர்; பிற நாட்டுப் பழமொழிகளையும் இங்ஙனமே நூல்கள் வடிவத்தில் வெளிக்கொணர்ந்துள்ளனர். ஆயின், ஆயிரத்துக்கு மேற்பட்ட பழமொழிகளைப் பெற்றுள்ள தமிழ் நாட்டார், தம் பழமொழிகளைக் காற்றுவாக்கில் விட்டுள்ளனர்; அவற்றைத் திரட்டி அச்சிட்டனர் இல்லை. அஃது உடனே மேற்கொள்ளத் தகும் சிறந்த பணியாகும்.

அவற்றால் அறியப்படுவன

2. 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது ஒரு பழமொழி. இஃது எவ்வளவு அனுபவ வார்த்தை என்பது துன்பப்பட்டவர்க்கே நன்கு தெரியும். அவர்கள்

இதனை முன்னுற அறியின், ஆறுதல் பெற்று, 'இங்ஙனம் துன்பங்கள் அடுத்தடுத்து வருதல் உலக இயற்கை போலும்' என்று எண்ணி, மன அமைதி கொள்வர். எனவே, இப் பழமொழி பொறுமையை வற்புறுத்தும் ஆசிரியராக அமைகின்றதன்றோ? 'இன்றைக்கு இருப்போர் நாளைக்கில்லை' என்பது ஒரு பழமொழி. இதனால் யாக்கை நிலையாமை உணர்த்தப் பெறுகின்றது. இதனால், அடிக்கடி நேர்வழியினின்றும் தடுமாறித் தீயன புரியும் கொடியவனும், யாக்கை நிலையாமையை உணர்ந்து, ஒரோவழி நல்வழிப் படுதலும் உண்டு; இப் பழமொழி பலரை நன்னெறியிற் செலுத்தியதும் உண்டு. 'பாடு பட்டால் பலனுண்டு' என்பது மற்றொரு பழமொழி. இதனால், 'உழைப்புப் பலன் தரும்' என்னும் உண்மையை மனிதன் உணர்கிறான்; ஊக்கங் கொண்டு உழைக்கிறான்; தன் முயற்சியில் ஏற்படும் பல விதத் துன்பங்களைப் பொறுமையோடு சகித்துக்கொள்கிறான்; வேலையை முடித்து இறுதியிற் பயனை அடைகின்றான். துன்பங்களைப் பொறுக்கவும் வேலையைத் தொடர்ந்து நடத்தவும் அவனை ஊக்கிக்கொண்டிருப்பது இப் பழமொழியே அன்றோ?

'தினை விதைத்தவன் தினை யறுப்பான்' என்பது ஒரு பழமொழி. அஃதாவது, தினையை விதைத்தவன் தினையையே அறுவடை செய்வான் என்பது பொருள். அது போல, 'நன்மை செய்தவன் நன்மை அடைவான், தீமை செய்தவன் தீமை அடைவான்' என்பன வெளியாகின்றன அல்லவா? இவ் வெண்ணம் மனிதன் உள்ளத்தில் உறுத்த உறுத்த, அவன் தீயவற்றைச் செய்ய முனையான்; நல்லவற்றையே செய்ய முனைவான் என்பது உண்மை. எனவே, இப் பழமொழியின் பயனைப் பாருங்கள்! 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது மற்றொரு பழமொழி. அஃதாவது,

ஒருவன் சிறுவயதிற் கொள்ளும் நல்ல அல்லது தீய பழக்கங்கட்கு ஏற்பவே அவனது பிற்கால வாழ்க்கையும் அமையும் என்பதாம். இதனை உணரின், பெற்ேறார், தம் சிறுவரை எவ்வளவு கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து நல்வழிப்படுத்துவர்! இங்ஙனம் இப் பழமொழிகள் பழந்தமிழர் அனுபவ வாழ்க்கையிலிருந்து எழுந்தவையாகும்; சிறந்த பொருள் உடையவையாகும்; நல்ல படிப்பினைகளைத் தருபவையாகும்; இவற்றைக் கடைப்பிடித்து, நல்வழிப்படுதல் நமது சிறந்த கடனாகும் என்பதில் ஐயமுண்டோ?

முடிவு

3. மாணவர், இப் பழமொழிகளைப் பாடஞ் செய்து, தாம் எழுதும் கட்டுரைகளில் இடங்கட் கேற்றபடி அமைத்து எழுதுதல் வேண்டும்; பேசுகையிலும் அங்ஙனமே பொருத்தமான இடங்களில் அமைத்துப் பேசுதல் வேண்டும். இங்ஙனமே ஆன்றோர் பொன் மொழிகளையும் (Sayings of Great Men) சேர்த்து வைத்துப் பயன்படுத்துதல் வேண்டும். இவை அனைத்தும் ஞானச்சுடர் கொளுத்தும் நன்மருந்தாம்.

62. அரசியல் அமைப்புகள்

குறிப்புகள் :—1. பண்டை அரசியல் அமைப்புகள்
2. இக்கால அரசியல் அமைப்புகள்
3. அவற்றின் நன்மை தீமைகள்
4. முடிவு

கட்டுரை

பண்டை அரசியல் அமைப்புகள்

1. மிகப் பழைய காலத்தில் உலகத்து நாடுகள் எல்லாவற்றிலும் அரசன் தன் மனத்திற்கு இனிய அமைச்சரை ஏற்படுத்திக்கொண்டு, அவர்தம் நல்லுரைப்படி நாட்டை ஆண்டுவந்தான். ஒரோவழி அரசன் தன் விருப்பம் போல நடந்தமையும் உண்டு. அரசன் தன் விருப்பம் போல நடந்த இடங்களில் எல்லாம் பெரும்பாலும் தவறு செய்தவனே ஆவான். வரலாற்றுக் காலத்தில் மோரியர்—குப்தர் ஆட்சி முறைகளில் அமைச்சர்களும் அவையார்களும் இருந்து அரசர்க்குப் பேருதவி புரிந்தனர். தமிழ் நாட்டு மூவேந்தர் சபைகளில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரண்டு சபைகள் இருந்து நாட்டையாள அரசனுக்கு உதவி புரிந்தன. அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் என்போரைக் கொண்ட அவையே 'ஐம்பெருங்குழு' என்பது. இஃதே அரசனது அரசியற் (Cabinet) சபை ஆகும். நகரமாந்தர், கரிவீரர், பரிவீரர் முதலியோர் பிரதிநிதிச் சபையே 'எண்பேராயம்' என்பது. இவ்விரு சபைகளின் உதவி கொண்டே பண்டை இந்திய மன்னர்கள் நாட்டை ஆண்டு வந்தனர். அரசன் இப் பேரவைகளின் ஆலோசனையை உதறித் தள்ளித் தன் மனம் போனவாறு நடக்கும் போது தான் 'கொடுங்கோலான்' என்று தூற்றப்படுவான். அவன்

மீது வேற்றரசர் படையெடுத்து வரும்போது, குடிகள் சிறந்த அக்கரை காட்டாது, ஓரளவு அரசனது தோல்வியை விரும்புவர். 'குடி பழி தூற்றும் கோலே னாகுக' என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் சூள் செய்ததிலிருந்து, பண்டைத் தமிழ் வேந்தர் 'குடி பழி தூற்றலுக்கு அஞ்சி நடந்து வந்தனர்' என்பதை நன்கு அறியலாம். அரசர் இங்ஙனம் இரண்டு பேரவைகளை வைத்துக்கொண்டு அரசியல் நடத்தியதே பிற்காலத்தில் 'ஜனநாயக ஆட்சி முறை' எனப்பட்டது.

இக்கால அரசியல் அமைப்புகள்

2. இக் காலத்தில் முடியாட்சி, குடியாட்சி, தடியாட்சி என மூவகை ஆட்சி முறைகள் நிலவுகின்றன. (1) இங்கிலாந்து, ஜப்பான் முதலிய நாடுகள் அரசனுக்கடங்கி நடந்து வருகின்றன. எனினும், அங்குக் குடிகளால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகள் இருந்தே சட்டங்களைச் செய்கின்றனர். நாட்டை ஆளும் பொறுப்புக் குடிகளைச் சார்ந்ததே ஆகும். அரசர் பெயரளவில் அரசரே அன்றிப் பண்டைக்கால அரசர் போல எல்லா உரிமைகளும் பெற்றவரல்லர். இங்கிலாந்து, ஸ்வீடன், பல்கேரியா, பெல்ஜியம், ஜப்பான், ஈரான், ஆப் கனிஸ்தானம் முதலியன முடியாட்சிக்குரிய நாடுகளேயாம். (2) துருக்கி, பிரான்ஸ், அமெரிக்கா முதலியன குடியாட்சி பெற்ற நாடுகள். குடிகளே சட்ட சபைகட்கு ஆட்களைத் தேர்ந்தனுப்புதல் - நாட்டுக்குத் தலைவர் ஒருவரையும் தேர்ந்தெடுத்தல் - நாட்டைச் சட்டசபைகள் மூலம் ஆட்சிபுரிதல் என்பன குடியாட்சியின் இலக்கணமாகும். (3) தடியாட்சி என்பது சர்வாதிகார ஆட்சி. அஃதாவது, பெரும்பான்மை யான மக்களது ஆதரவைக்கொண்ட-பிரதிநிதிகளைக்கொண்ட கட்சித் தலைவர் அரசியல் தலைவராக அமர்ந்து, தமக்கு வேண்

டிய சிலரை ஆலோசனையாளராகக் கொண்டு, தம் விருப்பம் போல நாட்டை ஆளுதல். அத் தலைவர் அரசியல் முறையில் மாறுபட்டவரைச் சுட்டுக் கொல்லுதல், சிறையில் சாமளவும் அடைத்து வைத்தல் முதலிய கொடுமைகள் செய்தல் தடியாட்சியின் இலக்கணம் ஆகும். இச் சர்வாதிகார நாடுகளே இரஷ்யா, ஜெர்மனி, இட்டாலி, ஸ்பெயின் முதலியன.

அவற்றின் நன்மை தீமைகள்

3. இம் மூவகை அரசுகளில் முதல் இரண்டே சிறப்புடையன. மூன்றும் ஆட்சி, தலைவரைப் பொறுத்து நன்மை பயப்பதாகவும், தீமை பயப்பதாகவும் இருக்கும். அத்தலைவர் இறந்தபின் நாட்டு நிலைமை மாறிவிடும்; குழப்பம் ஏற்படும். ஆதலின், ஒழுங்குபட்ட சட்டதிட்டங்கட்கு அடங்கிய - இங்கிலாந்தில் உள்ள அரசியல் அமைப்பு முறையே சாலச் சிறந்ததாகும். அமெரிக்கக் குடியாட்சி முறையும் சிறப்புற்றதேயாகும். குடிகள் அறிவு நிரம்பியவராய் நல்ல பொறுப்புள்ள பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால், நாட்டு ஆட்சி முறை நன்முறையில் நடைபெறும். ஆதலின், ஆட்சி முறை அமைப்பது நாட்டுக் குடிகளிடமே உள்ளது. அவர்கள், அதை நன்முறையிற் செலுத்தின், நல்ல அரசியல் முறை அமையும்; இன்றேல், நாடு வருந்தத் தக்க இழி நிலையை அடையும்.

முடிவு

4. மூவகை ஆட்சிகளிலும் பெரும்பாலான நாடுகளால் கைக்கொள்ளப்பட்டிருப்பது குடியாட்சி முறையே ஆகும். அதுவே இந்தியாவுக்கு ஏற்றது.

63. இசை இன்பம்

குறிப்புகள் :—1. இசை — யாது ?
2. உயிர்களும் இசையும்
3. இறைவனும் இசையும்
4. முடிவு

கட்டுரை

இசை — யாது ?

1. 'இசை' என்பது இராகம். இராகத்துடன் பாடப் படும் தமிழ்ச் செய்யுட்கள் 'இசைத் தமிழ்' எனப்படும். இராகம் இன்றிப் படிக்கப்படுவது 'இயல் தமிழ்' எனப்படும். இசையும் நடிப்பும் கலந்தது நாடகத் தமிழ். எனவே, பண்ணும் தாளமும் கலந்து இசைப்பது இசை எனப்படும். இதன் பெருமையை நன்கு உணர்ந்தே தமிழ்ச் சான்றோர் முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்துள்ளனர்.

உயிர்களும் இசையும்

2. இசை என்பது கற்றோர், கல்லார், பிற உயிர்கள் ஆகிய எல்லா உயிர்களையும் இயக்கும் தன்மை வாய்ந்தது. இசை இல்லாத இடமே இல்லை. 'வண்டுகள் இசை பாடச் சில மலர்கள் மலரும்' என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. பாம்பு இசைக்கு அடங்குகின்றது. அது பிடாரனது மகுடி ஓசையைக் கேட்டுத் தன் புற்றிலிருந்து வெளிப்போந்து, படம் எடுத்து ஆடுகின்றது. அப்போது அதனைப் பிடாரன் பிடித்துக்கொள்கிறான். எனவே, அஃது இசைக்கு உருகித் தன்னை மறந்த நிலையை அடைதல் உண்டு என்பது தெரிகிறதன்றோ? வண்டி இழுக்கும் மாடுகள் இசைக்கு உருகுகின்றன; அவை, வண்டிக்காரன் பாட்டில் கருத்தைச்

செலுத்திய வண்ணம், தம் அளவற்ற சுமையையும் மறந்து, நெடுந்தூரம் நடந்து செல்லுகின்றன. வண்டிக்காரன் பாடும் 'தெம்மாங்குப்' பாடல்கள் அம்மாடுகட்குத் 'தேன் பாங்கு' போல இருக்கின்றன போலும்! பல இடங்களில் மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்கள் கண்ணன் குழலோசையைக் கேட்டு ஒருவழிப்படுதல் பாகவத புராணத்துள் காணலா மன்றோ?

யானைகள் இசைவழிப்படுகின்றன. தினைக் கொல்லை யைச் சூறையாட வந்த யானை ஒன்று, அக் கொல்லையைக் காவல் காத்த குறமகள் பாட்டைக் கேட்டுப் பசியை மறந்து நின்றது என்று பண்டைப் பாடல் ஒன்று பகர்கின்றது. உதயணன், நளகிரி என்னும் மதம் பிடித்த யானையை யாழ் வாசித்து அடக்கினன்; அது, குருவினிடம் சீடன் அடங்கு வதைப் போல, உதயணனிடம் அடங்கிவிட்டது என்று பெருங்கதை புகல்கின்றது. சீவகன், இசை வன்மையால் யானையை அடக்கினன் என்று சிந்தாமணி செப்புகின்றது.

'அசுணமா' என்னும் பறவை ஒன்று நல்லோசை கேட்டுக் களிக்கும்; சூப்பறை கேட்டு இறக்கும். மயில்கள் இசையைக் கேட்டுக் களிக்கும். ஆடவர் முகத்தையே காணலாகாது என்று இருந்த சுரமஞ்சரி என்னும் அன்ன நடைப் பாவையைச் சீவகன் இசை வன்மையால் மயக்கி மணந்தான்; அவள் அவன் இசையைக் கேட்டு அடிபணிந் தாள் என்பதைச் சிந்தாமணியால் அறியலாம். குழந்தைகள் தாய்மார் தாலாட்டல் இசையில் ஈடுபட்டுத் தம் அழுகையை யும் பசியையும் மறந்து துயில்வதை அறியாதார் யார்? இறைவன் அருட் படைப்பில் இசையை விரும்பாத உயிர் களே இல்லை. வண்டுகள் இசை பாடுகின்றன; பறவைகள் இசை பாடுகின்றன; குழந்தைகள் அழுகையிலும் இசை இருக்கின்றது. பெண்கள் ஒப்பாரியிலும் இசை இருக்கின்

றது. பலவகை மிட்டாய்களைத் தெருத் தெருவாக எடுத்து வந்து விற்பவனும் பாட்டினால் வியாபாரம் செய்கிறான் எனின், இசை வேண்டப்படாத இடமே இல்லை என்பது தெளிவாம்.

இறைவனும் இசையும்

3. 'இறைவன் இசை வடிவானவன்' என்று பெரியார்களின் அருட்பாடல்கள் அறைகின்றன. "ஏழிசையாய், இசைப் பயனாய்", "இசை விரும்பும் கூத்தனார்", "எம் இறை வீணை வாசிக்குமே" என வரும் சைவப் பாடல் அடிகளும்; 'கண்ணன் குழல் ஊதிக் கோக்களையும் கோபிகையரையும் உருகச் செய்தான்' என வரும் வைணவப் பாடல்களும் இறைவனது இசை விருப்பை இனிதின் உணர்த்துவனவாம். பக்தர்கள் இறைவனை இசைப் பாக்கள் பாடி வழிபட்டனரே. அன்றி, உரைநடையால் இறைவனை வழுத்தாமை நோக்கற்பாலது. இரவீந்திரநாத தாகூர் போன்ற இக்காலக் கவிஞரும், 'இசையே இறைவனை இன்பப்படுத்துவது' எனக் கூறிவருதல் கவனிக்கத் தக்கது.

முடிவு

4. இவ்வாறு இறைவனே இசை மயமாக விளங்குதலால், இவ்வுலகமும் இசை மயமாக விளங்குகின்றது; இசைவாணர் நாகரிக மக்களால் போற்றப்படுகின்றனர்; இசைக் கலை என்பது நாகரிக நாடுகளில் சிறந்த கலையாகக் கருதப்படுகிறது; இசையைத் துணையாகக் கொண்டே நாடகக் கலையும் நடனக் கலையும் வளர்ந்து வருகின்றன. ஆதலின், நாம் நம்மால் இயன்றவரை இசையை வளர்த்து இன்பம் துய்ப்போமாக!

64. நான் விரும்பும் நூல்

குறிப்புகள்:—1. நான் விரும்பும் நூல்
2. அதன் வரலாறு
3. அதன் பெருமை
4.- முடிவு

கட்டுரை

நான் விரும்பும் நூல்

1. நான் படித்த தமிழ் நூல்களில் திருக்குறளே என் உள்ளத்தைக் கவர்வது. ஏனைய நூல்கள் வரலாற்று நூல்களாகவும், சில்லறை நீதிகளைப் புகட்டுவனவாகவும் உள்ளன. ஆயின், திருக்குறளோ, அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நால்வகைப் பேறுகளையும் நலமுற அறிவிப்பது.

அதன் வரலாறு

2. அதனை இயற்றியவர் ஆசிரியர் திருவள்ளுவர். அவர், தம் கால வழக்கில் இருந்த பல நீதி நூல்களையும் வழக்குகளையும் தழுவி, எந் நாட்டவர்க்கும் எக் காலத்தவர்க்கும் ஒப்பாமாறு திருக்குறளை இயற்றியுள்ளனர். அந் நூலில் சைவ-வைஷ்ணவ-சமண-பௌத்த சமயக் கோட்பாடுகள் சில ஆங்காங்கே காணலாம். பொதுவாக அந் நூல் சமயச் சார்புடைய தன்று; மனிதன் உயரிய வாழ்க்கையை நடத்தற்கேற்ற குணங்குறிகளை வகுத்துச் செல்லும் அற நூல் ஆகும்: இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப் பெரும் பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவும் பல அதிகாரங்களை உடையது; ஒவ்வோர் அதிகாரமும் பத்துப் பாக்களை உடையது. பாக்களோ இரண்டடிப் பாக்கள்.

அவை குறள் (குட்டை) பாக்கள் எனப்படும். செந்நெறி யுணர்த்தும் குறட் பாக்கள் ஆதலின் அவை, 'திருக்குறள்' எனப்பட்டுப், பிறகு நூலுக்கே இப் பெயர் ஆகு பெயராய் வந்துவிட்டது.

அற வழியைப் பற்றி அறிவுறுத்தும் குறட்பாக்களைக் கொண்ட முதற் பகுதி அறத்துப்பால்; உலக வாழ்க்கையில் இருக்க வேண்டும் நல்லியல்புகளை விளக்கும் பாக்களைக் கொண்ட பகுதி பொருட்பால்; இல்லற இன்ப விஷயங்களையும் இல்லறச் சிறப்பையும் இனிதாக விளக்கும் செய்யுட்களைக் கொண்ட பகுதி காமத்துப்பால். 'இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' என்று ஔவையார் அறைந்தமை போல, இம் மூன்றையும் சரிவர நடத்துபவன் அடைவது பேரின்பே வீடே ஆதலின், வீடு பற்றி ஆசிரியர் தனிப் பகுதி வகுத்தார் இலர். திருக்குறள் 1330 குறட் பாக்களைக் கொண்டது. இந் நூலுக்கு நேரிய உரை-ஆசிரியர் கருத்தைத் தெளிவாக உணர்த்தும் உரை இதுகாறும் கிடைத்திலது. பரிமேலழகர் போன்றார் உரை சரியான உரை அன்று என்பது தமிழ்ப் பேரறிஞர் கருத்தாகும். எனினும், நாம் உரை இன்றியே பல குறள்களை நன்கு உணரலாம்.

அதன் பெருமை

3. திருக்குறளின் ஏற்றத்தை நன்குணர்ந்த ஜி. யு. போப் என்னும் ஆங்கிலப் பாதிரியார், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அம் மொழிபெயர்ப்பைப் படித்த பின்னரே மேனாட்டார் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை அறியலாயினர். வேறு பல நாட்டார் அதனைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டனர்; நமது நாட்டில் திருக்குறள் வங்காள மொழியிலும், ஹிந்தியிலும்..

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'இவ்வரிய நூல் நமது தாய் நாட்டின் தென் கோடியில் உள்ள தமிழ் மொழியில் இருக்கிறது என்பதை இதுகாறும் நாம் அறியாமல் இருந்தது பெருந் தவறு' என்று வங்காள அறிஞர் ஒருவர் கூறி வருந்தினர் எனின், திருக்குறளின் பெருமையை என்னென்பது!' "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்னும் பழமொழியால், திருக்குறளின் பெருமையை நன்கறியலாம். புறநானூறு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், வில்லிபாரதம், கந்த புராணம், பெரிய புராணம், தேவார-திருவாசக நூல்கள், நாலாயிரப் பிரபந்தம் முதலிய பெருநூல்கள் பலவற்றுள்ளும் திருக்குறள் அடிகளையும் தொடர்களையும் அப்படியே காணலாம்; திருக்குறள் கருத்துகளையும் காணலாம். 'பொய்யில் புலவன்' என்று மணிமேகலை திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளது; 'அற நூல்' என்று புறநானூறு திருக்குறளைக் கூறியுள்ளது. நாம் இவ் விவரங்களால் திருக்குறளின் பெருமையை நன்கறியலாம்.

முடிவு

4. இத்தகைய பெருமை வாய்ந்த நூலை எளிய நடையில் வசனப்படுத்திச் சுருக்க விலையில் அச்சிட்டுத் தமிழ் மக்கட்கு உதவுதல் தமிழ் அறிஞர் கடனாகும். திருக்குறளைப் பற்றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுப் பொது மக்கட்குத் திருக்குறள் அருமை-பெருமைகளை விளக்குதல் வேண்டும். தமிழர் பெருமிதத்தோடு நடக்கப் பேருதவி செய்யும் நூல் திருக்குறள் ஒன்றே ஆகும். ஆகலின், நான் திருக்குறளை என் மன-மொழி-மெய்களாற் பூசிக்கிறேன்; அதனை வேத நூலாக மதிக்கிறேன்; அதனை நாள்தோறும் படித்து வருகிறேன்.

65. பயிர்த் தொழில்

குறிப்புகள் :—1. குடியானவன் அறிய வேண்டுவன
2. மேனாட்டில் பயிர்த் தொழில்
3. நம் நாட்டில் பயிர்த் தொழில்
4. நம் நாட்டில் செய்யப்பட வேண்டுவன
5. முடிவு

கட்டுரை

குடியானவன் அறிய வேண்டுவன

1. மக்கள் உயிர் வாழ்விற்கு அமைந்த பலவகைத் தொழில்களுள் பயிர்த் தொழிலே சிறந்தது.

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'

என்ற ஆன்றோர் வாக்கை உணர்க. "ஓதுவார் எல்லாம் உழுவார்தம் தலைக்கடைக்கே" என்ற கம்பர் திருவாக்கையும் ஓர்க. இத்தகைய ஒப்புயர்வற்ற பயிர்த் தொழிலைச் செய்பவர் நில நூல் (Geology), இரசாயன நூல் (Chemistry), தாது நூல் (Minerolgy), விலங்கு நூல் (Zoology), வானநூல் (Astronamy) முதலியவற்றிற் கூறப் படும் செய்திகளை ஓரளவேனும் அறிந்தவராக இருத்தல் வேண்டும். என்னை ? இவை யாவும் உழு தொழிலுக்கு உற்ற துணை ஆதலின் என்க.

மேனாட்டில் பயிர்த் தொழில்

2. இப் பல்கலை அறிவில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகளில் உள்ள குடியானவர் சிறந்த அறிவாளிகளாக இருக்கின்றனர். இருத்தலால், அந் நாடுகளில் பயிர்த் தொழில் நாளுக்கு நாள் மிக்க முன்னேற்றம் பெற்று வருகின்றது; உழவர் தம் தொழிலில் உறு

பயன் அடைகின்றனர்; நாட்டுச் செல்வ நிலையும் உயர்கின்றது. அமெரிக்கா குடியானவர்க்கு இப் பல்கலை அறிவைப் புகட்ட ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான டாலர்களைச் செலவிட்டுப் பயிர்த் தொழிற் பள்ளிகள், விளம்பரங்கள், சிறிய நூல்கள் முதலியவற்றை உதவியுள்ளது; பயிர்த் தொழில் ஆராய்ச்சிக்காக ஏறக்குறைய இரண்டு கோடி டாலர் செலவழிக்கின்றது; குடியானவர்க்குக் கடன் தந்து உதவுகிறது; குடியானவர்க்கு ஏற்படும் துன்பங்களை அறிந்து, அவற்றைப் போக்கப் பெருந் தொகை செலவழிக்கின்றது; பயிர்த் தொழில் முன்னேற்றம் பற்றி இயங்கு படக்காட்சி மூலம் அறிவு புகட்டி வருகின்றது; குடியானவர் படிப்பதற்கேற்ற நூல்களைக் கிராமந்தோறும் கொண்டு சென்று கொடுக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது. குடியானவர்க்குச் செல்லும் தபால்களை அரசாங்கமே முன் கொண்டு கொடுக்க வசதி செய்துள்ளது. விளையும் பொருள்களை விற்கக் கூட்டுறவு முறைகளும் கையாளப்படுகின்றன. சுருங்கக் கூறின், அமெரிக்க அரசாங்கம், குடியானவர்க்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

நம் நாட்டில் பயிர்த் தொழில்

3. ஆனால், முப்பத்தாறு கோடி ஜனத்தொகை கொண்ட இந்தியாவில் உழு தொழில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றது. இங்கு உழவர் உத்தேசமாக 28 கோடி யாவர். இங்குப் பயிர் நிலம் 22½ கோடி ஏக்கர் பரப்புள்ளது. இன்னும் பயிர் செய்யக்கூடிய நிலத்தின் பரப்பு 15 கோடி ஏக்கர் ஆகும். நம் நாட்டிற்கு வேண்டும் உரம் ஆண்டுக்கு 45 கோடி டன் ஆகும்; ஆனால், இன்று போடப்படுவது 2 கோடி டன் ஆகும். உழவர்க்கோ எழுத்து வாசனை இல்லை. அரசாங்கம் பயிர்த் தொழிலைப் போதிய அளவு கவனிப்பதே இல்லை. வரிச்

சுமையோ அதிகம். உழவனுக்குத் தன் தொழிலுக்கேற்ற நவீன சாதனங்கள் இல்லை. உழவனுக்குப் பல கோடி ரூபாய் கடன் இருந்து வருகிறது. இத் தொல்லைகளில் சிக்குண்டு, போதிய பலன் இன்றி, இந்தியக் குடியானவன் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி வருந்துகிறான்.

நம் நாட்டில் செய்யப்பட வேண்டுவன

4. அரசாங்கமே இத் துன்பங்களைப் போக்க வேண்டும். பயிர்த் தொழில் அறிவுடைய இளைஞரைக் கிராமங்கட்கு அனுப்பி உழவர்க்கு உழு தொழிலில் வேண்டும் உதவி புரியச் செய்தல் வேண்டும்; குறைந்த வட்டிக்குக் கடன் உதவுதல் வேண்டும்; நவீன சாதனங்களை உதவுதல் வேண்டும்; பொட்டல் நிலங்களை ஏழைக் குடியானவர்க்குக் குறைந்த வட்டிக்கு நீண்ட நாள் கடனாக உதவுதல் வேண்டும்; கல்வி அறிவுடைய கிராமத்தார் உழு தொழிலையே கவனிக்க வேண்டும்; உழவர்க்குக் கல்வி வசதி அளிக்க வேண்டும்; படக்காட்சிகள் மூலம் மேனாட்டு விவசாய முறைகளை விளக்குதல் வேண்டும்; முதற் பாராவிற் சொன்ன பல்கலை அறிவைக் குடியானவர்க்கு ஊட்டுதல் வேண்டும்; அவர்க்குள் கூட்டுறவு முறைகளை ஏற்படுத்துதல் வேண்டும்; பால்பண்ணை, கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல் போன்றவற்றிலும் அவர்கட்குப் போதிய பயிற்சி அளித்தல் வேண்டும்.

முடிவு

5. இத்தகைய சீர்திருத்தத் துறைகளில் அரசாங்கமும் பணக்காரரும் ஒத்துழைத்து வேலை செய்யின், சுமார் 20 ஆண்டுகட்குள் இந்தியக் குடியானவர் சிறந்த அறிவும் செல்வமும் உழு தொழிலில் திறமையும் பெறுவர்; சிறந்த உழவால் நாட்டுச் செல்வ நிலை உயரும். இதனால் இந்தியாவைப் பிய்த்துத் தின்னும் வறுமைப் பேய் ஓட வழியுண்டு.

66. அழைப்பு இதழ்கள்

1. திருமண அழைப்பிதழ்

உ

அன்புடையீர்,

எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு, நிகழும் தாது ஆண்டு, ஆனித் திங்கள், 21-ஆம் நாள் (15-6-36) ஞாயிற்றுக்கிழமை, ஏகாதசி, அத்தம் இவை கூடிய நன்னாளில், பகல் 15 நாழிகைக்கு மேல் 18½ நாழிகைக்குள் கன்னி ஓரையில்,

என் இளைய புதல்வி திருவளர் செல்வி **கண்ணகிக்கும்**	மதுரை, திருவாளர் இராஜாமணி அவர்கள் இளைய புதல்வன் திருவளர் செல்வன் **வித்வான் கோவிந்தனுக்கும்**

சென்னை, தங்கசாலைத் தெரு 130-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் ஆன்றோர் முன்னிலையில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கும், அதன் சார்பில் நடைபெறும் பிற சிறப்பு நிகழ்ச்சிகட்கும் தாங்கள் தங்கள் உற்றார் உறவினருடன் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம்:
தங்கள் அன்புக்குரிய
கு. கணபதி ஐயர்.

தங்கள் வரவை விருப்புடன் எதிர்நோக்கும் :—

1. சு. சுந்தரம் ஐயர், மளிகை, சென்னை.
2. பு. முத்துச்சாமி ஐயர், புத்தக வியாபாரம், சென்னை.

2. காதணி அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் வெகுதானிய ஆண்டு, ஆனித் திங்கள், 25-ஆம் நாள் (10-7-38) வியாழக்கிழமை, காலை 9-மணிக்கு மேல் 12 மணிக்குள்ளாக, என்னுடைய மகன்

திருவளர் செல்வன்

ந. நக்கீரனுக்கு

சென்னைக்கடுத்த திருவொற்றியூர் திருக்கோவிலில் பெரியோர்முன் நடைபெறும் காதணிச் சடங்கிற்கும், அன்று மாலை நடைபெறும் இசை விருந்திற்கும் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வந்திருந்து எனது திருமகனை வாழ்த்துமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம் :

21, தங்கசாலைத் தெரு, சென்னை.

தங்கள் அன்புள்ள,
பு. செல்வநாத முதலியார்.

3. நீத்தார் கடன்

அன்புடையீர்,

1940-ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 10-ஆம் நாள், காலஞ்சென்ற என் தந்தையார் திருவாளர் முத்துரங்க நாயகர் அவர்களின் பிரிவுக்குரிய இறுதிச் சடங்குகள் எனது இல்லத்தில் (5, வள்ளுவன் தெரு, வண்ணாரப்பேட்டை) ஞாயிற்றுக்கிழமை 25-ஆம் நாள் காலை 8-மணிக்கு நடைபெறும். தாங்கள் வந்திருந்து ஷெயாரின் ஆன்மா அமைதியுறச் செய்யும் வழிபாடுகளிற் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம் :

சென்னை, 15-12-'40.

தங்கள் அன்புக்குரிய
மு. மாணிக்க வாசகன்.

67. சமரச சன்மார்க்கம்

குறிப்புகள் :—1. சமரசமும் சன்மார்க்கமும்
2. சன்மார்க்க நிலை
3. சமரச நிலை
4. சான்றுகள்
5. முடிவு

கட்டுரை

சமரசமும் சன்மார்க்கமும்

1. சமரசம் என்பது எல்லோரிடத்தும் ஒத்த உணர்ச்சியோடு நடக்கும் பெருங்குணமாம். சன்மார்க்கம் என்பது உள்ளொளி தெள்ளிதில் விளக்கும் நன்னெறி ஆகும். பின்னதைக் கைக்கொண்டவரே முன்னதை இயல்பாகப் பெறுவர். பின்னது கைவந்த பின்னரே சமரசம் கைவரப்பெறும். இவ்விரண்டும் கூடிய வழி, மனித நிலையிற் பேரின்பம் பயக்கத்தக்கது பிறிதொன்றில்லை.

சன்மார்க்க நிலை

2. சன்மார்க்கம் என்பது, 'சத்' என்னும் செம்பொருளை உணர்த்தும் மார்க்கம் (நெறி) ஆகும்; அஃதாவது, உண்மை நெறி அல்லது கடவுள் நெறி எனப்படும். மனிதன் நல்லவனாய் வாழ்வதற்குரிய கொள்கைகளின் திரட்சியே நெறி அல்லது சமயம் அல்லது மதம் எனப்படும். அஃது நன்மார்க்கம் அல்லது சன்மார்க்கம் எனப்படும். மனிதன் நல்வாழ்க்கையை நன்முறையில் நடத்த ஒழுக்கமே அடிப்படையாக வேண்டப்படுவது. அவ்வொழுக்கம் அகவொழுக்கம், புறவொழுக்கம் என இரு வகைப்படும். இவ்விரண்டுக்

கும் காரணமானவை மனம்—மொழி—மெய் என்னும் மூன்றே ஆகும். இம் மூன்றும் தூய்மையாக இருப்பின்; ஒழுக்கம் செவ்வியதாக அமையும். மனம் மாசற்றதாதல் வேண்டும்; சொற்கள் குற்றமற்றவையாதல் வேண்டும்; மெய், தீச்செயல்களைப் புரியாமல் இருத்தல் வேண்டும். மனமே எண்ணங்கள் தோன்றற்கு இடமாகும். எண்ணங்கள் பின்னர்ப் பேச்சு நிலையில் வெளிப்படும். வாய்ப் பேச்சுச் செயல் உருவத்தை அடையும்; அப்பொழுது மெய் தனது வேலையைச் செய்யும். ஆதலின், மனம்—வாக்கு—காயம் என்னும் மூன்றனுள் மனமே சிறப்பிடம் பெற்றதாகும். ஆகவே, மனத்தை நன்னிலையில் வைத்தலே சன்மார்க்கம் ஆகும். அந் நெறி அமைப்பையே தாயுமானவர் முதலிய மஹான்கள் முயன்று பெற்றனர்; பலர் பெற்றுப் பேரின்ப நிலையை அடைந்தனர்.

சமரச நிலை

3. சன்மார்க்கம் கைவரப் பெற்றவர்—மனத் தூய்மை பெற்றவர், மக்களால் ஏற்படுத்தப்பெற்ற சாதிகள், சமயங்கள், ஆசாரங்கள், சமய விதிகள் என்னும் கட்டுகளிலிருந்து தம்மை விலக்கிக்கொண்டு சுயேச்சையாக வாழ்வு நடத்துவர். அவர்கட்கு அரசனும் ஒன்றே—ஆண்டியும் ஒன்றே; எறும்பும் ஒன்றே—யானையும் ஒன்றே. அவர்கள் 'தொழு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரோடும்' வேறுபாடின்றிக் கலந்து உறவாடுவர். அவர்கள் விவேகானந்த அடிகளைப் போலச் சக்கிலி தரும் உணவையும் பெரு விருப்போடு உண்பர். அவர்கள் அன்பு ஒன்றுக்கே அடிமைப்படுவார்கள்; 'அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்?', ஆதலால், அவர்கள் அன்பால் கட்டப்படல் வியப்பன்று. அவர்கள் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் விரிந்த மனப்பான்மை

கொண்டு, மக்களிடையே தொண்டு செய்ய விழைவர். அவர் தம் அப் பரந்த நெறியே சமரச நெறி என்பது.

சான்றுகள்

4. இச் சமர சன்மார்க்க நிலையைப் பரப்பத் தோன்றியவர்களே புத்தர், ஏசுநாதர், நபிநாயகம், தமிழ் நாட்டுச் சித்தர்கள் முதலிய மஹான்கள். புத்தரது பெரு மதம் அன்பை அடிப்படையாகக் கொண்டது; நன்ஞானம், நற்காட்சி, நல்லெண்ணம் முதலியவற்றை உயிர் நாடிகளாகக் கொண்டது. அதனாற்றான் அப் பெருமை பெற்ற மதம் உலகப் பெருமதங்களில் தலைமை வாய்ந்து விளங்குகிறது. இங்ஙனமே மற்ற இரண்டு பெருஞ் சமயங்களும் புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழ் நாட்டுச் சித்தர்கள் பாடியுள்ள அருட் பாடல்கள், உபநிஷத்துக்கள் முதலியன ஆன்ம நேய ஒருமைப் பாட்டை வலியுறுத்துவன; மனிதன் நன்னெறியில் வாழ்ந்து நன்ஞானம் பெற்று நன்மை எனும் பொருளில் இரண்டறக் கலந்து பேரின்பம் துய்க்கப் பெருந்துணை புரிவன. ஆதலின், அப் பெருமக்கள் அருள் மொழிகளைப் படித்து, அவற்றை அகத்தடக்கி, நல்வழிச் சென்று, நலனுறுதல் நன்மக்கள் கடமை.

முடிவு

5. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஆதலின், இளைஞர்கள் சிறு வயதிலேயே சன்மார்க்க உணர்ச்சி உடையராதல் வேண்டும்; சமரசப் பெரு நோக்கம் உடையராதல் வேண்டும். இவ்விரண்டுமே இளைஞரை நன்மக்கள் ஆக்கும் நற்றுணை ஆகும்.

பயிற்சிக்குரிய கட்டுரைகள்

I. 1. அடக்கம் உடைமை 2. அவை அஞ்சாமை 3. அறச் செயல் 4. பொறுமை 5. அறிவுடைமை 6. அன்புடைமை. 7. இனியவை கூறல் 8. இன்னா செய்யாமை 9. ஈகை 10. உட்பகை 11. உழவு 12. ஊக்கமுடைமை 13. ஒழுக்கம் உடைமை 14. கடவுள் 15. கல்லாமை 16. கல்வி கற்றல் 17. கற்று ஆய்ந்து ஒழுகல் 18. காலம் அறிதல் 19. குறிப்பறிந்து நடத்தல் 20. குற்றம் கடிதல் 21. கூடா நட்பு 22. கேள்வி முயல் 23. கொடுங்கோன்மை 24. கொல்லாமை 25. சான்றாண்மை 26. சுற்றம் தழுவல். 27. சூது 28. செங்கோன்மை 29. செய்ந்நன்றி அறிதல் 30. சொல் வன்மை 31. நடுவு நிலைமை 32. நல்லார் நட்பு 33. நல்குரவு (வறுமை) 34. நமது நாடு 35. நிலையாமை 36. பழைமை 37. புகழ் 38. புதல்வர் 39. புறங்கூறாமை 40. பெரியாரைப் போற்றல் 41. பெருமை 42. பொருள் ஈட்டல் 43. பொறாமை 44. சோம்பல் இன்மை 45. மானம் 46. விருந்தோம்பல் 47. வெகுளாமை 48. குடி நீக்கம் 49. உழைப்பு 50. கற்றலிற் கேட்டலே நன்று.

II. 1. ஆசிரியரும் மாணவரும் 2. மாணவர் கடமை 3. மாணவரும் பொதுநலப் பணியும் 4. மாணவரும் நகர சுகாதாரமும் 5. மாணவரும் பத்திரிகைப் படிப்பும் 6. மாணவரும் நூல் நிலையமும் 7. மாணவரும் விளையாட்டுகளும் 8. மாணவரும் விடுமுறையும் 9. மாணவரும் ஸ்தல யாத்திரையும் 10. மாணவரே எதிர்கால நாட்டு மக்கள்.

III. 1. திருவள்ளுவர் 2. கம்பர் 3. இளங்கோவடிகள் 4. காளமேகப் புலவர் 5. ஔவையார் 6. சேக்கிழார் 7. தமிழ் மொழி 8. பழந்தமிழ் நாடு 9. பழந்தமிழ் நூல்கள் 10. தமிழ் மூவேந்தர் 11. பண்டைத் தமிழ் நகரங்கள் 12. அழிந்துள்ள நகரங்கள் 13. வரலாற்றுச் சிறப்புடைய தமிழ் நகரங்கள் 14. முத்தமிழ் 15. தமிழர் நாகரிகம் 16. தமிழர் வீரம் 17. பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் 18. புராணங்கள் 19. பிரபந்த நூல்கள் 20. தமிழ்ப்பாடல்கள்.

IV. 1. காஞ்சிபுரம் 2. திருச்சிராப்பள்ளி 3. மதுரை 4. தஞ்சாவூர் 5. சென்னை 6. காவிரிப்பூம்பட்டினம் 7. மஹாபலி

புரம் 8. திருநெல்வேலி 9. திண்டுக்கல் 10. செஞ்சிக் கோட்டை 11. திருக்கழுக்குன்றம் 12. சிதம்பரம் 13. திருப்பாதிரிப்புலியூர் 14. மைசூர் 15. எல்லோராக் குகைகள் 16. கன்னியா குமரி 17. புதுக்கோட்டை 18. திருவனந்தபுரம் 19. கொச்சி 20. காசி.

V. 1. பண்டை இந்தியப் பெண்கள் 2. பண்டைத் தமிழ்ப் பெண்கள் 3. வீரப் பெண் மணிகள் 4. பெண் கல்வி 5. இந்தியாவில் பெண்கள் கடமை 6. பிற நாட்டுப் பெண்கள் முன்னேற்றம் 7. மாதர் இயக்கம் 8. நமது பெண்டிரும் கல்வியும் 9. மாதர்க்குச் சொத்துரிமை 10. பெண் உரிமை.

VI. 1. சுற்றுப் பிரயாணம் 2. தரைச் செலவு 3. கடற் செலவு 4. வான்வழிச் செலவு 5. அயல்நாடுகளைக் காணல் 6. ஜப்பான் 7. இங்கிலாந்து 8. அமெரிக்கா 9. கிரீஸ் 10. ஈஜிப்ட் 11. இட்டாலி 12. ஜெர்மனி 13. இராக் 14. ரஷ்யா 15. ஆப்ரிக்கா 16. ஆஸ்ட்ரேலியா 17. துருவங்கள் 18. ஐம்பெருங் கடல்கள் 19. மத்தியதரைக் கடல் 20. விரிகுடாக்களும் வளைகுடாக்களும் 21. தீவுகள் 22. ஆஸ்ட்ரேலியா 23. கனிச் சுரங்கங்கள் 24. நீர் வீழ்ச்சிகள் 25. உலகத்துப் பெரிய யாறுகள் 26. உலகத்துப் பெரிய மலைத்தொடர்கள் 27. உலக அதிசயங்கள் 28. உலகத்துப் பண்டை மொழிகள் 29. உலக மதங்களும் மக்கள் இனமும் 30. எல்லா மதங்களும் இறைவனை உணர்த்துவனவே.

VII. 1. பொங்கல் பண்டிகை 2. தீபாவலி 3. கார்த்திகை விழா 4. விநாயக சதுர்த்தி 5. பதினெட்டாம் பெருக்கு 6. நோன்புகள் 7. நவராத்திரி விழா 8. அமாவாசை 9. வைகுண்ட ஏகாதசி 10. சிவராத்திரி 11. சரஸ்வதி பூஜை 12. கிறிஸ்துமஸ் விழா 13. பக்ரீத் 14. ரம்ஸான் 15. முஹர்ரம் பண்டிகை 16. நல்ல வெள்ளிக்கிழமை (Good Friday).

VIII. 1. கண்ணப்ப நாயனார் 2. நர்[illegible]ர் 3. திருமங்கை ஆழ்வார் 4. ஆண்டாள் அம்மையார் 5. சித்தர்கள் 6. சைவ சமயம் 7. வைணவ சமயம் 8. புத்த சமயம் 9. சமண சமயம்

10. இஸ்லாம் 11. கிறித்தவ சமயம் 12. ஏசுநாதர் 13. நபி நாயகம் 14. புத்தர் பெருமான் 15. மஹாவீரர் 16. உலகத்துச் சமய ஆசாரியர்கள்.

IX. 1. விஞ்ஞான—சரித்திர வளர்ச்சி 2. இரசாயன சாஸ்திரம் 3. தாவர சாத்திரம் 4. நில அறிவு 5. விண்ணறிவு 6. உலக நாகரிகமும் இரசாயன வளர்ச்சியும் 7. உலக நாசமும் இரசாயனமும் 8. போரும் இரசாயனக் கலையும் 9. சர்வதேச சங்கம் 10. போர்க்குரிய காரணங்கள் 11. போரினல் உண்டாகும் நன்மை தீமைகள் 12. போர்ப் பாதுகாப்பு 13. கடற்போர் 14. நிலப்போர் 15. வான் போர் 16. உலக சமாதானம் 17. பலநாட்டு ஆட்சி முறைகள் 18. குடியரசும் முடியரசும் 19. ஒரு நாட்டின் படைவன்மை 20. உலக வாணிபம்.

X. 1. உடற்பயிற்சி 2. அச்சுவித்தை 3. உலகத்து அறச் செயலாளர் 4. தமிழ் உரைநடை 5. தமிழ் வளர்ச்சிக்குரிய வழிகள் 6. இந்திய முன்னேற்றம் 7. சமூக முன்னேற்றம் 8. கைத்தொழில் முன்னேற்றம் 9. பயிர்த் தொழில் முன்னேற்றம் 10. வாணிப முன்னேற்றம் 11. சமய முன்னேற்றம் 12. கடமை உணர்ச்சி 13. இந்திய உரிமைப் போர் 14. நாட்டுத் தலைவர்கள் 15. காந்தியடிகள் 16. இந்திய முன்னேற்றத்தில் மாணவர் பங்கு.

XI. 'போட்டி உரையாடல்' கட்டுரை வரைக :—

1. எவன் சிறந்தவன்—போர் வீரனு? பத்திரிகை ஆசிரியனு? 2. எவனுல் நாட்டுக்கு நன்மை உண்டு—செல்வனுலா? படித்தவனுலா? 3. எவன் நல்லவன்—படித்தவனு? படியாதவனு? 4. எது சிறந்தது—நாட்டு வாழ்க்கையா? நகர வாழ்க்கையா? 5. யார் உயர்ந்தவர்—ஆடவனு? பெண்ணு? 6. பெண் கல்வி வேண்டும்—வேண்டா. 7. சாதிகள் வேண்டும்—வேண்டா. 8. முயற்சி பெரிதா? ஊழ்வினை பெரிதா? 9. எது சிறந்தது—குடியாட்சியா? முடியாட்சியா?

3405